# ‘சிந்தனையாளன்’

## பொங்கல் மலர்-2020 வெளியீட்டுக் குழுவினர்

### சென்னை மாவட்டம்

வே. ஆனைமுத்து
சி. பெரியசாமி
இரா. பச்சமலை
வாலாசா வல்லவன்
முனைவர் ஆ. முத்தமிழ்ச்செல்வன்
ந. சீனிவாசன்
பா.வை. அருண்மொழி
கலசம்
கோவி ராமலிங்கம்
ப. வடிவேலு
இராமியா
த. புகழேந்தி
பொறிஞர் இரா. சிவப்பிரகாசம்
மு. குடியரசு
முருகவேல்

### காஞ்சி மாவட்டம்

சி. நடராசன், காஞ்சிபுரம்
ஆனை. பன்னீர்செல்வம், தாம்பரம்
மா. சுப்பிரமணி, தாம்பரம்
கு.கிருஷ்ணமூர்த்தி, தாம்பரம்
மு. செயப்பிரகாசு, காஞ்சிபுரம்
தீ. கோபாலகிருஷ்ணன், காஞ்சிபுரம்
குறளமிழ்தன், காஞ்சிபுரம்
கா. பொன்னப்பன், காஞ்சிபுரம்
இரா. இராசசேகர், காஞ்சிபுரம்
இரா. நாராயணமூர்த்தி, காஞ்சிபுரம்
மா. கோதண்டபாணி, காஞ்சிபுரம்
ச. சிவக்குமார், காஞ்சிபுரம்
ச.வ.தேவகிரி, கீழம்பி
மு. சந்திரமோகன், கீழம்பி
காஞ்சி அமுதன்
சா.கவுதமன், காஞ்சிபுரம்
க.வெங்கடேசன்
ஆதிகேசவன்

### வேலூர் மாவட்டம்

மோ.சி. சங்கர், வேலூர்
சா. குப்பன், வேலூர்
க. முகிலன், சோளிங்கபுரம்
மா. தசரதன், வேலூர்
லோ. இரத்தினகுமார், வேலூர்
பொ. காளியப்பன், வேலூர்
க. குப்புசாமி, சோளிங்கபுரம்
மீ. டில்லிபாபு, வேலூர்
மு. சுவாமிநாதன், வேலூர்
முனைவர் ப. வெங்கடேசன் வாலாசாப்பேட்டை
கி. இராமச்சந்திரன், வாலாசாப்பேட்டை
கு.ப. நாகரத்தினம், த.குன்னத்தூர்
நா. மதனகவி, வாணியம்பாடி
சீனி. பழனி, வாணியம்பாடி
இரா. பகுத்தறிவாளன், திருப்பத்தூர்
ஏ.சி.வெங்கடேசன், வாணியம்பாடி
கே.ஜி.மனோகரன்

### திருவள்ளூர் மாவட்டம்

சி.அ. நாத்திகன்சாமி, கொளத்தூர்
ஆ.அ.நாகராசன், இரா.கி.பேட்டை
சு.ரா.செல்வராசு, திருவள்ளூர்

### விழுப்புரம் மாவட்டம்

ஆ.கு.ஆறுமுகம், சென்னக்குணம்
மருத்துவர் சா.மா.அன்புமணி
மருத்துவர் கோ.மகுடமுடி
புலவர் கு.சீத்தா, தியாகதுருகம்
எழில் நிலவன், களமருதூர்
துரை. திருநாவுக்கரசு, செஞ்சி

### திருவண்ணாமலை மாவட்டம்

பொ. சுப்பிரமணி, கீழ்ப்பென்னாத்தூர்
கோ. கோதண்டராமன், கீழ்ப்பென்னாத்தூர்
பாவலர் வையவன், திருவண்ணாமலை
மா. முருகேசன், தீத்தாண்டப்பட்டு
க. ஆதிமூலம், கீழ்ப்பென்னாத்தூர்

கி. இராமநாதன், கீழ்ப்பென்னாத்தூர்
முகில்வண்ணன், வேட்டவலம்

## கடலூர் மாவட்டம்

பா. மோகன், வடக்கு மாங்குடி
தி. துரை சித்தார்த்தன், கா.ம.கோயில்
சி.இரா.இளங்கோவன், சிதம்பரம்
இரா. இரமணன், கடலூர்
இரா. கலியாணசுந்தரம், நெய்வேலி
பி. அறிவழகன், நெய்வேலி
ஆறு.கலைச்செல்வன், சிதம்பரம்
மோ. புரட்சித்தமிழன், வடக்குமாங்குடி

## நாகை மாவட்டம்

முத்து. அன்பழகன், சீர்காழி
அழகு அன்பழகன், சீர்காழி
முத்து இரணியன், சீர்காழி
சோ.அண்ணாதுரை, கீழப்பெருமழை

## அரியலூர் மாவட்டம்

இரா. கலியமூர்த்தி, சிறுகடம்பூர்
எழிலரசி இராசமாணிக்கம், செந்துறை
ந.ப. அன்பழகன், நமங்குணம்
த. அறிவுடைநம்பி, அரியலூர்
ப.வே. பரமசிவம், பரணம்
துரை. கலையரசு, வீராக்கன்
மரு. பெ. இளங்கோவன், அரியலூர்
மரு. பொன்.தனித்தமிழ்க்கொற்றன்
சி. கோவிந்தசாமி, இரும்புலிக்குறிச்சி
ந.உத்திராபதி
தமிழ்.இளவரசன், அரியலூர்
அரங்க.இளவரசன், செந்துறை
சா.சீனிவாசன், சேடக்குடிகாடு

## பெரம்பலூர் மாவட்டம்

மா. நாராயணசாமி, வரகூர்
மு.ரொ. சீனிவாசன், அல்லிநகரம்
பொ. சிவகுருநாதன், கோவில்பாளையம்
து.செ. பெரியசாமி, துங்கபுரம்
ப. இராமராஜ், ஓகளூர்
அ. சக்திவேல், நொச்சிக்குப்பம்
வீ. பாலுசாமி, முருக்கன்குடி

## திருச்சி மாவட்டம்

இரா. கலியபெருமாள்
பொறிஞர் மு.க. சுப்பிரமணியன்
ந. கருணாகரன்
ச. இராதாகிருஷ்ணன்
மு. நரசிம்மன்
பொறிஞர் கோ. பார்த்தசாரதி

## சேலம் மாவட்டம்

செ. ஆனையப்பன்
சு.மணிமாறன்
ஆ.அருள்மொழிச் செல்வன்
பெ. திருநாவுக்கரசு

## கோவை மாவட்டம்

புலவர் ந. கவுதமன், சூலூர்
க. தேவராசு, சூலூர்
இரணியன், கோவை
ம. சரவணகுமார், சூலூர்
கி.மா. கனகராசு, சூலூர்
செ. குமாரவேலு, சூலூர்
சு. தமிழரசன், சூலூர்

## கிருட்டிணகிரி மாவட்டம்

கு. தொல்காப்பியன், ஓசூர்
தொ. ஸ்டாலின், ஓசூர்

## சிவகங்கை மாவட்டம்

பேரா. கோச்சடை, காரைக்குடி
அ. முகமது கனி, பாகனேரி

## புதுச்சேரி மாவட்டம்

பொறிஞர் இரா. திருநாவுக்கரசு
சீனு. அரிமாப்பாண்டியன்
பாவலர் மு. தமிழ்நெஞ்சன்
மு. தமிழ்மணி
சீனு. சந்திரசேகரன்
இரா. பழநி
தூ. சடகோபன்
ந.க. குணத்தொகையன்

## பெங்களூர்

புலவர் கி.சு. இளங்கோவன்
பொறிஞர் இரா. இராகண்ணா
கோ.மு.கருப்பய்யா
மா.செந்தில்குமார்
வி.மு.வேலு

# பொருளடக்கம்


இந்துக்களில் தொண்ணூறு விழுக்காடு பேரும் சூத்திரராய்ப் பிறக்கிறார்;
சூத்திரராய் வாழ்கிறார்; சூத்திரராய்ச் சாகிறார்.
இந்த இழிவிலிருந்து விடுதலை பெற வேண்டாமா? ........ வே.ஆனைமுத்து 5

நன்றி! நனி மிக நன்றி! ........ வே.ஆனைமுத்து 8

தமிழர் பண்பாட்டில் பொங்கல் திருநாள் ........ முதுமுனைவர் இரா.இளங்குமரனார் 10

குறிக்கோளை வென்றெடுத்திட, நாமும் நம் போன்றோரும்,
தமிழரும் என்னென்ன செய்ய வேண்டும்? ........ வே.ஆனைமுத்து 13

பெயரே முதல் அடையாளம்! ........ செந்தலை ந.கவுதமன் 17

வையகம் வாழ வள்ளுவமே வழி ........ முனைவர் அ.ஆறுமுகம் 19

தமிழ்த் தேசியத்துக்குத் திராவிட
இயக்கத்தின் பங்களிப்பு ........ விடுதலை இராசேந்திரன் 23

தமிழ்க்கான இலக்கியம் ........ தமிழேந்தி 26

பொங்கல் தமிழர் திருநாள் ........ இரா.சோதிவானன் 33

தமிழரின் விடுதலைக்குத் தேவை தமிழ் மொழியின் காப்பு ........ பொழிலன் 34

முற்றிவரும் முதலிய நெருக்கடிக்கு மார்க்சியமே தீர்வு! ........ தியாகு 38

கல்வி யார் பொறுப்பு? ........ முனைவர் ச.சீ. இராஜகோபாலன் 42

பாலியல் வன்முறைகளுக்குக் காரணம் ஆண்கள் அல்ல,
சாதி மதப் பண்பாடு தான்! ........ ஜெயராணி 44

ஒப்பந்தப் பண்ணையம் உய்விக்குமா? ........ ந.ப.அன்பழகன் 49

பா.ச.க. ஆட்சியில் பறிக்கப்படும் மாநில உரிமைகள் ........ பேராசிரியர் மு. நாகநாதன் 52

பெரியாரும் பெண்ணுரிமையும் ........ திருச்சி ந. கருணாகரன் 58

வரலாற்றில் திரிபுவாதங்களும் இந்துத்துவ அரசியலும் ........ புதிய மாதவி 61

அம்பேத்கர் காணவிரும்பிய சனநாயகக் கட்டமைப்பு ........ க. முகிலன் 65

புறநானூறு காட்டும் தமிழர் அறம் ........ இரணியன் 71

வகுப்புரிமைக் கொள்கை! தொடரும் தடைகள்! ........ ஆ. வந்தியத்தேவன் 75

திராவிடம் தமிழியத்துக்கு அரண் சேர்க்கும்! ........ ப. திருமாவேலன் 81

இந்தி சமற்கிருத எதிர்ப்பே தமிழ்த் தேசியத்தின் எழுச்சி ........ காஞ்சி அமுதன் 89

நூற்றாண்டு காணும் இந்தியப் பொதுவுடைமைக்
கட்சியின் தாக்கம்................................................................................ பேராசிரியர் சே. கோச்சடை 92

இந்தியா : சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்கள் ............................................. மரு.சா.மா. அன்புமணி 97

புறநானூறு வழியே தமிழ்ச் சமுதாயத்தைக் காணல் ...................................................... இராமியா 102

மறைமலை அடிகளாரும் தமிழ்மறவர்
வை. பொன்னம்பலனாரும்! ............................................................................ செந்தமிழ்க்கொற்றி 108

அண்ணா பல்கலைக்கழகம் இனி மேட்டுக்குடி பல்கலைக்கழகம் .................. பேராசிரியர் ப.சிவகுமார் 113

கீழடி அகழாய்வும் தமிழர் நாகரிகமும் .................................................... முனைவர் ப.வெங்கடேசன் 118

சிந்தனையாளன் பொங்கல் மலர் வரலாறு ........................................................................ கலசம் 122

பெரியார் ஈ.வெ.ரா.-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை அமைப்பும்
செயல்பாடுகளும் ....................................................................................................... துரை கலையரசு 126

உலகமயமும் நுகர்வியப் பண்பாடும் ....................................................................... தங்க. செங்கதிர் 129

பஞ்சமி நிலங்கள் எங்கே? ................................................................................ இரா.திருநாவுக்கரசு 134

பெரியாரின் இராமாயண எதிர்ப்பும்
இன்றைய அயோத்தி அரசியலும்....................................................................... தி.ச.குணசேகரன் 140

தேசிய இனங்களுக்கு எதிரான
தேசியக் கல்விக் கொள்கை .................................................................... முனைவர் இர.நடராசன் 145

இடஒதுக்கீட்டின் இன்றியமையாத் தேவை ........................................................... மு.சுவாமிநாதன் 149

பெண்களின் பொருளாதாரச் சுதந்தரம் ........................................................................... ஓவியா 154

கொள்கைக் குன்றம், நாத்திகம் பேசும்
நாராயணசாமி பல்லாண்டு வாழ்க! .......................................................... புலவர் இரா.கலியமூர்த்தி 159

வாழ்க, அம்மா சுசீலா ஆனைமுத்து வாழ்வியல் புகழ்!.................................. தாம்பரம் மா.சுப்ரமணி 161

காஞ்சி நகரச் செயலாளர்திராவிட இயக்கப் பணியில்
என் தந்தையும் நானும்....................................................................................... மு.ஜெயப்பிரகாஷ் 167

தமிழ்த் தேசிய எழுச்சிக்கான தடைகளைத் தகர்ப்போம்! ................................ தி.துரைசித்தார்த்தன் 170

மாணவர்களிடையே திருக்குறள் பரப்புதல்-என் அனுபவங்கள் ................................ குறள் அமிழ்தன் 175

முதுமையில் உடலோம்பலின் முதன்மை ...................................................................... மா. தசரதன் 179

என் பள்ளிப் பருவமும் பகுத்தறிவுச் சிந்தனையும் ........................................................... ப.வடிவேலு 182



# இந்துக்களில் தொண்ணூறு விழுக்காடு பேரும் சூத்திரராய்ப் பிறக்கிறார்; சூத்திரராய் வாழ்கிறார்; சூத்திரராய்ச் சாகிறார். இந்த இழிவிலிருந்து விடுதலை பெற வேண்டாமா?

*இந்தியத் துணைக் கண்டத்தில் இன்று 130 கோடி மக்களுக்கு மேல் இருக்கிறார்கள். இவர்களுள் 80 விழுக்காட்டுப் பேர் இந்துக்கள்; 20 விழுக்காட்டுப் பேர் இசுலாமியராக, சீக்கியராக, பவுத்தராக, சமணராக, கிறித்தவர்களாக இருக்கிறார்கள்.*

*இந்தியருள் 80 விழுக்காடு உள்ள இந்துக்கள், 104 கோடிப் பேராக இருக்கிறார்கள். இவர்களைப் பிறப்பால் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு பிரிவுகளாக மநுநீதி பிரிக்கிறது. இதையே இன்றைக்கு இந்துச் சட்டம் காப்பாற்று கிறது; இந்துச் சட்டத்தை இந்திய அரசமைப்புச் சட்டம் காப் பாற்றுகிறது.*

***இந்தியாவில், இந்து மதம் அன்னியில், பல மதங்கள் இருக் கின்றன. இந்து மதம் தவிர்த்து, வேறு எந்த மதத்திலும் பிறவியில் உயர்ந்தவர்–தாழ்ந்தவர் இல்லை; பிறவியில் மதகுரு பிறப்பது இல்லை. இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.***

*படித்தவர்களும், படிக்காதவர்களும் - இந்த விவரங்களை அறியாமல் இருக்கலாம். அறியாமல் இருப்பதனால், இந்தச் சட்டம் நடைமுறையில் இல்லை என்று ஆகிவிடாது.*

*இந்தக் கேடான நிலைமை, விடுதலை கிடைத்து 70 ஆண்டு களுக்குப் பிறகும் இருக்கலாமா?*

*இந்திய அரசமைப்புச் சட்டம், விடுதலை பெற்ற இந்தியாவில் எப்படிச் செய்யப்படும் என்று, காந்தியார் 1922-இல் பின்வருமாறு சொன்னார் :*

*"விடுதலை பெற்ற இந்தியாவில், முதலில் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை தரப்படும். நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்படும். வெளியார் தலையீடு இன்றி, இந்தியர்களுக்கான அரசமைப்புச் சட்டம் செய்யப்படும்" என்று கூறினார்.*

*1936-இல், பீகார் மாநிலத்தில், ஃபைஸ்பூரில் கூடிய இந்தியத் தேசிய காங்கிரசு, பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றியது.*



“இந்தியத் தேசியக் காங்கிரசு இந்தியாவுக்குச் சுதந்தரம் பெறவும், மக்கள் நாயக ஆட்சியை நிறுவவும் பாடுபடுகிறது. சுதந்தரம் பெற்ற பிறகு வயது வந்தோருக்கு வாக்குரிமை தந்து, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கொண்டு, வெளியார் தலையீடுயின்றி-தனக்கு வேண்டிய அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளும்” என்று தீர்மானம் நிறைவேற்றியது.

பண்டித நேரு எழுதிய புகழ்பெற்ற, “நான் கண்ட இந்தியா” (Discovery of India) என்கிற நூலில், மேற்கண்ட செய்தியையே விதந்து பாராட்டினார். ஆனால் நடந்தது என்ன?

சுதந்தரப் பிரகடனத்தை வெள்ளையன் 1947 சூலையில்தான் அறிவித்தான்.

***ஆனால், இந்தியாவில் 1946–இல் நடைபெற்ற மாகாணச் சட்டப்பேரவைகள், மத்தியச் சட்டமன்றம் ஆகியவற்றின் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு, 9.12.1946 அன்றே இந்திய அரசமைப்புச் சட்டம் எழுதத் தொடங்கி விட்டனர். இதுவே ஒரு மோசடி. ஏன்?***

1946 தேர்தலில் மாகாணச் சட்டசபைக்கு வாக்குப் போட, 14 விழுக்காடு இந்தியரே வாக்குரிமை பெற்றிருந்தனர்; மத்தியச் சட்டசபைக்கு வாக்குப் போட வாக்குரிமை 4 விழுக்காட்டுப் பேரே பெற்றிருந்தனர்.

இன்னொரு குறுக்கு வழியையும் செய்தனர்?

இந்திய அரசமைப்புச் சட்டம் எழுத, பிரதமர் பண்டித நேரு தலைமையில் தனியே ஒரு குழு அமைத்து, பி.என். ராவ் (B.N. Rau) என்கிறவரை அரசமைப்புச் சட்ட ஆலோசகராக (Constitutional Adviser)ப் பதவியில் அமர்த்தி - அவரை கனடா, அமெரிக்கா, பிரான்சு, செருமனி, இங்கிலாந்து, அயர்லாந்து முதலான நாடுகளுக்கு அனுப்பித் தங்களுக்குத் தேவையான சட்டக் கூறுகளைத் திரட்டி, ***“முதலாவது இந்திய அரசமைப்புச் சட்ட வரைவு மற்றும் அட்டவணைகள்” (The first draft of the Indian Constitution and Schedules) எழுதி அச்சிட்டு, அதை, இந்திய அரசமைப்புச் சட்டத்தை எழுதத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களிடம் 18.10.1947–இல் அதிகாரப்பூர்வமாக அளித்தனர்.***

***இந்த ஆவணம், டாக்டர் அம்பேத்கரிடம் கொடுக்கப்பட்ட பிறகு, 1948–இல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள், நான்கு பகுதிகள் கொண்ட “இந்துச் சட்டத்திருத்த மசோதா”*** (Hindu Code Bill) ***என்பதை நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார்.***

***இந்த நான்கு பகுதிகளில், மூன்று பகுதிகள், இந்து ஆண்கள் வாழ்வியலிலும், குடும்பச் சொத்திலும் எப்படி வாரிசு உரிமை அடைகிறார்களோ – அப்படியே இந்துப் பெண்களும் வாரிசு உரிமை அடைய வழிகாண ஏற்ற சட்டங்களை இயற்றவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டவை.***

***நான்காவது பகுதி, இந்திய அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, எந்த எந்தச் சட்டங்கள் செல்லு படியாக மாட்டா என்பது பற்றியது.***

அதன் விவரம் பின்வருமாறு :

***அ) இந்துச் சட்டம்*** பற்றிய மூல பாடம், விதிகள், பொருள் விளக்கம் அல்லது இந்தச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால் ஏற்கெனவே நடப்பிலிருந்த - எந்தப் பழக்கச் சட்டமும் வழக்கச் சட்டமும் - இந்தச் சட்டம் நடப்புக்கு வந்த உடனேயே நீக்கப்பட்டுவிடும். இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்ட எந்த ஒன்றும் உடனடியாக நடப்புக்கு வந்துவிடும்.

*ஆ) இந்தச் சட்டம்* நடப்புக்கு வருவதற்கு முன்னால், இந்தச் சட்டத்திற்குப் பொருந்தாத தன்மையில் இதற்கு முன்னர் நடப்பிலிருந்த எந்தச் சட்டமும் உடனடியாக நீக்கப்பட்டுவிடும்.

**விடுதலை பெற்ற ஒரு நாட்டில், எந்த வகுப்பு மக்களும் பழக்கச் சட்டம், வழக்கச் சட்டம் என்கிற பேரால் அவற்றை நம்ப வேண்டும்; பின்பற்ற வேண்டும் என்கிற கோட்பாட்டுக்கு, எந்தச் செல்லுபடி அதிகாரத்தையும் அளிக்கக் கூடாது.**

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் இவ்வாறு தன் வாழ்நாள் முழுவதும் கனவு கண்டார். அக்கனவு நிறைவேறிற்றா என்பது பற்றி நாம் கவலையோடு சிந்திக்க வேண்டும். ஏன்?

இந்துச் சட்ட மசோதாவை 1948-இல், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் முன்மொழிந்த உடனேயே, அரசமைப்புச் சட்டப் பேரவையின் தலைவராக விளங்கிய பாபு இராசேந்திர பிரசாத், அம்பேத்கர் பேரில் சீறிப் பாய்ந்தார். டாக்டர் அம்பேத்கரைப் பார்த்து, ''நீங்கள் முன்மொழிந்துள்ள இந்த நான்காவது சட்டப் பகுதி நிறைவேற்றப்பட நான் அனுமதிக்க மாட்டேன்'' என்று கூறினார்.

அத்துடன் நின்றாரா? இல்லை. பிரதமர் பண்டித நேருவிடம், ''அம்பேத்கரின் இந்தப் பகுதி மசோதாவை நீங்கள் நிறைவேற்றினால், நான் அரசமைப்புச் சட்ட அவையின் தலைவர் பதவியிலிருந்து விலகிவிடுவேன்'' என்று கண்டிப்பான குரலில் அச்சுறுத்தினார்.

இந்துச் சட்டத் திருத்த மசோதாவின் முற்பட்ட மூன்று பகுதிகள், 1951-இலேயே நிறைவேறிவிட்டன.

**ஆனால், நான்காவது பகுதியாகிய வெகுமக்கள் பேரில் பிறவி இழிவைச் சுமத்தும் இந்திய அரசமைப்புச் சட்ட விதி 13(3), 372(3) மற்றும் பழைய சட்டங்களைக் காப்பாற்றும் விதி 25, விதி 395 (கடைசி விதி) இவை இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இருக்கிற வரையில் - இந்தியாவில் இந்துக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சூத்திரராகப் பிறந்து, சூத்திரராக வாழ்ந்து, சூத்திரராய்ச் சாவதைத் தவிர வேறு வழியே இல்லை.**

**சூத்திரரும், தீண்டப்படாதாரும் ஒன்றிணைந்து, பிறவி இழிவை, அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்கிட வழிகாண்போம், வாருங்கள்!**

*1.1.2020* **- வே. ஆனைமுத்து**

மலர் வெளியீட்டுக் குழுத் தலைவர்

*சுயமரியாதை இயக்கத்தில் சகல மதக்காரருக்கும், சகல அபிப்பிராயக்காருக்கும் இடம் உண்டு. அதன் கொள்கை இவ்வளவுதான். ''மனித சமூகத்தில் குருட்டுப் பழக்கவழக்கங்களையும், மூடநம்பிக்கைகளையும் விளக்கமறியாச் சடங்குகளையும அவற்றிற்காகச் செய்யப்படும் செலவுகளையும் ஒழித்தல்'' ''சாதி, மதம், வகுப்பு ஆகியவற்றின் பேரால் ஏற்பட்டுள்ள பேதங்களையும் சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் இருந்துவரும் உயர்வு தாழ்வுகளையும் அகற்றி மக்கள் யாவரும் ஒரே சமூகமாகவும், சகோதரத்துவமாகவும் சமமாக வாழும்படி செய்தல்''*

*''பகுத்தறிவுக்கும் சுயமரியாதைக்கும் கட்டுப்பட்டு நடக்கும்படி மக்களுக்கும் சுயமரியாதை வளர்ச்சியை உண்டாக்குதல்''. இதை நடத்தி வைக்க வேண்டிய காரியத்திற்கும் ஆத்திக-நாத்திகத்துக்கும் என்ன சம்மந்தமிருக்கிறது? ஆத்திகமும் நாத்திகமும் அவரவருடைய அபிப்பிராயமும் ஆராய்ச்சித் திறமுமாகும்.*

*- பெரியார் ஈ.வெ.ரா. -குடிஅரசு 5.12.1937*



# நன்றி! நனி மிக நன்றி!

## *2020!*

*1997 முதல் சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியிடு கிறோம்!*

*இன்று, 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை, 2020-க்கான பொங்கல் சிறப்பு மலரை வெளியிடுகிறோம்.*

*இம்மலர் நூற்றுக்கணக்கான மா.பெ.பொ.க. தோழர்களின் 30 நாள்கள் களப்பணியால் உருவானது.*

*2019-ஆம் ஆண்டு ஏப்ரல் 30 அன்று என் மனைவி ஆ. சுசீலா அம்மையார் மறைந்தார். அவர் என் பொதுப்பணிக்கு நிறையப் பங்களிப்புச் செய்தார். இன்று அவர் இல்லை.*

*மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தூதுவராகவும் கொள்கைக் குன்றாகவும் விளங்கி - தமிழ்நாடு முழுவதும் சிட்டாய்ப் பறந்து சென்று, 'சிந்தனையாளன்' வளர்ச் சிக்கும், மா.பெ.பொ.க. வளர்ச்சிக்கும் பாடுபட்ட நம் கவிஞர் தமிழேந்தி அவர்கள், ஆண்டுதோறும் பொங்கல் மலர் வெற்றியாக வெளிவர எல்லாம் செய்தார். அவர் 5.5.2019-இல் மறைந்தார். இன்று அவர் இல்லாதது பேரிழப்பு ஆகும்.*

*வேலூர் தந்த கொள்கைக் குன்று - முனைவர் து. மூர்த்தி உருவாகவும், அவர், 'பெரியார் இன்றும் தேவைப்படுகிறார்' என்று கூறிப் பெரியாரை நிலைநாட்டவும் அடிப்படையாக விளங்கிய - தோழர் வேலூர் து. அரங்கநாதன் இன்று இல்லை. அவர் 23.10.2019-இல் மறைந்தார். அவர் இன்று இல்லாதது நம் இயக்கத் துக்குப் பேரிழப்பாகும்.*

*இன்று நம்மிடையே உள்ள தோழர் க. முகிலன், பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் வரகூர் மா. நாராயணசாமி உடல் நைந்து வருகின்றனர். வரகூர் மா. நாராயணசாமி 30.11.2019 அன்ற 91ஆம் அகவையை எட்டியிருக்கிறார்.*

*இன்று 95 அகவையில் நலிவுற்றுள்ள நான், 2021-ஆம் ஆண்டில் இருப்பேனா என்பது ஒரு கேள்விக்குறி.*

*ஆனாலும் இன்று, மாபெரும் பணியான இம்மலரை உருவாக்கு வதில், நம் மாவட்டச் செயலாளர்களும், துணைப் பொதுச் செயலாளர்களும், வேளாண் அணி, தொழிலாளர் அணி, மகளிர்*



அணி மாநிலச் செயலாளர்களும், நகரச் செயலாளர்களும், மா.பெ.பொ.க. ஆதரவாளர்களும் கடந்த முப்பது நாள்களாக தேனீ போலும், சிற்றெறும்பு போலும் இயங்கி, விளம்பரங்களையும், நன்கொடைகளையும், நன்கு திட்டமிட்டுத் திரட்டி, "2020 சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலரை" அழகுற வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள்.

திங்கள் தோறும், படாதபாடுபட்டு நம் "சிந்தனையாளன்" இதழைத் தொய்வின்றி, மாதாமாதம் வெளியிடுவதில்-முழுப் பொறுப்பையும் ஏற்றுத் தோழர்கள் க.முகிலன், வாலாசா வல்லவன், இரா.பச்சமலை, கலச. இராமலிங்கம், கு.தொல்காப்பியன், திருப்பத்தூர் இரா.பகுத்தறிவாளன், ப. வடிவேலு, சா. குப்பன், வே. ஆனைமுத்து ஆகியோர் மனமுவந்து செய்கிறார்கள்.

வழக்கம் போல்-இந்த ஆண்டு 5.1.2020 மலர் வெளியீட்டு விழா மற்றும் மாநாடுகளுக்கு வருகை தரும் விருந்தினர் களுக்குச் சுவையான உணவு அளிக்கும் பொறுப்பை ஏற்ற-தாம்பரம் தோழர் மா. சுப்பிரமணியம், க. முகிலன் ஆகியோர்க்கு நன்றி.

"சிந்தனைாளன் பொங்கல் சிறப்பு மலர்" இவ்வளவு சிறப்பாக வெளிவர, விளம்பரங்களும், நன்கொடைகளும் அளித்த - தமிழின வணிகப் பெருமக்கள், தொழிலதி பர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள், வழக்குரைஞர்கள், தமிழ்ச்செல்வந்தர்கள், மா.பெ. பொ.க. தோழர்கள், தோழமை அமைப்பினர் ஆகிய அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்பு மலர் வெளியீட்டுக் குழுவினர் வேண்டுகோளை மனமுவந்து ஏற்றுக் கட்டுரைகளும், கவிதைகளும் விடுத்து உதவிய பெருமக்கட்கும், அறிஞர்கட்கும் நன்றி பாராட்டுகிறேன்.

மலர் வெளியீடு மற்றும் மாநாடுகள் ஆகியவற்றை நடத்திக் கொள்ள "மாம்பலம் சந்திரசேகர் திருமண மண்டபம் தாருங்கள்" எனக் கேட்டவுடன், அட்டியின்றி ஒப்புதல் அளித்த - மண்டப உரிமையாளரும் இலக்கியப் புரவலருமான தோழர் ஆ. சந்திரசேகர் அவர்களுக்கு, மா.பெ.பொ.க. சார்பில் நன்றி செலுத்துகிறேன்.

சிறப்பு மலர் வெளியீட்டிலும், தமிழ் நாட்டுக் கல்வி உரிமை மாநாட்டிலும், சுயமரியாதை மாநாட்டிலும் உரையாற்றிட ஒப்புதல் அளித்து, இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அறிஞர் பெருமக்கட்கும் நன்றி பாராட்டுகிறேன்.

கட்டுரைகளையும், மலர் விளம்பரங்களையும், செய்திகளையும் சரிபார்த்தும், அச்சிட ஏற்பாடு செய்தும் உதவிய தோழர்கள் இரா. பச்சமலை, கலச. இராமலிங்கம், க. முகிலன், வாலாசா வல்லவன், சா.குப்பன் இவற்றை அழகுறப் பதிவு செய்து உதவிய கு. தொல்காப்பியன், இரா.பகுத்தறிவாளன் ஆகியோர்க்கு மனம் நிறைந்த நன்றி.

கட்டுரைகளையும் விளம்பரங்களையும் அழகுற அச்சுக்கோத்துத் தந்த சன் நகலக உரிமையாளர் தோழர் இரா. சரவணன், எப்போதும் போல் பொங்கல் மலரை அழகுற அச்சிட்டுத் தந்த சென்னை மூகாம்பிகை அச்சகத்தார்க்கும் மனங்கனிந்த நன்றி.

மாநாட்டு மண்டபம், அரங்கம், மேடை, மாநாட்டு மண்டபச் சுற்றுப்புறம், தெருக்கள் இவற்றைக் கட்சிக் கொடிகள் - பாவட்டக்களால் அழகுறச் செய்த மீ. தில்லிபாபு மற்றும் கு. தொல்காப்பியன் குழுவினருக்கு நன்றி.

இவை எல்லாவற்றுக்கும் உறுதுணையாகச் செயல்பட்ட வாலாசா வல்லவன், கு. தொல்காப்பியன் இருவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றி.

**வாழ்க மார்க்சியப் பெரியாரியம்!**

*01.01.2020* **வே. ஆனைமுத்து**

*மலர் வெளியீட்டுக் குழுத் தலைவர்*



# தமிழர் பண்பாட்டில் பொங்கல் திருநாள்

- முதுமுனைவர். இரா. இளங்குமரனார்

*பொங்கல் என்பது தொழிற்பெயர்; தொழில்கள் எல்லாவற்றுக்கும் மூலத்தொழில் 'உழவுத் தொழில்'. அதனால் பொய்யாமொழியார்,*

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"*

*என்றார். உழவர் தொழிலாளரைச் சார்ந்து வாழ்பவர். பதினெண் குடியினர் - தொழிலினர் என்று முன்னை நாளில் கணக்கிட்டனர். உழவர் உழுது பாடுபடாமல் கையைக் கட்டிக் கொண்டால், எப்பற்றும் இல்லேம் என்னும் துறவரும் வாழார்! என்பதை,*

*'உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்*
*விட்டேம்என் பார்க்கும் நிலை' (1036)*

*ஏன்எனில், உழவர் எவரையும் இரந்து வாழார்; இரந்து வந்தவர்க்கு இல்லை எண்ணாது ஈவர் என்பதால்!*

*"இரவார் இரப்பார்க்கு ஒன்றுஈவார் கரவாது*
*கைசெய்தூண் மாலை யவர்" (1035)*

*தம் உழைப்பாலேயே வாழ்பவர்; அவர் மட்டுமல்லர், வழி வழியாக உழுதொழில் செய்பவர் அவர்!*

*உலகம் சுழல்வது உண்மை; அச்சுழற்சியால் மட்டும் மாந்தர் வாழ்ந்துவிடமுடியாது! உழவன் தன் நிலத்தில் ஏரைப் பூட்டி உழுது சுழல வேண்டும் என்பதை,*

*"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை" (1031)*

*என்றார் அறம் பாடிய கிழவர் வள்ளுவர்.*

*கிழவர் என்பார் மண உரிமையர்; வாழ்வுரிமையர்; நில உரிமையர்; அவர் நீர் இறைக்கும் இறைவைச் சால், கிழார்!*

*நிலக்கிழார் தந்தவை பண்பாடு, ஒப்புரவு, ஈகை, விருந்தோம்பல் என்பன.*

**பண்பாடு**

*'பண்'ணிசை செவிக்கு இன்பம் தரும்*
*பண்பாடு வாழ்வுக்கு மூலம்'!*



உழவன் உழவு, கட்டி உடைப்பு, எருவிடல் எனப் பண்படுத்துகிறான் விளை நிலத்தை!

அவன் படுத்தமும் உழைப்பும் வெளிப் படக் காட்டுவது விளைவு.

**'விளையறா வியன் கழனி**
**கார்க் கரும்பின் கமழாலை'**

என்பது பட்டினப்பாலை.

நெல்லும் கரும்பும், வாழையும் கமுகும், மஞ்சளும் இஞ்சியும்-விளங்கும் விளைநிலம் உழவன் பண்படுத்தலுக்கும் உழைப்புக்கும் சான்று.

முள்ளும் முடலும், கள்ளியும் கற்றாழையும், வேலிக் கருவேலும்-உழவன் உழையாமைக் கும் பண்படுத்தாமைக்கும் சான்று.

நிலத்தைப் பண்படுத்தா மடியன் (சோம்பன்) வாழ்வு மடிந்து போகும் சான்று!

உழவன் தந்த பண்படுத்தல் சான்று, வாழ்வியல் பண்பாட்டு மூலம்!

அதனைக் கலித்தொகை,

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்"

என்கிறது. பாடு என்பது மெய்ப்பாடு!

தம் முன்னால் நிற்பவர் - இருப்பவர், எந்நிலையில் உள்ளாரோ அந்நிலை அறிந்து நடந்து கொள்ளுதல் பண்பாடாகும். இத னைப் 'பண்புடைமை' என்றோர் அதிகார மாகத் திருக்குறள் தந்தது (100).

## ஒப்புரவு

உழவன் நிலத்தை ஒப்புரவு செய்வான். உழுவான்; வரப்பு ஓரம் வெட்டுவான்; சால் அடிப்பான்; மேடுபள்ளம் இல்லாமல் சமன் படுத்துதலால் ஒப்புரவு செய்வான்! ஏனெனில், ஒப்புரவு செய்யாமல் மேடுபள்ளமாக இருந்து நீர்விட்டால், மேட்டில் நீர் ஏறாது; போட்ட வித்து முளையாது; பள்ளத்தில் நட்ட வித்து முளைத்தாலும் அழுகிச் செத்துப்போம்.



ஒப்புரவில்லாமை இரட்டைக் கேடாம்! பொதுவுடைமையோ-சமுதாயமோ-தோன்றுவதற்கு முன்னர் உழவன் வழியே தமிழன் - தமிழினம் - கண்டது ஒப்புரவு.

'ஒப்புரவறிதல்' என்பது வள்ளுவத்தில் ஓரதிகாரம் ஆனது (22). ஒப்புரவு எங்கும் காணரிய உயரிய பண்பு. அனைவருக்கும் கைம்மாறு கருதாமல் பெய்யும் மழை போன்றது; ஊருணி நீர் நிறைந்தது போன்றது; உள்ளூரில் பழமரம் பழுத்தது போல்வது; பசிநோய் முதலாம் நோய்களுக்கு மருந்து போன்றது என்று வள்ளுவர் விரித்துக் கூறுவார்.

வள்ளலார்,

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும்
எல்லாரும் ஒருநிலையர் ஆதல்"

என அரிய விளக்கம் தருவார்.

## ஈகை

ஒப்புரவுக்கு அடுத்த அதிகாரம் ஈகை. ஈகையாவது கொடை (23).

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" (221)
"அற்றார் அழிபசி தீர்த்தல்" (226)
"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்" (225)
"ஈத்து உவக்கும் இன்பம்" (228)

என ஈகைச் சிறப்பை இனிதின் விளக்குகிறார். வள்ளலார் உள்ளப் பதிவாம் பசியாற்றல் தலைப்பட்டு நிற்பது இவ்வதிகாரம்.

**விருந்தோம்பல்**

இல்லறத்தான் கடப்பாடுகளுள் விருந்தோம்பல் தனிச்சிறப்பினது.

"விருந்தே புதுமை" என்பது தொல் காப்பியம். தொல்காப்பியர் வழியில் முப்பால் யாத்த திருவள்ளுவர், விருந்தோம்பலை ஓர் அதிகாரமாகப் பாடுகிறார் (9). வந்த விருந்தினரை எதிர்பார்த்திருத்தல் இல்லற வாணன் கடமையாக்கிய அவர், அந்நாளில் தமிழகத்துப் புகுந்த வேள்வியை எண்ணி வருந்துகிறார்.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலைக் கண்டிக்கும் அவர் (259), விருந்தோம்பலாம் வேள்வியைச் செய்ய ஏவுகிறார்.

பசித்து வயிறு எரிபவனுக்கு உயிர் மருந்தாகிய பால், வெண்ணெய், நெய், அரிசி, பருப்பு முதலியவற்றையும், பருவிலைய பட்டு துணிமணி உயிரி என்பவற்றையும் பாழாகக் கொட்டுதலை எண்ணி,

"இனைத்துணைத் தென்பதொன்றில்லை
விருந்தின்
துணைத் துணை வேள்விப் பயன்" (87)

என்றும்,

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்" (88)

என்றும் கூறுகிறார்.

தமிழர் பண்பாட்டின் மூல வைப்பகமாம் திருக்குறளை வாழ்வியலாகக் கொள்ளாமல் வேறு வேறு நெறி பற்றல்,

"கனியிருப்பக் காய் கவர்ந்தேயாம்".

வாழிய நலனே! வாழிய நிலனே!

●

*பார்ப்பனர்கள் எப்போதுமே வேறு வகுப்பினரைத் தம் கூட்டாளிகளாக வைத்துக் கொண்டனர். அவர்கள், பார்ப்பனர்களுக்கு அடங்கி ஒத்துழைக்க அணியமாய் இருந்தால் அவர்களுக்கு ஆளும் வகுப்பெனும் தகுநிலையைத் தரவும் தயாராய் இருந்தனர் என்பதை வரலாறு காட்டுகிறது. புராதன காலத் திலும் மத்திய காலத்திலும் சத்தியர்கள் எனப்படும் போர் வீரர் வகுப்புடன் அவர்கள் இப்படியொரு கூட்டணி கண்டனர். இருவரும் வெகுமக்களை அடக்கி ஆண்டனர்; சொல்லப்போனால் அவர்களை நசுக்கி ஒடுக்கினர். பார்ப்பனர் எழுதுகோலைக் கொண்டும் சத்திரியர் வாளைக் கொண்டும் இதைச் செய்தனர். இப்போது பனியாக்கள் எனப்படும் வைசிய வகுப்புடன் பார்ப் பனர் கூட்டணி கண்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டணி சத்திரியரிடமிருந்து பனியாவுக்கு மாறியிருப்பது இயல் பானது. வாணிகம் கோலோச்சுகிற இந்தக் காலத்தில் வாளைவிடவும் பணமே முக்கியம்.*

***- டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்***





# குறிக்கோளை வென்றெடுத்திட, நாமும் நம் போன்றோரும், தமிழரும் என்னென்ன செய்ய வேண்டும்?

- வே. ஆனைமுத்து

*தமிழர்க்கு உரிய இலக்கியங்கள் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்துள்ளன. அதனால்தான் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியம் என்னும் இலக்கணம் தோன்றியது. 2000 ஆண்டுகளுக்கு முன் திருக்குறள் தோன்றியது. 1800 ஆண்டுகளுக்கு முன் சங்க இலக்கிய நூல்கள் தோன்றின. இவ்விலக்கியங்களில் உழவு, உழவர் பற்றி நிறையப் பேசப்படுகின்றன. உழவர்களின் உழைப்பின் பெருமையைக் காட்டும் நாளே பொங்கல் விழா நாள். பொங்கல் விழாவை ஒட்டி இம்மலரை வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.*

*மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினராகிய நாம் தமிழ்ப் பெருமக்களின் துணையுடன் இந்திய அளவில் மிகப் பெரிய வரலாற்றுச் சாதனையைச் செய்திருக்கிறோம்.*

*இந்தியப் பிற்படுத்தப்பட்டோருக்கான மண்டல்குழு, நம் இடையறா முயற்சியினால்தான் அமைக்கப்பட்டது.*

*17.09.1978 முதல் 18.10.1978 முடிய நம் தோழர்களும், பீகார் இராம் அவதேஷ் சிங்கின் தோழர்களும் பீகாரின் 31 மாவட்டங்களிலும் பரப்புரை செய்தோம். 31.10.1978 முடிய, சிறை நிரப்பும் போராட்டத்தை நடத்தினோம்.*

*நம் போராட்டத்தை அடக்கிட வேண்டி, அன்றைய பிரதமர் மொரார்ஜி தேசாய் பீகாரில் பயணம் மேற்கொண்டார். அவர் பொதுக்கூட்ட மேடையில் ஏறியவுடன், எல்லா ஊர்களிலும் மக்கள் சினங்கொண்டு கல்லையும் செருப்பையும் அவர் மீது வீசினர்.*

*அதில் அவர் பாடம் கற்றார். அதன் விளைவாகத்தான் 20.12.1978-இல் மக்கள் அவையில், "இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழுவை அமைப்போம்" என அறிவித்தார். 1.1.1979-இல் பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் தலைமையில் அக்குழுவை அமைப்பதாக அறிவித்தார்.*

***இந்திய அரசியல், 1982 முதல். "மண்டலுக்கு முந்திய இந்தியா-மண்டலுக்குப் பிந்திய இந்தியா" என வடிவம் பெற்றது. கடந்த 29 ஆண்டுகளாக அந்த உணர்ச்சி இந்தியா முழுவதிலும் ஓங்கி வளர்ந்து நிற்கிறது. இது***



**வரலாற்றுச் சிறப்புமிக்க நம் முதலாவது சாதனை ஆகும்.**

*1978 பாட்னா போராட்டத்தை அடுத்துத்தான், 10.11.1978-இல் பீகார் மாநிலப் பிற்படுத்தப்பட்டோருக்கு முதன் முதலாக 20 விழுக்காடு இடஒதுக்கீடு, பீகார் முதல்வர் கர்ப்பூரி தாக்கூர் அவர்களால் அளிக்கப்பட்டது. இது* **நம் இரண்டாவது சாதனை.**

*1979-க்கும் 1986-க்கும் இடையில் இரண்டாவது, மூன்றாவது தடவையாக பீகாரிலும் மற்றும் உத்தரப்பிரதேசம், இராசஸ்தான், அரியானா மாநிலங்களிலும், 1986-1987-இல் மேற்கு வங்காளத்திலும், அசாமிலும், பஞ்சாபிலும் இடஒதுக்கீட்டுப் பரப்புரைப் பயணம் மேற்கொண்டோம். 1990இல் புதுதில்லியிலிருந்து "இராசரதம்" தொடங்கி அரியானாவில் முடித்தோம்.*

**நாம் தமிழ்ப் பெருமக்களின் உதவியுடன் தமிழ்நாட்டில் மட்டுமே இப்பணிகளைச் செய்திருந்தோமானால் - மய்ய அரசில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு ஒருபோதும் வந்திருக்காது.**

*அத்துடன், 31.12.1979 முடிய தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டாருக்கு 31 விழுக்காடு மட்டுமே தரப்பட்டுவந்த இடஒதுக்கீட்டு அளவை 60 விழுக்காடு உயர்த்தித்தர வேண்டும் என்று நாம் மட்டுமே 19.8.1979-இல் தமிழ்நாட்டு முதல்வர் எம்.ஜி.ஆரிடம் கோரிக்கை வைத்தோம். அதற்கான தெளிவான விளக்கங்களையும் முன்வைத்தோம்.*

*அதன் விளைவாகத்தான் 1.2.1980 முதல் தமிழ்நாட்டுப் பிற்படுத்தப்பட்டோர் 50 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப் பெற்றனர். இது* **நம் மூன்றாவது சாதனை.**

*ஆயினும்கூட ஒதுக்கீட்டுக் கோரிக்கை இன்னமும் முழுமை பெறவில்லை. எப்படி?*

1. *நடுவண் மய்ய அரசு தொழிற்கல்வியில், 2008-இல் நடப்புக்கு வந்திருக்க வேண்டிய 27 விழுக்காடு இடஒதுக்கீடு இன்றளவும் வரவில்லை.*
2. *மேற்கு வங்காள மாநில அரசு, கல்வியில், பிற்படுத்தப்பட்டோருக்கு 2011-12 கல்வி ஆண்டில்தான் 17 விழுக்காடு இடஒதுக்கீடு தரமுன்வந்தது.*

   *இவையெல்லாம் பிற்படுத்தப்பட்டோரை அவமானப்படுத்துவதாகும்.*
3. *பட்டியல் வகுப்பாருக்கும் பழங்குடியினருக்கும் எந்த வேலையிலும் I, II வகுப்புப் பணிகளில் விகிதாசார இடஒதுக்கீடு தரப்படவில்லை.*
4. *இந்த மூன்று வகுப்பாருக்கும் தேங்கிப் போன காலி இடங்கள் (Backlog Vacancies) நிரப்பப்படவே இல்லை.*

**இந்தியாவில் பெரிய எண்ணிக்கையில் உள்ள இந்த மூன்று வகுப்பாருக்கும் விகிதாசாரப் பங்கீடு தரப்படுகிற வரையில், நாம் ஓய்வாக இருக்கக் கூடாது.**

***சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் 1921-1922-இல் அளிக்கப்பட்டது போல, மொத்தம் உள்ள 100 விழுக்காட்டு இடங்களையும் எல்லா மத வகுப்புகளுக்கும், எல்லாச் சாதி வகுப்புகளுக்கும் அந்தந்த வகுப்பின் எண்ணிக்கைக்குச் சமமாகப் பிரித்துத் தருகிற வரையில் நாம் ஓயக்கூடாது.***

*இடஒதுக்கீட்டுப் போராட்டம் என்பது அரசமைப்பில் உறுதி அளிக்கப்பட்ட உரிமைகள் நமக்கு வந்து சேர வேண்டும் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது.*

இதற்கே, *1978*-இல் நாம் தொடங்கிய போராட்டம் - இந்தியா முழுவதற்கும் எடுத்துச் செல்லப்பட்ட பிறகும், இன்னமும் இது முற்றுப் பெறவில்லை.

அப்படியானால் - அரசமைப்புச் சட்டத்தில் இல்லாத ஒரு கூட்டாட்சி அரசை நாம் இந்தியாவில் அமைக்க எத்தனிக்கிறோமே - அது எப்படிக் கைகூடும்?

இதற்கும் தமிழ்நாட்டு மக்களின் துணையுடன், *1991*-இலேயே முதன்முதலாகப் புதுதில்லியில் நாம் களம் அமைத்தோம்.

பஞ்சாப் உயர்நீதிமன்ற நீதிபதி அஜீத்சிங் பெயின்ஸ் தலைமையில், புதுதில்லியில், மவ்லங்கர் மன்றத்தில், "அனைத்திந்தியக் கூட்டாட்சி மாநாட்டை" *18.10.1991*-இல் நடத்தினோம்.

**1. இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கக் கூடாது. அந்தந்த மாநிலத்தில் உள்ள எல்லா நடுவண் அரசு அலுவலகங்களிலும் அந்தந்த மாநில ஆட்சி மொழிதான் அலுவல் மொழியாக-ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டு எல்லைக்குள் தமிழ் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்.**

இதற்கு ஏற்ப அரசமைப்பு விதிகளைத் திருத்த வேண்டும்.

2. இந்திய ஆட்சிப்பணி (I.A.S.), இந்திய காவல் பணி (I.P.S.), இந்திய அயலுறவுப் பணி (I.F.S.) என்பவையும், இவற்றுக்கான அனைத்திந்தியப் பணித் (U.P.S.C.) தேர்வுக் கழகமும் ஒழிக்கப்பட வேண்டும்.

**இந்தப் பணிகளுக்கு உரியவர்களை அந்தந்த மாநில அரசு பணிக்குழுவினரே தேர்வு செய்து கொள்ள வேண்டும்.**

**இது தொடர்பாக இப்போது உள்ள அரசமைப்பு விதிகளை அடியோடு நீக்க வேண்டும்.**

3. அரசமைப்பு விதிகள் *13, 25, 372* இவற்றில் பழைய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், பிறவி வருண சாதி அமைப்புக்கு உள்ள பாதுகாப்பு முதலானவை மேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் *1947*-இல் முன்மொழிந்த தன்மையில்-தந்தை பெரியார் *1946* முதல் கோரிய தன்மையில் அடியோடு அகற்றப்பட வேண்டும்.

இவ்வளவு கடினமான பணிகளைத் தமிழகத்திலிருந்து கொண்டே நாம் செய்ய முடியாது. நம் போன்ற-நம்மைவிட வலிமையுடைய எந்த அமைப்பும் அல்லது கட்சியும் இங்கிருந்து கொண்டே இவற்றைச் செய்ய முடியாது. ஏன்?

இவையெல்லாம் முதலில் பார்ப்பனருக்கும் மேல்சாதிக்காரருக்கும் எதிரானவை.

இரண்டாவதாக, முதலாளிகளுக்கும் தொழிலதிபர்களுக்கும் எதிரானவை.

மூன்றாவதாக, "இந்தியா ஒற்றை ஆட்சியாகவே - ஒரே பெரிய சந்தைக்களமாகவே இந்துத்துவப் பண்பாட்டுக்களமாகவே இருக்க வேண்டும்" என்று நம்புகிற அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவை புதியவை-செரித்துக் கொள்ள முடியாதவை.

நான்காவதாக, 'இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு' என்று மனமார நம்புகிற அறிவாளிகள், வழக்குரைஞர்கள், பேராசிரியர்கள், நீதிபதிகள், செய்தி இதழாளர்கள் - ஏன் பகுத்தறிவாளர்கள் என்போர் உள்ளிட்டவர்கள் கூடப் பெரிய அளவில் அடங்கியுள்ள சமூகம் இது.

இவ்வளவையும் நெஞ்சில் கொண்டு, இந்தியா என்பதைச் செயல்படுகளமாக

*ஆக்கி, நாமும் - இதில் கவலையும் அக்கறையும் கொண்ட தமிழர் அமைப்புகளும், தமிழர்களும் செயல்படத் துணிய வேண்டும்.*

***நாம் நம் இயக்க இதழ்களையும், நூல் வெளியீட்டுப் பணிகளையும், கட்சி அமைப்பையும் முதலில் மிகவும் செம்மைப்படுத்த வேண்டும். இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் இவை பற்றி நல்ல புரிதலை எப்பாடுபட்டேனும் உண்டாக்கித்தர வேண்டும்.***

**இவ்வளவு பணிகளுக்கும் தமிழ் மக்களிடமிருந்து கோடிக்கணக்கான அளவில் பணம் திரட்டப்பட வேண்டும்.**

*பலதுறை அறிவுள்ள-களப்பணியை விரும்பி ஏற்கிற படித்த இளைஞர்களை நாம் உருவாக்கிட வேண்டும்.*

*2011-ஆம் ஆண்டுக்கான 'சிந்தனையாளன்' சிறப்பு மலர் வெளியீட்டையும், "தேசிய இனங்களின் தன்னுரிமை மாநாட்டை"யும் மிக வெற்றியாக இன்று நடத்துகிற நாம் - தமிழ் மக்களின் பேராதரவுடன் நம் அரசியல் குறிக்கோளை வென்றெடுக்க முனைவோம்.*

*2011-ஆம் ஆண்டில் இப்பணிகளுக்கு அடித்தளம் இட நாம் எல்லாமும் செய்ய வேண்டும்.*

*நாம் திட்டமிட்டுச் செயலாற்றினால்-* **தமிழ்ப் பெருமக்களை உரியவாறு நாம் அணுகினால்** *இவை முடிக்கப்படக் கூடியவையே!*

*முயலுவோம், முடிப்போம்! வெற்றி கிட்டும் வரை போராடுவோம்!*

**(நன்றி : 'சிந்தனையாளன்' பொங்கல் மலர்–2011)**

# தமிழ்க் கனவு

தமிழ்நா டெங்கும் தடபுடல்! அமளி!!
பணமே எங்கணும் பறக்குது விரைவில்
குவியுது பணங்கள்! மலைபோல் குவியுது!!
தமிழின் தொண்டர் தடுக்கினும் நில்லார்,
ஓடினார், ஓடினார், ஓடினார் நடந்தே!
ஆயிரம் ஆயிரத் தைந்நூறு பெண்கள்
ஒளிகொள் விழியில் உறுதி காட்டி
இறக்கை கட்டிப் பறக்கின்றார்கள்!
ஐயோ, எத்தனை அதிர்ச்சி, உத்ஸாகம்!
சமுத்திரம் போல அமைந்த மைதானம்!
அங்கே கூடினார் அத்தனை பேரும்!
குவித்தனர் அங்கொரு கோடி ரூபாய்!
வீரத் தமிழன் வெறிகொண் டெழுந்தான்!
உரக்கக்கேட்டான்: 'உயிரோ நம் தமிழ்?'
அகிலம் கிழிய ம்! ம்! என்றனர்!!
ஒற்றுமை என்றான்; 'நற்றேன்' என்றனர்.
உள்ளன்பு ஊற்றி ஊற்றி ஊற்றித்
தமிழை வளர்க்கும் சங்கம் ஒன்று
சிங்கப் புலவரைச் சேர்த்தமைத்தார்கள்!
உணர்ச்சியை, எழுச்சியை, ஊக்கத்தையெலாம்
கரைத்துக் குடித்துக் கனிந்த கவிஞர்கள்
சுடர்க்கவி தொடங்கினர்! பறந்தது தொழும்பு!
கற்கண்டு மொழியில் கற்கண்டுக் கவிதைகள்,
வாழ்க்கையை வானில், உயர்த்தும் நூற்கள்,
தொழில் நூல், அழகாய்த் தொகுத்தனர்
விரைவில்!
காற்றிலெலாம் கலந்தது கீதம்!
சங்கீத மெலாம் தகத்தகாயத்தமிழ்!
காதலெலாம் தமிழ் கனிந்த சாறு!
கண்ணெதிர்தமிழ்க் கட்டுடல் வீரர்கள்!
காதல் ததும்பும் கண்ணா என்றனைக்
கோதை ஒருத்தி கொச்சைத் தமிழால்
புகழ்ந்தாளென்று, பொறாமல் சோர்ந்து
வீழ்ந்தான்! உடனே திடுக்கென விழித்தேன்.
அந்தோ! அந்தோ! பழைய
நைந்த தமிழரொடு நானிருந் தேனே!

**- பாரதிதாசன்**



# பெயரே முதல் அடையாளம்!

**செந்தலை ந. கவுதமன்,** சூலூர் பாவேந்தர் பேரவை

'புரியாதவை எல்லாம் உயர்வானவை' என நினைப்பது அடிமை மனத்தின் இயல்பு. அடிமை மனநிலை அதிகமாய்க் காணப்படுவது, படிப்பறிவு உள்ள தமிழர்களிடம் என்பது அருவருப்பான உண்மை.

படிப்பாளி (Learner) வேறு! அறிவாளி (Intelectual) வேறு! அண்ணல் அம்பேத்கர் இப்படித்தான் வகைப்படுத்திக் காட்டுகிறார்.

மதிப்பெண்ணுக்காகப் படித்து, வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதே நோக்கமாகக் கொண்டோர் படிப்பாளி!

மனிதவாழ்வைப் புரிந்து கொள்வதற்காகக் கற்று, சமூக நலத்தை உயர்த்துவதை இலக்காகக் கொண்டோர் அறிவாளி!

உருவத்தால் தமிழராக இருந்தாலும் உள்ளத்தால் மற்ற மொழிகளிடம் மண்டியிட்டுக் கிடக்கும் படிப்பாளிகள் எண்ணிக் கையே தமிழினத்தில் மேலோங்கி நிற்கிறது.

அடிமைச் சிந்தனைக்கு மூளையைப் பழக்கப்படுத்திவிட்ட வர்கள், தமது மொழியைத் தாழ்வாய் நினைப்பார்கள்! தமிழ்நாட்டுச் சமூக வாழ்விலும் குடும்ப வாழ்விலும் பெருமைப்படுத்தப்படுவது எந்தமொழி என்று பார்த்தால், இந்த உண்மை விளங்கும்.

தமிழ்நாட்டில் ஆங்கிலமும் சமற்கிருதமும் மேட்டுக்குடி வாழ்வின் அடையாளம் என்ற போதை ஏற்றப்படுகிறது.

குழந்தைகளுக்கு வடமொழியில் பெயர் வைப்பதும், அந்நிய மொழிக் கல்வியை அவர்கள் மூளையில் திணிப்பதும், உயர்ந்த வாழ்வை எட்டிவிட்டதன் அறிகுறிகளாக நம்ப வைக்கப்படுகின்றன.

ஆங்கில வழியில் படிப்பதால் அறிவு வருகிறதோ இல்லையோ, 'ஆங்கிலம் தெரியும்' என்ற தலைக்கனம் வரும். மற்றவர்களைத் தாழ்வாகப் பார்த்துத் தனக்கு மட்டும் சிம்மாசனம் தேடும் உயர்வு மனப்பான்மை வரும். வசதியைப் பறைசாற்றும் கருவியாகக் கல்வி மாறுவது சமுதாயக் கேடுகளுக்கு வழிவகுக்கும்.

வீட்டில் பேசப்படும் மொழியோ, வீதியில் பேசப்படும் மொழியோ, வகுப்பறை மொழியாக இருந்தால் மட்டுமே படிக்கும் குழந்தைக்குத் தெளிவுவரும். இரண்டும் அல்லாத மயக்க மொழியில் வகுப்பு நடப்பது, இயந்திர மனிதர்களையே பிதுக்கித்



தள்ளும். வெற்றுப் படிப்பாளிகளின் எண் ணிக்கை மட்டுமே அதனால் பெருகும்.

மக்கள் மொழியை நேசிக்காத எவரும் மக்களை நேசிப்பது கடினம்.

மக்கள் நலத்தையும் மனித சமத்துவத் தையும் நேசிப்பவர்களால் மட்டுமே, மந்தை மனப்பான்மையிலிருந்து விலகி நின்று சிந்திக்க முடியும்.

தமிழினம் முன்பு வருணாச்சிரமத்தால் பிளக்கப்பட்டது. இப்போது கல்வி முறையால் பிளவுபட்டு நிற்கிறது. வசதியானவரா? வறுமையானவரா? என்பதைப் பள்ளியை வைத்தே வேறுபடுத்திப் பார்க்கும் அவலநிலை வந்துவிட்டது.

மக்கள் மொழியில் கல்வி புகட்டப்படும் போது, அறிவு அனைவருக்குமான பொதுச் சொத்து ஆகிவிடும்.

கல்வியில் பிறமொழியைத் திணிப்பது கேடு! பெயரில் பிறமொழியைத் திணிப்பது பெருங்கேடு.

பிறந்த இனத்தின் அடையாளத்தைப் பெயரில் புலப்படுத்துவது அறிவு நாகரிகம்.

அறிவைக் கல்வி முறையிலும் அறிவு நாகரிகத்தைப் பெயரிடுவதிலும் இழந்து கொண்டிருக்கிறது இன்றைய தமிழினம்.

| | | | |
|---|---|---|---|
| அக்ஷய் | ஷ்யாம் | அனன்யா | ஸ்ரீநிதி |
| அபிலாஷ் | ஸ்ரீவர்தன் | அனுஷா | ஸ்ரீமதி |
| ஆகாஷ் | க்ருஷ் | அமிர்தாஸ்ரீ | ஸ்நேகா |
| ரூபேஷ் | கிஷோர் | அபர்ணாஸ்ரீ | ஸ்ரேயா |
| ப்ரணவ் | ராகவ் | ஆஷிகா | ரித்திகா |
| யஷ்வந்த் | தனுஷ் | வர்ஷா | ஷ்ருதி |
| நிதிஷ் | ஹர்ஷத் | வர்ஷின் | ரக்ஷா |
| நீரஜ் | ஷரிஷ் | ஜனனி | ரேஷ்மா |

தமிழர் வீட்டுக் குழந்தைகளின் பெயர்கள் இவை என்றால் நம்புவார்களா? விளங்காத பெயர்களைச் சுமந்து நிற்போரைச் சுமந்து நிற்கிறது தமிழ்நாடு!

அரசியல் தலைமை தமிழரிடம் வந்திருக்க லாம். மதத்திற்கும் சடங்கிற்கும் தலைமை தாங்கும் பண்பாட்டு அதிகாரம் பார்ப்பனர் வசத்தில்தான் இன்றும் உள்ளது. செத்த வடமொழியை, உயிருள்ள தமிழர்கள் பெயரில் சுமக்குமாறு செய்துவிடுகிறார்கள்.

பெற்ற குழந்தைக்குப் பெயர் வைக்குமாறு சோதிடர்களிடம் கையேந்தும் அடிமை நிலைக்கு வெட்கப்படுவதில்லை நம் படிப்பாளிக் கூட்டம்!

தமிழ் அல்லாத பெயர்களைத் தமிழர் வீட்டுக் குழந்தைகளுக்குச் சூட்டுவது இன அழிப்பின் தொடக்கம்.

தமிழரைத் தாழ்த்த விரும்பும் எவரும் தமிழைத் தாழ்த்துவதே முதற்படி!

தமிழைப் பெயரில் நீக்குவதைத் தொடங்குகிறார்கள்; கல்வியில் நீக்குவதைத் தொடர்கிறார்கள். வருமுன் காக்கும் விழிப் புணர்ச்சி மிகுதியானால், விளைச்சலுக்கு வழியுண்டு.

❖

எந்த மனிதனும் மற்ற சாதியைப் பற்றிச் சந்தேகப்பட்டாலும், தன் சாதியைப் பற்றி நம்பிக்கையாகவும், மேன்மையாகவும் கற்பித்துக் கொண்டு, மற்றவர்களைத் தாழ்த்தி பெருமை அடைகிறான். இந்தக் குணம் பார்ப்பானி டத்தில் மாத்திரமல்லாமல், எல்லா சாதியாரிட மும் இருந்து வருகிறது. சாதிபேதம் ஒழிவதை இழிவாய்க் கருதுகிறேன்; சாதிக் கலப்பை விபச்சாரித்தனமாக எண்ணுகிறான். இந்த மனப்பான்மைதான் சாதி ஒழிப்புக்கு எமனாக இருக்கிறது.

**- பெரியார் ஈ.வெ.ரா.**



# வையகம் வாழ
# வள்ளுவமே வழி

முனைவர் **அ.ஆறுமுகம்,** திருமழபாடி

***முன்னுரை :***

*உருசியத் தலைநகரிலுள்ள கிரம்ளின் மாளிகையின் அடியில் டங்ஸ்டன் உலோகத்தாலான நிலவறை ஒன்றுள்ளது. அவ்வறையில் உலகமொழிகளில் உள்ள சிறந்த நூல்கள் வைக்கப் பெற்றுள்ளன. போரில் உலகமே அழிந்தாலும் எதிர்காலத்தில் எப்போதாவது இவ்வறை திறக்கப்பெற்று அதிலுள்ள நூல்களை அறிந்துகொள்ள வாய்ப்பாகும் என்பதே நோக்கம். இந்நிலவறைப் பெட்டகத்தில் இடம்பெற்றுள்ள ஒரே தமிழ் நூல் திருக்குறள் மட்டுமே. இது தமிழுக்குக் கிடைத்த தனிச்சிறப்பு. உலகத்தவரால் ஏற்கப் பெற்ற இலக்கியம் என்ற பெருமை பெற்றது திருக்குறள்.*

***உலகச் சிந்தனை :***

*பண்புடையவர்களால் மட்டுமே உலகம் வாழும் என்பதை வள்ளுவம் பண்புடையார் பட்டுண்டுலகம் (996) எனக் குறிக்கிறது. பண்புடையவரைப் பின்பற்றி உலக மக்கள் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி வாழாதவர் எத்தகைய கல்வியைக் கற்றிருந்தாலும் கல்லாதவரே என்பதை, உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார் (140) எனத் தெளிவுபடுத்துகிறது. தமிழு ணர்வாளராய் விளங்கிய திருவள்ளுவர் தம் நூலில் தமிழ் என்றோ, தமிழ்நாடு என்றோ எங்கும் குறிப்பிடவில்லை. திருக்குறளில் உலகப் பொதுமை பெற்ற மனிதம்தான் இருக்கிறது. சாதிப் பெயரோ, மூலப்பெயரோ, குலப்பெயரோ, குடிப்பெயரோ இடம்பெறாமல், ஆண் பெண் என்ற பகுப்பு மட்டுமே இடம்பெற்றுள்ளது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (972) என்னும் வள்ளுவம் உலகினர் அனைவருக்கும் உரியது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் (322) என்னும் வள்ளுவக் கோட்பாடும் அவ்வாறே.*

*வாழ்வியல் நெறிகளை வையகம் முழுமைக்கும் ஏற்றவாறு வகுத்துக் காட்டியுள்ளார் திருவள்ளுவர். சமயங் கடந்த நெறிகள் வள்ளுவருடையவை; அறிவை முன்நிறுத்துபவை. இதற்காக வள்ளுவர் நீண்ட நாள் சிந்தனை செய்து, பலருடனும் பழகிக் கருத்தறிந்து அதன்பின் பொதுமைக் கருத்துக் கருவூலமாகத் திருக்குறளைப் படைத்திருக்க வேண்டும். இதனால்தான் இன்றும் வையகத்துக்கு வழிகாட்டும் வாழ்வியல் நீதி இலக்கியமாகத் திருக்குறள் திகழ்கிறது.*



**குறளில் உலகம் :**

திருக்குறளில் உலகு, உலகம், உலகத்தார், உலகத்தியற்கை, உலகியல், உலகெல்லாம் போன்ற உலகத் தொடர்பான சொற்கள் முப்பாலிலும் பயின்று வந்துள்ளன. முதற் சீராக உலகத்தோடு (140) உலகம் தழீஇயது (425) உலகத்தார் (850) என மூன்று இடங் களில் பயின்று வந்துள்ளன. உலகு என்னும் சொல் ஈற்றுச் சீராக 1, 23, 27, 58, 211, 234, 290, 336 என அறத்துப் பாலில் எட்டு இடங்களிலும், 387, 389, 470, 520, 544, 571, 575, 612, 670, 809, 841, 874, 970, 994, 1015, 1025 என பொருட்பாலில் பதினாறு இடங்களிலும், காமத்துப் பாலில் 1103 என ஓரிடத்திலுமாக இருபத்தைந்து இடங்களில் இடம்பெற்றுள்ளது.

**ஆல்பர்ட் சுவைட்சர் :**

ஆப்பிரிக்காவில் மருத்துவப் பணியாற்றிய ஆல்பர்ட் சுவைட்சர் திருக்குறளைக் கற்றுணர்ந்து அதன் கருத்துகளில் உள்ளந் தோய்ந்த சிந்தனையாளர். ஒழுக்கமே மனித னுடைய உயர்ந்த குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதை மிகுந்த உறுதியோடு வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒவ்வொருவரும் தமக்குத் தாமே செய்ய வேண்டிய கடமை என்ன, மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன என்பவற்றை யெல்லாம் சிறந்த பண்பாட்டோடும், மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். உலக இலக்கியத்தில் இத்துணை மாண்பு மிக்க மெய்யறிவு வேறு எந்த நூலிலும் இத்துணைச் சிறப்பாகப் பொலிவு பெற வில்லை என்று கூறலாம் என்ற ஆல்பர்ட் சுவைட்சரின் கருத்து உலகப் பார்வையாளரின் திருக்குறள் கருத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகிறது.

**உலகந்திருந்த ஒரு குறள் :**

ஐ.நா. மன்றத்தின் குறிக்கோள் தனிமனிதனைத் திருத்து. உலகம் திருந்தி விடும் என்பது.

மக்களில் பெரும்பாலோர் தம்மிடமுள்ள குறைகளைக் கண்டு அவற்றை நீக்கிக் கொள்வதைவிட மற்றவர்களின் குற்றங்களைப் பட்டியலிடுவதில்தான் முன்னிற்கின்றனர். முதலில் ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள குற்றங்களை நீக்கிக்கொண்டபின் மற்றவரின் குற்றங்களைக் காணவேண்டும். இந்த நிலை உருவாகுமானால் உலக மக்கள் அனை வருக்கும் எந்தத் தீமையும் இல்லை. இதனைத் திருக்குறள் ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மண்ணும் உயிர்க்கு (190) எனக் கூறுகிறது. உலக மக்கள் அனை வரும் இவ்வொரு நெறியைத் தவறாது பின் பற்றினால் உலக அமைதி தாமே அமைந்து விடும் அல்லவா?

**வள்ளுவம் வழங்கும் அறம் :**

மனத்தூய்மையே அறம் என வலியுறுத்தும் வள்ளுவம் அழுக்காறு, அவா, வெகுளி, கடுஞ்சொல் ஆகிய நான்கையும் விலக்கி வாழவேண்டும் என்பதையும் தெளிவுபடுத்து கிறது (35). இத்தகு தூயமனமே மக்களுக்கு ஆக்கத்தைத் தரும் என்பதை மனநலம் மன்னு யிர்க்கு ஆக்கம் (457) எனவும் வலியுறுத்து கிறது. இத்தகு மனநலம் உடைய வர்களாக மக்கள் வாழும் நிலை வரவேண்டும். இத்தகு வாழ்வுதான் அறவாழ்வு என வள்ளுவம் வரை யறை செய்கிறது. வஞ்ச மனமும் போலி ஒழுக்கமும் வையகத்தில் வர இடங்கொடுத்த தால்தான் அழிப்பொழிப்புக் குழுக்கள் பல நாடுகளில் வெளிப்படையாக வளர்ந்து ஆட்டிப்படைக்கின்றன. இப்படித் தான் வாழவேண்டும் என்ற அறத்தை விலக்கி, எப்படியும் வாழலாம் என்ற மறவாழ்க்கையைத் தேர்ந்து பொருள்களைக் குவிக்கின்றன.

**இல்லறம் :**

இல்லற வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலத்துடன், மக்கட்பேறு பெற்று, அன்பு டைமையுடன், விருந்தோம்பி, இனியவை கூறி, செய்ந்நன்றி அறிந்து, நடுவு நிலை மையுடன், அடக்கம் பெற்று, ஒழுக்கத் துடன், பிறனில் விழையாது, பொறுமையுடன், அழுக்காறாமை, வெஃகாமை ஆகியவற்றுடன்

பயனில சொல்லாமல், தீவினைக்கு அஞ்சி, ஒப்புரவறிந்து, ஈகைக்குணத்துடன், புகழ்பெற்று வாழ்தலே என அறத்தை முன்னிறுத்தித் தெளிவுபடுத்துகிறது. இந்நெறி உலகமக்கள் அனைவர்க்கும் உரியதே.

**பொருள் :**

எந்த வழியிலாவது பொருள் ஈட்ட வேண்டும் என்பதே இன்றைய மக்களின் குறிக்கோளாய் இருக்கிறது. இவ்வெண்ணமே ஊழலை வளர்க்கவும் உதவுகிறது. பொருள் ஈட்டவேண்டிய நெறியை வள்ளுவம் தெளிவு படுத்துகிறது. அருளொடும் அன்பொடும் திறனையறிந்து தீமையின்றி சேர்க்கும் பொருள் அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும் (754) எனக் குறிப்பிடுகிறது. ஈன்ற தாய் பசியாக இருந்தாலும் அதற்காகச் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யாதே (656) என வள்ளுவம் எச்சரிக்கிறது.

**வள்ளுவர் காலச் சமுதாயம் :**

வள்ளுவர் காலச் சமுதாயம் மேலும் கீழும் அமைந்தது. ஒருமை மகளிரும் இருந்தனர். இருமனப் பெண்டிரும் இருந்தனர். செல்வரும் இருந்தனர். வறியவரும் இருந்தனர். நல்லினம், தீயினம், சிற்றினம் இருந்தன. ஈவாரும் இரப்பாரும் இருந்தனர். களவும் கொலையும் இருந்தன. உழவரும் வணிகரும் இருந்தனர். செங்கோன்மையும் கொடுங்கோன்மையும் இருந்தன. இத்தகைய சூழ்நிலையில்தான் வையகம் வாழ வள்ளுவத்தைப் படைத்தார் வள்ளுவர்.

**களையெடுக்க வேண்டும் :**

கொள்ளைக் குழுக்கள் நாடுகள் பல வற்றிலும் செயல்பட்டுக் கொடுமைகளை விளைவிக்கின்றன. மக்களைக் கொன்று குவிக்கின்றன. இத்தகைய கொடியவர்களை ஆட்சி தண்டிக்க வேண்டும். தண்டிக்கவில்லை என்றால் பயிர்களுக்கிடையே களைகளை வர விடுவதற்கு ஒப்பாகும் (550) என வையகப் பொது நீதியை வலியுறுத்துகிறார்.

**உழவு:**

உலக மக்களுக்கு உணவிடுவது உழவுதான். எனவே, உழவுக்கு ஓர் அதிகாரம் வகுத்தார் வள்ளுவர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர் (1033) எனச் சிறப்பிக்கிறார்.

பணத்தைச் சேர்த்துவைத்த நாடுகள்கூட உணவுக்கு, உழவுத்தொழில் செய்பவர்களைத் தான் எதிர்பார்த்திருக்கின்றன. இந்த நிலை இன்றும் இருக்கிறது; என்றும் இருக்கும்.

**மருத்துவம் :**

இரண்டாயிரம் ஆண்டுகளில் மருத்துவத் துறை எத்தனையோ மாற்றம் பெற்றிருக்கிறது. உடல் நோய் அனைத்துக்கும் அடிப்படை, உண்ட உணவு செரிக்கப்பெறா நிலையில், மேலும் மேலும் மீதூண் உண்பதுதான். இதற்கு வழிகாட்டும் வள்ளுவம், உண்ட உணவு செரித்தபின் அளவறிந்து உண்ண வேண்டும். இதுவே நீண்ட காலம் வாழும் வழியாகும் (943) எனக் குறிக்கிறது. மேலும், மருத்துவம் நோயுற்றவன், மருத்துவன், மருந்து, உதவி செய்பவன் என்ற நான்கு பிரிவுகளை உடையது என்பதனை,

உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து (950)

என வரையறை செய்கிறது. இவ்வடிப்படையில் தான் இன்றைய மருத்துவ உலகமும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**கற்கும் வழிகள் ஓர் ஒப்பீடு :**

அறுபதாண்டுகட்கு முன் பெரம்பலூரில் தமிழாசிரியராகப் பணியாற்றும்போது அங்குள்ள கிளை நூலகத்தில் கற்கும் வழிகள் என்ற ஆங்கில நூலைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்நூலை எழுதியவர் அமெரிக்கப் பேராசிரியர் சான் சினைடர் என்பவர். ஐந் நூறு பக்கங்களைக் கொண்ட அந்நூலில் நான்கு வினாக்களை எழுப்பி அவற்றிற்கு விடையாக நூலைப் படைத்திருக்கிறார். அவ்வினாக்கள்,

என்ன படிக்க வேண்டும்?
எப்படிப் படிக்க வேண்டும்?
ஏன் படிக்க வேண்டும்?
எப்போது படிக்க வேண்டும்?

திருவள்ளுவர் தம் நூலில் கற்றலைப் பயன்படுத்தியிருக்கிறாரேயன்றி படிப்பது என்பதை எங்கேயும் பயன்படுத்தவில்லை. கற்றதன்படி நடந்து காட்டலே கற்றல் ஆகும். படிப்பது அறிவைப் பெருக்கிக் கொள்வது. அமெரிக்கப் பேராசிரியரின் நான்கு கேள்வி களுக்கும் வள்ளுவர் இரண்டு குறட்பாக் களில் விடையளித்துள்ளார். கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக *(391)*. இக்குறட்பாவில் மூன்று வினாக்களுக்கு விடையுண்டு. என்ன படிக்க வேண்டும்? கற்கவேண்டியவைகளை மட்டும் கற்க வேண்டும். கற்பவை கற்க.

எப்படிப் படிக்க வேண்டும்?
குற்றமறக் கற்க வேண்டும். கசடறக் கற்க.
ஏன் படிக்க வேண்டும்?

கற்றபடி நடந்து காட்டக் கற்கவேண்டும். அதற்குத் தக நிற்கக் கற்க.

நான்காம் வினாவுக்கு விடையாக,

யாதானும் நாடாமால் ஊராமால் என் னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு *(397)* என்ற குறளைப் படைத்துள்ளார். கற்றவர்கட்கு மட்டுமே எல்லா நாடும் அவர்தம் நாடாகும். எல்லா ஊரும் அவர்தம் ஊராகும். அவ்வாறிருக்கும் போது, ஒருவன் ஏன் சாகும் வரைக் கற்காமல் இருக்கிறான் என்ற வினாவை வள்ளுவர் எழுப்புகிறார். பலருக்குப் பணியில் சேர்ந்தபின் படிப்பது நின்று விடுகிறது. இன்னும் பலருக்கு ஓய்வுக் குப் பிறகு படிப்பது நின்று விடுகிறது. இவற்றை விலக்கி, இறக்கும் வரை கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பது வள்ளுவ நெறி. வையத்துக்குரிய நெறி. கற்ற தன்படி வாழ்ந்து காட்டலே கற்றல் என்பதை மீண்டும் இங்கே நினைவுபடுத்திக் கொண் டால் வள்ளுவத்தின் சிறப்பு புலப்படும்.

**தமிழர்தம் கைகாட்டி :**

தமிழன் மட்டும் கைகாட்டிக்கு அடியில் அமர்ந்து கொண்டு கைகாட்டியே நம்மை இலக்கில் கொண்டு சேர்க்கும் என எண்ணு கிறான். திருக்குறள் என்னும் அருமையான வழிகாட்டியைப் பெற்றும் பயன்படுத்தாதவ னாய், ஒளி விளக்கிருந்தும் இருளில் தவிப்ப வனாய், அரிய உணவைப் பெற்றும் பசியில் வாடுபவனாய், நல்ல படகிருந்தும் வாழ்வியல் ஆற்றைக் கடக்கத் தெரியாதவனாய், கடவுளை நம்பி, மூடநம்பிக்கையில் மூழ்கித் துன்பத் தில் தொலைந்து கொண்டிருக்கிறான்.

எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், திருக்குறளை அறியாதவர்கள், வாழ்க்கையில் அன்பும் அறனும் ஒழுக்கமும் கொண்டு வாழ்கிறார்கள். பட்டங்கள் பலவற்றைப் பெற்றுப் பணிக்கும் பதவிக்கும் வந்தவர்கள் கற்றவற்றைப் பின்பற்றாமல் படிப்புக்கும் பண்புக்கும் தொடர்பற்றவர்களாக வாழ்கிறார்கள் என்பதே கசப்பான உண்மை.

இன்றைய கல்வி வாழ்வியலுடன் தொடர்பு டையதாக இல்லை. கற்பிப்பவர்களும் எடுத்துக் காட்டாக வாழ்வதில்லை. கற்பவர்களும் பின்பற்றுவதில்லை. இத்தகையவர்களை வள்ளுவர் அறிவில்லாதவர்கள் என்றே அறைகிறார்.

கற்றும், உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும், தான் மட்டும் அவ்வாறு வாழ்ந்து காட்டா தவரை விட அறிவில்லாதவர் இல்லை என் பதை,

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல் *(834)*

எனக் குறிக்கிறார்.

வள்ளுவத்தை வாழ்வியலில் பின்பற்றி ஏனையோருக்கு எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும். இதுவே வையக அமைதிக்கு வழி. வையக அமைதிக்கு வள்ளுவமே வழி!

❖



# தமிழ்த் தேசியத்துக்குத் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு

*- விடுதலை இராசேந்திரன்*

**மொ**ழியின் அடிப்படையில் தமிழர்கள் ஓர் இனமாக அடையாளப்படுத்திக் கொள்ளாத வரலாற்றுச் சூழலில் தமிழர்களின் ஓர்மைக்குத் தடையாக இருக்கும் காரணிகளைக் கண்டறிந்தது திராவிட இயக்கம். தமிழர் ஒற்றுமைக்கு தடைச் சுவராக நின்ற சாதி அமைப்பு; அது கட்டமைத்த மேல்/கீழ் அடக்குமுறையிலான ஒடுக்குமுறைகளுக்குக் கருத்தியலை வழங்கி மாற்றங்களைத் தடுத்து வந்த பார்ப்பனியம்; சூத்திரர், பஞ்சமர் - இழிநிலை; தீண்டாமை இவைகளுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய திராவிடர் இயக்கம் முதலில் பார்ப்பனரல்லாதார் என்ற பெயரோடு களத்துக்கு வந்தது. பிறகு எதிர்மறைச் சொல்லைத் தவிர்த்து, திராவிடர் என்ற அடையாளத்தை ஏற்றது.

மொழி வழி பிரிக்கப்படாத அன்றைய சென்னை மாகாணத்தில் உருவான திராவிட இயக்கம் பார்ப்பனரல்லாதார் கொடுங்கோல் ஆதிக்கத்துக்கு எதிராகப் பார்ப்பனரல்லாத மக்களுக்கான திராவிடர்களுக்குக் கல்வியில், பதவியில், அரசியலில் உரிய பிரதிநிதித்துவம் கேட்டது. ஒரு தேசம் / தேசியம் என்ற உருவாக்கத்தின் உயிர் மய்யம் பிறவி அடிப்படையிலான பாகுபாடுகளை மறுக்கும் சமத்துவமே என்ற கோட்பாட்டை அறிமுகம் செய்த பெருமை திராவிடர் இயக்கத்துக்கு உண்டு. தமிழ்த் தேசியத்துக்குத் திராவிடர் இயக்கம் வழங்கிய மகத்தான கொடை இது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற உரிமைக்காக காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே போராடினார் பெரியார். சுதந்திர இந்தியாவில் வகுப்புகளாகப் பிரிந்து கிடக்கும் அனைத்துப் பிரிவினருக்கும் சமத்துவத்தை எதிர்காலத்தில் உறுதி செய்யும் கொள்கையைக் காங்கிரஸ் ஏற்க வேண்டும் என்றார் பெரியார். இக்கோரிக்கையைப் பார்ப்பனர் ஆதிக்கத்திலிருந்த காங்கிரஸ் கட்சி ஏற்க மறுத்தது. காங்கிரசிலிருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்ட பெரியார், தமிழரின் சுயமரியாதைக்குத் தடைக்கல்லாக நிற்கும் கடவுள், மதம், புராணம், சாஸ்திரம் - இவைகளைத் தங்களின் பாதுகாப்புக் கவசமாக்கி மக்களை சுரண்டி வந்த பார்ப்பனர்களுக்கு எதிராக மக்களை அணி திரட்டினார்.

எல்லைகளோடும் மொழி அடையாளங்களோடு மட்டுமே முன் வைக்கப்படும் வெகு மக்களின் சுயமரியாதையை மறுக்கும்



தேசியத்தைப் பெரியார் ஏற்க மறுத்தார். சாதிய ஒடுக்குமுறைகளை ஒழிக்காத எந்தத் தேசியமும் அர்த்தமற்றது என்பதில் உறுதி காட்டிய பெரியார், இந்திய தேசியமே பார்ப்பன - பனியாவின் ஆதிக்க மய்யமாகி யிருப்பதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டு விடுதலையை 1938ஆம் ஆண்டிலேயே முன் மொழிந்தார். மொழி வழியில் பிரிக்கப் படாத அன்றைய சென்னை மாகாணம் என்ற தமிழர்களுக்கான பகுதியை இந்தியாவிடம் இணைத்துவிட்டால் மீளமுடியாத அடிமை யில் தமிழர்கள் சிக்கி விடுவார்கள் என்பதே பெரியாரின் பெரும் கவலை.

மொழிவழி மாநிலப் பிரிவினை நடந்த போது சென்னை மாகாணத்திடமிருந்து சுயமரியாதை உணர்வில்லாத ஆந்திரர்களும், கன்னடர்களும் ஒரு வழியாக விலகிப் போய் விட்டார்கள் என்று மகிழ்ச்சி அடைந்த பெரியார், மொழிவழி மாநிலப் பிரிவினையை ஆதரித்தார்.

பெரியார் பேசிய திராவிடர் கோட்பாடு தமிழர்களின் இழிவு ஒழிப்புக்கும், சுயமரி யாதைக்கும், சமத்துவத்துக்கும், வளர்ச்சிக்கு மானது என்பதை திசைத் திருப்பி, அதுவே தமிழகத்துக்குப் பகை என்பது போன்ற ஒரு மாயை, கருத்துக் குழப்பம் திட்டமிட்டு சில முகாம்களிலிருந்து பரப்பப்படுகிறது.

உண்மையில் தமிழர்களின் தனித்துவம், தன்னுரிமை, சுயமரியாதையை உள்ளடக்கிய தமிழ்த் தேசியத்துக்குத் திராவிடர் இயக்கம் வழங்கிய பங்களிப்பு மகத்தானது.

மொழிவழி மாநிலங்கள் உருவானாலும், மாநிலங்கள் தங்களுக்கான தேசிய உணர்வைப் பெற்றிருந்தாலும் சாதியமைப்பு உருவாக்கிய ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்ய கல்வி வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு எனும் பங்கீட்டு முறையை வலியுறுத்திய திராவிடர் இயக்கம், அதுவே தேசிய இனங்களின் அடையாளத்தை முழுமையாக்கும் என்று வலியுறுத்தியது. இப்போது மொழி வழி மாநிலங்களில் மட்டுமல்லாது மத்திய அரசி லும் இடஒதுக்கீடு அமுலில் இருப்பதற்குக் காரணம் திராவிட இயக்கம் தந்த சமூக நீதி வெளிச்சம்தான்.

சென்னை மாகாணம் என்றிருப்பதை மாற்றி தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று 1963இல் மாநிலங்கள் அவையில் முதல் குரல்கொடுத்தார் அண்ணா. தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் கூட சூட்ட முடியாத நிலையை பெரியார் கவலையுடன் எடுத்துரைத்தார். 1967இல் அண்ணா முதல்வரானவுடன் தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தைச் சட்டசபையில் கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்றி னார்.

இந்தியைத் திணித்து விட்டால் அதன் வழியாக சமஸ்கிருதத்தையும் பார்ப்பனியக் கலாச்சாரத்தையும் மக்களிடம் எளிதாகப் புகுத்திவிடலாம் என்று கருதி சென்னை மாகாண முதல்வராக இருந்த இராஜகோபாலாச்சாரி இந்தியை 1938இல் பள்ளியில் கட்டாயமாக்கிய போது பெரியாரும் திராவிடர் இயக்கமும் எதிர்த்துப் போராடி இந்தித் திணிப்பை தடுத்து நிறுத்தியது.

சனநாயகம் என்பது பெரும்பான்மை எண்ணிக்கை அடிப்படையிலான ஆட்சி மட்டுமல்ல; சிறுபான்மை மக்களின் உரிமை கள், உணர்ச்சிகள் ஆகியவையும் புனிதம் என்று கருதி, அவற்றைக் காப்பதற்குப் பெயர் தான் சனநாயகம் - என்று மாநிலங்கள் அவையில் 1963இல் அண்ணா பேசினார். தமிழ்த் தேசியத்தின் அடையாளத்துக்குள் மதச் சிறுபான்மை மக்களையும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதைப் பேச்

சில் மட்டுமல்ல; இஸ்லாமிய-கிறிஸ்தவ மக்களிடையே நல்லுணர்வையும் சகோதரத் துவத்தையும் உருவாக்கி தமிழ்த் தேசியத் துக்குள் அவர்களை அடையாளப்படுத்தியது திராவிடர் இயக்கம்.

பெண்களின் சமத்துவத்துக்காகச் சுயமரி யாதைத் திருமணம்; பாரம்பரியக் குடும்பச் சொத்தில் பெண்களுக்கும் உரிமை; கண வனை இழந்த பெண்ணின் மறுவாழ்வு; மறுமணத்தை ஊக்குவிக்கும் திட்டங்களை உருவாக்கியது, திராவிட இயக்க ஆட்சி. உள்ளாட்சிகளில் 50 சதவீத இடங்களையும், அரசுப் பணிகளில் 30 சதவீத இடங்களையும் ஒதுக்கியதும் திராவிட இயக்கம்தான்.

ஒரு தேசிய இனத்தின் மொழியை தமிழ் நாட்டின் அரசு அடையாளமாக்கி மொழி வாழ்த்தை உருவாக்கியது திராவிட இயக்கம் தான்.

மாநிலங்களுக்கு சுயாட்சி வேண்டும் என்பதற்காக இராஜமன்னார் தலைமையில் ஒரு குழுவை நியமித்து அதன் பரிந்துரையை ஏற்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானமாக 1971ஆம் ஆண்டு நிறைவேற்றி நடுவண் ஆட்சிக்கு அனுப்பி வைத்ததும் திராவிட இயக்க ஆட்சிதான்.

கோயில்களில் தமிழ் வழிபாட்டு முறை களை அறிமுகப்படுத்தியதும், தமிழன் கட்டிய கேயில்களில் தமிழர்களை அர்ச்சகர்களாக்க சட்டமியற்றியதும், அதற்காக அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளை உருவாக்கிப் பயிற்சி அளித்ததும் தமிழ்த் தேசியத்துக்குத் திராவிடர் இயக்கத்தின் பங்களிப்பு. மாநிலங்களுக்கான திட்டமிடுதலுக்கும் நிதி ஒதுக்கல்களுக்கும் வழிகாட்டிட மத்திய திட்டக் குழுவுக்கு இணையாக தமிழ்நாடு திட்டக் குழுவை உருவாக்கியது திராவிட இயக்க ஆட்சிதான்.

மாநில முதலமைச்சருக்கு, சுதந்திர நாளில் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்ததும் திராவிட இயக்க ஆட்சி தான்.

தமிழ்நாட்டில் கல்வி நிலையங்களில் இந்தியை ஒழித்து இரு மொழித் திட்டத்தை அமுல்படுத்தி நடுவண் ஆட்சியின் மொழித் திணிப்பை எதிர்த்ததும் திராவிட இயக்கம் தான். தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடிய மொழிப் போராளி களுக்கு அரசு உதவித் தொகை; மருத்துவக் கல்லூரிகளில் அவர்களின் வாரிசுகளுக்கு இடஒதுக்கீடுகளை வழங்கி தமிழ்த் தேசிய அடையாளத்தை உறுதி செய்ததும் திராவிட இயக்கம் தான்.

மாநில உரிமைகளைவிட இந்திய ஒற்றுமையே பெரிது என்ற கண்ணோட்டத்தில் ஒரு காலத்தில் செயல்பட்ட காங்கிரஸ், கம்யூனிஸ்ட் போன்ற தேசிய கட்சிகள் மாநில உரிமைக்கு முன்னுரிமை தரும் அணுகு முறையை உருவாக்கியது திராவிட இயக்கத் தின் தாக்கம்தான்.

இப்போதும் மாநிலங்களின் உரிமை களைப் பறித்து, நாட்டை ஒற்றையாட்சி முறைக்கு இழுத்துச் செல்லும் பா.ஜ.க. அரசின் திட்டங்களுக்கு தமிழ்த் தேசியம் மற்றும் தன்னாட்சிப் பார்வையில் குரல் கொடுப்பதும் போராடுவதும் இந்தியாவில் தமிழ்நாடு மட்டும்தான். தமிழ்நாடே இன்று ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டுகிறது. அதற்கான உணர்வுகளுக்கு அடித்தளமிட்டது திராவிட இயக்கம் தான்.

திராவிடக் கட்சிகளின் ஆட்சிகளில் எத்தனையோ சமூகநீதி, மக்கள் நலத் திட்டங் களைப் பட்டியலிட முடியும். ஆனாலும் தமிழ்த் தேசியப் பார்வையில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பில் சிலவற்றை மட்டும் பட்டியலிட்டுள்ளோம்.

●

# தமிழுக்கான இலக்கியம்

- தமிழேந்தி



**உ**லகின் வளமான தொன்மை மொழிகளில் தமிழ்மொழி தலையாய மொழியாகும்.

'தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் – இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்'

என்ற பாரதியின் பாடல் அடிகளை நாம் பைந்தமிழின் பொன்றாத இளமைக் குரியதாகப் பொருத்திக் கொள்ளலாம்.

'திங்களோடும் செழும் பரிதி
தன்னோடும் விண்ணோடும்
உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும்
பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்'

என்கிற பாவேந்தரின் பாட்டைச் சொல்லி நாம் நெஞ்சு நிமிர்த்திக் கொள்ளலாம்.

ஓல்காப் பெரும் புகழுடை தொல்காப்பியமும் பழந்தமிழ் வளமெலாம் எடுத்துச் சொல்லும் பாட்டும் தொகையும், நம் முன்னோர் நமக்காக ஈட்டி வைத்துச் சென்ற இலக்கியச் செல்வங் களாகும்.

**குன்றின் மேலிட்ட விளக்கு**

கையளவு மட்டுமாய்ச் சுருங்கி இருந்த கடல்பரப்பைக் கூடப் பலரும் பார்த்தறியா ஓர் இனக்குழுச் சமூகத்தைச் சேர்ந்த எளிய கவிஞன் கணியன் பூங்குன்றன். ஆனால் தன் பட்டறிவெனும் பாட்டுக் குன்றத்தின் மீது அவன் ஏறிப்பாடிய இறவாத வரிகள் இன்றளவும் வையத்தார் செவிகளில் வண்ணச் சிந்து பாடுகின்றன.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா'

என்கிற பூங்குன்றனின் தொடக்க வரிகளைத்தான் நம்முள் பலரும் அறிந்து வைத்திருக்கிறோம். ஆயின் ஒருவரிடத்து உள்ள செல்வத்

*தின் அளவு கருதியோ அல்லது அறிவின் ஆழம் பார்த்தோ அவரின் மாண்பினைப் போற்றும் மடமை எம்பால் இல்லை. எளியரைச் சீ என இகழும் சிறுமைப்பண்பும் எம் சிந்தை அறியா ஒன்று எனச் செம்மாந்து பாடும் புலமைச் செருக்கை எத்தனை பேர் அறிவர்?*

'பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'
(புறம் 192)

*என மாந்த இனத்தின் நயத்தக்க நாகரிகம் உணர்ந்து பாடிய நம் முன்னோர்கள் பண்பு நலம் நம்மை வியக்க வைக்கிறதல்லவா?*

**எச்சரிக்கை மணி**

'அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்' (குறள் 333)

*உடைமைச் சமூகத்தின் பிரிக்க முடியாத உறுப்பியமாக வாழ்ந்த பேராசான் திரு வள்ளுவரின் கூற்று இது.*

*நிலையில்லா இயல்புடையது செல்வம். அச்செல்வத்தைப் பெற நேர்ந்தால் நிலைத்த புகழுடைய செயல்களை அப்போதே செய்து விட வேண்டும் என்று ஆணையிடுகிறார் வள்ளுவர்.*

*பொருளாசை கொண்ட புன்மை உலகில் இன்று திரும்பும் திசையெங்கும் வன்மச் செயல்கள், தம் வாழ்நாள் முழுவதிலும் பொருளைச் சேர்த்துச் சேர்த்து வைத்தே வீணில் செத்துப் போகிறார்கள் பலரும். வயிறார உண்ணவோ, உளமார உடுத்தவோ நேரமின்றித் திடுமென உயிரை விட்டுவிடும் இந்தச் சோற்றுத்துருத்திகளைப் பார்த்து சங்கப்புலவன் ஒருவன் அன்றே பாடினான்.*

'தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே!'
(நக்கீரனார் புறம் 189)

*'நாடாளும் அரசனுக்கும் காடாளும் ஆண்டிக்கும் உண்ணத் தேவை நாழிகைப் பொழுதுதான். உடுக்க வேண்டியவை இரண்டு மட்டுமே! சேர்த்த செல்வம் அனைத்தையும் நானே துய்ப்பேன் என்று தப்புக் கணக்குப் போடாதே! நிலையற்ற உலகில் நிலைத்த புகழைச் சேர்க்கும் வழியினை நாடு!' எனும் எச்சரிக்கை மணியோசை எல்லோர் காது களிலும் படும் நாள் எந்நாளோ?*

**சான்றோரால் ஆன்ற உலகம்**

'பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்' (குறள் 996)

*சுரண்டல் பெருத்துப்போன இந்தத் துப்புக் கெட்ட உலகம் மாந்தர் வாழவே தகுதியற்ற தாகிவிட்டது. நொடியில் இந்த உலகம் மண்ணுக்குள் மறைந்து அழிவதுதான் நியதி. ஆனால் ஏன் இன்னும் அழியாமல் உள்ளது?*

*வள்ளுவர்முன் இந்த வினா எழுப்பப்பட்ட போது அவர் அழகாகச் சொன்னார். 'பண்புடைய நல்லவர்கள் இந்த மண்ணில் வாழ்வதால் இது இன்றும் அழியாமல் உள்ளது' என்றார். வள்ளுவரின் இக்குறள் மொழியை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு மன்னனே கூறிப் போந்தான் என்பது மலைக்க வைக்கும் வியப்பல்லவா?*

*'ஏன் இந்த உலகம் இன்னும் அழியாமல் நிலைபெற்றுள்ளது? இந்திரர் அமிழ்தமே கிடைத்தாலும் தனித்து உண்ணார். யாரையும் வெறுக்கமாட்டார். மற்றவர் அஞ்சுவதற்கு அஞ்சுவர். சோம்பல் கொள்ளார் புகழ் எனில் உயிரும் கொடுப்பர். பழிவருவதாயின் உலகே கிடைப்பதாயினும் கொள்ளமாட்டார். கவலையற்றிருப்பர். தமக்கென எதையும்*

நாடும் தன்னல நோக்கின்றிப் பிறர்க்காகவே வாழும் பெற்றியாளர்கள் உள்ளமையால் இவ்வுலகம் இன்றும் நின்று நிலவுகிறது' என்னும் பாண்டியன் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியின் பாடல் வரிகள் இவரின் உயரிய நோக்கங்களை நமக்கு நிரல்படுத்திச் சொல்கிறது.

'உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகி
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!'
(புறம் 182)

புத்தரும், வள்ளுவரும், காரல்மார்க்சும் மனித குலத்தின் விடுதலைக்காகச் சிந்தித்த மாபெரும் அறிஞர்கள் ஆவர். வாழ்வின் துன்பங்கள் தீர வழி சொன்ன தூய சிந்த னையாளர்கள் அவர்கள். நம் சங்கப் புலவர் கள் பலபேர் இத்தகைய தூய அறச்சிந்தனை யாளர்களாக வாழ்ந்துள்ளனர்.

பல்லாண்டுகள் ஆகியும் தன் தலைமயிர் நரைக்காமைக்கான காரணத்தைச் சொன்ன பிசிராந்தைப் புலவனின் பாடல் மக்கள் மேம்பாட்டுச் சிந்தனையின் மணிமுடியாக ஒளிர்கிறது.

'ஆண்டுபல ஆகியும் உங்கள் தலையில் நரை தோன்றாமை எப்படி?' என வினவுகிறீர்! என் மனைவியும், என் மக்களும் அறிவு, ஒழுக்கம், பண்பு, அன்பு நிரம்பப் பெற்றவர். என் பணியாளரும் என் எண்ணம் அறிந்து செயல் முடிப்பர். எம் நாட்டு வேந்தனும் அறம் அல்லன செய்யான் - நல்லன செய்து நாட்டைக் காப்பான். நற்பண்புகள் பல கொண்ட உயர்ந்த சான்றோர் பெருமக்கள் என் ஊரில் உறைகின்றனர். இவையே என் முதுமையுறா நிலைக்குக் காரணங்கள் என்னும் புலவனின் கூற்றில் அந்நாளில் நிலவிய பெண்கல்வியின் பெற்றி, நல்லாட்சி புரிந்த நாடாள் வேந்தனின் மாண்பு, கொள்கைச் சான்றோரின் உளப்பண்பு உள்ளிட்டவை தெற்றென விளங்குகின்றன.

'யாண்டுபல வாக நரையில் ஆகுதல்
யாங்கு ஆகியர் என வினைவுதிர் ஆயின்
மாண்டஎன் மனையொடுமக்களும் நிரம்பினர்
யான்கண்டனையர்என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான். காக்கும் அதன்தலை
ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே!'
(பிசிராந்தையார், புறம் 191)

**போர்வெறி கடந்த புலமை**

நாம் வாழும் இன்றைய உலகைப் போர் அச்சம் சூழ்ந்துள்ளது. ஒரு நொடியில் உலகையே சாம்பல் மேடாக்கும் அணுக் கருவிகளை ஒவ்வொரு நாடும் அடுக்கி வைத்துக் கொண்டு ஆட்டம் போடுகின்றன. போரையும் காதலையும் போற்றிய பண்பாடு தமிழ்ப் பண்பாடு. வேட்டைச் சமூகத்தின் விரைந்த வளர்ச்சியும், மண்ணாசை கொண்ட மன்னர்களின் பேராசையும் போர்த் தொழிலைப் போற்றச் செய்தன. ஆனாலும் இலக்கியங்களில் ஆங்கங்கே வெளிப்படும் போர் எதிர்ப்புக் குரல்கள் நாகரிகச் சமுதாயத்தின் நல்வேட்கையைப் புலப்படுத்துகின்றன.

சோழ மன்னர்கள் நெடுங்கிள்ளிக்கும் நலங்கிள்ளிக்கும் போர்மூள இருந்த நேரம் புலவர் கோவூர்கிழார் எதிர்ப்படுகிறார். இருவர்தம் போர்வெறியைக் கடிகிறார்.

'உங்கள் இருவரில் ஒருவனும் பனம்பூ மாலை அணிந்த சேரன் அல்லன். வேப்பம்பூ மாலை அணிந்த பாண்டியனும் அல்லன். நெடுங்கிள்ளியே! உன் மாலை சோழர்க்குரிய ஆத்திமாலையே. உன்னோடு போர் செய்வோன் மாலையும் அதுவே. நீயும் அவனும் சோழ மன்னரே! உம்முள் எவர் ஒருவர் தோற்பினும்

தோற்பது உம் சோழர் குடியே! நீவிர் இரண்டு பேருமே வெற்றி பெறுதல் இயற் கையில் இயலாத ஒன்று. இஃது உம் குடிக்குப் பெருமை அன்று. மேலும் உம் பகைவர்க்கே இச்செயல் மகிழ்ச்சி தரும். எனவே போரைத் தவிர்மின்' என நயம்பட உரைத்த பாங்கு பண்பட்ட சிந்தனையின் மனப் பிழிவாகும்.

'இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே! நின்னோடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே!
ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே அதனால்
குடிப்பொருள் அன்றுநும் செய்தி கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும்இவ் இகலே!'
(புறம் 45)

அதியமானுடன் போரிடத் திட்டமிட்டிருந்த தொண்டைமானிடம் அவ்வையார் தூது சென்ற புறப்பாடலையும் ஒரு வகையில் போர் எதிர்ப்புப் பாடலாகக் கொள்ள இட முண்டு. மேலும் ஆணுக்கு நிகராகப் பெண் களும் கல்வியிற் சிறந்திருந்தனர் என்பதற்குச் சான்றாகப் பல சங்கப் பாடல் களைப் பெண்பாற் புலவர்கள் பாடியுள்ளது கொண்டும் நாம் அறியலாம்.

மேலும் ஆண், பெண் சமத்துவத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ள அதியன் - அவ்வை நட்பின் செழுமையை அப்பாடலை ஈடுபாட்டுடன் படிக்கும் போது உணர முடிகிறது. வென்றவனை விடத் தோற்றவன் நல்லோன். அதுமட்டுமன்று, போரில் வென்ற வனைக் காட்டிலும் முதுகுப்புறத்தில் புண் ஏற்பட்டதற்காக நாணி வடக்கிருந்து உயிர் துறந்த வேந்தனின் வீரம் மெச்சப்படுவது நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

கரிகால் பெருவளத்தானுக்கும் சேட் சென்னிக்கும் இடையே நடந்த போரில் சென்னிக்கு முதுகுப்புறத்தில் புண் ஏற்பட்டு விடுகிறது. இஃது தன் வீரத்துக்கு நேர்ந்த இழுக்கு என்றெண்ணி அம்மாவீரன் வடக் கிருந்து உயிர் துறக்கிறான். இதுபற்றி வெண்ணிக் குயத்தியார் என்னும் பெண்பாற் புலவர் பாடும் பாடலொன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

'காற்று இயங்கு திசையறிந்து நாவாய் ஓட்டக் கற்றவனே! மதங்கொண்ட யானையை யொத்த வலிமையுடைய கரிகால் வளவனே! வெண்ணிப் பறந்தலை என்னும் ஊரில் உன்னோடு நடந்த போரில் ஏற்பட்ட புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்து உயிர் துறந்தானே சேட்சென்னி! அவன் நின்னைக் காட்டிலும் நல்லன் அல்லவா?'

என்று வென்ற வீரனின் பெருமையைவிட மானமே பெரிதென மடிந்த மறவனின் மாண்பைப் போற்றும் மரபு இலக்கிய உலகில் அரிதாகக் காணக்கிடக்கும் ஒன்றாகும்.

'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர் கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்தி
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே!'
(புறம் 66)

மேலும் இப்பாடலின்வழி உரிய திசையில் காற்று வீசாத போதும் மரக்கலத்தைத் தம் மனத்தின் திசைக்கேற்ப மாற்றி இயக்கும் பேராற்றல் கொண்டவராயும், கடல் ஆளுமை மிக்கோராயும் தமிழர் விளங்கினர் என்பதை அறிய முடிகிறது.

உழவுத்திறம், நீர் மேலாண்மை, மருத்துவ அறிவு, போர்க்கலை ஆற்றல் போன்ற பல துறைகளிலும் சிறந்த அறிவுமிக்கவர்களாகத் தமிழர்கள் திகழ்ந்துள்ளனர் என்பதைப்

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களைக் கொண்டு நாம் உய்த்துணர்கிறோம்.

**திணைப் பகுப்பு**

தமிழர்களின் திணைப் பகுப்பு முறை அவர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வை நமக்குத் தெற்றெனப் புலப்படுத்துகிறது. அதுமட்டுமன்று புராணப் பொய்க் கதைகள், கடவுளின் அருட் கடாட்சங்கள் கொஞ்சமும் தலைகாட்டாத தூய அறிவு நெறி சான்ற தொல்குடிமக்களாக அவர்கள் வாழ்ந்துள்ளனர்.

வாழ்வியலை அகம், புறம் என்று பகுத்த பண்டைத் தமிழர்கள் முழுமுதற் பொருளாக வைத்துப் போற்றியது தாம் வாழ்ந்த நிலத்தை மட்டுந்தான்.

'மலையும் மலைசார்ந்த இடமும் – குறிஞ்சி
காடும் காடுசார்ந்த இடமும் – முல்லை
வயலும் வயல்சார்ந்த இடமும் – மருதம்
கடலும் கடல்சார்ந்த இடமும் – நெய்தல்
மணலும் மணல்சார்ந்த இடமும் – பாலை'

தெய்வம், மக்கள், விலங்கு, பறவை, தொழில், உணவு என வரும் பிறவற்றையெல்லாம் அவர்கள் இரண்டாம் இடத்தில் தான் வைத்தனர். அவற்றைக் கருப்பொருள்கள் என வரையறுத்தனர். கடவுளை பத்தோடு பதினொன்றாகத்தான் சேர்த்தனர்.

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேயத்தீம்புனல் உலகமும்
வருணன் மேயப்பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் செல்லவும் படுமே!'
(தொல்காப்பியம்)

என்கிற பாட்டில் சொல்லப்படும் முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை முதலான கடவுட் பெயர்கள் எல்லாம் இன்று நம்மால் கைக்கொள்ளப்படும் ஆரியக் கடவுள்களோடு முற்றிலும் பொருத்தமற்றவை ஆகும். சங்கத் தொகை நூல்களின் திணைக் கோட்பாடு விரிவாக ஆராயத்தக்கது.

**முப்பால் தந்த முதல்வன்**

'தெள்ளு தமிழ்நடை
சின்னஞ்சிறிய இரண்டடிகள்
அள்ளு தொறுஞ்சுவை
உள்ளுதொறும் உணர்வாகும் வண்ணம்
கொள்ளும் அறம் பொருள்
இன்பம் அனைத்தும் கொடுத்ததிரு
வள்ளுவனைப் பெற்றதாற்
பெற்றதே புகழ் வையகமே!'

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

தன்னிகரற்ற நிலையில் விளங்கிய தமிழினம் சனாதனப் பள்ளத்தில் குடை சாய்ந்த போது, அதனைத் தூக்கி நிறுத்தத் தோள் கொடுத்த வல்லாளனே வள்ளுவப் பேராசான்.

கல்வி மறுக்கப்பட்ட இனத்தின் முன் கல்வியின் முதன்மையைப் பேசிய பெருமகன் அவர்.

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்' (குறள் 393)

விதிவிதி என்று சொல்லி வீணில் சோம்பி இராதே. ஆள்வினையோடு நீ எழுந்தால் உலகையே ஆளும் வல்லமை பெறலாம் என்று நரம்புகளின் வேரில் நம்பிக்கை விசையை ஊட்டியவர் அவர்.

'தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்' (குறள் 679)

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்' (குறள் 620)

முன்னோர்கள் சொன்னவை, பல்லாண்டுகளாய்ப் பின்பற்றப்பட்டு வருபவை என்பதற்காக மட்டும் எந்த ஒன்றையும் கண்மூடித்தனமாக ஏற்காதே! அறிவு கொண்டு சிந்தித்துப் பார் என அறைகூவல் விடுத்தவர் அவர்.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு' (குறள் 423)

வருணாசிரம வெறிபிடித்த வன்னெஞ்சு ஆரியப் பார்ப்பனர் உழைப்பைக் கொச்சைப் படுத்தினர். உழுதொழிலை இழிதொழில் என்றனர். ஆனால் வள்ளுவரோ உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி என்றார். யாவினுக்கும் மூத்த தாய்த்தொழில் உழவுத் தொழில் என்றார்.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை' (குறள் 1031)

அவருடைய குறள் நூலில் கோனாட்சிக் கருத்துகள் பேசப்பட்டாலும் குட்டியாட்சியின் மாண்பினை முதன்மைப்படுத்திய மூலவர் வள்ளுவர் ஆவார். பெண்மையையும் காதலை யும் உயர்வுபடுத்திய பேரிலக்கியமான திருக்குறளில் பெண்வழிச் சேறல் உள்ளிட்ட சில அதிகாரங்களில் வேறுபட்ட குரல் ஒலித்தாலும் பெண்களைப் போல் ஆண்களும் கற்புநெறியோடு வாழவேண்டும் என வலியுறுத்தியவர் வள்ளுவர் ஆவார்.

'ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டாழுகின் உண்டு'
(குறள் 974)

**பெரியார் சில இடங்களில் திருக் குறளில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டினாலும், நிறையையும் போற்றிக் கொண்டாடிய ஒரே நூல் அஃதொன்றே ஆகும்.**

சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற இலக்கியங்கள்பால் பெரியார் கடுமையான கருத்து மாறுபாடு கொண்டிருந்தார். அறிவின் விடுதலையை அவாவிய அவரின் தூய நெஞ்சம் பகுத் தறிவுக்குப் புறம்பான முறையில் பழமையைத் தூக்கி நிறுத்திய அத்தகைய இலக்கியங்களைச் சாடியது. இதற்கு முத்தமிழ்க் காப்பியமாகிய சிலம்பும் தப்பவில்லை. பெரியபுராணத்தை யும் கம்பராமாயணத்தை யும் பகுத்தறிவுப் பிரம்பு கொண்டு விளாசிப் பின்னி எடுத்தார்.

“இயற்பகை நாயனார் கதையைப் படித் தால் அதில் இயற்பகை நாயனார் ஒரு பார்ப்பானுக்குத் தன்னுடைய மனைவியைக் கூட்டிக் கொடுத்தார் என்றும், அதனால் அவருக்கு மோட்சம் கிடைத்தது என்றும் சொல்லப்படுகிறது.

மற்றும் பரிக்குப் பதிலாக நரியைக் கொண்டு வந்து அரசனின் இலாயத்தில் இருந்த மற்ற குதிரைகளையும் கொன்று விட்டார் ஒரு நாயனார். ஒரு கோவிலை இடித்து மற்றொரு கோவிலைக் கட்டினார் மற்றொருவர். இந்தப் படியாக வரிசையாகச் சொல்லிக் கொண்டே போகிறார்கள் - நாயன்மார்களைப் பற்றியும் ஆழ்வார்களைப் பற்றியும்! இவைகளெல்லாம் ஒழுக்கத்திற்கு ஏற்றவையா?”

இராமாயணம் குறித்துப் பெரியார் பேசியவற்றையும் எழுதியவற்றையும் சொல்லப் போனால் இக்கட்டுரையில் இடங்காணாது.

ஆயினும் புராண இலக்கியமாயினும், பக்தி இலக்கியமாயினும் எதனையும் வரலாற்றுக் கண்கொண்டு ஆய்ந்து கொள்ளுவன கொள்ளலாம். தள்ளுவன தள்ளலாம். இலக்கியங்களில் பக்தியும் மூடநம்பிக்கை யும் பேசப்பட்டாலும் தமிழனின் வரலாற்றுத் தடங்கள் அவற்றில் இணைந்தே உள்ளன.

தமிழர்க்கான இலக்கியங்களின் தலைமை இடம் சங்கப் பாடல்களுக்கு உண்டு.

சங்க இலக்கிய மெய்யியல் என்பது பகுத்தறிவு சான்றதும் மனிதநேயம் மிக்கதும் அறிவியல் கோட்பாடு நிறைந்ததும், மனித வாழ்வின் இன்பநுகர்விற்குச் சிறப்பிடம் அளிப்பதும் அறம், பொருள், இன்பம் என்னும் வாழ்வியற் கோட்பாடுகளை வற்புறுத்துவது மான ஓர் உன்னத நெறியாகும்.

“எந்தெந்தக் காரணங்களுக்காகச் சமய வாதிகளால் சங்க இலக்கியங்கள் புறக்கணிக்கப் பட்டனவோ அந்தந்தக் காரணங்களுக் காகவே தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தைச் சார்ந்த தலைவர்களாலும் தொண்டர்களாலும் சங்க இலக்கியங்கள் போற்றிப் புகழப்பட்டன. புரட்சிக் கவிஞரின் நூலைப்படி பாடல் அதற்குச் சிறந்த சான்றாகும்.”

முனைவர் க. நெடுஞ்செழியன், சிறந்த தமிழிலக்கியவாதியும் மார்க்சியச் சிந்தனை யாளரும் ஆகிய கோவை ஞானி ஆகியவர்களின் கீழ்க்காணும் கருத்துக்களும் மனங்கொள்ளத் தக்கனவாகும்.

**சங்க காலத்தில் தமிழன் மீது சாதி யோ, மதமோ, கடவுளோ வந்து அமர்ந்து கொள்ளவில்லை. சங்க காலத்திலேயே இவை நுழைந்து விட்டன. எனினும், தமிழ் மக்களின் வாழ்வியலை இவை தீர்மானிப்பவை யாக இல்லை.**

**வரலாற்றுப் போக்கில் தமிழ்ச் சமு தாயத்துக்குள் மட்டுமல்லாமல் எல்லாச் சமூகத்தினுள்ளும் மதமும் கடவுளும் சங்கமும் ஆதிக்கம் பெற்றன. வரலாற் றில் வர்க்கங்களின் தோற்றத்தையொட்டி நாம் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.**

**எனவே மார்க்சியப் பெரியாரியல் வாதிகளாகிய நாம், இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்கிற சமூக அறிவியல் நோக்கில் எல்லாவற்றையும் படிக்க வேண்டும்.**

ஆரிய இராமனைக் கடவுளாக்கி, தமிழ் வீரனாகிய இராவணனை அவனுக்கு அடிபணிய வைத்த கதைதான் இராமாயணம் என்பதைப் பெரியார் உணர்ந்தே இருந்தார். ஆனால் தமிழில் மட்டுமல்ல இந்தியாவின் அத்தனை மொழிகளிலும் வெளிவந்த இராமாயணக் கதைகளைத் துறைபோகக் கற்ற அறிஞர் அவரன்றி வேறு யார்?

தமிழுக்கான இலக்கியங்களை மட்டுமல்ல, தமிழில் இடம்பெற்றுள்ள அத்தனை இலக்கியங் களையும் படிப்போம். சாதிகள் ஒழிந்த, மதப்பொய்மைகள் மறைந்த, தமிழ்த்தேச விடுதலைக்கான போருக்கு அத்தனை இலக்கி யங்களையும் கூர்தீட்டி ஆயுதங்களாக்குவோம்!

(நன்றி : சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2011)

❖

*“என்னைத் தொடாதே” என்ற முறையிலான தீண்டாமைக்கும் சமூகப் பாகுபாட்டில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் மனப்போக்கு என்ற முறை யிலான தீண்டாமைக்கும் இடையில் வேறு படுத்திப் பார்ப்பதாகத் தெரியவில்லை. இரண்டும் அறவே வெவ்வேறானவை. ‘என்னைத் தொடாதே’ என்ற முறையி லான தீண்டாமை நகரங்களில் பையப் பைய மறைந்து கொண்டிருக்கலாம்; என்றாலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்பது பற்றி எனக்குச் சந்தேகமே. ஆனால் தீண் டப்படாத மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டவேண்டும் என்ற அளவில் இந்துக் களிடம் ஒரு மனப்போக்காக இருக்கிற தீண்டாமையானது கற்பனைக்கெட்டக் கூடிய காலத்திற்குள் நகரங்களிலோ, கிராமங் களிலோ மறைந்து போகாது என்று நான் உறுதியாகக் கருதுகிறேன்.*

**- டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்**

# பொங்கல் தமிழர் திருநாள்

*ஆழங்கால் பட்டுவிட்ட ஆரியத்தின்*
*அருவருப்புக் குப்பைகளைப் பேறாய் ஏந்திக்*
*கூழாங்கல் போலிருக்கும் தமிழா! உன்றன்*
*கூன்விழுந்த நெஞ்சை முதல் நிமிர்த்தி நில்லு.*
*ஊழாங்கல் (ஊழ்வினை) எடுத்து வீசி உன்னைப் புய்த்தும்*
*ஊதாங்குழல் போல இருப்பாய் நன்றோ?*
*வேழங்கள் எதிர்க்குமுன்றன் வலிமை எங்கே?*
*விடுபடென்ற “பெரியார் அறிவுப் பொங்கல்” வை.*

*“தமிழ்க்களத்தில் ஆரியத்திற்கென்ன வேலை?*
*தனித்தமிழே தமிழினத்தின் வாழ்வுச் சோலை*
*அமிழ்துடனே நஞ்சை ஊற்றல் கொலையின் தீது*
*அரும்புமுதல் சருகு வரை தமிழைப் பேசு*
*இமிழ்கடலின் உலக முதல் மொழி தமிழ்தான்”*
*என்றுரைத்த மொழிஞாயிறு பாவாணர்க்கு*
*நமதில்லில் இனித்ததொரு தனித்தமிழ்ப்பால்*
*நற்பொங்கல் கொண்டாடி உயர்வோம் நாமே.*

*பொதுவுடைமை, நற்பண்புத் தனியுடைமை,*
*புகழுடைமை, தீச்செயலின் வாயிலுக்குக்*
*கதவடைப்பு, உலகை வாழ்த்தும் உழவின் மேன்மை*
*கனிமழலை யாழ்குழலை வெல்லும் சீர்மை,*
*மதகுடைக்கும் மழைச்சிறப்பு, மன்னன் நீர்மை,*
*மங்கையர்தம் மாண்பு, மலர்மென்மைக் காமம்*
*விதி (ஊழ்) உடைக்கும் முயற்சி; மதஎதிர்ப்புரட்சி*
*வைத்துள்ள வள்ளுவப் பொங்கல் பண்பாடு.*

*செந்தமிழின் உயிர்மூச்சு; தேனின் ஊற்று*
*செழுப்பாவின் பொன்னேடு; செம்பூக்காடு*
*அந்தமிழின் தாய்ப்பால்; ஆரியத்தின் தாழ்ப்பாள்*
*அருங்கொள்கை இடிமுழக்கம்; தமிழியக்கம்*
*தென்றலின் புல்லாங்குழல்; தீயின் சாயல்*
*செருக்களத்தின் போர்வாள்; பெரியாரின் கூர்வேல்*
*வண்டமிழின் நிலாமுற்றம்; வனப்பின் முத்தம்*
*வான்புகழ் வேந்தர்க்குப் பாப்பொங்கல் ஆர்ப்பாய்.*

*செந்நெல்லும் செங்கரும்பும் செங்கிழங்கும்*
*செம்பொன்னின் மஞ்சளும் சேர் மருதப் பொங்கல்*
*செங்கதிர்க்கு நன்றி சொல்லும் உழவர் பொங்கல்*
*செவ்விளநீர் தலைதாங்கும் தென்னைப் பொங்கல்*
*பொங்கிளங் காளைதழுவும் முல்லைப் பொங்கல்*
*பொன்மடியில் மகிழ்பூக்கும் குறிஞ்சிப் பொங்கல்*
*தென்கடலின் அலைக்காற்றில் நெய்தல் பொங்கல்*
*தெளிவுறும் பொங்கல் தமிழர் திருநாள் வாழ்க!*

- பேராசிரியர்
**இரா. சோதிவாணன்**



# தமிழரின் விடுதலைக்குத் தேவை தமிழ் மொழியின் காப்பு

*பொழிலன்*

தமிழர்கள் அடிமைப்பட்டிருக்கிறார்கள்; தாங்கள் அடிமைப் பட்டிருக்கிறோம் என்பதைக் கூட உணர இயலாத அடிமைத் தனம். ஒரு குமுகம் விடுதலை அடைய வேண்டும் என்றால், அந்தக் குமுகம் எந்த வகைகளில் எல்லாம் அடிமைப்பட்டிருக் கிறது என்று முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் தமிழர்களால் உரிமையாகச் சிந்திக்கவும் இயலவில்லை, செயல் படவும் இயலவில்லை. தமிழர்கள் எவ்வாறெல்லாம் சிந்திக்க வேண்டும் என்றும், எவ்வாறெல்லம் செயல்பட வேண்டும் என்றும் இந்திய அரசும் பன்னாட்டு நிறுவன வல்லரசுகளுமே. தங்கள் அதிகாரங்களைக் கொண்டு ஆளுமை செய்து தமிழர்களை அடக்கி வைத்திருக்கின்றன. தாங்கள் என்ன மொழியினர் என்று பதிந்து கொள்ள முடியாத நிலையில் ஓர் இனம் இருக்கிறது என்றால் அது தமிழ்நாட்டில் உள்ள தமிழ் இனம் என்றுதான் முதலில் சொல்ல வேண்டும். உலகிலுள்ள மிகப்பழமையான இனமக்களுள் முதன்மையானவர் களான தமிழர்களுக்குத் தங்கள் தாய் மொழியில் படிக்கும் வாய்ப்பு இருந்திடவில்லை.

தங்கள் தாய்மொழி தமிழில் வழிபாடு செய்ய முடிவதில்லை.

வழக்கு மன்ற வழக்காடல்களில் தமிழ்மொழி இல்லை.

ஆட்சிமொழியாகவோ அலுவல் மொழியாகவோ தமிழ் இல்லை. தமிழ்நாடு என்று ஒரு மாநிலத்தை அடையாளப்படுத்திக் கொள்ள முடிந்த அவர்களால் வலுவான ஓர் அரசு அதிகாரத்தை அமைத்துக் கொள்ள முடியவில்லை. அதிகாரமற்ற அரசை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டுக் கனிம வளங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்டிச்செல்லாமல் பாதுகாத்துக் கொள்ளவும் முடியாமல்,

தமிழ்நாட்டு மக்களின் தேவைக்குரிய தொழில் வளத்தை உருவாக்கிக் கொள்ளவோ பெருக்கிக் கொள்ளவோ முடியாமல் இருக்கின்றனர்.

தமிழ்நாட்டு விளைச்சல் பொருள்களுக்கு விலையை உறுதிப் படுத்துகிற அதிகாரம்கூட இல்லாது அடிமைகளாய் இருக்கின்றனர். தமிழர்களால் தாங்கள் விரும்புகிற கல்வியைப் பயில இயல வில்லை. தாங்கள் விரும்புகிற தொழில்களைச் செய்ய இயல வில்லை. தங்கள் தங்கள் தாய்மொழியில் படித்தால்தான் எளிதாக



விளங்கிக்கொள்ள முடியும் என்று உலகி லுள்ள பெரும்பான்மை இன மக்கள் தங் களின் தாய்மொழி வழியி லேயே படித்து விளங்கிக் கொண்டு தங்கள் தாய்மொழி வழிக் கல்வி அறிவு பெறுவது மட்டும் அல்லாது தொழில்கள் பணிகள் வழியே வாழ்கின்றனர். ஆனால் தமிழர் களுக்கோ தங்கள் தாய் மொழியில் படிக்க வும் வழியிருப்பதில்லை, வேலை செய்யவும் வழி அமைவதில்லை. அப்படியெல்லாம் ஏன் செய்யமுடியவில்லை என்று எண்ணிப் பார்ப்பதுமில்லை? சிலர் நினைக்கின்றனர் இக்கால் உள்ள அறிவியலை யெல்லாம் தமிழில் படித்திட முடியாது. அந்த அளவில் நம் தாய்மொழி வளமான மொழியில்லை என்று நினைக்கின்றனர். தாய் மொழி தமிழ் வழியில் இக்காலத்தின் அறிவியலை, பொறி யியலை, பிற துறை அறிவாக்கங்களையெல் லாம் பயில முடியுமா? முடியாதா?

அவ்வாறு பயில இயலாது என்று கருது வீர்களானால், அவற்றுக்கான காரணங்கள் என்ன? தமிழ்வழியில் படிக்கின்ற அளவிற்குத் தமிழ் தகுதியுடையதாக இல்லையா? அல்லது தமிழர்கள் தகுதியுடையவர்களாக இல்லையா? அல்லது தமிழர்களைத் தமிழ் வழியில் பயில வைக்கின்ற அளவிற்குத் தமிழக அரசு தகுதி உடையதாக இல்லையா? தமிழ் மொழி உலகின் மிகப் பழமையான மொழி

மூலச்சொற்களை ஏராளமாகப் பெற்றிருக்கிற மொழி.

இன்றும் வெகுமக்கள் அளவிலும், இலக்கியப் பயன்பாடுகளிலும் வழக்கில் உள்ள மொழி.

அறிவியல் தன்மையுள்ள இலக்கணச் சிறப்பைக் கொண்ட மொழி.

மிக விரிந்த இலக்கியச் சிறப்பும், பரப்பும் கொண்ட மொழி.

செம்மொழி என்று உலக மொழியியல் அறிஞர்கள் பலரும் மதிப்பிடும் வகையில் சிறப்புள்ள தமிழுக்கு எல்லா வகைத் தகுதி களும் உண்டு. அப்படியான நிலையில். புதியதாக வளர்ந்திருக்கின்ற அறிவியலையும் வளர்ந்து வருகின்ற அறிவியலையும் தமிழில் வழங்கும் அளவிற்குத் தமிழ்மொழி ஆற்றல் கொண்ட மொழியியல் அடித்தளங்களைப் பெற்றிருக்கிறது. என்னவகைக் கருத்துகளையும் செய்திகளையும் வெளிப்படுத்திக் காட்டுகிற வகையில் வளமான சொற்கள் தமிழில் உண்டு அல்லது சொற்களை உருவாக்கிக் கொள்ளும் மொழி வளம் தமிழுக்கு உண்டு. அப்படியான தகுதி தமிழுக்கு உண்டு என்பது போலவே தமிழரும் அந்த அளவில் மேம்பட்ட அறிவியலை வளப்படுத்தி அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்ற குமுகப் பின்னணியைக் கொண்டவர்கள். அதற்குக் காரணம் பழந்தமிழ்க் குமுகம் வேளாண் வளர்ச்சியை, ஆற்றல் பெற்ற தொழில் வளர்ச்சியை, கடல் கடந்து செல்லும் திறன் வளர்ச்சியை அதற்குரிய அறிவைப் பெற்று இருந்த குமுகமாக வளர்ந்து இருந்தது என்பதே ஆகும். இன்றைய அளவில் கணிப்பொறி அறிவியலிலும், வானியல் அறிவிலும், மருத்துவ - தொழில்நுட்ப அறிவியலிலும் தமிழர்கள் உலகளவில் மேம்பட்ட நிலையில் இருப்பதே இதற்கெல்லாம் சான்று. ஆக, தமிழ்மொழியும் தமிழர்களும் இவ்வாறு ஆற்றல் கொண்ட நிலையில் இருந்தும் அந்த ஆற்றல்களின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்க வேண்டிய அரசதிகாரம் இல்லாததால் தான் தமிழ் தமிழர்களின் கல்வி மொழியாக, அரசு மொழியாக, அலுவல் மொழியாக, நயன்மை(நீதி) மொழியாக, வழிபாட்டு மொழியாகக் கோலோச்ச முடியாமல் இருக்கிறது. தமிழ் மொழியை இந்த நிலை களின் பயன்பாடுகளிலிருந்து நீக்கி அங்கு

ஆங்கிலத்தையும் இந்தியையும் சமசுக்கிருதத் தையும் கட்டாயப்படுத்தித் திணிக்கின்ற வேலைகளையே இந்திய அரசும் பன்னாட்டு முதலீட்டு அதிகார வெறிப் போக்குகளும் தொடர்ந்து செய்துவருகின்றன. எனவே தமிழில் கல்வி பயில்வது இல்லாமல் ஆகி வருகிறது. ஆட்சி மொழியாகவும் அலுவல் மொழியாகவும் தமிழ் இருக்க வேண்டிய நிலையை இழந்திருக்கிறோம். வழிபாடு களை, சமயச் சடங்குகளை, குடும்ப நிகழ்வுகளைத் தமிழில் செய்ய மறுக்கப் படும் நிலையில் இயலாமல் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். இத்தகைய போக்குகளை மாற்ற வேண்டுமானால் தகுதியான தமிழ்மொழியையும் தகுதியான தமிழ்க் குமுகத்தையும் பெற்றிருக்கிற தமிழர்கள் தகுதியான அதிகாரங்களையும் பெற்றாக வேண்டியவர்களாக இருப்பது கட்டாய மாகின்றது. அந்நிலையில், தகுதியான அதிகாரங்களைப் பெற்றிருக்கிற வகையில் தமிழக அரசு தகுதி உடையதாக இருக்கிறதா என்று கருதுவோமானால், இல்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது.

ஏன் அவ்வாறு தகுதியுடையதாக இல்லை? - மேற்சுட்டப்பட்டுள்ள கேள்விகளுக்கான விடைகளைச் சற்று ஆழ்ந்து நாம் ஆய்வு செய்து உணர்வோமானால், பல உண்மைகள் நமக்குத் தெரியவரும். ஆங்கிலேயன் வந்து அவன் ஆட்சி அதிகாரத்திற்கென உருவாக்கப் பட்டதே இந்தியா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு முன்பு இந்தியா என்ற ஒன்று இருந்துவிடவில்லை. அந்தந்தப் பகுதி களை ஆண்ட அரசர்களின் பெயர்களிலேயே. அந்தந்த அரசப் பகுதிகள் அழைக்கப்பட்டன. ஆங்கிலேயனே அனைத்துப் பகுதிகளையும் இணைத்து இந்தியா என்ற ஒன்றை உருவாக்கி னான். தமிழ்நாடும் அவன் உருவாக்கிய அந்த இந்திய ஆட்சிப் பகுதிக்குள் அடக்கப்பட்டது.

ஆங்கிலேயே அரசுக்கு அந்தவகையில் அடிமைப்பட்டு இருந்ததால் தமிழர்கள் ஆங்கிலேயப் பொருளியலுக்கும் ஆங்கிலேய அரசியலுக்கும் அடிமைப்பட்டது போல ஆங்கில மொழிக்கும் அடிமைப்பட்டுப் போயினர். ஆட்சி மொழியும், அலுவல் மொழியும், நயன்மை (நீதி) மொழியும் ஆங்கிலமாகவே ஆக்கப்பட்டது. ஆங்கிலேயன் தன் ஆட்சி அதிகாரங்களை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியப் பார்ப்பனிய அதிகார வகுப்பினர்களிடம் கையளித்து விட்டுச் சென்றபின், இந்திய அதிகார வகுப்பினரின் அரசியல் அதிகாரமே கோலோச்சத் தொடங்கியது. பன்னாட்டு முதலாளிகளின் உறவோடு இந்தியப் பார்ப்பன மார்வாடி பனியா பெருமுதலாளிகளின் பொருளியலும் அரசியலும் இந்தியாவில் உள்ள பல்வேறு மொழி இன மக்களையும் அடக்கி ஆண்டது. ஆங்கிலமொழிக் கல்விக்கும் அரசு நடைமுறைகளுக்கும் ஏற்கனவே அடிமைப்பட்டிருந்த மக்கள் இந்தியப் பார்ப்பனிய அதிகார வகுப்பின் அதிகாரத்தின் காரணத்தால் சமசுக்கிருதத்துக்கும் இந்திக்கும் அடிமைப்படத் தொடங்கினர். இத்தகைய அடிமைத்தனங்களால் ஒவ்வொரு மொழித் தேச மாநிலங்களும் தங்களின் அரசியல் அதிகாரத்தை, பொருளியல் உரிமைகளை மட்டுமன்றி வரலாற்றை, பண்பாட்டை இழந்து வருவதோடு, மொழி உரிமைகளையும் பெரும்பகுதி இழந்துவிட்டன. தமிழ்வழியில் கல்விபெற முடியவில்லை என்பது மட்டுமன்று, கல்வி உரிமையையே தமிழ்நாட்டிடமிருந்து 1970 ஆம் ஆண்டுகளின் நெருக்கடிநிலைக் காலங்களில் இந்தியப் பார்ப்பனிய அரசு பறித்துக் கொண்டது. மொழித் தேச மாநிலங்களுக்குத்தான் கல்வி உரிமை வேண்டும் என்பது மொழித் தேசங்களின் கோரிக்கையாக இருக்க, இந்தியப் பார்ப்பனிய

அரசு அதைப் பொருட்படுத்துவதில்லை. தமிழ்நாடு என்னும் இன்றைய தமிழ்மொழித் தேசத்திற்கு உரிய மாநில அரசு தன் பொருளியலை, அரசியலை, வரலாற்றை, பண்பாட்டை என அனைத்து நிலைகளையும் காத்துக்கொள்ளவும் அவற்றின் மீதான எல்லா வகை வெறியாட்டங்களையும் விரட்டியடிக்கவும், தன் விடுதலைக்காகவும் பெருமளவில் உழைக்க வேண்டியுள்ளது. அப்படியான போராட்டங்களில் தமிழ் மொழியின் உரிமைப் போராட்டம் முதன்மை யானதாகின்றது. தமிழ் மொழியில் கல்வி, தமிழ்மொழியில் வழிபாடு, தமிழ்மொழியில் அரசாட்சி, தமிழ் மொழியில் அலுவல்கள், தமிழ் மொழியில் நயன்மை (நீதி) என்கிற வகையில் தமிழ் மொழிப் பயன்பாட்டைத் தமிழர்கள் நடைமுறைப் படுத்திடவில்லை யென்றால்,

தமிழர்கள் மட்டுமல்லர் தமிழும் அழிக்கப்பட்டுவிடும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் . எனவே அவ்வகையில் தமிழ்மொழிக் காப்பின், மீட்பின் தேவையை உணர்ந்தாக வேண்டும். அதன் வெளிப்பாடாய் முதலில் தமிழர்கள் அனைவரும் சமசுக்கிருதக் கலப்பற்ற தமிழில் தங்கள் பெயர்களைச் சூட்டிக் கொள்ள வேண்டும். தமிழர்களின் குடும்ப, குமுக வாழ்வியல் நிகழ்வுகள் அனைத்தையும் தமிழிலேயே நடத்திட வேண்டும். தமிழ் வழியிலேயே கல்வி கற்றிட வழி அமைத்திடல் வேண்டும், அத்தகைய நடைமுறைகளே தமிழ்க் காப்பின் முதற்கட்டப் பணிகள் என்று உணர்ந்தாக வேண்டும். தமிழ் என்பது மேடை அழகுக்கோ, இலக்கிய அடையாளத்துக்கோ மட்டுமல்ல. தமிழர்களின் வாழ்வியல் அடையாளத்திற்குமானது. தமிழர்களின் உரிமைப் போராட்ட எழுச்சிக்குமானது. தமிழைக் காப்போம்! தமிழரை மீட்போம்!!

●

# எந்நாளோ?



**என்னருந் தமிழ்நாட்டின் கண்**
**எல்லோரும் கல்விகற்றுப்**
**பன்னறும் கலைஞானத்தால்,**
**பராக்கிரமத்தால், அன்பால்,**
**உன்னத இமமலைபோல்**
**ஓங்கிடும் கீர்த்தி எய்தி**
**இன்புற்றார் என்று மற்றோர்**
**இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?**

**கைத்திறச் சித்திரங்கள்,**
**கணிதங்கள் வான நூற்கள்**
**மெய்த்திற நூற்கள், சிற்பம்,**
**விஞ்ஞானம், காவியங்கள்**
**வைத்துள தமிழர் நூற்கள்**
**வையத்தின் புதுமை என்னப்**
**புத்தகசாலை எங்கும்**
**புதுக்குநாள் எந்தநாளோ?**

**தாயெழிற் றமிழை, என்றன்**
**தமிழரின் கவிதை தன்னை**
**ஆயிரம் மொழியிற் காண**
**இப்புவி அவாவிற் றென்ற**
**தோயுறும் மதுவின் ஆறு**
**தொடர்ந்தென்றன் செவியில் வந்து**
**பாயுநாள் எந்தநாளோ,**
**ஆரிதைப் பகர்வார் இங்கே?**

– *பாரதிதாசன்*



# முற்றிவரும் முதலிய நெருக்கடிக்கு மார்க்சியமே தீர்வு!

(முதலிய = முதலாளிய, முதலாளித்துவ )

**- தியாகு**

*குமுகியம் தோற்று விட்டதாகச் சொல்கிறீர்களே, முதலியம் எங்கே வெற்றி பெற்றுள்ளது, காட்டுங்கள். பிடல் காஸ்த்ரோ. குமுகியம் = சோசலிசம்*

முதலியம் மீளவொண்ணா நெருக்கடியில் சிக்கியிருப்பதை முதலியப் பொருளியல் அறிஞர்களே ஒப்புக் கொள்கின்றனர். இந்தியாவில் மட்டுமன்று, உலகெங்குமே!

இந்தியத் தலைமையமைச்சர் நரேந்திர மோதியின் முதல் தலைமைப் பொருளியல் அறிவுரைஞராக இருந்து விலகி விட்ட அரவிந்த் சுப்ரமணியம் சொல்கிறார்: இந்தியப் பொருளியல் பெரும் சுணக்க நிலையில் உள்ளது. அது தீவிர சிகிச்சைப் பிரிவை நோக்கி விரைந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இந்தியப் பொருளியல் ஆழமான நெருக்கடியில் சிக்கியிருப்பதாகச் சொல் கிறார் யஷ்வந்த் சின்கா. இவர் 1998-2002 காலத்தில் வாஜ்பாய் ஆட்சியில் நிதித்துறை அமைச்சராகப் பணியாற்றியவர். 2019-20 இரண்டாம் காலாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க வளர்ச்சி 4.5 விழுக்காடாகச் சடசடவென சரிந் திருப்பதை அரசு வெளியிட்டுள்ள தரவுகளே காட்டுகின்றன. இந்த வீழ்ச்சியை மறைத்து இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் அதிகாரிகளும் அடுத்த காலாண்டில் நிலைமை சீர்பட்டு விடும் என்று ஆருடம் சொல்வதும் வீறாப்புப் பேசுவதும் மக்களை முட்டாளாக்கும் செயல் என்கிறார் சின்கா.

முன்னாள் நிதியமைச்சர் இப்போதைய நிலைமையை வேண்டலின் சாவு என்று வண்ணிப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது சந்தையில் பண்டங்கள் வேண்டும் நிலை மறைந்து விட்டது, மக்களின் வாங்குந்திறன் செத்து விட்டது என்று பொருள். வளர்ச்சி என்பதெல்லாம் வறுமையின் வளர்ச்சியே என்பதைத்தான் இது காட்டுகிறது. இந்த வேண்டலின் சாவு ஊர்ப்புறத்தில் வேளாண் துறையில் தொடங்கி நாடெங்கும் பிற துறைகளுக்கும் பரவி வருகிறது என்கிறார் யஷ்வந்த் சின்கா.

இந்தியப் பொருளியல் சந்தித்து வரும் நெருக்கடியைச் சுட்டிக் காட்டி அண்மையில் ஆளுங்கட்சியின் வசவை வாங்கிக்கட்டிக் கொண்ட ஒருவர் நோபல் பரிசு பெற்ற அறிஞர் அபிஜித் பானர்ஜி. அவரும் அங்காடியில் வேண்டல் சரிந்திருப்பதை நெருக்கடிக்கான



முதன்மைக் காரணியாக எடுத்துக்காட்டு கிறார். மோதி அரசின் பணமதிப்பு நீக்கம். சரக்கு சேவை வரி ஆகியவற்றால் ஏற்பட்ட நெருக்கடியை எடுத்துக்காட்டும் போது, ஊரக வறுமைதான் அடிப்படைக் காரணம் என்கிறார். சிற்றூர்களின் உழவர்களின் வாழ்க் கைத் தகைமை வீழ்ச்சியுற்றதால் அவர்களின் வாங்குந்திறன் வற்றி அதனால் அங்காடி காய்ந்து அனைத்துத் துறைகளும் தாக்குண் டிருப்பதாக விளக்குகிறார்.

வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்தியப் பொருளியலை நான் ஆட்சிப் பொறுப்பேற்றுக் காப்பாற்றினேன் என்று இந்தியத் தலைமையமைச்சர் நரேந்திர மோதி மார்தட்டிக் கொள்வது அவரது கிச்சு கிச்சு முயற்சிகளில் ஒன்றாகவே அறியப் படும். 2014 பொதுத் தேர்தலில் மோதியின் முதன்மையான வாக்குறுதிகளில் ஒன்று வேலைவாய்ப்பைப் பெருக்குவதாகும். நேர் மாறாக சென்ற ஐந்தாண்டு காலத்தில் புதிய வேலைவாய்ப்புகள் பெருகவில்லை என்பதை வெளிப்படுத்தும் புள்ளிவிவரங்களை மறைப் பது எப்படி என்பதுதான் சென்ற தேர்தலின் போது மோதியின் குறி ஆயிற்று. கடைசியாக வந்துள்ள செய்திகள் பெரிதும் கவலைக்குரி யவை. கடுமையான பொருளியல் சுணக்கம் நிலவுவதால் அடுத்த ஆண்டு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக வாய்ப்பில்லை என்று பொருளியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். இந்தியப் பணியாளர் கூட்டமைப்பின் தலைவர் ரிதுபர்னா சக்ரவர்த்தியும் இதே கருத்தைச் சொல்கிறார். வேலைவாய்ப்புச் சந்தையிலும் வேண்டல் செத்து விட்டது என்பதே இச்செய்திகளின் சாறம்.

வேலையில்லாதாரை உழைப்பின் சேமப் பட்டாளம் என்று கார்ல் மார்க்ஸ் சொல் வார். சேமப்பட்டாளம் பெருகுவது செயல் முனைப்பான உழைப்புப் பட்டாளத்தின் நிலைமை மீது எதிர்மறைத் தாக்கம் ஏற் படுத்தும். அதாவது தொழிலாளர்களும் பணியாளர்களும் பெருமளவில் பாதிக்கப்படு வார்கள்.

தொழில் நிறுவனங்கள் தொழிலாளர் களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் அவர் கள் மீதான பணிச்சுமையை ஏற்றவும் கூலி யைக் குறைக்கவும் இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளும். இது வெறும் கோட் பாடன்று. இந்தியாவெங்கும் தொழில்துறை யில் இப்போதைய நடப்பு இதுவே.

பல்வேறு நிறுவனங்களில் ஆட்குறைப்பு தொடங்கி விட்டது. ஊர்தித் துறையில் மட்டும் 3.5 இலட்சத்துக்கு மேற்பட்டோர் வேலை இழந்துள்ளனர். தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் பெரிய அளவில் ஆட் குறைப்பு செய்யப் போவதாக அறிவித்துள்ளன. இது முதலியத்தின் உலகமயக் காலம் என் பதால் நெருக்கடிகளும் உலகமயமாகியுள்ளன. முதலியத்தின் தலைமையிடமாக மதிக்கப் படும் அமெரிக்க ஐக்கிய நாடுகளே ஆழமான, நீடித்த பொருளியல் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. முதலியத்தை நிலைபேறுடைய தாகக் கருதப் பழக்கப்பட்டுள்ள அமெரிக்க அறிவாளர்களில் ஒருசிலரே இப்போது முதலி யத்துக்கு நேரிட்டுள்ள நெருக்கடி பற்றிக் கூசாமல் பேசுகின்றனர்.

2016ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலில் சனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட முயன்று தோற்றவரும் மீண்டும் 2020 தேர்தலிலும் அதே முயற்சியில் ஈடு பட்டிருப்பவரும் ஆகிய பெர்னி சாண்டர்ஸ் அமெரிக்க முதலியத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி அடிக்கடிப் பேசி வருகிறார். அமெரிக்கப் பொதுவாழ்வில் இவ்வளவு முக்கிய இடம் வகிக்கும் ஒருவர் முதலியத் தின் அழிவு பற்றிப் பேசி வருவது முதலியத் தின் அழியாத்தன்மை பற்றிய மயக்கம் அமெரிக்காவிலேயே கலையத் தொடங்கி யிருப்பதைக் காட்டும். அமெரிக்க சனநாயகம் பற்றிப் பேசும் போது அமெரிக்கப் பணநாயகம்

கோலோச்சுவதாகவே சாண்டர்ஸ் வெளிப் படையாகப் பேசுகிறார். வால் தெருவில் நின்று கொண்டு இந்த நாட்டை ஆள்வது இங்கே தலைமையகம் வைத்துள்ள பெருங் குழுமங்களே என்று பேசுகிறார். அமெரிக் காவில் குடியரசுத் தலைவர் பதவிக்கு சன நாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட முன்னிற்கும் அளவுக்கு அரசியல் செல்வாக்கு டைய ஒருவர் முதலியப் பெருங்குழுமங் களின் வல்லாளுமை குறித்தும் முதலியப் பொருளியல் நெருக்கடி குறித்தும் பேசுவது ஒரு பத்தாண்டு முன்பு கூட எண்ணிப் பார்க்க முடியாத ஒன்றாகவே இருந்தது.

இந்தியாவிலும் அமெரிக்காவிலும் முதலிய உலகெங்கிலும் காணப்படும் பொருளியல் நெருக்கடி சுணக்கம் என்றோ சுணக்கம் நோக்கிய சரிவு என்றோ வண்ணிக்கப்படு கிறது. இது பொருளியல் வரலாற்று மாணவர் களுக்கு 1930களில் அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் முதலிய உலகையும் கவ்விய பெருமந்தத்தை நினைவுபடுத்தும். உலகம் மீண்டும் ஒரு பெருமந்தம் நோக்கிச் சென்று கொண்டிருப்பதற்கான அறிகுறிகள் தென்படு வதாக வல்லுநர்கள் கருதுகின்றார்கள். இது உண்மையானால் வரவிருக்கும் நீடித்த பெரு மந்தம் மக்களின் பொருளியல் வாழ்வில் மட்டுமல்லாமல் அரசியல் வாழ்விலும் ஏற் படுத்தக் கூடிய இடர்கள் துயரமிக்கவையாக இருக்கும். இந்த முறை ஒரு புதிய காரணி யாக சூழலியல் வாழ்வில் ஏற்படக்கூடிய இடர்களையும் பேரிடர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த முதலிய நெருக்க டிக்குத் தீர்வு காண்பது இருக்கட்டும், இதனைப் புரிந்து கொள்வதற்கே மார்க்சிய ஆய்வுமுறை தேவைப்படுகிறது. முதலியப் பொருளாக்க முறையின் நெருக்கடிகளையும், அவற்றுக்கான தீர்வையும் மார்க்சியப் பொரு ளியல் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. உலகக் குமுகிய சோசலிச முகாமில் 1980களில் ஏற் பட்ட நெருக்கடியும் கூட வரலாற்று நோக்கில் முதலிய நெருக்கடிகளின் மறிவினைதான். அவற்றைப் புரிந்து கொண்டு தீர்வு காண் பதற்கான குடியாட்சியம் அந்த நாடுகளில் இல்லாது போயிற்று. அந்தப் படிப்பினை களைக் கற்று உலகக் குமுகியம் புத்துயிர் பெற்றெழுவது ஒரு வரலாற்றுத் தேவை. முதலிய முகாமில் முற்றி வரும் நெருக்கடியை மறைக்கக் குமுகியத்தின் சரிவு அல்லது வீழ்ச்சியை இனியும் பயன்படுத்த இயலாது. மார்க்சியப் பொருளியல் என்பது அடிப் படையில் முதலியப் பொருளியலையும் அதன் முரண்பாடுகளையும் விரித்துரைப்பதுதானே தவிர அது குமுகிய அமைப்புக்கான சமையல் குறிப்பன்று. இதை நான் பல இடங்களில் சுட்டியுள்ளேன். கார்ல் மார்க்சின் பெரும் படைப்பாகிய மூலமுதல் அடிப்படையில் ஒரு பொருளியல் நூல். இந்த நூலின் நோக்கம் என்ன? புதுக்காலக் குமுகத்தின் இயக்க விதியைத் தோலுரித்துக் காட்டுவதே என்றார் மார்க்ஸ். முதலியப் பொருளியல் அமைப்பு தவிர்க்கவியலாதவாறு நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்வதை மார்க்ஸ் தமது ஆய்வில் மெய்ப்பித்தார்.

முதலியம் வளர்ந்து செல்லும் போது பொது ஈட்ட வீதம் சரிந்து செல்லும் போக்கினை மார்க்ஸ் கண்டறிந்தார். ஏனைய காரணிகள் மாறாதிருக்க பொது ஈட்ட வீதம் சரிந்து செல்லும் போக்கினை ஈடு கட்டும் பொருட்டு மென்மேலும் ஈட்ட அளவைக் கூட்டிச் செல்ல ஈட்டம் = இலாபம் முதலி யமும் அதன் கைக்கருவியான அரசும் முயல் கின்றன. மிகைமதிப்பு உயராமல் ஈட்டம் உயராது. மிகைமதிப்பு உயர வேண்டுமானால் உழைப்பை இன்னும் கடுமையாகச் சுரண்ட வேண்டியிருக்கும். அதாவது தொழிலாளர் களும் உழைக்கும் மக்களும் வறுமைப் படுகுழியில் தள்ளப்படும் போக்கு தீவிர மடையும். இதனால் அவர்களின் வாங்குந் திறன் சுருங்கிப் பொருளாக்கம் தேக்கமுறும். இதையே பொருளியல் நெருக்கடி என்

கிறோம். தொழிலாளர்களின் கூலியை (பெயர்க் கூலியை அன்று, உண்மைக் கூலியை) குறைக்க முதலாளர் வகுப்பு ஓயாமல் முயல்வதும், அந்தக் கூலியைக் குறையாமல் தக்கவைத்துக் கொள்ளவும், இயன்றால் உயர்த்திக் கொள்ளவும் (இவ்வாறு தன் வாழ்க்கைத் தகைமையைக் காத்துக் கொள்ளவும்) தொழிலாளர் வகுப்பு ஓயாமல் முயல்வதுமே வகுப்புப் போராட்டத்தின் (வர்க்கப் போராட்டத்தின்) பொருளியல் அடிப்படை ஆகும். பொதுவாகத் தொழிலாளர்களின், உழைக்கும் மக்களின் நிலைமை மோசமாகிச் செல்வதால் அவர்கள் தங்கள் தேவைகளை முழுமையாக அடைய முடியாத நிலை ஏற்படுகிறது. இது குறை நுகர்வுப் போக்கை வளர்த்து விடுகிறது. குறை நுகர்வு மிகைப்பொருளாக்க நெருக்கடிக்கு வழிசெய்கிறது. இந்த மிகைப் பொருளாக்கம் சார்பியலானதே தவிர அறுதியானதன்று. அதாவது குமுகத் தேவைக்கு மேல் அன்று, அங்காடி வேண்டலுக்கு மேல் இது மிகையாகிறது. தேவைக்கும் வேண்டலுக்குமான இந்த முரண்பாட்டை முதலியப் பொருளியல் அமைப்புக்குள் தீர்க்க முடியாது.

பிரெடெரிக் எங்கெல்ஸ் சொன்னார்: பெருந்திரளான மக்களின் குறைநுகர்வு, அதாவது பெருந்திரளான மக்களின் பேணுகைக்கும் மீளாக்கத்துக்கும் தேவையான அளவுக்கு அவர்களின் நுகர்வைக் குறுக்கி விடுவது ஒரு புதிய நிகழ்வன்று. பெருந்திரளான மக்களின் குறைநுகர்வு என்பது சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட அனைத்துக் குமுக வடிவங்களுக்கும், ஆகவே முதலிய வடிவத்துக்கும் தேவையான நிலைமை ஆகும். ஆனால் முதலியப் பொருளாக்க வடிவம்தான் முதலில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கிறது. ஆகவே பெருந்திரளான மக்களின் குறைநுகர்வு என்பது நெருக்கடிகளுக்கு முன்தேவை ஆகிறது. நெருக்கடிகளில் அது வகிக்கும் பங்கு நெடுங்காலமாகவே அறிந்தேற்கப்பட்டுள்ளது. ஆனால் நெருக்கடிகள் இன்று நிலவுவதும் முன்பு நிலவியதும் ஏன் என்று அது நமக்குச் சொல்வதில்லை.

குமுகத்தில் வறுமை தலைவிரித்தாடுவது நெருக்கடிகள் நிலவுவதன் வெளிப்பாடே தவிர காரணம் அன்று. காரணம் எதுவென்றால் முதலியப் பொருளாக்க குறையே. முதலியப் பொருளாக்க முறையிலான நெருக்கடிகள் முற்றி வருவதை மார்க்சியப் பொருளியலின் அளவுகோல்கள் நமக்கு உணர்த்துவதோடு தீர்வுக்கும் வழி சொல்கின்றன.

முதலியப் பொருளாக்க நெருக்கடிகளுக்கு இறுதித் தீர்வு என்பது அந்தப் பொருளாக்க முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதே. உடனடித் தீர்வு என்பது என்பது அந்தத் திசையில் முன்னேறிச் செல்வதே. தொழிலாளர் வகுப்பு விடுதலை பெற விரும்பினால் அது குமுகம் முழுவதையும் விடுதலை பெறச் செய்ய வேண்டும். அனைத்து வகைச் சுரண்டலிலிருந்தும் அனைத்து வகை ஒடுக்குமுறையிலிருந்தும் விடுதலை பெறச் செய்ய வேண்டும். இது மார்க்சியம் காட்டும் அரசியல் வழி.

(இந்தியப் பொருளியல், முதலிய உலகப் பொருளியல் ஆகிய இரு நோக்கிலும் முற்றி வரும் பொருளியல் நெருக்கடி தொடர்பான ஒரு கோட்பாட்டுப் பகுப்பாய்வுக்கான கருதுகோள்களையே இந்தக் கட்டுரையில் என்னால் தர முடிந்தது. இவற்றுக்கான தரவுகளைத் திரட்டித் தரும் முயற்சியில் மார்க்சியப் பொருளியல் மாணவர்கள் ஈடுபட்டால் இம்முயற்சி நிறைவு பெறும்.)

உலகில், மனித வர்க்கத்தினருக்குள்ளிருக்கும் அடிமைத்தன்மை ஒழியவேண்டுமானால், பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் அழியவேண்டும். அது அழிந்த நிலையே சமத்துவம், சுதந்திரம் என்னும் முளை முளைக்கும் இடமாம்.

**- பெரியார்**



# கல்வி யார் பொறுப்பு?

*- முனைவர் ச.சீ. இராஜகோபாலன்*

*அரசியல் சட்டத்தில் தனியார் பள்ளிகள் என்ற சொல்லே காணப்படாது. சிறுபான்மையோர் நலனிற்காகக் கல்வி நிறுவனங் களை உருவாக்கி நடத்தும் உரிமை மட்டும் வழங்கப்பட்டது. கல்வி உரிமைச் சட்டம்தான் தனியார் பள்ளிகளைக் குறிப்பிடு கின்றது. தனியார் என்றால் சிறப்பு, அரசு என்றால் மட்டம் என்ற எண்ணத்தை மக்களிடம் திட்டமிட்டு விதைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஊழல் மிக்கது தனியார்தான் என்பது அறியப்பட வேண்டும். கோடிக்கணக்கில் வங்கிக் கடன்களைத் திருப்பித்தராது ஓடியவர்கள் தனியார்தான். எந்த தனியார் பள்ளியை விடவும் சிறந்த கல்வி அளிக்கும் கேந்திரிய மற்றும் நவோதயாப் பள்ளிகள் அரசால் நிர்வகிக்கப்படுபவைதான். உயர் கல்வியிலும் தலையாய நிறுவனங்கள் அரசால் நடத்தப்பெறுபவையே. இத்துனைச் சிறப்புமிக்கக் கல்வி நிறுவனங்களை நடத்தும் அரசு ஏன் தனது பொது மக்களுக்கான பள்ளிகளில் தரமான கல்வியை உறுதி செய்ய முடியவில்லை என்று வினாவுவதே அவற்றின் தரவீழ்ச்சிக்குக் காரணத்தை கண்டறிய உதவும். மிக ஏழ்மையிலுள்ள குழந்தைகள் நாடிவரும் தம்பள்ளிகளில் அக்கறை ஏன் காட்டவில்லை என்றால் அவர்களில் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட இனத்தவரைச் சார்ந்தவர் என்ற உண்மை வெளிப்படும். அவர்களது வாழ்வில் சிறிது ஒளியூட்டக் கூடியக் கல்வியை மறுப்பது அரசியல் சட்டத் திற்கு முரணாகும்.*

*ஈரோடு மாவட்ட ஆட்சியராக இருந்த கால்நடை மருத்துவம் பயின்ற அனந்தகுமார், இ.ஆ.ப. தம் மகளைத் தம் வீட்டருகில் இருந்த அரசுத் தொடக்கப் பள்ளியில் சேர்த்தது பெட்டிச் செய்தியாக ஊடகங்கள் வெளியிட்டன.*

*அக்குழந்தை சேர்ந்தவுடன் பள்ளி ஆய்வாளர் தொடர்ந்து அப்பள்ளியைக் கண்காணித்து வந்தார். ஆசிரியரில்லா நாட்களே இல்லை. அவர்கள் கற்பித்தலையும் மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நகராட்சித் துப்புரவாளர் ஒவ்வொரு நாளும் இருமுறை பள்ளிக்கு வந்து கழிப்பிடத்தைத் தூய்மைப் படுத்தினர். அனைத்துக் குழந்தைகளும் அமர்ந்து படிக்கத் தேவையான அமர்விடங்கள் வந்து சேர்ந்தன. அக்குழந்தையும் பள்ளி சத்துணவுத் திட்டத்தில் பங்கேற்றதால் ருசிமிக்க உணவு அனைத்துக் குழந்தை களும் பெற இயன்றது. ஆக அக்குழந்தையின் சேர்க்கை அனைத்துக் குழந்தைகளும் தூய்மையானச் சூழலில் நல்ல கல்வி பெற*



முடிந்தது. இதுதரும் பாடத்தினைப் புரிந்து கொண்டால் எல்லாஅரசுப் பள்ளிகளிலும் தரமான கல்வி மட்டுமல்லாது, கற்றல் சூழ லையும் மேம்படுத்த முடியும். ஏதிலார்க் கான பள்ளி என்ற பெயரை மாற்றுவதே அரசுப் பள்ளிகளின் தரத்தை உயர்த்தும்.

தனியார் பள்ளிகள் நிர்வாகியின் நேரடிப் பார்வையில் இயங்குகின்றன. பல பள்ளி களிலும் ஓய்வுபெற்ற அரசு உயர்நிலை அல்லது மேனிலைப் பள்ளித் தலைமை யாசிரியரோ கல்வி அதிகாரியோ கல்வி ஆலோசகர் என்ற பெயரில் முழுநேரப் பணியாளராக இருக்கின்றார்கள். தனியார் பள்ளிகளில் பல ஆசிரியர்களும் ஆசிரியர் கல்வியை முடித்தவரல்லர். ஆனால் அவர் களுக்கு வழிகாட்டுபவராக அனுபவமிக்க ஆலோசகர்கள் இருக்கின்றனர். ஆனால் அரசுப் பள்ளிகள் சென்னையிலிருந்து நிர்வகிக் கப்படுகின்றது. ஆசிரியர் நியமனம், மாறுதல் ஆகியவையே தலையாய செயல்களாயிற்று. வகுப்பறைக் கற்பித்தலில் கவனமில்லை. கல்வி உரிமைச் சட்டம் விதித்துள்ள பள்ளி மேலாண்மைக்குழு பல்லும், சொல்லும் இல்லாத அமைப்பு. ஆண்டிற்கு நான்கு, ஐந்து முறை கூடினாலே சிறப்பு. அக்குழு உறுப்பினர்கள் பெரும்பாலும் தலைமை யாசிரியர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படு பவர்கள்.

கோத்தாரிக் கல்விக் குழுவின் தலைசிறந்த பரிந்துரை அருகமைப் பொதுப்பள்ளி முறை யாகும். இதன்படி ஒவ்வொரு குழந்தையும் தன் வீட்டருகில் உள்ள பள்ளியில் சேர்ந்து படிக்கும் உரிமை பெற்றவர். அருகிலுள்ள குழந்தைகள் அனைவரையும் சேர்ப்பது பள்ளியின் கடமையுமாகும். குறிப்பிட்ட எல்லைக்குள் பள்ளியை நிறுவுவது அரசின் கடமையும் பொறுப்புமாகும். இதனை முழுமையாகச் செயல்படுத்தியிருந்தாலே ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி யினை அளித்திருக்க முடியும்.

தற்சமயம் இக்கொள்கையினின்று வெகு விலகிச் சென்றுவிட்டோம். வீட்டருகில் உள்ள பள்ளியைப் புறக்கணித்து தொலைவில் உள்ள தனியார் பள்ளிகளுக்குச் சிற்றுந்தில் பயணித்துக் கற்பது என்ற நிலை உருவாகி விட்டது. குழந்தையின் உடல் மற்றும் மனநலம் பற்றிக் கவலைப்படாது பெற்றோர் தனியார் பள்ளியை நாடுகின்றனர்.

இன்று நாட்டளவில் தனியார் மையம் என்பது அரசின் விருப்பச் செயலாக மாறி விட்டது. தொழில் நிறுவனங்கள் மட்டுமின்றி கல்வி நிறுவனங்களும் தனியாரால் பெரும் அளவில் தொடங்கப்பெற ஊக்கமளித்து உள்ளனர். உச்சநீதிமன்றமும் கல்வி சேவை அல்ல, அது ஒரு வணிகமே, ஒரு கல்வி நிறுவனத்தை தொடங்கி நிர்வகிக்கும் உரிமை ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உண்டு என்று அறிவிற்குப் பொருந்தாதத் தீர்ப்பினை வழங்கி மழலையர் கல்வி முதல் மருத்துவக் கல்வி ஈறாகத் தனியார் நிறுவனங்கள் பட்டி தொட்டியெல்லாம் தொடங்க வித்திட்டது மாபெரும் அநீதி.

அத்தீர்ப்பினைத் திரும்பப்பெற உச்சநீதி மன்றமே தாமாக முன்வரவேண்டும். அத்தீர்ப்பு உள்ளவரை கல்வியில் தனியாரது நுழைவைக் கட்டுப்படுத்தவோ, மறுக்கவோ இயலாது. பூனைக்கு மணிகட்டுவது யார்? அரசு உதவியோ, வரிச்சலுகையோ பெறும் மருத்துவமனை களில் 40 இடங்கள் இலவச மருத்துவ சேவைக்கு ஒதுக்கப்படவேண்டும் என்பது விதிமுறை. ஏறக்குறைய அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களும் வரிச்சலுகை பெற்றோ, பெறவேண்டுமென்றோ தொடங்கப்பட்டவை. அவையும் இலவசக்கல்வி அளிக்க இடங்கள் ஒதுக்கவேண்டுமென்று விதி இயற்ற அரசு தயங்குவதை மக்கள் தட்டிக்கேட்கவேண்டும்.

தரமானக் கல்வி அளிப்பது தம் கடமை யென்று அரசுகள் உணராத வரையில் அரசுப் பள்ளியா, தனியார் பள்ளியா என்ற விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.



# பாலியல் வன்முறைகளுக்குக் காரணம் ஆண்கள் அல்ல, சாதி மதப் பண்பாடுதான்!

*- ஜெயராணி*

**ஹை**தராபாத் மருத்துவர் பிரியாங்காவின் வன்புணர்வுக் கொலைக்கு குற்றம் சாட்டப்பட்ட நால்வரையும் என்கவுண்ட் டரில் கொன்றிருக்கிறது காவல்துறை. பெண்ணைக் கலாச்சாரத்தின் குறியீடாகக் கருதுவதால் வன்புணர்வை அக்கலாச்சாரத்திற்கு உண்டாக்கப்பட்ட களங்கமாக மட்டுமே இச்சமூகம் கருதுகிறது. ஆனால் வன்புணர்வு என்பது கலாச்சாரக் களங்கமல்ல, அதுவும் வன்முறைதான். என்கவுண்ட்டர் என்பது நீதியல்ல, அதுவும் வன்முறைதான். ஏதோவொரு வகையில் எல்லோருமே வன்முறை யின் ஆதரவாளர்களாக இருக்கும்போது, யாரோ ஒருசிலர் மட்டும் எப்படிக் குற்றவாளியாக முடியும்? ஒரு வன்முறைக்கு மற்றொரு வன்முறையையே தீர்வாக்கி, அப்படியான தீர்வுகளைக் கொண் டாடித்தீர்க்கும், நாம் எப்படி பண்பட்ட மனிதச் சமூகமாக இருக்க முடியும்?

கொலை என்பது குற்றமெனில் அதை யார் நிகழ்த்தினாலும் குற்றமே. வன்புணர்ச்சி கொடூரமெனில் அதை யார் யாருக்கு இழைத்தாலும் கொடூரமே என்ற சமநீதி சாத்தியமற்ற சமூகத்தில் நாம் வாழ்கிறோம். குற்றவாளி யார், பாதிக்கப்படுகிறவர் யார் என்பதைப் பொறுத்தே பொதுச் சமூகத்தின் ஆதரவும், தண்ட னையும் அமைகிறது. பிரியங்கா உயர் வகுப்பைச் சேர்ந்தவர். குற்றவாளிகள் லாரித் தொழிலாளர்கள், பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களே குற்றமிழைத்தவர்கள் என நீதிமன்றம் முடிவு செய்யும் முன்னரே சுட்டுத் தள்ளும் துணிச்சல் காவல் துறைக்கு அதனால்தான் வருகிறது. ஒருவேளை சர்வாதிகார நாட்டைப் போல இப்படித்தான் நீதி வழங்கப்படுமெனில் ஆதிக்க சாதியினரால் வன்புணர்வுக் கொலைக்கு ஆளாக்கப்பட்ட தலித் பெண்கள் ரோஜா, நந்தினி போன்றவர்களின் வன்புணர்வுக் கொலைக்கு அதே தண்டனையை காவல்துறை ஏன் வழங்கவில்லை? நாடெங்கும் நாள்தோறும் நடக்கும் பாலியல் வன்கொடுமை களைக் கண்டு கொந்தளித்துக் கிடக்கும் பொதுச் சமூகத்தின் கூட்டு மனசாட்சியை ஆற்றுப்படுத்த ஒடுக்கப்பட்ட மக்களை வைத்துக் கொடுக்கப்படும் நரபலி இது. அவ்வளவே! ஆனால் அதே கூட்டு மனசாட்சி நம்புவதைப் போல, பாலியல் குற்றங் களைக் கட்டுப்படுத்த இப்படியான நரபலிகள் துரும்பளவு கூட உதவாது.

பாலியல் வன்கொடுமை என்பது ஒரு பண்பாட்டுக் குற்றம். எந்த பண்பாட்டுக் குற்றத்தையும் தண்டனைகளால் மட்டும் தடுத்து நிறுத்திவிடமுடியாது. உங்களில் பாவம் செய்யாதவர்கள் கல்லெறியுங்கள் என்பதைப் போலச் சமூகத்தின் எல்லா



மட்டத்திலும் பரவி நிற்கும் குற்றம் இது. லாரி க்ளீனரானாலும் ஒரு பெண்ணைத் தாக்கி வன்புணர முடிகிறது; மத்திய அமைச்சரானாலும் பெண்ணை வீழ்த்தி சீரழிக்க முடிகிறது; பெற்ற தந்தையாலும் தன் மகளைச் சிதைத்துக் கொலை செய்ய முடிகிறது; சமூகப் போராளியும் நீதிபதியும் கூட அதே குற்றத்தில் ஈடுபட முடிகிறது.

படித்தவர்கள் படிக்காதவர்கள், ஏழைகள் பணக்காரர்கள், ஆட்சியாளர்கள் பொது மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், விவசாயிகள் கூலித் தொழிலாளர்கள், அப்பாக்கள், கணவர்கள், தாத்தக்கள், மாமாக்கள், மகன்கள், நண்பர்கள் என ஒட்டுமொத்த ஆண் சமூகமுமே எத்தருணத்திலும் வேண்டுமானாலும் வன்புணர்ச்சியில் ஈடுபடும் தகுதியுடைய தாகவே (பொட்டென்ஷியல் ரேப்பிஸ்ட்ஸ்) இருக்கிறது. பெண்கள் வாழத் தகுதியற்றது என பெயர் பெற்ற ஒரு நாடு குறித்து இப்படியானக் கருத்தை சொல்லத் தயங்க வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

கடந்த ஆண்டு, தாமஸ் ராய்ட்டர்ஸ் பவுண்டேஷன் என்ற அமைப்பு 193 நாடுகளில் செய்த ஆய்வுகளின் அடிப்படையில் பெண்கள் வாழத் தகுதியே இல்லாத நாடாக இந்தியாவிற்கு முதலிடம் வழங்கியது. போர் நடக்கும் சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் கூட நமக்குப் பின்னால்தான் இடம் பிடித்தன. அப்படியெனில் போர்ச் சூழலை விடவும் பெண்களுக்கெதிரான மோசமான ஒரு பண்பாட்டுச் சூழல் இங்கே நிலவுகிறது என்றே அர்த்தம். இந்தியாவின் பாலியல் வன்கொடுமைகள், கொடூரமான கலாச்சார பழக்கங்கள், பாலியல் அடிமைத்தனம், சுரண்டல் போன்ற வலுவானக் காரணங்களை இந்த ஆய்வு முன்வைத்தது. ஆனால் இந்திய அரசு அதை மறுத்து அறிக்கை விட்டதே தவிர, பிரச்னையை அங்கீகரித்து தீர்வைத் தேட முன்வரவில்லை. காரணம் இந்தியாவின் பண்பாடு என்பது இந்து மதப் பண்பாடு என்பதால். எந்த ஆணும் எந்தப் பெண்ணையும் பாலியல் பண்டமாகவே கருதுகிறான். பெண்ணை மையப்படுத்தியே பாலுறவு, பாலியல், பாலினம் குறித்து மிகவும் பிற்போக்கான கருத்தியல்கள் இங்கே வேரூன்றியிருக்கின்றன. இந்தியப் பொதுப் புத்தி இரண்டு காரணங்களுக்காக வன்புணர்ச்சியை அங்கீகரிக்கிறது. முதலாவது கட்டுப்படுத்த முடியாத பாலுணர்வு.

ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணைக் கண்டு கட்டுக்கடங்காத பாலியல் வெறி தோன்றிவிட்டால் அதற்கு அந்தப் பெண்ணே பொறுப்பு என்பதோடு பாலுணர்வுக்காக நிகழும் வன்புணர்ச்சிகளைப் புணர்ச்சியாகக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றே கருதுகிறது. அவள் ஏன் சிரித்தாள், பார்த்தாள், பேசினாள், அழகாக இருக்கிறாள், இவ்வாறு உடை அணிந்திருந்தாள் அல்லது ஆண் குடித்திருந்தான் இங்கே, பெண்ணின் விருப்பம் முக்கியமல்ல. ஆணுக்குப் பிடித்துவிட்டால் வன்புணர்ச்சிக் கலவி ஆகிவிடும். கிராமப் புறக் கட்டப் பஞ்சாயத்துகள் வன்புணர்ச்சியைப் புணர்ச்சியாகக் கருதிக் கெடுத்தவனையே பெருந்தன்மையோடு பெண்ணைக் கட்டிக் கொள்ளச் சொல்லி தீர்ப்பு சொல்வது, அதனால்தான்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர், பாதிக்கப்பட்ட பெண் தன்னைச் சீரழித்தவனோடு சமரசம் செய்து கொண்டு புதிய வாழ்க்கையைத் தொடங்க அறிவுறுத்தி வன்புணர்ந்தவனைப் பிணையில் விட்டதற்கு இந்த உளவியலே காரணம். பெற்றோரும் பெரும்பாலும் குற்றவாளி சொந்தச் சாதியை சேர்ந்தவனாக இருக்கும் போது வன்புணர்ந்தவனே திருமணம் முடித்து பெண்ணுக்கு வாழ்க்கை அளிக்க வேண்டும் என்றே நினைக்கின்றனர். ஆக, ஆணின் பாலியல் வெறிக்கான வன்புணர்ச்சியைச் சரியென இச்சமூகம் எல்லா நிலைகளிலும் அங்கீகரிக்கிறது என்பதே உண்மை.

இந்திய ஆண்கள் வன்புணர்ச்சியை ஆபாசப் படக் காட்சிகளில் வருவதைப் போன்ற வன்கலவியாகவே கற்பனை செய்து கொள்கின்றனர். கூட்டு வன்புணர்ச்சி என்பதை கூட்டுக் கலவி என்பதாகப் புரிந்து கொள்கின்றனர். வன்புணர்வு பற்றி ஆண்கள் அடிக்கும் கமெண்ட்டுகள், ஜோக்குகளில் இது சர்வ

சாதாரணமாக வெளிப்படும். ஆணின் பாலியல் ரீதியான எத்தகைய அத்து மீறலும் பெண்ணுக்கு இன்பத்தையே அளிக்கும், அதை ஆண்மை எனக் கருதி பெண் அனு பவிக்கவே செய்வாள் என்பதே சராசரி இந்திய ஆண்களின் மனநிலை. அரசாங்கம் வன்முறையற்ற வன்புணர்ச்சியைச் சட்டப் பூர்வமாக்க வேண்டும். ஆணின் பாலியல் கிளர்ச்சிகளைப் பெண்கள் நிராகரிக்கக் கூடாது. வன்புணர்ச்சிகளை எதிர்கொள்ள பெண்கள் ஆணுறையைக் கையிலெடுத்துச் செல்ல வேண்டும் என ஒரு திரைப்பட இயக்குனர் டேனியல் ஷ்ராவான் பரிந்துரைப் பது இக்கலாச்சாரத்தின் வெளிப்பாடுதான்.

தாக்குவது, கொலை செய்வது போன்ற செயல்கள் மட்டுமே வன்முறை. அதில்லாத வன்புணர்ச்சிகள் இருதரப்புக்குமே சுகத்தையே அளிக்கும் என்றே ஆண்கள் நம்புகின்றனர். வன்புணர்ச்சிகளுக்கான இரண்டாவது காரணம் கட்டவிழ்ந்த ஆதிக்க உணர்வு. முன் னதை விடவும் கொடூரமானது இது. பாலு ணர்விற்காக நிகழ்த்தப்படும் வன்புணர்ச்சி களில் அதை வெறும் உடலுறவு என்பதாகச் சுருக்கும் அதே கூட்டம் ஆதிக்கத்தை நிலை நாட்ட வன்புணர்ச்சியைக் கொடூர ஆயுத மாகப் பயன்படுத்துவதையும் ஆதரிக்கிறது. அதாவது உயர்சாதி எனில் இந்நாடு பெண் களுக்கு வழங்கியிருக்கும் இடத்தை நினை வூட்டவோ, தாழ்த்தப்பட்ட சாதி எனில் சாதி அமைப்பின் விதிமுறைகளை நிலைநாட்ட வோ ஆண் வன்புணர்ச்சியைக் கையிலெடுக்க லாம். உதாரணங்கள் வேண்டுமா? நிர்பயாவை வல்லுறவு செய்து கொன்றவர்கள் இத்தேசத் துக்கு விடுத்த எச்சரிக்கை, இரவு நேரத்தில் ஒரு பெண் தனியாக ஓர் ஆணுடன் வெளி யில் சுற்றக் கூடாது என்பதுவே.

கயர்லாஞ்சியில் தலித் பெண்களைக் கூட்டு வன்புணர்வு செய்து கொன்றவர்கள் விடுத்த எச்சரிக்கை, சாதி விதிமுறையை மீறி கல்வி கற்கக் கூடாது என்பதுவே. இந்திய ஆண்கள் பாலுணர்வை விடவும் ஆதிக்க உணர்வால்தான் பெரும்பாலும் பாலியல் குற்றங்களில் ஈடுபடுகின்றனர். காரணம் பெண்ணடிமைத்தனம் மற்றும் சாதியம் இரண்டும்தான் இந்துமதப் பண்பாட்டின் ஆணிவேர். பெண்கள்தான் அதன் பாதுகாவ லர்கள். பெண்கள் மீது இவ்வளவு கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டதற்கும் இவ்வளவு வன்முறைகள் நிகழ்த்தப்படுவதற்கும் காரணம் இந்து மதத்தின் சாதியைக காப்பாற்றும் சூழ்ச்சியே!

ஆதிக்க வெறிக்கான வன்புணர்ச்சிகளில் பிறப்புறுப்பில் மரக் கழிகளையும் இரும்புக் கம்பிகளையும் இறக்குவதைப் போன்ற விவரிக்க முடியா கொடூரங்களில் ஆண்கள் ஈடுபடுகின்றனர். நிர்பயாவும் கயர்லாஞ்சிப் பெண்களும் எப்படியெல்லாம் சிதைக்கப் பட்டார்கள் என்ற முழுமையானத் தகவல் களைத் தேடி பாருங்கள் அது வெறும் பாலியல் வெறியின் வெளிப்பாடு அல்ல. மனித வெறுப்பு வக்கிரத்தின் உச்சம்.

இப்படியான ஒரு பண்பாட்டுக் குற்றத்தைத் தனிநபர்க் குற்றமாகக் கருதிக் கொடூர தண்டனை களால் சரிசெய்துவிட முடியுமா, என்பதுதான் நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி. என்கவுண்ட்டரில் கொல்லக் கொல்ல இவர்கள் முளைத்து வரு வார்கள். ஏனெனில் இச்சமூகம் ஒவ்வொரு ஆணையும் அவ்வாறே உற்பத்தி செய்கிறது. நவீன உடைகளை அணிவது, தனியாக இருப்பது, இரவில் பயணிப்பது, சகஜமாகப் பழகுவது, சிரித்துப் பேசுவது, மது அருந்து வது, வேலைக்குப் போவது, காதலிப்பது, மனைவி யாக இருப்பது, எதிர்க்க முடியாமல் இருப் பது, ஒப்பனை செய்து கொள்வது என ஒரு பெண்ணின் எல்லாச் சூழல்களையும் ஆண் வன் புணர்ச்சிக்கான வாய்ப்பாகவே கருதும் வகை யிலேயே அவன் வளர்த்தெடுக்கப்படுகிறான்.

வன்புணர்ச்சி சார்ந்து இங்கே பல வகையான மூடநம்பிக்கைகள் நிலவுகின்றன. இச்சமூகம் ஆணுக்கான சாதகங்களை எப்படியெல்லாம் உருவாக்கி வைத்திருக்கிறது என்பதற்கு இவையே உதாரணம் : ஒரு பெண் ணின் சம்மதமில்லாமல் அவளை வன்புணர முடியாது; தன் மீதான வன்புணர்ச்சியை ஒரு பெண் நினைத்தால் தடுத்துக் கொள்ள முடியும்; கோபப்படும், துணிவான அல்லது சுதந்தரமான பெண்களை வன்புணர்ச்சியால்

தான் அடக்க முடியும்; வன்புணர்ச்சிக்குப் பின்னர் ஒரு பெண்ணின் ஆசை அடங்கி விடுகிறது; பெரும்பாலான பெண்கள் தாம் வன்புணரப்பட வேண்டுமென ரகசியமாக விரும்புகின்றனர்; வன்புணர்ச்சியின்போது ஒரு பெண் கடைசி நிமிடம் வரை போராட வேண்டும், இல்லையெனில் அதை அவள் விரும்பியதாக ஆகும்; புணர்ச்சி இன்பத்திற் காகவே ஆண்கள் வன்புணர்ச்சியில் ஈடுபடு கின்றனர்; வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப் பட்டவர் குற்றவுணர்ச்சி கொள்ளவேண்டும்; தான் பழகிய அல்லது ஏற்கனவே உடலுறவு வைத்துக் கொண்ட ஒருவரால் பெண் வன் புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டால் அது தவ றில்லை; கணவனின் கட்டாய உறவு வன் புணர்ச்சியல்ல; ஒரு பெண் வேண்டாம் என மறுப்பது, வேண்டும் என்றே பொருள்படும்; வன்புணர்ச்சி அந்நியர்களால் மட்டுமே நடக் கிறது. குடும்பத்தினர் அப்படியான செயல் களில் ஈடுபடுவதில்லை; வன்புணரப்பட்டது தெரிந்தால் பெண்ணின்/குடும்ப கவுரவம் பாதிக்கப்படும்.

இப்படியாக, வன்புணர்ச்சியை முழுவதுமாக நியாயப்படுத்தும் ஒரு சமூக அமைப்பை நாம் கொண்டிருக்கிறோம். இந்த இந்து மத சாதிய சமூக அமைப்பை சரி செய்யாமல் குற்றவாளிகளைக் கல்லால் அடித்துக் கொன்றாலும், மாறுகால் மாறுகை வாங்னாலும், என்கவுண்ட்டரில் கொன் றாலும் நம்மால் பாலியல் குற்றங்களைத் தடுக்கவே முடியாது. நிர்பயா, பிரியங்காவைப் போல யாரென்றே தெரியாதவர்களால் நிகழும் குற்றங்கள் மிகக் குறைவு. அதாவது 93 விழுக்காடு பாலியல் குற்றங்கள் குடும்ப உறுப்பினர், குடும்ப நண்பர்கள், முதலாளி, பக்கத்து வீட்டுக்காரர், பிரிந்து சென்ற கணவர் போன்ற தெரிந்தவர்களாலேயே நடக்கிறது. அவர்கள் எல்லோரையும் சுட்டுத் தள்ளி விடலாமா? குற்றவாளி என்பவன் நம்மில் ஒருவனாக, நம்மைப் போன்றவனாக இருக்கும் போது குறிப்பாகச் சொந்தக்கார னாகவும் சொந்தச் சாதிக்காரனாகவும் இருந்தால் நம்முடைய கோபம் மென்மையாகி விடுகிறது. குற்றவாளிகள் அந்நியர்களாகவும் எளியவர் களாகவும் இருந்து பாதிக்கப்படும் பெண் படித்தவராகவும் குறிப்பாக ஆதிக்க சாதியைச்சேர்ந்தவராகவும் ஆகும் போதுதான் வன்புணர்ச்சி ஒரு கொடூரமான செயலாகப் பொதுப் புத்திக்கு எட்டுகிறது. இவ்வகை யான குற்றங்கள்தான் பரபரப்பான செய்தி யாகவும் மாறுகின்றன.

மற்றபடி நாள்தோறும் நடக்கும் பாலியல் வன்கொடுமைகள் யாருக்குமே ஒரு பொருட் டல்ல. பெண்களுக்கெதிரான வன்முறை களைத் தடுத்து நிறுத்த வேண்டு மெனில் ஆணே உயர்ந்தவன் என்ற கருத்தாக்கத்தை நாம் உடைத்தாக வேண்டும். பெண் கருக் கொலை தொடங்கி பாலியல் வன்கொடு மைகள் வரை பெண்களுக்கு எதிரான அத்தனை வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டு வரத் தண்டனைகள் உதவாது. ஆனால் அதை எப்படிச் சாத்தியப்படுத்து வது? பெண்களுக்குச் சுதந்திரத்தைக் கற்பித்த வீடுகள் ஆண்களுக்குச் சமத்துவத்தைப் போதிக்கவில்லை என்பதே நம் தோல்வி. ஆண்களைப் பண்படுத்தும் வகையில் வீடு களை நாம் தயார்ப்படுத்தவில்லை. நமது சமத்துவ நடவடிக்கைகள் பெண்களோடும் தெருக்களோடும் நின்றுவிட்டன. உண்மையில் பண்படுத்தப்பட வேண்டியது ஆண்களும் ஆண் மையக் குடும்பங்களும்!

இங்கே சாமானியர்களுக்கென ஏதேனும் சமூகப் பங்களிப்பு இருக்குமெனில் அது நல்ல மனிதர்களைக் குடும்பங்கள் வழியாக உருவாக்கி நல்ல குடிமக்களாகச் சமூகத்திற்கு அளிப்பதே. ஆனால் கெடுவாய்ப்பாக ஆண் மகன் என்ற பெயரில் குற்றவாளிகளையே நமது வீடுகள் உற்பத்தி செய்கின்றன. கருக் கொலை, பாலியல் சீண்டல், குடும்ப வன் முறை, வரதட்சணைக் கொடுமை, மனைவி யை அடித்தல், ஏமாற்றுதல், பாலியல் வன் கொடுமை எனப் பெரும்பாலான இந்திய ஆண்கள் பெண்ணுக்கெதிரான ஏதேனும் ஒரு குற்றத்திலாவது அங்கமாக இருக்கின்றனர் என நிச்சயமாகச் சொல்ல முடியும். ஆண் களை அப்படியானவர்களாக குடும்பங்களே தயார் செய்கின்றன. இங்கே இவ்வளவு வன்புணர்ச்சிகள் அரங்கேறுகின்றன. எந்தப்

பெற்றோராவது தன்மகன்களிடம் அது குறித்து விவாதித்து இருப்பார்களா? அவ ஒழுக்கமா இருந்திருக்க மாட்டா. எதுக்கு அந்நேரத்துக்கு வெளியில போகணும்? என்று பாதிக்கப்பட்டப் பெண்கள் மேல் பழியைப் போட்டுப் பேசுகிறவர்களே இங்கே அதிகம். பாலியல் குற்றம் என்றதும் எல்லோரும் பாதிக்கப்பட்டப் பெண்ணாகவே தன்னை கற்பனை செய்து கொள்கின்றனர். நம் வீட்டுப் பெண்ணுக்கு நேர்ந்துவிட்டால்... என அச்சப் பட்டு கொடூர தண்டனைக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். நம் வீட்டுப் பையன் பாலியல் குற்றத்தில் ஈடுபட்டுவிட்டால்... என்ற சிந்தனை அவர்களுக்கு வருவதே இல்லை. கொல்லப்படுபவர்கள் நம் மகள்கள் எனில், கொலையைச் செய்ப வர்கள் நம் மகன்களாகத் தானே இருக்க முடியும்?

பெண்கள் மீது நடக்கும் சமூகப் பண் பாட்டுக் குற்றங்களைப் பெரும்பாலும் குடும்பங்களே நிகழ்த்துகின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆணாதிக்கக் குடும்ப அமைப்பில் பாலியல், பாலினம், பாலுறவு குறித்த அறிவெல்லாம் குழந்தை களுக்குக் குறிப்பாக ஆண் குழந்தைகளுக்கு எப்படிக் கிடைக்கும்? வழிவழியாகக் கடத்தப் படும் மூடநம்பிக்கைகள் மற்றும் ஆபாசப் படங்கள் மூலம் தவறான பாலியல் அறிவே இச்சமூகத்தில் கரைபுரண்டு ஓடுகிறது. செல் போன், லேப்டாப், பைக், கார் என பிள்ளை கள் எது கேட்டாலும் வாங்கித் தரும் பெற் றோர் குழந்தைகள் குற்றவாளியாகவோ பாதிக் கப்பட்டவராகவோ ஆகிவிடாமல் தடுக்கும் பாலியல் அறிவை வளர்த்தெடுப் பது பற்றி எவ்வித கவலையும் கொள்வ தில்லை.

இருபதாண்டுகளுக்கு முன்னர் பள்ளிப் பாடத்திட்டத்தில் பாலியல் கல்வியைச் சேர்க்க எடுக்கப்பட்ட தீவிரமான முன்னெடுப்புகளைத் தடுத்து நிறுத்தியதில் பெற்றோருக்குப் பெரும்பங்கு உண்டு. செக்ஸ் எப்படி வச்சுக்கணும்னு சொல்லித் தருவாங்களாம்" என்ற வதந்தியால் அந்த முயற்சியில் மண்ணைப் போட்டு மூடினார்கள். டேனியல் போன்றவர்களுக்கு பாலியல் அறிவு கிடைக்குமானால் கலவிக்கும் வன்புணர்ச்சிக்குமான வேறுபாடு புரிந்திருக்கும் என நிச்சயமாகச் சொல்லலாம். உண்மையில், தம் பிள்ளைகளின் பாதுகாப்பிலும் வன்முறை யற்ற எதிர்காலத் தலைமுறையிலும் அக்கறை கொண்ட பெற்றோர் பாலியல் கல்வியைப் போராடிப் பாடத் திட்டத்தில் சேர்த்திருக்க வேண்டும். செக்ஸ் எஜுகேஷன் என்ற வார்த் தையில் பிரச்சனை என்றால் லைப் எஜுகே ஷன் என மாற்றிக் கொள்ளலாம். பாலியல் அறிவு, உடல் பற்றின புரிதல், பாலின சமத்துவம், பாலுணர்வைக் கையாளுதல், ஆரோக்கிய மானப் பாலுறவு என நிஜமாகவே இவை யாவும் வாழ்க்கைக் கல்விதான்.

பெற்றோரால் இந்த விஷயங்களைக் குழந்தைகளிடம் பேச முடியாது. காரணம் மனத்தடை, அறியாமை மற்றும் போதாமை. ஆக, பள்ளிகளைத் தவிர நமக்கு வேறு களம் இல்லை. மனிதரைப் பண்படுத்தும் சரியான பருவமும் அதுவே. பள்ளியில் கல்வியாகக் கற்கும்போது குழந்தையின் மூளையை மட்டுமல்ல வீடுகளையும் அதன் வழியே சமூகத்தையும் அது பண்படுத்தும். பாலியல் கல்வியை அர்ப்பணிப்போடு செயல்படுத்திய பல நாடுகளில் அது நல்ல பலன்களை அளித்திருக்கிறது என்பதே இதற்கான ஆதாரம். பண்பாட்டுக் குற்றமாக வேரூன்றியிருக்கும் பாலியல் தாக்குதல்களையும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் தடுத்து நிறுத்த வேண்டுமானால் தொலைநோக்குப் பார்வை யோடு நாம் செயல்திட்டங்களை வகுக்க வேண்டும். அதில் முக்கியமானது, இனியும் தாமதப்படுத்தாமல் பாலியல் கல்வியைப் பாடத் திட்டத்தில் கட்டாயமாக்குவது. தெருவில் கிடக்கும் சமத்துவக் கருத்தியலை வீடுகளுக்குள் சேர்க்க அதுவொன்றுதான் வழி. பாலின சமத்துவம் பற்றி கற்றறிந்த தலைமுறையை உருவாக்கும்போது நாம் விரும்பும் பண்பாட்டு மாற்றம் பின்னர், தானே நடந்தேறும்.

(இந்து தமிழ் திசையில் வெளிவந்த, "பாலியல் வன்கொடுமைகளை வன்முறையால் தடுக்க முடியாது" என்ற கட்டுரையின் விரி வாக்கப்பட்ட வடிவம்.)



# ஒப்பந்தப் பண்ணையம் உய்விக்குமா?

- ந.ப. அன்பழகன்
*மாவட்டத் தலைவர்,*
*தமிழக விவசாயிகள் சங்கம், நமங்குணம்*

**உ**லகின் பல சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்களுக்கு அடிக்கல் நாட்டியவர்கள் விவசாயிகளே. மன்னராட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளில் எல்லாம் மக்களாட்சியை மலரச் செய்த பெருமை விவசாயிகளைத்தான் சாரும். முதன்முதலாகப் பிரான்சு நாட்டில் மன்னராட்சியை நீக்கி குடியரசை நிலை நிறுத்தியது பிரெஞ்சு புரட்சிதான் என்று கூறலாம். அது ஒரு அரசியல் புரட்சியாக இருந்தாலும் அடிப்படைக் காரணங்கள் விவசாயிகளின் மனக் குமுறல்கள்தான், பிரெஞ்சுப் புரட்சியாக வெடித்தது என்று உறுதியாகக் கூறலாம்.

நில மானிய முறை பிரான்சு நாட்டில் மிகக் கடுமையாக நிலவி இருந்தது. நிலங்களில் பாடுபடுவது விவசாயிகள் மட்டுமே. ஏழ்மையிலும் வறுமையிலும் விவசாயிகளுக்குத்தான் கடுமையான வரி விதிப்பு செய்யப்பட்டது. விவசாயிகள் துயரம் அதிகமாயிற்று.

அதேபோல் முன்பு 1888-இல் அமெரிக்கப் பெருநிலப் பிரபுக்கள் தம்முடைய நிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டு நகரத்திற்குச் சென்றுவிட்டனர். விடுதலையான நீக்ரோ அடிமைகள் நிலத்தை குத்தகைக்கு எடுத்துப் பயிரிட்டனர். இவர்களுக்கு வேண்டிய கடனை நகரத்திலிருக்கும் வியாபாரிகள் வழங்கினர். கடன் என்பது பணமாக தரப்படவில்லை. விவசாயத்திற்கு வேண்டிய இடுபொருட்கள், விதைகள், உரம் போன்றவற்றைத்தான் கடனாகத் தந்தனர். இதற்கு, தாம் பயிரிடப் போகும் பயிரை அடமானமாக விவசாயிகள் வைத்தனர்.

அடமானம் செய்ததினால் வியாபாரிகளுக்குப் பல வழிகளில் இலாபம். ஒன்று கடன் கொடுத்ததால் வட்டி வருகிறது. 2-ஆவதாக பொருள்களை வாங்குவதால் வியாபாரம் ஆகிறது. மூன்றாவதாகக் கடன் வழங்கிய வியாபாரிகளிடமே குறிப்பிட்ட விலைக்கு விற்க வேண்டும். இப்படி இருக்கும் நிலையில் பல சமயம் கடன் தீராமலேயே இருக்கும். கடன் கட்டியாக வேண்டும். மீண்டும் அடுத்த பயிரைப் பயிரிட வேண்டும். என்ன செய்வான் விவசாயி? மீண்டும் அடுத்த வியாபாரியிடம் அடுத்த பயிரை அடமானம் வைப்பான். இதனால் விவசாயிகள் கடுமையாகச் சுரண்டப்பட்டனர்.

பயிரிடப்படும் பயிர் பொய்த்து விட்டாலோ, விலைகள் தாறுமாறாக இறங்கிவிட்டாலோ, விவசாயிகள் உடல்நலக்குறை



வால் படுத்துவிட்டாலோ, இருக்கிற எல்லாப் பயிரையும் அறுவடை செய்து கொண்டு சென்று விடுவான் கடன் கொடுத்த வியாபாரி.

நிலத்தில் உழைத்த விவசாயி தோல்வி அடைந்ததால், அவனே நகரத்திற்குச் சென்று தொழிலாளியாக மாறும் போது வெற்றி யடைகிறான்; எப்படி? 1889-இல் அமெரிக்க விவசாயிகளின் நிலை இது. இந்நிலையில் உழவர்கள் புதிய சிந்தனையுடன் செயல்பட முயற்சித்து "ஃபார்ம் ஃபியூரா" என்ற பண்ணைக் கழகத்தை உருவாக்கி ஓரளவு வெற்றியும் பெற்றனர். அரசியல் சாராது பண்ணைக் கழகத்தை உருவாக்கி கூட்டுறவு முறையில் முன்னேற்றமடைந்தனர்.

இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் பல இன்னல்களுக்கு ஆளானார்கள். விவசாயிகளின் எழுச்சிதான் இந்தியா சுதந்தரம் அடைவதற்கு முக்கியக் காரணமாகும் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

சுதந்தரம் அடைந்த பின் விவசாயிகள் நிலை என்ன? இந்தியா சுதந்தரம் பெற்ற போது மக்கள் தொகை 35 கோடி. அப் போதே பஞ்சம், பட்டினியால் வாடினர் மக்கள். இன்று இந்திய மக்கள் தொகை 130 கோடி; இன்று உணவுப் பஞ்சமில்லை. ஆனால் உழவர்கள் நிலையென்ன? கடன் பிரச்சனையால் தற்கொலை அதிகம்.

அரசின் வேளாண் கொள்கையாலும், உற்பத்திப் பொருள்களுக்குக் கட்டுப்படியான விலை இல்லாததாலும், உழவர்கள் நிலங்களைப் பயிரிட்டு நட்டமடைந்து, துன்புறுவதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலைகள் அதிகரித்துள்ளது. தனக்குரிய குறைந்த அளவு நிலங்களை ஒப்பந்த அடிப்படையில் குறைந்த குத்தகைக்கு விட்டு பெரு நகரங்களை நோக்கிக் கூலிவேலைக்கு வருகின்றனர். இதனால், விவசாயம் செய்வதைவிட சற்றுக் கூடுதலான வருமானம் கிடைக்கிறதென நினைக்கின்றனர்.

சென்னை, கோவை, திருப்பூர், கேரளா போன்ற இடங்களுக்குக் குடும்பத்தில் ஒருவராவது சென்று பிழைப்பு நடத்துகின்றனர். குறைந்த அளவு நிலத்தை, மிகக் குறைந்த குத்தகைக்கு எடுத்தவர்கள் ஒன்றிரண்டு ஆண்டுகள் விவசாயம் செய்து பார்த்துவிட்டு, எனக்கு நிலம் வேண்டாமென வெளியூர் சென்று பிழைக்க நினைத்து வெளியேறி விடுகின்றனர்.

சிலர் நிலங்களை விற்றோ, போக்கியமாக பணம் பெற்று (நிலத்தைக் கொடுத்து பணம் வட்டியின்றி பெற்று) வெளிநாடுகளுக்குச் சென்று ஆடு, ஒட்டகம் போன்றவற்றை மேய்ப்பது அல்லது விவசாயம் செய்வது, பெண்கள் வீட்டு வேலைகள் செய்வது என வேலைகளைச் செய்து நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை விட சற்றுக் கூடுதலாகப் பெற்று தன் குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றனர். சிலரோ வெளிநாடு செல்வதற்காக ஆசைப்பட்டு இடைத்தரகர் களால் ஏமாற்றப்பட்டு வெளிநாடு செல்லாமல், இந்தியாவில் எங்கேயாவது, ஏதாவது ஒரு வேலை செய்து சிறிது பணம் குடும்பத்திற்கு அனுப்புகின்றனர். குடும்பத்தினர் தன் பிள்ளை வெளிநாட்டில் வேலை பார்க்கிறான் என எண்ணிக் கொண்டுள்ளனர்.

இப்படிப்பட்ட நிலையில் இந்திய விவசாயிகளைக் காக்கப் போகிறோம் என்று அரசியல்வாதிகளும் புளுகுரை கூறிக்கொண்டு, கார்ப்பரேட் கம்பெனியார்களுக்குச் சிறு குறு விவசாயிகள் நிலங்களைத் தாரைவார்க்க முயல்கின்றனர்.

ஆரம்பக் கட்டமாக இந்திய அரசு வெளிநாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு, ஒப்பந்த பண்ணையம் என்று "உற்பத்தி யாளர்கள் சங்கமம்" என்ற பெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதில் சிறு, குறு விவசாயிகளை உறுப்பினராக்கி அதன்

வழியாக அவர்களைக் கார்ப்பரேட் விவசாய கம்பெனிகளுக்குக் குத்தகை அல்லது கூலி விவசாயிகளாக மாற்றுவதற்கு, அரசு சாரா நிறுவனங்கள் பல இறக்கிவிடப்பட்டுள்ளது.

இதற்காக இதுவரை பத்திரிகைகள் செய்தி வாயிலாக அறிந்த வகையில் 40 சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல், நாகப் பட்டினம் மாவட்டங்களில் செயல்படுகிறது. இச்சங்கங்கள் முதல் கட்டமாக 30 இலட்சம் உறுப்பினர்களைச் சேர்க்க திட்டமிட்டு உள்ளதாகத் தெரிகிறது.

இதுபோன்ற செயல்களால் ஒப்பந்த பண்ணையம் வாழுமா? உய்விக்குமா? என்று எண்ணும் போது உய்விக்காது என்பதே எனது கருத்தாகும். இதுபோன்ற செயல் களால், விவசாயமும், விவசாயிகளும் அழித் தொழிக்கப் பட்டு கார்ப்பரேட் விவசாயக் கம்பெனிகள் மூலமே விவசாயம் நடை பெறும் சூது நடைபெற்றுக் கொண்டுள்ளது.

சிறு, குறு விவசாயிகள் அனைவரும் கார்ப்பரேட் நிறுவன வேளாண்மையில் குத்தகைதாரர்களாகவும், வேளாண் கூலிகளா கவும் கார்ப்பரேட் முதலாளிகளின் அடிமை களாகவும் ஆவதற்கான சூழ்நிலையைத்தான் இன்றைய இந்திய அரசு செய்து கொண் டுள்ளது.

இந்தத் சதித் திட்டத்தை அனைத்து பொதுநல உணர்வாளர்களும் விவசாயிகளும் ஒன்றிணைந்து முளையிலேயே கிள்ளி எரிந்து ஒப்பந்தப் பண்ணையம் முறையை ஒழிக்க வேண்டும். ஒப்பந்த பண்ணையம் உழவர்களை உய்விக்காது என்பது கல்லு போன்ற உண்மை.

**உலகுக்கு உணவளிக்கும் உழவர் பெருமக்களே!**

அரசு ஊழியர்கள், ஆலைத் தொழி லாளர்கள், ஆட்சியாளர்களாக உள்ள (IAS, IFS, IPS போன்ற உயர் பதவிகள்) அரசை வழிநடத்துபவர்கள், அனைத்து வியாபாரிகள் (அனைத்து பொருள்களையும் வணிகம் செய்யும் அனைத்து வியாபாரிகள்) அனைத்து அரசு, அரசு சாரா தொழிலாளர்கள் என அனைத்து தரப்பினரும் தங்களுக்கென சங்கம் அமைத்துப் போராடி உரிமைகளைப் பெறு கின்றனர்.

ஆனால், அனைவருக்கும் உணவளிக்கும் விவசாயிகள் ஒன்றுபடவிடாமல் அரசியல் வாதிகளும், அதிகார வர்க்கமும், சிறு, குறு விவசாயி என சலுகைகளைக் காட்டி இவர் களை ஒன்றுசேரவிடாமல் தடுத்து வருகின்றனர்.

**அன்பார்ந்த விவசாயிகளே!**

விவசாயம், விவசாயிகள் அழிந்துவிடும் இந்த நேரத்திலாவது, அரசியல், கட்சி, மதம், சாதி, பேதமின்றி உழுதொழில் செய்யும் விவசாயிகள் சிறு, குறு, பெரு விவசாயிகள் என்று எண்ணாமல் ஒன்றுபட்டு உனக்குரிய உரிமைக்கு நீ தான் தீர்வு காணப் போராட வேண்டும். உனக்காக யாரும் போராட மாட்டார்கள். நீ இல்லையேல் இவ்வுலகம் இல்லை என்பதை எண்ணி, உன்னைக் காப்பாற்றிக் கொள்ள விவசாயிகள் அனை வரும் ஒன்றுபடுங்கள் என்று கரம் கூப்பி கேட்டுக் கொள்கிறேன்.

இதை விடுத்து ஒப்பந்தப் பண்ணைய முறையால் உழவுத் தொழில் உய்க்காது. நீயும் உய்க்க மாட்டாய்.

பூமி பிளக்காமல் விதை முளைப்பதில்லை;
போராடாமல் உரிமை கிடைப்பதில்லை.

நமது முயற்சிக்கும் உழைப்புக்கும் பலவித எதிர்ப்புகளும், பழிப்புகளும் பொய்க் கற்பனைகளும், பழிகளும் நமது சுயமரியாதையின் எதிரிகளால் (பார்ப்பனர்களாலும், அவர்களின் கூலிகளாலும்) ஏற்படும். அதாவது நம்மிலேயே பலர் 'தேசாபிமானம்' என்னும் போர்வையைப் போர்த்துக் கொண்டு நமது இயக்கத்துக்குக் கேடு சூழ எதிரிகளுக்கு அனுகூலமாக இருப்பார்கள். இவர்களையெல்லாம் நாம் பொருட் படுத்தக்கூடாது.

**– பெரியார் ஈ.வெ.ரா.**



# பா.ச.க. ஆட்சியில் பறிக்கப்படும் மாநில உரிமைகள்

- பேராசிரியர் மு. நாகநாதன்

**உ**லகின் மக்கள் தொகையில் 40 விழுக்காட்டிற்கு மேல் உள்ள நாடுகளில் கூட்டாட்சி இயல் பின்பற்றப்படுகிறது. மாநிலங்களின் உரிமைகள் மக்களின் உரிமைகளைச் சார்ந்ததாகும். மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டால் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதாகவே பொருள் கொள்ள வேண்டும். கூட்டாட்சி இயலும் சனநாயகமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். மக்களுடைய உரிமைகளும் மாநிலங்களின் உரிமைகளும் சேர்ந்ததே உண்மையான சனநாயகமாகும்.

உலகின் பல நாடுகளின் புவி அரசியல் கூறுகளை ஆய்வு செய்தால் மாறுபட்டத் தன்மைகளில்தான் மக்களாட்சியும் கூட்டாட்சி இயலும் வளர்ந்து வருகின்றன. உலகின் பல நாடுகளில் காணப்படுகிற அரசியல் சமூக பொருளாதார இன மொழி பண்பாட்டு வேறுபாடுகள் நிதித் தொடர்பான அமைப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் கூட்டாட்சி இயல் செம்மையுறுகிறது.

தொன்மைக் கூட்டாட்சி இயலைப் (Classical Federalism) பின்பற்றுகிற அமெரிக்கா ஆஸ்திரேலியா சுவிட்சர்லாந்து கனடா ஆகிய நாடுகளில் மாநிலங்களின் உரிமைகள்தான் அரசமைப்புச் சட்டத்தின் அடித்தளமாக (Basic Structure) அமைகின்றன. சில முதன்மையான காரணங்களுக்காக அரசமைப்புச் சட்டத்திருத்தங்களை மேற்கூறிய தொன்மைக் கூட்டாட்சி இயல் நாடுகளில் மேற்கொள்ளப்பட்டாலும் ஒருமுறை கூட மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கின்ற அரசமைப்புச் சட்டத்திருத்தம் நிறைவேற்றப் பட்டதே இல்லை.

ஆனால் இந்தியாவில் இந்த அடிப்படைக் கூறு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு நினைத்த நேரத்தில் நாடாளுமன்றம் கூடுகின்ற போது மாநில உரிமைகள் தொடர்ந்து 70 ஆண்டுகளாகச் சிதைக்கப்பட்டுள்ளன. இத்தகைய தன்மைகள் பொருந்திய இந்தியாவின் அரசமைப்புச் சட்டம் முழுவதுமாக ஒற்றை ஆட்சிச் சட்டமாக மாறிவிட்டது.

ஒன்றிய அரசு முழு சர்வாதிகார அரசாக மாறியதற்கு காங்கிரசும் பா.ச.க.வும் செய்த செய்து வருகிற மக்களாட்சி விரோத கூட்டாட்சி இயலுக்கு எதிரான தொடர் சட்டத்திருத்தங்



களும் பின்பற்றப்படுகிற நிர்வாக நடவடிக் கைகளும் என்பதை இன்று நாடு உணரத் தொடங்கியுள்ளது. இந்தியா ஒரு நாடன்று இது ஒரு துணைக்கண்டம். மேற்குறிப்பட்ட தொன்மைக் கூட்டாட்சி நாடுகளில் காண முடியாத வேற்றுமைக் கூறுகள் இத்துணைக் கண்டத்தில்தான் பெருமளவில் உள்ளன என்பதை இன்றைய அரசியல் நமக்கு உறுதி செய்கிறது.

கடந்த 70 ஆண்டுகளாக மொழி, இனம், பண்பாடு, சமயம், உணவுப் பழக்கம், உடை போன்ற அனைத்துக் கூறுகளிலும் வேற்றுமைகள்தான் விரிவடைந்து வருகின்றன. பிரித்தானியாவின் ஆட்சியிலேயே இத்தகைய வேற்றுமைகளை அறிந்துதான் இங்கிலாந்து பேரரசு மாகாணங்களுக்குச் சில அதிகாரங் களைப் பிரித்து அளிக்கின்ற 1919ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தை அளித்தது.

இச்சட்டம் அடிமைச் சட்டம் என்றும் மாநிலங்களின் உரிமைகளைப் புறந்தள்ளுகிற சட்டம் என்றும் காங்கிரசு இயக்கத் தலைவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையானக் கூட்டாட்சி இயலைத் தழுவிய மாநிலங்களுக்கு உரிமைகள் அளிக்கின்ற சட்டம் வேண்டும் என்று உரத்தக் குரலிட்டனர்.

இந்த பிரித்தானிய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை ஏற்று காங்கிரசு மாகாணங்களில் ஆட்சியமைக்கக் கூடாது என வாதிட்டனர். இருப்பினும் காங்கிரசு இயக்கத்தில் அன்றே பெருகி வந்த பதவிப் பற்றாளர்கள் மாகாணத் தேர்தலில் போட்டியிட வேண்டும் ஆட்சி அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டனர். இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் வழியாகத்தான் சென்னை மாகாணத்தில் 1921இல் நீதிக்கட்சி ஆட்சி அமைந்தது.

குறைந்த மாநில அதிகாரங்களை வைத்துக் கொண்டே நீதிக்கட்சி ஆட்சியில் இடஒதுக்கீடு உட்பட பல முற்போக்கான நலத்திட்டங்கள் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப் பட்டன. பா.ச.க. ஆட்சியில் 2016-ஆம் ஆண்டில் நீட்தேர்வின் வழியாகப் பெரும் பாலான ஏழை நடுத்தரப் பிரிவினரின் கல்வி உரிமைகள் ஒன்றிய அரசால் ஒரே ஒரு சட்டத் திருத்தத்தால் எடுத்துக்கொள்ளப்படு கின்றன. இந்த ஒரு சான்றே மாநிலங்களின் உரிமைகளைப் பிரித்தானிய ஆட்சி மதித்த அளவிற்குகூட இன்றைய தில்லி பா.ச.க. ஏகாதிபத்திய ஆட்சி மதிக்கவில்லை என் பதை மெய்ப்பிக்கிறது.

1935-ஆம் ஆண்டில் பிரித்தானிய ஆட்சி யில் இரண்டாவது இந்திய அரசமைப்புச் சட்டம் உருவானது. இந்தச் சட்டத்தையும் நேரு உட்பட பல காங்கிரசுத் தலைவர்கள் எதிர்த்தார்கள். ஆனால் பல மாகாணங்களில் காங்கிரசு ஆட்சியமைத்தது. 1937-ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் இராஜாஜி தலைமையில் காங்கிரசு ஆட்சியமைத்தது. 1935க்கும் 1945க்கும் இடையில் நடைபெற்ற உலக அளவிலான அரசியல் மாறுதல்களும் இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட உடன்படிக்கைகளும் மூன்றாவது உலக நாடுகள் பல விடுதலை பெற வழிவகுத்தன.

1945-ஆம் ஆண்டு அமைச்சரவைத் தூதுக் குழு (Cabinet Mission) மாநிலங்களுக்குப் போதிய உரிமைகளை அளிக்கும் திட்டத்தைப் பிரித்தானியப் பேரரசுக்குப் பரிந்துரைத்தது. ஆனால் இந்தியா அப்பரிந்துரையை ஏற்காமல் பாகிஸ்தான் பிரிவினையைக் காரணம் காட்டி ஒன்றிய அரசிற்குப் பெரும்பான்மை யான அதிகாரங்களைக் குவித்து அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது.

1947-இல் இந்தியா விடுதலை பெற்றப் பின் நடைபெற்ற இந்து-முசுலிம் மோதல்கள் காரணமாக ஜின்னா தலைமையில் பாகிஸ்தான் தனி நாடாக அமைந்தது. 1948-இல் இலங்கையும் விடுதலை பெற்றது. இந்த மூன்று நாடுகளின் அரசமைப்புச் சட்டக் கூறுகள் பிரித்தானிய ஏகாதிபத்தியம் கொண்டு வந்த 1935ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்ட விதிகளின் பெயர் மாற்றமாகவே அமைந்தன.

*1999இல் கனடாவில் நடைபெற்ற உலகக் கூட்டாட்சி இயல் மாநாட்டில் இக்கட்டுரையாளர் பங்கு பெற்ற போது பாகிஸ்தான் நாட்டில் நவாஷ்ஷெரிப் பதவி நீக்கம் செய்யப்பட்டு இராணுவ தளபதி முஷ்ரப் ஆட்சி அமைத்தார். பாகிஸ்தான் நாட்டில் இருந்து கூட்டாட்சி இயல் மாநாட்டில் பங்கேற்ற கல்வியாளர்கள் என்னிடம் உரையாடிய போது கூட்டாட்சி இயல் கூறுகள் அடிப்படைக் கூறுகளாக பாகிஸ்தான் அரசமைப்புச் சட்டத்தில் அமை யாததால் இது போன்று இராணுவ ஆட்சிக்கு வழி வகுத்துவிட்டது என்றனர். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் நடைமுறை யில் உள்ள அரசமைப்புச் சட்டங்களின் விதிகள் பெரும் பாலும் 1935ஆம் ஆண்டு பிரித்தானிய அரசு அளித்த அரசமைப்புச் சட்டத்தின் பிரதி பலிப்பாகவே உள்ளன என்றும் இந்தக் கல்வியாளர்கள் கூறினர்.*

*புதுதில்லியில் உள்ள ஆட்சியாளர்கள் நினைத்தால் மாநிலங்களை நினைத்த நேரத்தில் கலைத்துவிட முடியும் கவிழ்த்துவிட முடியும் என்பதே இதற்குத் தக்கச் சான்றாகும். பாகிஸ்தான் ஜின்னா காலத்திற்குப் பிறகு ஜனநாயகக் கூறுகள் சிதைந்து இராணுவத்தின் கைகளில் ஆட்சி அதிகாரம் சென்றுவிட்டது. இதற்கு அமெரிக்காவும் ஒரு காரணமாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டனர். சிந்து மாகாண மக்கள் தனி மாநில உரிமையைக் கோரித் தொடர்ந்து பாகிஸ்தானில் போராட்டம் நடத்தி வருகின்றனர். அது ஊடகங்களில் அதிகமாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டனர்.*

*இந்தியாவில் பல்வேறு மத மொழி இனங்கள் மாநிலங்களில் செல்வாக்கோடு இருப்பதனால் பல மாநிலக் கட்சிகள் மாநி லங்களில் ஆட்சியமைப்பதனாலும் ஒன்றிய அரசில் தேசியக் கட்சிகள் தனித்து ஆட்சிய மைக்கும் முழுச் செல்வாக்கினை இழந்து வருகின்ற நிலை இருப்பினும் நடைமுறை யில் இந்திய அரசமைப்புச் சட்டம் ஒற்றை ஆட்சிச் சட்டமாகவே மாற்றப்பட்டு விட்டது.*

*2014க்குப் பிறகு ஒன்றிய அரசில் பிரதமர் மோடி தலைமையில் பா.ச.க. அரசு அமைந்த வுடன் திட்டமிட்டு மாநில உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. சர்வாதிகார அரசியலை முன்னிலைப்படுத்துகிற இந்து ராஷ்டிரா என்ற ஆர்.எஸ்.எஸின் செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பா.ச.க ஆட்சி முயன்று வருகின்றது. இதன டிப்படையில்தான் அரசமைப்புச் சட்டம் வழங்கிய தன்னாட்சி அமைப்புகளின் அதி காரங்கள் வெட்டப் படுகின்றன.*

*இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 324ஆவது பிரிவின்படி இயங்கி வருகின்ற தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் முழு அளவிற்கு பா.ச.கட்சியின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்படுகின்றன. 2017ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாநிலங்களின் சட்டமன்றத் தேர்தலிலேயே தேர்தல் ஆணையத்தின் ஒரு சார்பு நிலையை வெளிப்படையாகவே காணமுடிகிறது. சான்றாக 2017-ஆம் ஆண்டு இமாச்சல்பிரதேச சட்டமன்றத் தேர்தல் அட்டவணையை முதலில் தேர்தல் ஆணையம் அறிவித்தது.*

*ஆனால் அதே நேரத்தில் அந்த மாநிலத் தேர்தலுடன் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலை இருந்த போது, குசராத் சட்டமன்றத் தேர்தல் அட்ட வணையை அறிவிக்காமல் பிரதமர் மோடி குசராத் மாநிலத்திற்குச் சென்று பல சிறப்பு சலுகைகளை அறிவிப்பதற்குக் கால அவகாசம் அளித்தது. இது கடும் விமர்சனத் திற்கு உள்ளாயிற்று. காரணம் 2017ஆம் ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பஞ்சாப் மாநிலத்தில் காங்கிரசு ஆட்சியைக் கைப்பற்றியது. சரக்கு மற்றும் சேவை வரியால் பல மாநிலங்களின் பொருளாதாரம் பாதிப்புக்குள்ளாயின. பல தொழில்கள் நலிவடைந்தன. குசராத்திலும்*

சரக்கு மற்றும் சேவை வரியின் பாதிப்பு தேர்தல் முடிவுகள் பா.ச.க.விற்கு எதிராகப் போய்விடும் என்று எண்ணிய பிரதமர் மோடி அவசர அவசரமாக சரக்கு மற்றும் சேவை வரிகளில் பல சலுகைகளை அளித் தார். இதற்குப் பின்புதான் தேர்தல் ஆணையம் குசராத் மாநில சட்டமன்றத் தேர்தல் அட்ட வணையை அறிவித்தது.

2019-இல் பா.ச.க.வின் கூட்டணியில் இடம் பெற்ற சிக்கிம் மாநிலத்தில் முன்னாள் அமைச்சர் பிரேம் சிங் தமாங் ஊழல் குற்றச் சாட்டில் ஓர் ஆண்டு தண்டனை 2017இல் பெற்றார். மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் படி குற்றவியல் தண்டனை பெற்றவர்கள் 6 ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாது எனத் திருத்தப்பட்ட சட்ட விதி உள்ளது. தண்டனை பெற்ற நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் உடனடியாகப் பதவி களில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவர் என்ற சட்டம் நாடாளுமன்ற இரு அவை களிலும் பிரதமர் மன்மோகன்சிங் ஆட்சியின் போது நிறைவேறியது. அதன்படி லாலு பிரசாத் யாதவும் திமுகவின் நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக இருந்த செல்வ கணபதியும் இச்சட்டத்தின்படி தங்களது பதவிகளை இழந்தனர்.

ஆனால் இன்றோ 6 ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாத சூழலில் இருந்த தமாங் பா.ச.க. கூட்டணி அமைந்த வுடன் 6 ஆண்டுகள் போட்டியிட முடியாது என்பதை ஓர் ஆண்டாக தமாங்கின் தண்ட னையைத் தேர்தல் ஆணையத்தின் தலைமை ஆணையர் சுனில் அரோரா தேர்தல் ஆணை யர்களான அசோக் லவாசா சுசில் சந்தரா ஆகியோர் இணைந்து குறைத்தனர். தேர்தல் ஆணையர்கள் இதற்கான காரணங்களைப் பின்னாளில் பதிவு செய்வோம் என்றும் குறிப் பிட்டனர். இத்தகைய மோசமான ஊழலை ஊக்குவிக்கின்ற மோசடியைச் செய்துவிட்டு எந்த சனநாயக நாட்டிலும் தன்னாட்சிப் பெற்ற ஒரு தேர்தல் ஆணையம் பதவியில் இருக்க முடியாது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 280வது விதிப்படி ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை குடியரசுத் தலைவர் நிதிக்குழுவை (Finance Commission) நியமிக்கிறார். இந்த நிதிக்குழு எல்லா மாநிலங்களுக்கும் சென்று மாநில முதல்வர்களைச் சந்தித்து ஐந்தாண்டுகளுக்கு மாநிலத்திற்குத் தேவையான நிதிப்பகிர்வை ஒன்றிய அரசின் நிதித் தொகுப்பிலிருந்து செய்கிறது. இதுவரை 14 நிதிக்குழுக்கள் குடியரசுத் தலைவர்களால் நியமிக்கப்பட்டு பரிந்துரைகளை அளித்து உள்ளன.

2017ஆம் ஆண்டு முன்னாள் ஒன்றிய அரசின் நிதிச்செயலராகப் பணியாற்றிய என்.கே. சிங் தலைமையில் 15ஆவது நிதிக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஏழாவது நிதிக்குழு வரை அதன் தலைவர்கள் முன்னாள் முதலமைச்சர்களாகவோ அல்லது நீதிபதி களாகவோ நியமனம் செய்யப்பட்டனர். பிறகு இந்த நிலை மாறி ஒன்றிய அரசிற்கு வேண்டிய நிதி இயல் அறிஞர்கள் நியமிக்கப்பட்டார் கள். தற்போது ஒன்றிய அரசில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஓர் உயர் அலுவலர் நியமிக்கப் பட்டது பல நடுநிலையாளர்களுக்கு அதிர்ச்சி யைத் தந்துள்ளது.

2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை அடிப்படையில் மாநிலங்களுக்கு நிதிப் பகிர்வு மேற்கொள்ளப்படும் என நிதிக் குழு அறிவித்துள்ளது. ஏற்கெனவே குறைந்த நிதிப் பகிர்வை ஒன்றிய அரசிடமிருந்து பெற்று வரும் தென்னக மாநிலங்கள் 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் நிதிப் பகிர்வு செய்யப்பட்டால் மொத்த நிதிப் பகிர்வில் 70 முதல் 80 விழுக்காடு வட மாநி லங்களுக்குச் சென்றுவிடும். சான்றாக தமிழ்நாடு சென்ற 14 நிதிக்குழுவில் ஒட்டுமொத்த நிதிப்பகிர்வில் 3.8 விழுக்காடு கூட பெற வில்லை. தென்னக மாநிலங்களும் மற்றும் மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் ஆகிய இந்தி

பேசாத மாநிலங்கள்தான் ஒன்றிய அரசின் வரி வருவாய்க்கு 70 விழுக்காட்டிற்கு மேல் பங்களிப்பு செய்து வருகின்றன.

ஆனால் இந்த மாநிலங்கள் பெற்றதோ அல்லது பெறப் போவதோ ஒட்டு மொத்த நிதிப் பகிர்வில் 10 விழுக்காடு அளவிற்குக் கூடப் பெறவில்லை. பெறப் போவதில்லை. ஒன்றிய அரசின் ஓய்வு பெற்ற அலுவலரின் வழியாக நிதிக் குழுவின் தன்னாட்சி அதிகாரங் கள் புதைக்குழிக்குள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தியாவின் ரிசர்வ் வங்கி தலைமை வங்கியாகச் செயல்பட்டு வருகிறது. பிரித் தானிய ஆட்சிக்காலத்தில் 1935ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1949இல் ரிசர்வ் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டது. ரிசர்வ் வங்கி யின் சட்டவிதிகளின்படி இது முழுமை யான தன்னாட்சி அமைப்பாக உருவாக்கப்பட்டது. பணவியல் பொருளாதாரத்தைப் பொருத்த வரை இந்திய ரிசர்வ் வங்கிதான் மேலாண்மை செய்ய முழு அதிகாரம் பெற்ற அமைப்பாகும்.

ஏற்கெனவே இந்திய ரிசர்வ் வங்கியின் தன்னாட்சி அதிகாரங்களைக் காங்கிரசு ஒன்றிய அரசு குறைத்து வருகிறது என்ற பல குற்றச்சாட்டுகள் இருந்தன. ஆனால் 2014க்குப் பிறகு அமைந்த மோடி அரசு இந்திய ரிசர்வ் வங்கியினுடைய தன்னாட்சி அதிகாரத்தைத் தகர்த்துவிட்டது எனலாம். காங்கிரசு ஆட்சிக் காலத்தில் ரிசர்வ் வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்ட ரகுராம் ராஜன் நடுநிலை யோடு செயல்பட்டார். ஒன்றிய அரசின் குறுக்கீடுகளை நிராகரித்தார். 2014இல் ஆட்சிக்கு வந்த மோடி அரசு ரகுராம் ராஜனைப் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பே நீக்குவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டது. இதற்கு முதன்மையான காரணம் ஏறக்குறைய 7 இலட்சம் கோடியைக் கடனாகப் பெற்றுத் திரும்பச் செலுத்தாத பெருமுதலாளிகள் மீது கடும் நடவடிக்கை களை ரிசர்வ் வங்கியின் சார்பாக ரகுராம் ராஜன் மேற்கொண்டார்.

பணமதிப்பிழப்பு நடவடிக்கை இந்தியப் பொருளாதாரத்தில் பெரும் குழப்பத்தையும் சரிவையும் ஏற்படுத்தும் என்று எச்சரித்தார். ரகுராம் ராஜனை நீக்கிவிட்டு குஜராத் முதலாளிகளான அம்பானிகளுக்கு நெருங்கிய உறவினராக உர்ஜித் பட்டேல் என்பவரை ரிசர்வ் வங்கியின் ஆளுநராக நியமித்தனர். இதற்குப் பின்பு தான் 2016 நவம்பர் 8 அன்று ரூ.500, ரூ.1000 பணத்தாள்கள் செல்லாது என்று பிரதமர் மோடி அறிவித்தார். இதனால் இந்தியப் பொருளாதாரமே பெரும் பின்னடைவைச் சந்தித்தது. இந்த ஏதேச்சதிகார முடிவால் பல மாநிலங்களில் பொருளாதாரம் பாதிப்புக்குள்ளானது.

மாநில அரசுகளுக்கும் ஒன்றிய அரசிற்கும் பணவியல் துறையில் நடுநிலையாக இயங்கும் என்ற நம்பிக்கையில்தான் இந்திய ரிசர்வ் வங்கித் தன்னாட்சி அமைப்பாக உருவாக்கப் பட்டது. பல மாநிலங்கள் நிதிப்பற்றாக்குறைக் காலத்தில் ரிசர்வ் வங்கியிடமிருந்து நேரடியாகக் கடன்களைப் பெற்றுத் திருப்பிச் செலுத்தி உள்ளன. பொருளாதாரத்தைச் சீர்குலைக்கச் செய்த இந்தப் பணமதிப்பிழப்பு நடவடிக்கை யின் தொடர்ச்சியாக இந்த 2019 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து 1.76 இலட்சம் கோடியை ஒன்றிய அரசுக் கடனாகப் பெற்றுள்ளது.

இதுபோன்று மாநில அரசுகள் இவ்வளவு பெரிய தொகையைக் கடனாகப் பெற முடியாது; பெறவே முடியாது. அமெரிக்க நாட்டில் ரிசர்வ் வங்கியைக் கூட்டாட்சி ரிசர்வ் வங்கி (Federal Reserve Bank) என்று அழைப்பார்கள். ஆனால் இந்தியாவில் ஒன்றிய அரசின் அதிகாரம் வங்கித் துறையிலும் உச்ச நிலையைத் தொட்டுவிட்டது. உர்ஜித் பட்டேல் ஒரு குசராத்தியாக இருந்தாலும் இந்த நடவடிக்கையால் வங்கித்துறையின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிடுவார்கள் என்ற காரணத்தினால் இந்தக் கடனை ஒன்றிய அரசிற்கு அளிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பதவி விலகினார்.

பொருளாதாரம் மற்றும் வங்கியியல் துறையில் நிபுணர்களாக இருப்பவர்கள்தான் பொதுவாக ரிசர்வ் வங்கியின் ஆளுநர்களாக நியமிக்கப்படும் மரபாக இருந்தது. இதை தகர்த்து வரலாறு பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற சக்திகாந்த தாசை ஆளுநராக பா.ச.க. அரசு நியமித்தது. இவர் ஒன்றிய அரசின் வருவாய்ச் செயலராக இருந்த போது தான் பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு ஆதரவாக பா.ச.க. ஊடக செய்தித் தொடர் பாளர் போன்று செயல்பட்டார். எனவே தான் இவரை இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக நியமனம் செய்தனர். பதவியேற்ற வுடன் ஒன்றிய அரசு கேட்ட 1 இலட்சத்து 40 ஆயிரம் கோடியைக் கொடுத்துவிட்டார்.

ஒன்றிய அரசின் மாநில அரசுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் நடு நிலையான ஓர் அமைப்பை முற்றிலும் சிதைத்து வருகிறது ஒன்றிய அரசு. பொரு ளாதாரத்தை நிலைநிறுத்தும் மேலாண்மை செய்யும் தன்னாட்சி நிறுவனங்களைச் சிதைத்து வருவதால் மாநில மக்களின் உரிமைகள் நாளும் பறிபோய்க்கொண்டே இருக்கின்றன. மிகவும் மெல்லியக் கோட்டிற்கு இடையேதான் பொருளாதாரமும் அரசியலும் மேலாண்மை செய்யப்படுகின்றன. அரசியலில் அமைதித் தன்மையின் கூறுகள் ஒரு மாநிலத் தில் சிதைக்கப்பட்டாலும் அதன் எதிர்மறை விளைவுகள் எல்லா மாநிலங்களிலும் எதி ரொலிக்கும். இந்த மென்மையான அரசியல் இழையைக் கூட மோடி அரசு அறுத்து விட்டது.

காஷ்மீர் மாநிலத்தில் 370 சட்டப் பிரிவைத் தன்னிச்சையாக நீக்க முடிவு எடுத்தது. இந்திய அரசமைப்புச் சட்டம் உருவான போது 370வது பிரிவை நீக்க வேண்டுமென்றால் காஷ்மீர் மாநிலத்தில் சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று அரசமைப்புச் சட்டவிதிகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. மாநிலச் சட்டமன்றம் இயங்காத நேரத்தில் ஆளுநர் ஆட்சி நடக்கின்ற நேரத்தில் இந்தச் சட்டப்பிரிவை நீக்கியது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானதாகும்.

இதே நிலையில்தான் எதிர்கட்சிகளின் ஆட்சிகளை மாநிலங்களில் செயல்பட விடாமல் அக்கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி கட்சித் தாவலை ஊக்குவித்து மாநில அரசுகளின் நிலைத்தத் தன்மையைச் சீர்குலைத்து வருகிறது. நாட்டின் பொருளாதாரம் கேள்விக்குறியாகி இருக்கும் நேரத்தில் அதற்குரிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கை களை எடுக்காமல் குறுகிய அரசியல் கண்ணோட்டத்துடன் எதிர்கட்சி அரசுகளைக் கவிழ்க்கும் போக்கு இன்று இந்திய அரசியலில் என்றுமில்லாத அளவிற்கு பா.ச.க. அரசு ஊக்குவிப்பதற்கு உலக அளவில் ஊடகங்கள் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன. வருமான வரித்துறை, அமலாக்கப்பிரிவு, ஒன்றிய அரசின் புலனாய்வுத்துறை ஆகியவைகள் பா.ச.க.வின் அரசியல் பிரிவுகளாக மாற்றப் பட்டுள்ளன.


10 விழுக்காடு உயர் சாதியினருக்கு இடஒதுக்கீடு, தேசியக் கல்விக் கொள்கை, தேசிய மருத்துவ ஆணையம், தேசியப் புல னாய்வு முகமை உருவாக்குவதன் காரண மாக 1950ஆம் ஆண்டில் அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்ட கல்வி, சுகாதாரம், சமூக நலன், காவல்துறை ஆகிய துறைகளில் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டன. சரக்கு-சேவை வரி மாநிலங்களின் உரிமைகளை மட்டுமின்றி மாநில அளவில் செயல்பட்டு வந்த சிறுகுறு தொழில்களின் பொருளாதாரத்தைச் சீரழித்துவிட்டது. ஆர்.எஸ்.எஸ். இந்தியாவா? அம்பானி இந்தி யாவா? என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட பின்பு மாநிலங்களின் உரிமைகள் எங்கே இருக்க முடியும்?

●



# பெரியாரும் பெண்ணுரிமையும்

- திருச்சி ந. கருணாகரன்



**த**ந்தை பெரியார் இருபதாம் நூற்றாண்டின் ஈடுஇணையற்ற சிந்தனையாளர். மக்களில் சரிபாதியாக உள்ள-பெண்கள் விடுதலைக்காக, 1928 முதல் பேசியவர். பெண்களைப் பற்றித் தந்தை பெரியார் சிந்தித்த அளவுக்கு உலகத்தில் வேறு எந்த ஒரு சிந்தனையாளரும் சிந்திக்கவில்லை. பெண் விடுதலை பெற வேண்டுமானால் “ஆண்மை” அழிய வேண்டும் என்றார். பெண்கள் விடுதலை குறித்துப் பேசுவதும், எழுதுவதும் இன்று எளிது. ஆனால் 70-80 ஆண்டுகளுக்கு முன்பு இப்படிச் சிந்தித்து அதற்குச் செயல்வடிவமும் கொடுத்து வெற்றியும் பெற்றார்.

ஒரு ஆண் படித்தால், அவன் மட்டுமே படிக்கின்றான்; ஒரு பெண் படித்தால் அந்தக் குடும்பமே படிக்கின்றது. பெண்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்ளக்கூடிய அளவுக்கு ஊதியம் தேட ஆரம்பித்துவிட்டாலே, ஆண்களுக்கு அடிமையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியவர் பெரியார்.

பெரியார் கூறுகிறார் : வாழ்க்கையில் இன்ப, துன்பங்கள் போக, போக்கியங்களில் இருவரும் சம உரிமையுடன் வாழுங்கள். கணவன் மனைவி இருவரும் தாங்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும். வரவுக்கேற்ற செலவு செய்ய வேண்டும். சிறிதாவது வருமானத்தில் மிச்சப்படுத்த வேண்டும். வரவுக்குமேல் செலவு செய்வது “விபச்சாரம்” செய்வதை ஒத்ததாகும்.

“மூடநம்பிக்கைகளை ஒழித்துப் பகுத்தறிவுக்கேற்ற முறையில் நடக்க வேண்டும். கோயில் திருவிழாக்களுக்குச் செல்லக்கூடாது. எங்காவது போக வேண்டுமானால், அறிவை விசாலமாக்கும் பொருட் காட்சிச் சாலை, இயந்திரத் தொழிற்சாலை போன்றவற்றிற்குச் சென்று பார்க்க வேண்டும். அதிகமான குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு பகவான் (கடவுள்) கொடுத்தார் என்று சொல்லக் கூடாது. ஒன்று, இரண்டு குழந்தைகள் பெற்று மகிழ்ச்சியுடன் வாழுங்கள். ஆண்கள், பெண்களுக்கு சம உரிமையும், சம பங்கும் கொடுங்கள். உங்கள் மனைவியை நினைத்துக் கொண்டே -



யோசிக்காதீர்கள். உங்களுடைய செல்லப் பெண் குழந்தைகளை யும், உங்கள் தாய், சகோதரிகளையும் மனதில் வைத்து யோசி யுங்கள். நம் நாட்டுப் பெண்கள், மேல்நாட்டு பெண்களைவிடச் சிறந்த அறிவு, ஆற்றல், வன்மை, ஊக்கம் உடையவர்கள், பெண் களை வீரத்தாய்மார்களாக உருவாக்குங்கள்.

பெண்களே! சட்டை, பேண்ட், லுங்கி கட்டுங்கள். முடியைக் கழுத்தளவுக்கு வெட்டிக் கொள்ளுங்கள். உருவத்தில் ஆண்களா, பெண்களா என்று கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு வாழுங்கள். கும்மி, கோலாட்டடங் களை ஒழித்து, ஓடவும் தாண்டவும் குதிக்கவும் குஸ்தி போடவும் போலீசாக, இராணுவ வீரராக, விமானியாக உருவாகுங்கள்.

மனுநீதி சாஸ்திரப்படி நமக்குத் திருமணம் கிடையாது; நாம் எல்லோரும் தாசி மக்கள்; நாம் திருமணம் செய்வதாக இருந்தால் நம் வீட்டுக்குப் பார்ப்பான் வந்து நமக்கு பூணுல் மாட்டித்தான் திருமணம் செய்வான். கன்னி காதானம், மாங்கல்யதாரணம், பாணிக்கிரகணம், விவாக சுபமுகூர்த்தம், தாராமுகூர்த்தம் என்று வேற்று மொழிச் சொற்கள்தான், தமிழில் சொற்கள் இல்லை. நாங்கள் தான் "வாழ்க்கை ஒப்பந்தம்" - என்ற சொல்லை, திருக்குறளில் இருந்து கண்டு பிடித்தோம். கல்யாணம் என்பதன் பொருளே ஒரு பெண்ணை ஆணுக்கு அடிமைப்படுத்து வது என்றுதான் பொருள் ஆகும்."

மேலும் பெரியார் கூறுகிறார் : "பெண் என்பவள் ஒரு ஆணுக்கு சமையல்காரி, சம்பளம் வாங்காத வீட்டு வேலைக்காரி - ஆணின் காமக் கிழத்தி, ஒரு ஆணின் குடும்பப் பெருக்கிற்கு - பிள்ளை உற்பத்தி செய்யும் பண்ணை, "இயந்திரம்", பிள்ளைக் குட்டி சுமக்கும் தோல்பை என்றும்; பெண்ணின் கழுத்தில், காதில், உடலில் ஆங்காங்கே நகையை மாட்டி உள்ளார்கள். நகை மாட்டும் ஸ்டேண்டா? என்றார், பெரியார். பெண்கள் வைரம் காய்க்கும் மரங்களா? பட்டு போர்த்திய, அலங்கார பொம்மைகள் போன்று உள்ளார்கள்.

*1929*-இல் செங்கல்பட்டில் நடத்திய சுய மரியாதை இயக்க முதல் மாகாண மாநாட் டின் தீர்மானங்களில், "கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும்". கணவனை இழந்த பெண்கள் விதவைக் கோலத்துடன் மொட்டை அடிப்பது, வெள்ளை ஆடை உடுத்தச் சொல்வது, நகை மணிகள், அணியக்கூடாது. பூ-பொட்டு வைத்துக் கொள்ளக்கூடாது. மகிழ்ச்சிக்குரிய குடும்ப விழாக்களில் கலந்து கொள்ளக்கூடாது என்பவை. இவை அனைத்தும் இந்து மதத் தின் மூலம் பெண்களுக்கு - இழைக்கப் படும் அநீதியாகும்."

"பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப் படவேண்டும்" - ***1989***-இல் கலைஞர் ஆட்சியில் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. "இளைஞர்கள் விதைவைப் பெண்களையே, திருமணம்-செய்து கொள்ள வேண்டும்". தேவைப்பட்டால் பெண்கள் - கர்ப்பப்பையை அகற்றவும் தயாராகுங்கள்.

போர்ப் படையில் பெண்கள் : பெண்களை அடிமைப்படுத்தும், கூர் ஆயுதம் தாங்கிய பழமைக்கு எதிரான ஒரு போரே நடத்தத் துணிந்த தந்தை பெரியார், தமது போராட்ட முன்னணிப் படையில் தாய்மார்களையே முன்னிலைப்படுத்தினார். மதுவிலக்குப் போரில் நாகம்மையார், சமூகச் சீர்திருத்த எழுச்சிப் போரில் தம் தங்கை மகள்; இந்தி எதிர்ப்பு போரில் தர்மாம்பாள் அம்மையார் - கைம்மை கொடுமை எதிர்ப்பு போரில் மஞ்சுளாபாய், சாதி மறுப்புக் கிளர்ச்சியில் காரைக்குடி விசாலாட்சி, நீலாவதி அம்மையார், மரகதவல்லி இப்படி - எண்ணற்ற பெண் சிங்கங்கள் தங்கை கிளர்ந்தெழுந்தனர்.

"*1952-54*-இல் அன்றைய சட்ட அமைச்சர் டாக்டர் அம்பேத்கர் அவர்களால் கொண்டு

வரப்பட்ட The Hindu Code Bill - இந்து பெண்களுக்கான - சொத்துரிமை திருத்தச் சட்ட மசோதாவை நாடாளுமன்றத்தின் பிற்போக்கு வைதிக சக்திகள் வரவிடாமல் தடுத்தன. அதனால் தனது பதவியை ராஜி னாமா செய்துவிட்டு கம்பீரமாக அம்பேத்கர் வெளியேறினார்.''

*2006*-இல், அதே இந்து பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம் காங்கிரஸ் தலைமை யில் (U.P.A.) எனப்படும் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி மத்திய ஆட்சியில் (தி.மு.க. அங்கம் வகித்தது) நிறைவேற்றப்பட்டுச்சட்டமாக்கியது.

**பெரியார் பட்டம்**

தமிழ்நாட்டுப் பெண்குலத் தலைவர்களான நீலாம்பிகை அம்மையார், மீனாம்பாள் சிவராஜ், பண்டித நாராயணி அம்மாள், டாக்டர் தரு மாம்பாள், மலர் முத்தம்மாள், உள்ளிட் டோர் இணைந்து *13.11.1938* அன்று சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு என்ற பெயரில் நடத்தி, **அதில், தோழர் ஈ.வெ. இராமசாமி என அழைக்கப்பட்டவரை-''பெரியார்'' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தினர். அப்போது அவர் கள் அப்பட்டத்திற்கான நியாயங்களை, உணர்வுகளை எழுத்து வடிவத்தில் வடித்துப் பாராட்டினர்.**

''இந்தியாவில் இதுவரையும் தோன்றிய, சீர்திருத்தத் தலைவர்கள் செய்யாமற் போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ.வெ. இராமசாமி அவர்கள் செய்து வருவ தாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாகவும், சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவர் இல்லாமையாலும், அவர் பெயரைச் சொல்லிலும் எழுத்திலும் வழங்கும் போதெல்லாம் ''பெரியார்'' என்ற - சிறப்பு பெயரையே வழங்குதல் வேண்டுமென இம் மாநாடு எல்லோரையும் கேட்டுக் கொள் கின்றது.''

தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களை வென்ற தால், ''தந்தை பெரியார்'' என்று மரியாதை யுடன், பாசத்துடன் இந்தப் பட்டம் மக்களிடம் நிலையாக நின்றது.

பெரியார் பொது வாழ்க்கைக்கு அடி யெடுத்த காலந்தொட்டுப் பெண் விடுத லைக்காகத் தொடர்ந்து வலியுறுத்தி வரு கின்றார். பெரியார் சொல்கிறார் : ''பூனை களால், எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால், ஆடு கோழிகளுக்கு - விடுதலை கிடைக்குமா?'' அப்படி ஒருக்கால் விடுதலை கிடைத்தாலும், ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்காது.

மனிதப்பற்றைத் தவிர வேறு எந்தப் பற்றும் எனக்கு இல்லை என்ற மானுடப் பற்றாளர் பெரியார்-பெண் விடுதலைக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் போராடிய சமூகப் போராளி பெரியார் மறைந்து *46* ஆண்டுகள் கடந்தும் அவரை மறக்க முடியவில்லை. மானமும் அறிவும் கொண்ட மக்களாக எனது மக்களை மாற்றுவேன் என்று சூளு ரைத்தவர் பெரியார்.

தந்தை பெரியார், பெண் விடுதலைக்காகப் போராடியதால்தான், இன்று கல்வியில் மாண வர்களைவிட மாணவிகள் முதல் இடத்தில் உள்ளார்கள். ''அடுப்பூதும் பெண் களுக்குப் படிப்பெதற்கு?'' என்று கேட்ட காலம் போய், இன்று பட்டதாரியாக, பேராசிரியர்களாக, மருத்துவராக, பொறியாளராக, துணைவேந் தர்களாக, முதல்வராக, பிரதமராக, வக்கீலாக, நீதிபதியாக, அமைச்சர் களாக, விளையாட்டு வீரர்களாக, விமானியாக இப்படிப் பல துறை களிலும் பெண்கள் உயர்ந்து நிற்பதற்கு, பெரி யார் உழைத்த - உழைப்புத்தான் காரணம்.

வாழ்க பெரியார்.



# வரலாற்றில் திரிபுவாதங்களும் இந்துத்துவ அரசியலும்

- புதிய மாதவி

*மும்பை மராத்திய மாநில பீமா கோரேகாவ் சரித்திரப் பின்னணியை முன்வைத்து இந்துத்துவ அரசியலின் வரலாற்றுத் திரிபுகளை நிகழ்கால அரசியலுடன் இணைத்துப் பார்க்க வேண்டி இருக்கிறது.*

*2018, ஜனவரி 01-இல் பீமா கோரேகாவ் வெற்றித் தூணின் 200 ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெற்ற அரசியல் நிகழ்வுகள் இதை வெளிச்சமாக்குகின்றன. சாதியத்தைக் கடுமையாகத் தங்கள் ஆட்சியில் கடைப்பிடித்த பேஷ்வா அரசுக்கு எதிராக இச்சம்பவத்தை மகர்கள் கொண்டாடுகிறார்கள்.*

*மராட்டிய மாநில ஒடுக்கப்பட்ட மக்களான மகர்கள் சத்ரபதி சிவாஜி காலத்திலிருந்தே படைவீரர்களாகவும் நகரக்காவலர்களாகவும் இருந்தவர்கள் என்பது வரலாறு. ஆனால் பேஷ்வா மன்னர்கள் மகர்களின் வீரத்தைக் கொண்டாட முன்வராதது மட்டுமல்ல, தங்கள் படையில் மகர்களைச் சேர்த்துக் கொள்வதையும் தங்களுக்கு இழுக்கு என்று நினைத்தார்கள். ஆனால் அதே மகர்களின் போர்ப்படை ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனிப் படையின் சார்பாகப் போரிட்டு பேஷ்வாக்களை அடிபணிய வைத்தது வரலாறு.*

*இந்த வரலாற்றின் இன்னொரு பக்கமாக விரிவது, பார்ப்பனியப் பேஷ்வாக்களை வெற்றி கொண்ட ஒடுக்கப்பட்ட மக்களின் வீரமும் விவேகமும்தான். இதுவே இந்துத்துவ அரசியலுக்கு நெருடலாக இருக்கிறது.*

*பேஷ்வாக்களின் ஆட்சியில் பல்வேறு கொடுமைகளை அனுபவித்த மகர் இனத்திற்கு இந்த வெற்றி என்பது மிகவும் முக்கியமான வரலாற்று நிகழ்வு என்பார் வரலாற்று ஆய்வாளர் சரத்தா கும்பஜ்கர் பீமா கோரேகாவ் வெற்றித் தூணில் பொறிக்கப்பட்டிருக்கும் 49 வீரர்களில் 22 பேர் மகர் இனத்தவர்கள். இந்த வரலாற்றை மறைக்காமல் பொறித்து வைத்துவிட்டார்கள் ஆங்கிலேயர்கள்.*

*01 ஜனவரி 1927 பீமா கோரேகாவ் 109-வது நிறைவு நாளில் அண்ணல் அம்பேத்கர் அப்பகுதிக்குச் சென்றார். அவருடைய வட்டமேசை மாநாட்டு உரையில் மகர்களின் படைவீரம் ஆங்கிலேயப் பேரரசுக்கு உதவியாகவும் இருந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்*



காட்டி இருப்பதும் கவனிக்கத்தக்கது. ஆனால் 200-வது நினைவு நாளில் கலகம் வெடித்தது. தலித்துகள் கொதித்து எழுந்தார்கள். பேரணிகள் நடந்தன.

பெரு நகரம் மும்பை நிலைகுலைந்தது. ஏன்? இது 200 ஆண்டுகால பீமா கோரேகாவ் மகர்களின் வெற்றி சம்பந்தப்பட்டது மட்டு மல்ல. இதன் பின்னணியாக இருக்கும் இன்னொரு சரித்திரமும் மீண்டும் எழுச்சி யுடன் பேசப்பட வேண்டியதாகிறது.

இந்துத்துவ அரசியலைக் கொண்டாடும், முன்னிறுத்தும் மராட்டிய அரசியலுக்கு சத்ரபதி சிவாஜி தான் மூல புருஷனாக இருக்கிறார். மராத்தியர்கள் சிவாஜியையும் அவர் இசுலாமியப் பேரரசின் மன்னராக டில்லியில் இருந்து ஆட்சி செய்த ஔரங்கசீப்புக்கு எதிராக நடத்திய கொரில்லாப் போர்கள் எல்லாம் வீரம் செறிந்த இந்து அரசனின் பெருமையாகக் கற்பிக்கப்படுகின்றன.

இன்னொரு வகையில் சொல்லப்போனால் இசுலாமியர்களுக்கு எதிராக இந்துத்துவ அரசை நிறுவிய முதல் அரசனாக சத்ரபதி சிவாஜியை மராட்டிய அரசியல் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்தக் கொண்டாட்டத்தின் அரசியலுக்கு எதிராக இருக்கும் அனைத்து வரலாற்று ஆவணங்களையும் துடைத்து எடுப்பதில் இந்துத்துவ அரசியல் தன் அதிகாரத்தை முன்நிறுத்தி சரித்திரத்தை மாற்றி எழுத முனைகிறது.

இந்துத்துவ அரசியலுக்கு எதிரான சரித்திரம் என்ன?

அந்த நிகழ்வு ஏன் தங்கள் அரசியலுக்கு வேட்டு வைக்கும் என்று நினைக்கிறார்கள்? இதன் சரித்திரம் 300 ஆண்டுகளுக்கு முன்னதாக இருப்பதும் இந்துத்துவ அரசியலின் மராத்தாக்களுக்கு அந்த நிகழ்வு எந்த வகை யிலும் பெருமை சேர்க்கவில்லை என்பதும் தான் காரணம்.

பீமா கோரேகாவ் ஊருக்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் ஊர் வாடு புட்ருக் பீமா கோரேகாவ் வரும் தலித்துகள் அனைவரும் வாடு புட்ருக்கில் இருக்கும் இருவர் சமாதிக்கும் செல்கிறார்கள். சிவாஜி மகாராஜாவின் மகன் சம்பாஜி மகாராஜாவின் சமாதி. அத்துடன் சம்பாஜி மகாராஜாவுக்கு இறுதிச்சடங்கைச் செய்த வீரமிக்க கோவிந்த் கோபால் கெய்க்வாட் சமாதி. சிவாஜியின் வீரம் போற்றப்பட்ட அளவுக்குச் சிவாஜியின் மகனாக சம்பாஜியின் வீரமும் வீரமரணமும் போற்றப்படவில்லை.

சம்பாஜி இசுலாமிய அரசால் தோற்கடிக் கப்பட்டவர்.

வரலாறு எப்போதுமே வெற்றி பெற்றவர் களை மட்டுமே கொண்டாடும் என்பது புதிதல்ல.

1689-இல் அவுரங்கசீப் படையால் தோற்கடிக்கப்பட்ட சம்பாஜி மகராஜாவின் உடலை அவர்கள் வெட்டி துண்டுகளாக்கி நதியில் வீசினார்கள். அந்த உடல் துண்டுகளை யார் எடுக்கிறார்கள் பார்ப்போம்? யார் இந்த உடலுக்கு இறுதிச்சடங்கு செய்வார்கள், அதையும் பார்த்துவிடுவோம் என்று அதி காரத்தின் முகம் கொக்கரித்த போது அதை எதிர்க்கும் துணிச்சல் ஒரு மகர் வீரனுக்கு மட்டுமே இருந்தது. அவர்தான் புட்ருக் பகுதியில் வாழ்ந்த கோவிந்த் கோபால் கெய்க்வாட்.

கோவிந்த் கெய்க்வாட் குத்துச்சண்டை வீரர். குத்துச்சண்டைப் பயில்வான் என்று அறியப்பட்டவர். அவர் மட்டும் பேரரசனின் ஆணையை அதிகாரத்தை மீறும் துணிச்சலுடன் நதியில் வலையுடன் இறங்கி துண்டுகளாக வீசப்பட்ட தங்கள் அரசனின் உடல் பாகங்களைச் சேகரித்து ஒன்றாக்கித் தைத்து அந்த உடலுக்கு இறுதிச்சடங்கும் செய்தார். அவரை அவுரங்க சீப் படை பலிவாங்கியது என்பதும் வரலாறு. கோவிந்த் கெய்க்வாட்டின் வீரத்தைப்

பாராட்டும் வகையிலும் அவருடைய சமாதி மன்னர் சம்போஜியின் சமாதி அருகில் தன் அடையாளத்தைத் தன் வரலாற்றைச் சொல்லிக் கொண்டே இருக்கிறது. இதுதான் இந்துத்துவ அரசியலுக்கும் இந்துத்துவ அரசியலை முன் வைக்கும் மராத்தாக்களுக்கும் பெரும் தலை வலியாக மாறுகிறது.

இந்து ராஷ்டிரத்தை நிறுவ எண்ணிய சத்ரபதி சிவாஜியின் மகனைக் கொன்றது இசுலாமிய அரசு என்ற வரலாற்றின் ஒரு பக்கத்தை தங்கள் அரசியல் லாபமாக்க முனை கிறார்கள். அதாவது சரபோஜி என்ற இந்துவைக் கொன்ற இசுலாமியர் என்பதாக மடைமாற்றம் செய்ய நினைக்கிறார்கள். ஆனால் சரபோஜிக்கு இறுதிச்சடங்கு செய்தவர் ஒரு மகர் இனத் தைச் சார்ந்தவர் என்ற உண்மையும் அந்த வரலாறும் இவர்களுக்கு எதிராகவே இருக்கிறது என்பதால் தங்கள் அரசியல் இலாபத்திற்கு கோவிந்த் கெய்க்வாட்டின் சமாதியைச் சிதைக்கிறார்கள்.

வரலாற்றைத் திரிப்பது, வரலாற்றை மாற்றி எழுதுவது, வரலாற்றைத் துடைத்து அழிப்பது இதெல்லாம் இந்துத்துவ அரசியலுக்குக் கைவந்தக்கலைதானே! சிந்துவெளி நாகரிகத்திலிருந்து அவர்கள் செய்து வருவதுதானே! சத்ரபதி சிவாஜியின் வாரிசுக்கு ஒரு மகர் இனத்தவன் இறுதிச் சடங்கு செய்தானா? அப்படியானால் அப்போது மராத்தாக்களின் வீரம் எங்கிருந்தது?

இக்கேள்விகள் எழுவதைத் தடுக்க வேண்டு மென்றால் வரலாற்றின் இப்பக்கத்தை மாற்ற வேண்டும் என்று திட்டமிடுகிறார்கள். சம்போஜி மகாராஜாவுக்கு இறுதிச்சடங்கு செய்தவர்கள் மராத்தா இனத்தைச் சார்ந்த சிவாலே தேஷ்முக் என்று சொல்கிறார்கள். இன்னும் ஒரு படி மேலே போய் கோவிந்த் கெய்க்வாட்டின் சமாதி இப்போதுதான் கட்டப்பட்டது என்று சொல்கிறார்கள். கோவிந்த கெய்க்வாட் சமாதி இருக்கும் இடத்தின் பட்டா பஞ்சாயத்தில் இல்லை என்று அலறுகிறார்கள். கெய்க்வாட்டின் சமாதியில் எழுதப்பட்டிருந்த போர்டைச் சிதைக்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கெய்க்வாட் சமாதிக்கு ஆதரவாகப் பேசுபவர்கள் அனைவரையும் தேசவிரோதியாகச் சித்தரிக்கிறார்கள். காவிக்கொடியுடன் கூட்டத்தில் புகுந்து கலகம் செய்தவர்களைச் சமூகத்தின் பாதுகாவலர்களாகவும் தங்கள் உரிமைகளை நியாயமான குரலில் வெளிப் படுத்தியவர்களைத் தேசவிரோதிகளாகவும் சித்தரிக்கும் அண்மைகால அரசியல் போக்கு நம்ப முடியாத கதைகளை ஆவணங்களாக்குகிறது.

இந்தியப் பிரதமர் மோடியை ராஜீவ் காந்தியைக் கொலை செய்தது போல கொலை செய்யத் திட்டமிட்டிருந்தார்கள் என்று கூட சொல்லத் தயங்கவில்லை!

பீமா கோரெகாவ் வழக்கு விசாரணை கமிஷனிடம் தலித்துகள் சில ஆவணங்களை முன்வைக்கிறார்கள். அதன் மூலம் இன்னும் சில வரலாற்றுச் செய்திகள் வெளிவருகின்றன.

*பீமா கோரேகாவுக்கு வந்த பீமா சேனையும் குடியரசுக் கட்சியின் ராம்தாஸ் அத்வாலேயும் சம்பாஜி மகாராஜா சமாதிக் கும் சென்றார்கள்.

தலித்துகள் வந்ததால் ராஜாவின் சமாதி தீட்டுப்பட்டுவிட்டதாகக் கூறி சமாதியில் பசு மூத்திரம் தெளித்து தீட்டுக் கழித்திருக் கிறார்கள்.

கோவிந்த் கோபால் நாசிக் கோட்டைக்குக் கவர்னராக சரபோஜி மன்னரால் நியமிக்கப் பட்டிருந்தார். அவுரங்கசீப் படை பலமுறை முயன்றும் அக்கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை.

கோவிந்த் ஒரு மகர் இனத்தவர் என்பதால் தான் இந்தச் சரித்திரம் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது.

சம்பாஜி மன்னர் 1867-இல் கோவா ஸ்டீபன் கோட்டையைக் கைப்பற்றினார்

கோவிந்த் கோபாலையே அக்கோட்டைக்கும் கவர்னராக நியமித்தார்.

சரபோஜி அவுரங்கசீப் படையினரால் தோற்கடிக்கப்பட்டார். அவர் என்னவானார் என்பது தெரியாத நிலையில் அவரைத் தேடும் பணிக்கு மகாராணி யசுபாய் இரு வரை நியமிக்கிறார். அந்த இருவருமே மகர் இனத்தவர்கள். ஒருவர் கோவிந்த் கோபால். இன்னொருவர் ராயப்பன் மகர்.

இருவருமே மன்னர் சரபோஜியைத் தேடி அலைகிறார்கள். ராயப்பன் அவுரங்கசீப் படையால் கொலை செய்யப்படுகிறார். கோவிந்த் சனக், பஷ்பாய் பகுதியில் தேடி அலையும் போது சரபோஜி மன்னருக்கு நிகழ்ந்த கொடுமை தெரியவருகிறது.

சரபோஜிக்கு இறுதிச்சடங்கு செய்யத் துணிபவருக்கு மரண தண்டனை விதிக்கப் படும் என்று அவுரங்கசீப் அதிகாரம் அச்சுறுத்து கிறது. அந்த அச்சுறுத்தலால் எவரும் முன்வர வில்லை. ஆனால் கோவிந்த் கோபால் தானே முன்வந்து சரபோஜி மன்னரின் உடல் பாகங் களை ஆற்றில் தேடி எடுத்து ஒட்டி தைத்து இறுதிச்சடங்கும் செய்கிறார். இச்செய்தியை அவர் மகாராணிக்கும் தெரிவிக்கிறார்.

கோவிந்த் கோபாலின் இச்செயலால் ஆத்திரமடைந்த அவுரங்கசீப் படை கோவிந்த் கோபாலைக் கொலை செய்கிறது.

அத்துடன் 50 முதல் 70 மகர்களையும் சேர்த்துக் கொன்று குவிக்கிறது.

கோவிந்த் கோபாலின் சமாதிக்கு அருகில் கொலை செய்யப்பட்ட மகர்களின் சிலை களும் தங்கள் கதைகளைச் சொல்லிக் கொண் டிருக்கின்றன. டிசம்பர் 2017-இல் முதன் முதலில் கோவிந்த கெய்க்வாட் சமாதியி லிருந்த அறிவிப்பு பலகை சிதைக்கப்பட்டது. அப்போது காவல்துறையை அணுகி இப்பிரச் சனைக்குத் தீர்வு காணவே தலித்துகள் விரும்பினார்கள். ஆனால் காவல்துறைக்கு இது பிரச்சனையாகவே தெரியவில்லை.

மீண்டும் டிசம்பர் 29, 2017-ல் சமாதியில் புதிதாக வைக்கப்பட்ட அறிவிப்புப் பலகையை அகற்றிச் சிதைக்கிறார்கள். அந்த நாள் பீமா கோரெகாவ் 200 ஆண்டு நினைவு நாளை ஒட்டி நடைபெற்ற சம்பவம். தலித்துகள் கொத்தெழுந்ததும் அதன் பின் நடந்தப் போராட்டங்களும் செய்திகளானதை நாம் அறிவோம்.

ஆண்டுக்கு 365 நாட்கள் இருக்கும் போது டிசம்பர் 06-ஐ பாபர் மசூதி இடிப்புக்கு தேர்ந்தெடுத்த இந்துத்துவ அரசியலின் நோக்கம் எல்லோரும் அறிந்தது தானே. ஆனால் 2019 டிசம்பர் 06 பத்திரிகையைப் புரட்டினால் முதல் பக்கத்தில் (தினத்தந்தி) பாபர் மசூதி இடிப்பு நாள் பழனி கோவி லுக்குப் பாதுகாப்பு என்று படத்துடன் செய்தி வருகிறது.

டிசம்பர் 06 அறிவாயுதம் ஏந்திய இந்தியத் தலைவர் அண்ணல் அம்பேத்கரின் நினைவு நாள் என்பது செய்தியாகக் கூட இடம் பெறாமல் பணம் வாங்கிக் கொண்டு வெளியிடப்படும் விளம்பரமாக 3-ஆவது பக்கத்தில் இடம் பெறுகிறது.

இப்படித்தான் வரலாற்றின் உண்மைகளும் சிறிது சிறிதாகப் பின்னோக்கிச் சென்று... காலப்போக்கில் மங்கலாகி... பார்வையில் இருந்து மறைக்கப்பட்டதாய் மாறிவிடுகிறது. இந்திய அறிவுசார்ந்த சமூகமும் இதற்கெல்லாம் சாட்சியாக இருப்பதுதான் பேரவலம்.

குறிப்புகள் : புனே மிரர், இந்தியா டுடே

பின் குறிப்பு: இக்கட்டுரை எழுதிக் கொண்டி ருக்கும் போது வந்திருக்கும் பத்திரிகை செய்தி. மராட்டிய மாநில முதல்வர் உத்தவ் தாக்கரேக்குக் கட்சியின் கடிதம். பீமா கோரேகாவ் சம்பவத்தில் பா.ச.க. அரசு என்ன செய்தார்கள் என்பதை நாம் அறி வோம் என்பதால் இந்த வழக்கில் சிறைப் பிடிக்கப்பட்ட அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தி ருக்கிறார்கள். ●



# அம்பேத்கர் காணவிரும்பிய சனநாயகக் கட்டமைப்பு

*- க. முகிலன்*

மக்களால் மக்களுக்காக நடைபெறும் மக்கள் அரசே சன நாயகம் என்று அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த ஆபிரகாம் லிங்கன் கூறியதே இன்றளவும் சனநாயகத்துக்கான வரையறையாகப் பலராலும் மேற்கோளாகக் காட்டப்படுகிறது. இதில் சனநாயகம் என்பது அரசின் வடிவம் சார்ந்தது என்கிற கருத்தே மேலோங்கியுள்ளது. அம்பேத்கர் இந்த வரையறைக்கு முதன்மை தரவில்லை. சனநாயகம் எத்தகைய வடிவிலான அரசாக இருக்கிறது என்பதைவிட மக்களின் வாழ்க்கை முறை - மக்கள் தமக்கிடையே எத்தன்மையில் உறவு கொண்டு ஒத்திசைந்து வாழ்கின்றனர் (a mode associated living) என்பதைப் பொருத்தே இருக்கிறது என்று கருதினார்.

ஆனால் இந்தியாவில் சனநாயகம் என்பது அய்ந்தாண்டு களுக்கு ஒருமுறை தேர்தல் நடத்துவது, மக்கள் வாக்களிப்பது, தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி ஆட்சி செய்வது என்று மட்டுமே மக்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய நிலை ஏற்பட்டுவிடும் என்கிற தொலைநோக்குப் பார்வையுடன் இந்திய அரசமைப்புச் சட்ட அவையில் 1949 நவம்பர் 25 அன்று அம்பேத்கர் ஆற்றிய இறுதி உரையில் ஓர் எச்சரிக்கை விடுத்தார். “வெறும் அரசியல் சனநாயகத்துடன் மனநிறைவு அடைந்துவிடக் கூடாது. நம்முடைய அரசியல் சனநாயகத்தைச் சமூக சனநாயக மாக உயர்த்த வேண்டும். சமூக சனநாயகம் என்றால் என்ன? அது ஒரு வாழ்க்கை நெறி. அதில் சுதந்தரம், சமத்துவம், சகோதரத் துவம் ஆகியவை குறிக்கோளாக ஏற்கப்பட்டிருக்கும்” என்று கூறினார்.

அதே உரையில் அம்பேத்கர் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதற்குப் பின்வருமாறு விளக்கமளித்துள்ளார் : “சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் தனித்தனியான கோட் பாடுகள் என்று கருதக்கூடாது. அவை ஒன்றோடொன்று ஒத்தி சைந்தே இயங்கக் கூடியவை. ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துப் பார்ப்பது சனநாயகத்தின் முதன்மையான நோக்கத்தையே சிதைப்பதாகும், சமத்துவத்திலிருந்து சுதந்தரத்தைப் பிரிக்க முடியாது. அதேபோன்று சுதந்தரத்திலிருந்து சமத்துவத்தைப் பிரிக்க முடியாது. சமத்துவம் இல்லாத போது, சுதந்தரம் என்பது சிறு கூட்டத்தினர் பெரும் எண்ணிக்கையினர் மீது மேலாதிக்கம் செய்ய வழிகோலும். சுதந்தரம் இல்லாத சமத்துவம் தனிமனிதரின் உள்ளார்ந்த முன்



முயற்சியை அழிக்கும். சகோதரத்துவம் இல்லாத சுதந்தரமும் சமத்துவமும் இயல்பான சமூக வளர்ச்சிக்கு வழி சமைக்கமாட்டா. இந் நிலையை உருவாக்கிட அதிகாரம் கொண்ட ஒரு கண்காணிப்பாளர் (அரசு) தேவைப்படு கிறார்''.

எனவே சனநாயக அரசு என்பதன் விழுமிய நோக்கம் சுதந்தரம், சமத்துவம், சகோதரத் துவம் என்கிற கோட்பாட்டின் அடிப்படை யில் சமூகத்தைக் கட்டமைப்பதே ஆகும் என்று அம்பேத்கர் கருதினார். அம்பேத் கரின் எழுத்துகளிலும் பேச்சுகளிலும் இக் கருத்தே முதன்மையாக வலியுறுத்தப்பட்டுள் ளதைக் காணலாம். ஆனால் சுதந்தரம் பெற்ற பின் அமைந்த எல்லா ஆட்சிகளும் சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றின் பேரால் மக்களைப் பிளவுபடுத்தி சமூகத்தில் வெறுப்பு உணர்வையும் பகையையும் வளர்த்து சிறுகும்பலின் அரசியல் மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயல்கின்றன. இந்த நிலை அம்பேத்கர் காணவிரும்பிய - சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப்படையிலான சனநாயகத்துக்கு நேர் எதிரானதாகும்.

சமத்துவம் இல்லாத சுதந்தரம் சிறு கூட் டத்தினரான ஆளும் வர்க்கம் மேலாதிக்கம் செய்யவே வழிவகுக்கும் என்பதை சுதந்திரத் திற்கு முன்பே-1945-இல் அம்பேத்கர் எச்சரித் தார், 'காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாத மக்களுக்குச் செய்தது என்ன?' என்ற நூலில், ''இந்தியா இறையாண்மையுள்ள சுதந்தர அரசாகுமானால் என்ன நிகழும் என்று கேட்டுப் பார்க்கலாம், ஒன்று உறுதி. சுயராச்சியம் என்ற மந்திரக் கோலினால் ஆளும் வகுப்பு மறைந்து போகாது. அது எப்படி இருக் கிறதோ அப்படியே இருந்துவரும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எனும் பூதத்திடமிருந்து விடு பட்டுவிட்ட நிலையில் அதன் வலிமையும் வீரியமும் கூடுதலாகும். சுருங்கச் சொல்லின் சுயராச்சியம் என்பது ஆளும் வகுப்பு நடத்து கின்ற அரசாங்கமாக இருக்குமே தவிர, மக்கள் நடத்துகிற அரசாங்கமாக இருக்காது, மக்கள் நடத்துகிற அரசாங்கமாக இல்லாத போதும், ஆளும் வகுப்பு அதனை மக்களுக் கான அரசாங்கமாகக் காட்ட முயலும்'' என்று தெளிவாகக் கணித்துக் கூறினார்.

இந்தியா சுதந்தரம் பெறும்போது ஆளும் வர்க்கமாக இருக்கின்ற பார்ப்பன - பனியா கும்பலே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் என்பதை நன்கு அறிந்திருந்த அம்பேத்கர் இந்திய அரசமைப்புச் சட்ட வரைவுக்குழு வின் தலைவர் பொறுப்பை ஏன் ஏற்றுக் கொண்டார் என்கிற வினா எழுகிறது, இதற்கு அம்பேத்கரே அரசமைப்புச் சட்ட அவையின் இறுதி உரையில், ''நான் அரசமைப்புச் சட்ட அவைக்கு வந்ததன் நோக்கம் பட்டியல் குல வகுப்பினருக்கு நான் அரும்பாடுபட்டுப் பெற்றுத்தந்த நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது தவிர வேறுநோக்கம் ஏது மில்லை'' என்று விடை கூறிவிட்டார். ஆம், அம்பேத்கர் அரசமைப்புச் சட்ட அவையில் இடம்பெறாமல் போயிருந்தால் பட்டியல் குல வகுப்பினருக்கு அரசியலிலும் அரசு வேலைகளிலும் இடஒதுக்கீடு கிடைக்காமல் போயிருக்கும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் அரசு வேலைகளில் இடஒதுக்கீடு பெறுவ தற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்காது.

அம்பேத்கர் அமெரிக்காவிலும் அய்ரோப் பாவிலும் கல்வி கற்றவர். அந்நாடுகளில் சமூகத்தில் நிலவிய சுதந்தரப் போக்கும், நாடாளுமன்றச் சனநாயக முறையும் அம்பேத் கரை ஈர்த்தன. மார்க்சியக் கருத்துகளில் நாட்டம் இருந்தபோதிலும் அவர் காலத்தில் சோவியத் நாட்டில் ஸ்டாலின் தலைமையில் நடந்த வன்முறைகளையும் தனிமனித சுதந்தரம் ஒடுக்கப்படுவதையும் கண்டு வெறுப்புற்றார். தாழ்த்தப்பட்ட சாதிகளின் பேரவையின் சார்பில் 1948-இல் அரசுகளும் சிறுபான்மை யினரும் எனும் தலைப்பில் அரசமைப்புச் சட்டம் குறித்த தன் கருத்தை ஓர் ஆவண மாக இந்திய அரசமைப்புச் சட்ட அவை யிடம் அளித்தார், அந்த ஆவணத்தில்

*முதன்மையான* **பெருந் தொழில்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட வேண்டும்; நிலத்தின் உரிமை முற்றிலும் அரசிடமே இருக்க வேண்டும்; கூட்டுப் பண்ணை முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்கின்ற அரசு சோசலிசக் கோட்பாட்டை அம்பேத்கர் முன்மொழிந்திருந்தார்.**

*மேலும் அந்த ஆவணத்தில்,* **“சனநாயக நெறிமுறையும் கட்டமைப்பும் கொண்ட அரசின் மூலம் குருதி சிந்தாமல் சமூக நிலையிலும் பொருளாதார நிலையிலும் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வரமுடியும்”** *என்று கூறியிருந்தார். இதில் அம்பேத்கர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார், படித்த காங்கிரசுத் தலைவர்கள் சுதந்தர இந்தியாவில் இக்குறிக்கோளை நிறைவேற்ற முயல்வார்கள் என்கிற எதிர்பார்ப்பும் அம்பேத்கரிடம் இருந்தது. எனவேதான் அரசமைப்புச் சட்ட வரைவுக்குழுவின் தலைவர் பொறுப்பை ஏற்றார். ஆயினும் தன் விருப்பத்திற்கு - குறிக்கோளுக்கு மாறான தன்மையில் அரசமைப்புச் சட்டத்தை எழுத நேரிட்டதே என்கிற வருத்தமும் எரிச்சலும் அம்பேத்கரிடம் குமைந்து கொண்டேயிருந்தன. 1952 திசம்பரில் புனேயில் சட்ட நூலக உறுப்பினர் சங்கத்தில் உரையாற்றிய போது, “அரசமைப்புச் சட்டத்தை இரத்து செய்வதற்கு அல்லது அதனைத் திருத்தி எழுதுவதற்கு விரும்புவோர் அணியில் சேருவதற்கு நான் முற்றிலும் தயாராக இருக்கிறேன்” என்று சொன்னார். ஏனெனில் 1950 சனவரி 26-இல் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது முதலே அதன் அறநெறிக்கு எதிராக ஆட்சியாளர்களால் செயல்படுத்தப்படுவது கண்டு மனம் கொதித்தார், இதன் உச்சகட்டமாக, 1953 செப்டம்பரில் மாநிலங்கள் அவையில் “இந்த அரசமைப்புச் சட்டம் யாருக்கும் பயன்படாது; இதைக் கொளுத்துவதற்கான முதல் ஆளாக நான் இருப்பேன்” என்று முழங்கினார்.*

*சனநாயகம் என்பது வெறும் தேர்தல் அரசியலும் அதன்மூலமாக ஆட்சியதிகாரத்தில் இருப்பது மட்டுமல்ல; சமூக நிலையில் சமத்துவமும் பொருளாதார நிலையில் சமத்துவமும் ஏற்படுவதே அரசியல் சனநாயகத்தை நிலைக்கச் செய்யும் என்கிற கருத்தில் அம்பேத்கர் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். எனவேதான் அரசமைப்புச் சட்ட அவையில் தன் இறுதி உரையில், “1950 சனவரி 26 அன்று முரண்பாடுகள் கொண்ட வாழ்வில் நாம் நுழைகிறோம், அரசியலில் சமத்துவம் பெற்றிருப்போம். ஆனால் சமுதாய, பொருளாதார வாழ்வில் நம்மிடையே சமத்துவம் இருக்காது. அரசியலில் ஒரு மனிதனுக்கு ஒரு வாக்கு; ஒவ்வொரு வாக்குக்கும் ஒரே மதிப்பு கொண்டது என்கிற கொள்கையை ஏற்று இருப்போம். சமுதாய மற்றும் பொருளாதார வாழ்வில், நம்முடைய சமுதாய, பொருளாதாரக் கட்டமைப்பின் காரணமாக ஒவ்வொரு மனிதனும் ஒரே மதிப்பு உடையவன்தான் என்கிற கொள்கையை ஏற்க மறுப்பவர்களாகவே இருப்போம். இத்தகைய முரண்பாடு கொண்ட வாழ்நிலையை இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்க விடப்போகிறோம்? இன்னும் எவ்வளவு காலத்துக்குச் சமுதாயச் சமத்துவத்தையும் பொருளாதாரச் சமத்துவத்தையும் மறுக்கப் போகிறோம்? இன்னும் நீண்ட காலத்துக்கு இவற்றை மறுப்பது என்பது அரசியல் சனநாயகத்திற்கே ஆபத்தானதாக முடியும். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இந்த முரண்பாடுகளைக் களைய வேண்டும். இல்லாவிட்டால், இந்தச் சமத்துவமின்மையால் பாதிக்கப்பட்டவர்கள், இந்த அரசமைப்புச் சட்ட அவை அரும்பாடுபட்டு உருவாக்கியுள்ள அரசியல் சனநாயகக் கட்டமைப்பையே தகர்த்தெறிவார்கள்” என்று எச்சரிக்கை விடுத்தார்,*

*சமூக சமத்துவமும் சமூக சனநாயகமும் இந்தியாவில் உருவாவதற்குப் பெருந்தடை*

யாக இருப்பது நால்வருண அடிப்படை யிலான சாதி அமைப்பே ஆகும். சாதி அமைப்பை, அதன் இயக்கப் போக்கை, அதை ஒழிப்பதற்கான வழிமுறைகளை ஒப்பற்ற முறையில் அம்பேத்கர் விளக்கி யிருக்கிறார். அம்பேத்கரின் கொள்கையை ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால் சாதி ஒழிப்பு என்பதே ஆகும். 1916-இல் கொலம்பியா பல்கலைக்கழகக் கருத் தரங்கில் 'இந்தியாவில் சாதிகள்' எனும் தலைப்பில் கட்டுரை படித்தது முதல் 1956-இல் தன் இறுதி மூச்சு வரை சாதி ஒழிப்புக்காகப் போராடினார். **"நீங்கள் எந்தத் திசைநோக்கிச் சென்றாலும் உங்கள் பாதையில் சாதி எனும் பூதம் குறுக்கே வந்து நிற்கும் (Turn in any direction you like, caste is the monster that crosses your path). சாதி எனும் பூதத்தைக் கொல்லாத வரையில் அரசியல் சீர் திருத்தத்தையோ பொருளாதாரச் சீர் திருத்தத்தையோ கொண்டுவர முடியாது"** என்று 'சாதி ஒழிப்பு' நூலில் அம்பேத்கர் கூறியுள்ளார்.

1956 மே 20 அன்று 'அமெரிக்காவின் குரல்' எனும் அமெரிக்க வானொலியில் அம்பேத்கர் ஆற்றிய உரையில், "சனநாயகம் என்பது அரசாங்கம் எனும் வடிவத்திற்கு அப்பாற்பட்டது. இது முதன்மையாக இணைந்து வாழும் ஒருவகையான நடைமுறை யாகும். சனநாயகத்தின் வேர்களைச் சமூக உறவுகளிலும் சமுதாயத்தின் அடித்தளமாக விளங்கும் மக்களது ஒன்றிணைந்த வாழ்க்கை முறையிலும்தான் தேடிக் காணவேண்டும்" என்று குறிப்பிட்டார். ஆனால் இந்தியச் சமூகத்தில் மக்கள் தமக்கிடையே தங்கு தடையின்றி உறவாடுவதற்குப் பிறப்பின் அடிப்படையில் அமைந்துள்ள சாதிய ஏற்றத் தாழ்வுகள் பெருந்தடையாக இருக்கின்றன.

இந்தியச் சமுதாயம், பிற நாடுகளில் இருப்பது போல் தனிநபர்களைக் கொண்ட தல்ல; அது எண்ணற்ற சாதிகளாலானது. சாதிகள் தமது வாழ்க்கையில் தனித்தன் மையுடன் இயங்குகின்றன. சாதிகள் சமத்துவ மற்றவை. ஏணிப்படி போல் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளன. மாற்றத்திற்கே இடமின்றி இறுகப் பிணைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கிடையே ஏறுமுகமான காழ்ப் புணர்ச்சியும் இறங்குமுகமான வெறுப் புணர்ச்சியும் நிலவுகின்றன. ஒவ்வொரு சாதியும் தன்னளவில் மூடிய சமூகமாக இயங்குகிறது. சாதிகளுக்கிடையே எத் தகைய உறவும் இருப்பதில்லை. சாதிக்குள் ளான அகமண முறை சாதிகளின் கட்ட மைப்பைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. எனவேதான் சுதந்தரம் பெற்று எழுபது ஆண்டுகளுக்குப் பின்னும் சாதி ஆணவக் கொலைகள் நிகழ்ந்து வருகின்றன. சாதி அமைப்பில் தனிமனித சுதந்தரத்திற்கோ, சமத்துவத்துக்கோ, சகோதரத்துவத்துக்கோ இடமில்லை. அதனால் சமூக சனநாயகம் முகிழ்ப்பதற்கான வாய்ப்பே இல்லாத சூழல் நிலவுகிறது.

சாதியமைப்பு இந்தியச் சமூகத்திற்கு இழைத்துள்ள கேடுகளை அம்பேத்கர் கடு மையாகக் கண்டிக்கிறார். "சாதி பொதுநல உணர்வைக் கொன்றுவிடுகிறது; பொதுவான இரக்க உணர்வை அழிக்கிறது. பொதுக் கருத்து என்பது உருவாகாமல் தடுக்கிறது. ஒரு இந்துவின் அடையாளம் அவனது சாதியாகவே இருக்கிறது. சாதிக்கு மட்டுமே பொறுப்பாளியாக இருக்கிறான். அவனு டைய விசுவாசம் சாதியளவில் மட்டும் சுருங்கி நிற்கிறது. அவனுடைய பரிவும் இரக்கமும் சாதியைச் சார்ந்தே பிறக்கின்றன. ஒழுக்கம் என்பதையும் சாதியே தீர்மானிக் கிறது" என்று அம்பேத்கர் சாதி ஒழிப்பு நூலில் கூறுகிறார். சாதி என்பது சமூக ஓர் மைக்கு எதிரானதாக மட்டுமல்லாமல், சமூகத்தைச் சிறு சிறு குழுக்களாகப் பிளவு படுத்தும் கொடிய ஆற்றலாகவும் இருக் கிறது. இந்நிலையானது சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் அடிப்படையில் சமூக

சனநாயகம் உருவாவதற்குத் தடையாக இருக்கிறது.

அம்பேத்கர் காணவிரும்பிய சனநாயகம் என்பதில் பகுத்தறிவும் அறிவியல் மனப்பான்மையும் மேலோங்கியிருக்க வேண்டும் என்று நினைத்தார். அறிவார்ந்த விவாதங்களுக்கும் மாறுபட்ட கருத்துகளைச் சுதந்தரமாக வெளிப்படுத்துவதற்குமான வாய்ப்புகளுக்கும் தாராளமாக இடமளிப்பதாக சனநாயகம் இருக்க வேண்டும். அப்போதுதான் தனி மனிதரின் சுதந்தரமும், உள்ளார்ந்த விழைவுகளும், சுயமரியாதையும் வளரும் என்று கருதினார்.

புத்தர், “ஒவ்வொருவருக்கும் கற்கும் உரிமை உண்டு. ஒரு மனிதனுக்கு உணவு எவ்வளவு இன்றியமையாததோ அதுபோல் கற்கும் உரிமையும் இருக்க வேண்டும். குறைபாடு இல்லாத முழுமை பெற்றது என்பதாக எதுவும் இல்லை. எல்லாக் காலத்துக்கும் ஏற்றது என்பதொன்றும் இல்லை. ஒவ்வொன்றும் கேள்விக்குட்படுத்தப்படவும் ஆராயவும் வேண்டியதாகும்” என்று கூறியதை அம்பேத்கர் தன் கொள்கையாக வரித்துக் கொண்டதாகக் கூறுகிறார்.

எனவே பகுத்தறிவுக்கும், அறிவியல் மனப்பான்மைக்கும், மனிதரின் சுதந்தர உணர்ச்சிக்கும், சமத்துவத்துக்கும் எதிராக இருக்கின்ற - புனிதமானவை என்று சொல்லப்படுகின்ற இந்துமத சாத்திரங்களை, இதிகாசங்களை, புராணங்களை அம்பேத்கர் கடுமையாக எதிர்த்தார். பகவத் கீதையைப் பைத்தியக்காரனின் உளறல் என்றார். இவை இரண்டாயிரமாண்டுகளுக்கும் மேலாக சூத்திரர்களின், தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களின் அடிமை நிலைக்கும் துன்பங்களுக்கும் காரணமாக இருந்து வந்துள்ளதால், இவற்றை இம்மக்கள் புறக்கணிப்பதோடு எதிர்க்க வேண்டும் என்று அம்பேத்கர் அறைகூவல் விடுத்தார். புத்தரும் குருநானக்கும் இவற்றை எதிர்த்தனர் என்று சுட்டிக்காட்டுகிறார். சாதியைக் காப்பாற்றும் சாத்திரங்களைப் புறக்கணிக்காத வரையில் சாதி உணர்விலிருந்து விடுபட முடியாது என்று உணர்த்துகிறார்.

இந்தியச் சனநாயகத்தில் மத ஆதிக்கமும் சாதி ஆதிக்கமும் ஒழிந்து, உண்மையான மதச்சார்பின்மை செழித்தோங்க வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார். நேரு காலம் முதல் இந்திராகாந்தி காலம் வரையிலான ஆட்சிக் காலத்தில் இக்குறிக்கோளை அடைவதற்காக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அதன்பின் கடந்த முப்பது ஆண்டுகளில் பா.ச.க.வும் சங்பரிவாரங்களும் அயோத்தியில் பாபர் மசூதி இடத்தில் இராமர் கோயில் கட்டுதல் என்பதை முன்வைத்து மதவாத அரசியலை வளர்த்தெடுத்து அதில் குறிப்பிடத்தக்க அளவில் வெற்றியும் பெற்றுவிட்டன. சாதி ஒழிப்பை முன்னெடுக்காமல், சாதியமைப்பையும் அதைக் கட்டிக் காக்கும் இந்து மதத்தையும் அப்படியே நீடிக்கச் செய்வதன் மூலம் பார்ப்பன-பனியா மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவே இந்துக்களின் ஒற்றுமை, தேசபக்தி என்கிற போலியான முழக்கங்களைச் சங்பரிவாரங்கள் முன்வைக்கின்றன. இந்துத்துவ ஆதிக்கத்தை எதிர்த்த பகுத்தறிவாளர்களான தபோல்கர், கோவிந்த பன்சாரே, கல்புர்கி, கவுரிலங்கேஷ் ஆகியோர் சங்பரிவாரங்களால் கொல்லப்பட்டனர். பல இலட்சம் ஆண்டுகளுக்குமுன் பிறந்ததாகக் கூறப்படும் இராமன் பாபர் மசூதி கட்டப்பட்ட இடத்தில்தான் பிறந்தார் என்று கூறுமளவுக்கு உயர்நீதித்துறையும் காவிமயமாகிவிட்டிருக்கிறது. மேலும் இந்துத்துவத்தை எதிர்க்கும் அறிஞர்களும் சமூகச் செயற்பாட்டாளர்களும் ‘நகர நக்சலைட்டுகள்’ என்று முத்திரைக் குத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுகின்றனர். அம்பேத்கர் காண விரும்பிய சனநாயகத்தைக் கட்டமைக்க விரும்பும் அனைவரும் ஓரணியில் திரண்டு இந்துத்துவப் பாசிசத்தை எதிர்க்க வேண்டும்.

அம்பேத்கர், அரசு சோசலிசம் மூலம் சூத்திரர்கள், பட்டியல் குலத்தினர், பழங்குடியினர் ஆகியோரைப் பொருளாதாரச் சுரண்டலிலிருந்து விடுவிக்க முடியும் என்று கருதினார். அதனால்தான் முதன்மையான உற்பத்திச் சக்திகள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்றார். சாதியமைப்பு என்பது மத அமைப்பாக மட்டும் அல்லாமல் பொருளாதார அமைப்பாகவும் இருக்கிறது என்றார் அம்பேத்கர். சாதி ஒழிப்பை முன்னெடுக்கும் போது படிப்படியாக ஒடுக்கப்பட்ட கீழ்ச்சாதியினர் பொருளாதாரச் சுரண்டலிலிருந்து விடுபடுவதுடன், சுதந்தரமாகத் தாம் விரும்பும் தொழிலை மேற்கொண்டு பொருளாதார நிலையிலும் உயருவதற்கான வாய்ப்பு அமையும் எனக் கருதினார். ஆனால் 1991 முதல் தாராளமயம், தனியார் மயம், உலக மயம் என்கிற கொள்கை செயல்படுத்தப்பட்ட பிறகு, அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்கப்பட்டு வருகின்றன. இது பிற்படுத்தப்பட்ட, பட்டியல் குல, பழங்குடி வகுப்பினரின் வேலை வாய்ப்பைப் பறித்து வருகிறது. கல்வி மருத்துவம் பெருமளவில் தனியாரின் கொள்ளைக்குத் திறந்துவிடப் பட்டதால் கீழ்ச்சாதி மக்கள் பெரும் துன்பத்திற்குள்ளாகியுள்ளனர். இவை அம்பேத்கர் விரும்பிய பொருளாதாரச் சமத்துவத்துக்கு எதிரான போக்குகளாகும்.

அம்பேத்கர் மறைவுக்குப் பின் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்தில் கொண்டு அம்பேத்கர் காண விரும்பிய சனநாயகத்தை மறுகட்டமைப்புச் செய்ய வேண்டிய தேவையுள்ளது.

சுருக்கமாகச் சொல்வதாயின், சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருப்பதே இலட்சிய சமூகமாகும்; இதை அடைவதை அரசியல் சனநாயகமும், அரசமைப்பும் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். சமூக சமத்துவத்தையும் பொருளாதார சமத்துவத்தையும் முன்னெடுக்காத அரசியல் சனநாயகக் கட்டமைப்பைத் தகர்த்தெறிந்து, புதிய அரசியல் சனநாயகக் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதுவே அம்பேத்கரின் சனநாயகம் பற்றிய கோட்பாடாகும்.

●

ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெற முடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக் காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனகர்ளால் பார்ப்பனரல்லாதவர்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருக்கால் ஏதாவது ஒரு சமயம் மேற்படி விஷயங்களில் விடுதலை உண்டாகிவிட்டாலும்கூட ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம். ஏனெனில், ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்பதைப் பெண்கள் மறந்துவிடக்கூடாது. அந்த ‘ஆண்மை’ உலகிலுள்ள வரையிலும் பெண்மைக்கு மதிப்பு இல்லை என்பதை பெண்கள் ஞாபத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உலகத்தில் ‘ஆண்மை’ நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தே வரும். பெண்களால் ‘ஆண்மை என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலல்லாது பெண்களுக்கு விடுதலை இல்லை என்பது உறுதி.

**- பெரியார் ஈ.வெ.ரா.**



# புறநானூறு காட்டும் தமிழர் அறம்

*- இரணியன், கோவை*

“**ச**ங்கத் தொகை நூல்களில் ஒன்று புறநானூறு. சங்க இலக்கியங்களில் இது பலராலும் தனித்து வாசிக்கப்பட்ட நூல். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருப்பெற்று வளர்ந்த திராவிட இயக்கம், தன் அடையாளங்களைச் செவ்விலக்கியங்களின் மூலமாகக் கட்டமைக்க முனைந்தது. இச்செயல்பாட்டிற்குப் பெரிதும் உதவியது புறநானூறு. தமிழ்த் தேசிய இனத்தின் அடையாளமாகப் புறநானூறு புரிந்துகொள்ளப்பட்டது” என்கிறார் தமிழறிஞர் முனைவர் வீ. அரசு அவர்கள்.

‘வீர ஊழிக் கால இலக்கியங்களில் தனித்தன்மை வாய்ந்த இலக்கியம் புறநானூறு’ என்பது கலைநிதி க. கைலாசபதி அவர்களின் கருத்து.

சமூகத்தின் வாழ்வியல் ஒருங்குநெறியையே தமிழர் ‘அறம்’ என்றனர். வடமொழியாளர் கூறும் ‘தருமம்’ வேறு; தமிழர் கூறும் ‘அறம்’ வேறு. வடமொழியாளரின் தருமம் வருண நீதிகளுக்கு உட்பட்டது. பிராமணன் கொலைக்குற்றமே புரிந்தாலும் அவனைத் தண்டிக்கக் கூடாது; மொட்டையடித்தால் போதும். ஆனால், ஒரு சூத்திரன் வேதம் ஓதுதலைக் காதால் கேட்டாலும் அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்பது வடநூலார் தருமம். மனிதகுலக் கீழ்மைகளின் தொகுப்பு வடநூல் நெறி என்றால், மனிதகுல மேன்மைகளின் தொகுப்பைத் தமிழர் நெறி எனலாம்.

நானூறு பாடல்கள் அடங்கிய புறநானூற்றைப் போர்முறை வாழ்வின் இலக்கியம் எனலாம். போர்க்குணத்தை மெச்சிய புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பு இது. இந்நூலைப் படிக்கும் போது நம்முள் ஒரு கேள்வி எழும். ‘இந்தப் போர் இலக்கியத்தைச் சுவைத்துப் படிக்கிறோமே. போர் இன்றும் நமக்குத் தேவையா?’

எட்கார்சுனோ என்னும் எழுத்தாளர் Red Star Over China என்னும் தமது நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். “போர்க்களங்கள் அன்று ஊருக்கு வெளியே தனித்து இருந்தன. இன்று ஒவ்வோர் ஊரும் போர்க்களமாகிவிட்டது. ஒவ்வொரு தெருவும், ஒவ்வொரு வீடும் போர்க்களமாகிவிட்டன.”

அநீதிகள் எல்லா இடங்களிலும் எல்லா மட்டங்களிலும் தலைவிரித்தாடும் போது, போர்க்குணமில்லாமல், போரில்லாமல் நாம் எப்படி வாழமுடியும்? போரின் வடிவங்கள்



மாறும்; போரிடுதல் மாறுவதில்லை. அமைதியான வாழ்வை, இணக்கமான வாழ்வை வேண்டுவோர் போராடியே தீரவேண்டும். போர்க்குணத்தை இழப்போர் எல்லாவற்றையும் இழந்து போவர் என்பது திண்ணம். பாவலன் துங் கூறினான், “ஆயுதத்தை ஒழிக்க ஆயுதத்தையே எடு” என்று.

எனவே நம் முன்னோரின் போர்க்குணத்தையே நம் மூத்த வாழ்க்கை அறமாக நாம் புறநானூற்றில் காண்கிறோம். நம் தாய் ஒருத்தி புறநானூற்றில் தன் தோழியிடம் பேசுகிறாள்.

“சிற்றில் நற்றூண் பற்றி, நின் மகன்
யாண்டுளனோ என வினவுதி, என்மகன்
யாண்டுளன் ஆயினும் அறியேன்! ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே”
(புறம் 86)

‘என் வயிறு புலி தங்கியிருந்த குகை. என் மகன் போர்க்களத்தில்தான் இருப்பான்’ என்று மொழியும் தாயின் சொற்களில் கொப்பளிக்கும் வீரம் எவ்வளவு சூடு மிகுந்தது! புறநானூற்றிலிருந்து நாம் எடுத்துப் பேண வேண்டியது இந்தப் போர்க்குணத்தைத்தான்.

இன்று, சூத்திரரும் பஞ்சமரும் கல்வியைப் பெற்றுவிடக் கூடாதென்று நீட்டென்றும் பூட்டென்றும் போடுபவர்கள், அன்றைக்கே மனுநீதியாகச் சட்டம் வகுத்தார்கள். தாழ்த்தப்பட்டவர்கள், உடல் உழைப்பாளருக்குக் கல்வி இல்லை என்று. இந்த அநீதியை, அன்று தமிழகத்தில் ஆட்சியாளராய் இருந்த மன்னர்களே எதிர்த்தார்கள். பாண்டியன் நெடுஞ்செழியன் கூறுகிறான் : “உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் கற்க வேண்டும்; பெற்ற தாயும் கற்றவனையே அதிகம் விரும்புவாள்; குடும்பத்தில் மூத்தவனை அழைக்காமல் கற்றவனையே அரசனும் அழைப்பான்; கீழ்ப்பால் ஒருவன் கற்றிருந்தால் மேல்பால் ஒருவனும் அவனுக்கு அடங்கி நடப்பான்” (புறம் 183).

அறிவாளர், ஆட்சியாளர், வணிகர், உடலுழைப்பாளர் என்பது உலகளாவிய நாற்பால் பகுப்பு. இது பிறவியால் வருவதன்று. ஆனால் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்பது பிறவியால் கற்பிக்கப்பட்ட நால்வருணம். **நல்வருணம் வேறு; நாற்பால் வேறு. நால்வருணத்தில் கீழோன் கல்வி கற்க உரிமை இல்லை. நாற்பால் பகுப்பில் கீழானவன் (உடலுழைப்புச் சமூகத்தைச் சேர்ந்தவனும்) கல்வி கற்க முடியும்.** எனவே அனைவருக்கும் கல்வியை அரசனே வற்புறுத்துகிறான். அனைவரும் கற்க வேண்டும் என்தே தமிழர் அறம். புறநானூறு புலப்படுத்துவது இதைத் தான்.

ஒரு தேசத்திற்குச் செல்வச் செழிப்பு இன்றியமையாதது. ஆனால், அது ஒருவரிடம் குவிந்து கிடப்பதால் பயனில்லை. அது பரவலாக்கப்பட வேண்டும். “செல்வத்துப் பயனே ஈதல்” என்று புறநானூறு (189) கூறுவதை இவ்வாறுதான் புரிந்து கொள்ள முடியும். நான் மட்டுமே துய்க்க வேண்டும் என வைத்திருப்பவன் அதனை வீணாக்குகிறான். எனவே செல்வத்தைப் பகிர்ந்து துய்க்க வேண்டும். புறநானூற்றின் 163-ஆம் பாடல் இதனையே வலியுறுத்துகிறது. “இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும் எல்லோர்க்கும் கொடுமதி” என்கிறார் புலவர் பெருஞ்சித்திரனார். பகிர்ந்து இன்புறுதல் என்னும் அறத்தைப் புறநானூற்றின் பல பாடல்களில் காணலாகிறோம்.

நீரறம் பேணுதல் சங்க காலத்தில் மக்களாலும் மன்னர்களாலும் போற்றப்பட்ட ஒரு பேரறமாக இருந்தது. புறநானூறு 18ஆம் பாடலில் குடபுலவியனார் கூறுகிறார் :

*“உயிர்களுக்கு உணவு வேண்டும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர். உணவு என்பது நிலத்தொடு கூடிய நீரின் ஆக்கம். எனவே, நிலம் குழியான பகுதிகளில் நீர்நிலைகளை உருவாக்க வேண்டும்; பாசன வசதியைப் பெருக்க வேண்டும். இதற்கு முயல்பவரே முயற்சியாளர்.”*

*உழுதொழிலை மேம்படுத்திக் குடிநலம் காத்தல் ஓர் அரசின் தலையாய அறமாக அன்று உணரப்பட்டது. புறநானூற்றின் 35-ஆவது பாடலில் புலவர் வெள்ளைக் குடி நாகனார் இதனைத் தெளிவுபடுத்துகிறார்.*

“பகைவர்களை வென்று மன்னர்கள்
பெறுகின்ற வெற்றி என்பது,
ஏரினால் நிலத்தில் ஊன்றி, விளைந்த
நெல்லின் பயனாகும்.
எனவே, அரசே, எருதுகளின் துணையுடன்
பயிர்த்தொழில் புரிந்து
மக்களைக் காக்கும் உழவர் குடிக்கு நீ
உதவுவாய் எனில்,
அடங்க மறுக்கும் பகைவரும் அடங்கி
வருவர்” என்கிறார்.

*இன்று இந்தியாவை வல்லரசாக மாற்ற முனையும் தலைவர்களோ “வேளாண்மையை விட்டு வெளியே வாருங்கள்” என மக்களை அழைக்கிறார்கள். உண்டிகொடுப்பாரை ஒன்றுமில்லாதவராக்கிவிட்டு, இவர்கள் தேசத்தை எப்படி உயர்த்தப் போகிறார்களோ தெரியவில்லை.*

*புறநானூற்றுச் சான்றோரின் அறநோக்கில் மக்கள் மீதான பரிவும், திட்டமிட்டுச் யெல்படட வலியுறுத்துவதும் முதன்மை பெறுகின்றன. புறம் 184-இல் பிசிராந்தையார் பாண்டிய மன்னனுக்குக் கூறுகிறார் :*

“காய்நெல் அறுத்துக் கவளமாய் யானைக்கு
ஊட்டுவதுபோல்
அரசன் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும்.
மக்கள்மீது பரிவு
காட்ட வேண்டும். வரம்புக்கு உட்பட்டு
வரிவாங்க வேண்டும்.
அறிவார்ந்த கருத்தாளரையே அருகில்
வைத்துக் கொள்ள வேண்டும்.
தரமற்ற ஆரவாரக் கூட்டத்தை அணுகவிடக்
கூடாது. திட்ட
மிட்டுச் செயல்பட்டால் கோடி ஆக்கச்
செயல்களை மேற்
கொள்ளலாம். நாடும் உயர்வடையும்.”

*மன்னர்களை அறம் திறம்பாமல் இட்டுச் செல்பவர்களாக அன்றைய புலமைச் சான்றோர்கள் விளங்கினார்கள்.*

*புறநானூறு 182-ஆம் பாடலில் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் தன்னலமற்ற பொதுநல வாழ்வை மெச்சுகிறான். பிறர்க்காக வாழ்பவர் உள்ளதால்தான் உலகம் உள்ளது என்கிறான்.*

“அமிழ்தமே கிடைத்தாலும் தாமே தனித்து
உண்ணாதவர்,
சினம் கொள்ளாதவர், செயலைத் துறந்து
உறங்காதவர்,
அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுபவர், புகழ்தரும்
செயலுக்கு
உயிரையும் கொடுப்பவர், உலகமே
கிடைத்தாலும் பழிச்செயலை
நாடாதவர், சோம்பலை உதறியவர்,
தமக்கென உழைக்காமல்
காமல் மக்கள் யாவருக்குமாக உழைப்பவர்
உள்ளதால்தான்
உலகம் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறது”.

*சமூக நலத்தையே முதன்மைப்படுத்துகின்ற அறநோக்கு அந்நாளைய தமிழர் பண்பாக இருந்திருக்கிறது என்பதைத் தான் இந்தப் புறநானூற்றுப் பாடல் புலப்படுத்துகின்றது.*

*எல்லாவற்றுக்கும் மேலாக, 'உலகம் ஒன்று, மனிதகுலம் ஒரே குலம்' என்பதுதான் தமிழர் அறநோக்கின் உச்சம் எனலாம், புறநானூற்றின் **192**ஆம் பாடல் கணியன் பூங்குன்றனாரின் சிந்தனை ஆக்கம். உலகம் போற்றும் உயர் எண்ணச் செல்வம் இது!*

"யாதும் நம் ஊரே! யாவரும் நம்
உறவினரே!
தீதும் நன்மையும் பிறர்தர வருவதில்லை!
வருத்தமும் வருத்தம்தணிதலும் பிறரால்
வருவன அல்ல!
சாவும் புதியதன்று!
வாழ்க்கை இனியது என்று மகிழ
வேண்டியதும் இல்லை!
வெறுப்புற்று, இது துன்பமானது எனக் கூற
வேண்டியதும் இல்லை!
மின்னல் இடியோடு வானம் மழை
பொழிகிறது!
மலை முகடுகளில் துளிகளாய் வீழ்ந்து
அருவியாகிறது!
தரையில் இறங்கி வளம் பொருந்திய
பேராறாய் நடந்து செல்கிறது!
ஆற்றில் அடித்துவரப்பட்ட ஒரு மிதவை
ஆற்று நீரோட்டத்தின் வழியே செல்வது
போல,
உயிர்களின் வாழ்க்கை
இயற்கையாய் அமைந்த
இயங்குநெறிப்படியே செல்லும்!
அறிவாளர்கள் கண்டுரைத்த உண்மைகளால்
இந்தத் தெளிவை நாம் பெற்றோம்.
எனவே,
மாட்சிமை மிக்க பெரியவர்களைப் பார்த்து
நாம் வியப்பதும் இல்லை!
எளியோரை ஒருபோதும் இகழ்ந்துரைப்பதும்
இல்லை!"

*இந்த அறநோக்குகள் கூடிய மனவளம் வாய்த்துவிட்டால், உலகில் போர் இருக்காது! பூசல் இருக்காது! பரிவும், நேயமும், இணக்கமும், நலன்களும் செழிப்புற்று ஓங்கும்.*

●

## தமிழ் வீரரின் எழுச்சி

லல்லல லல்லல லால-ல
லல்லல லல்லல லால-லால
*(என்ற வாய்ப்பாட்டு)*

எங்கள் இளந்தமிழர் வீரர்-அவர்
இப்புவி வீழினும் வீரர் ! வீரர்!
சிங்கப் படையினைப் போலப்-பகைத்
தீயை எதிர்த்திடும் வீரர் ஆவர்!
கங்கை தவழ்ந்திடு நாடு-தங்கள்
காதல் எலாமந்த நாட்டினோடு
தங்க ளினத்தவர்க்காக-உயிர்
தன்னையு மீந்திடும் வீரர் ஆவர்!
*(எங்கள் இளந்தமிழர் வீரர்)*

வெற்றி நிலைத்திட வேண்டும்-தங்கள்
வீர மெலாம்புவி ஏறவேண்டும்
சுற்றம் சுகப்பட வேண்டும-நற்
சுதந்திரம் வாழ்வினில் கூடவேண்டும்
மற்றிவை; வீரரின் உள்ளம் தனில்
மண்டிக் கிளர்வன; வாழி! வாழி
சற்றிதில் சோர்பவர் அல்லர்-இதில்
சாவடைதல் ஒன்று வாழ்தல் ஒன்று!
*(எங்கள் இளந்தமிழர் வீரர்)*

சோழனென் றேஒரு வீரன்-இந்தத்
தொல்புவி காத்தவன் வீரன்-வீரன்!
வாழிய பாண்டிய வீரன்!-அவன்
வாய்மையி லேபெரும் வீரன்-வீரன்!
ஊழிபெ யர்ந்துவந் தாலும் தங்கள்
ஊக்கங் கெடாக்குடி தோன்றினோர்கள்.
வாழ்க! தமிழ்க்குல வீரர்-அந்த
வன்மைத் தமிழ்க்குலம் வாழ்க! வாழ்க!
*(எங்கள் இளந்தமிழர் வீரர்)*

**- பாரதிதாசன்**



# வகுப்புரிமைக் கொள்கை! தொடரும் தடைகள்!

- ஆ. வந்தியத்தேவன்

"**ச**மூகத்தில் நலிந்தோர், முதியோர், கைவிடப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் ஆகிய பிரிவினரைக் கடுமையான வாழ்வுக்கான போட்டியிலிருந்து ஓர் அரசு பாதுகாப்பதுதான் "சமூகநீதி" ஆகும். ஒடுக்கப்பட்டவருக்கென சில வாய்ப்புகளைக் கொடுப்பதன் மூலம் சமூகத்தின் முன்னேறிய பிரிவினருடன் அவர்களுக்குச் சமமான வாய்ப்பளிக்க முடியும். சமூக நீதி என்பது உரிமைகளின் தொகுப்பாகும். ஒருவகையில் இது மற்றவர்களின் உரிமையைக் குறைப்பது போலத் தோன்றினாலும், வேறொரு வகையில் மற்றவர்களின் உரிமைகளுக்கான பாதுகாப்பும் ஆகும். இருப் போரையும் இல்லாதாரையும் சரிநிகராகச் செய்யும் ஒரு சமன் செய் சக்கரமே (Balancing Wheel) சமூக நீதியாகும்" என்று நீதிபதி கே. சுப்பாராவ் அவர்கள் சமூகநீதி குறித்து வரையறை செய்து விளக்கமளித்தார். இந்த சமூகநீதியைப் பெறுவதற்கான போராட்டம், ஆரிய-திராவிட போராட்டமாய் இன்றுவரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

தந்தை பெரியார் அவர்கள் தன் பொது வாழ்க்கையை காங்கிரசுக் கட்சியில் துவக்கிய காலத்திலேயே ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக விகிதாச்சார உரிமை எனும் இடஒதுக் கீட்டுக் கொள்கையை வலியுறுத்தி போர்க்குரல் எழுப்பினார். பார்ப்பனப் பண்ணையமான காங்கிரசுக் கட்சி இதனை ஏற்க மறுத்தது.

காங்கிரசுக் கட்சியின் அமைப்பான "சென்னை மாகாணச் சங்கம்" (Madras Presidency Association) என்ற பார்ப்பனர் அல்லாதார் அமைப்பின் துணைத் தலைமைப் பொறுப்பில் இருந்த பெரியார், இடஒதுக்கீட்டுக் கொள்கைக்காக வாதாடினார். காங்கிரசுக் கட்சியின் பார்ப்பனத் தலைவர்கள் இதனை ஏற்கவில்லை. இடஒதுக்கீட்டுக் கொள்கையைவிட, மற்ற அரசியல் பிரச்சினைகளுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இதனால் சென்னை மாகாணச் சங்கம், விரைவிலேயே செயலிழந்து மறைந்து போனது. ஆனாலும் பெரியார் சோர்ந்திடவில்லை; தொடர்ந்து தம் கொள்கையை வற்புறுத்தினார். காங்கிரசுக் கட்சியின் மாநாடுகளில் எல்லாம் இதனை தீர்மானமாக்கி, செயல்படுத்தச் செயலில் இறங்கினார்.



காங்கிரசுக் கட்சியின் *26*-ஆவது மாநில மாநாடு *1920*-ஆம் ஆண்டில் திருநெல் வேலியில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் பார்ப்பனர் அல்லாத உறுப்பினர்கள் பெரியார் தலைமையில் ஒன்றுகூடி, தேர்தல் - வேலை வாய்ப்புகள் ஆகியவைகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கிட அரசை வலியுறுத் தும் தீர்மானத்தைத் தயாரித்து அதனைத் தீர்மான வரைவுக் குழுவிடம் அளித்தார்கள். பெரியார் முன் வ.உ. சிதம்பரனாரும், தண்டபாணிப் பிள்ளையும், சோமசுந்தரம் அவர்களும் வழிமொழிந்த இத்தீர்மானத்தை எஸ். கஸ்தூரி ரங்க அய்யர் கடுமையாக எதிர்த்தார். பின்னர் ஒருவழியாக தீர்மானத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனால் மாநாட்டில் இத்தீர்மானம் நிறை வேற்றப்படவில்லை. பார்ப்பனர் அல்லாத தலைவர்கள் ஆத்திரம் அடைந்தனர். தீர்மானக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வகுப்பு வாரிப் பிரதிநிதித் துவத் தீர்மானம் என்ன ஆயிற்று என்று தண்டபாணிப் பிள்ளை எழுந்து கேட்டார். "அது பொது நன்மைக்கு விரோதமான தீர் மானம். எனவே அதைத் தவறானது என்று தீர்மானித்துவிட்டோம்" என்று மாநாட்டின் தலைவரான எஸ். சீனிவாச அய்யங்கார் அலட்சியமாகவும், அகம்பாவ மாகவும் பதில் கூறினார்.

இதனை அடுத்து, காங்கிரசுக் கட்சியின் *27*ஆவது மாநாடு தஞ்சாவூரில் நடைபெற்ற போதும், பெரியார் வகுப்புரிமைத் தீர்மானத்தை எழுப்பினார். அங்கும் எதிர்ப்பு கிளம்பி, ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனைப் போலவே, திருப்பூரில் நடைபெற்ற கட்சியின் *28*ஆவது மாநாட்டிலும் பெரியாரின் வகுப்பு ரிமைத் தீர்மானம் புறக்கணிக்கப் பட்டது.

*1924*-ஆம் ஆண்டில் திருவண்ணாமலை யில் நடைபெற்ற காங்கிரசுக் கட்சியின் மாநாடு பெரியார் தலைமையில்தான் நடை பெற்றது. ஆனால் சீனிவாச அய்யரும், பார்ப் பனர்களும் கூச்சலும், குழப்பமும், ரகளையும் செய்து, அங்கும் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமல் செய்துவிட்டார்கள்.

இதற்கு அடுத்து காங்கிரசுக் கட்சியின் *31*-ஆவது மாநாடு காஞ்சிபுரத்தில் திரு.வி.க. தலைமையில் கூடியது. இந்த மாநாட்டிலும் பெரியாரும் எஸ். இராமநாதனும் கொண்டு வந்த வகுப்புரிமைத் தீர்மானம் புறக்கணிக்கப் பட்டது. தீர்மானம் ஏன் நிறைவேற்றப்பட வில்லை? என்று பெரியார் எழுந்து நின்று ஆவேசமாய்க் கேட்ட போது, தீர்மானம் ஒழுங்குக்கு மாறானவை யாதலால், அதனை ஏற்க முடியாது என்று மாநாட்டுத் தலைவரான திரு.வி.க. பார்ப்பனர்களின் மொழியிலேயே பதில் அளித்தார்.

"இனி காங்கிரசை ஒழிப்பதே என் முதல் வேலை!" என மாநாட்டுப் பந்தலிலேயே சூளுரைத்துவிட்டு, வெளியேறினார் பெரியார்! தாம் உயர்த்திப் பிடித்த வகுப்புரிமைக் கொள்கையை நிறைவேற்றிட, தம்முடைய சுயமரியாதை இயக்கத்தின் மூலம் தொடர்ந்து களமிறங்கினார் பெரியார்!

தந்தை பெரியார் அவர்களின் வகுப்புரிமை முழக்கத்தை *1909*-ஆம் ஆண்டில் பார்ப்பன ரல்லாதார் சங்கமும், *1912*-ஆம் ஆண்டில் சென்னை ஐக்கிய சங்கமும், *1913*-ஆம் ஆண்டில் சென்னை திராவிடர் சங்கமும், *1916*-ஆம் ஆண்டு முதல் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற நீதிக்கட்சியும் ஓங்கி எழுப்பின.

மக்கள் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த நீதிக்கட்சி இதனை நிறைவேற்றச் சட்டம் இயற்றியது. பனகல் அரசர் தலைமையிலான அமைச்சர் அவை *1921* ஆகஸ்ட் திங்களில், இதற்கான சட்ட வரைவை சட்டமன்றத்தில் முன்வைத்தது. இந்த சட்ட வரைவு, அரசு ஆணையாக (*16.9.1921*) அறிவிக்கப்பட்டது.

இந்து, சுதேசமித்திரன் முதலான பார்ப்பன ஏடுகள் இதனைக் கடுமையாக எதிர்த்து எழுதின. பார்ப்பனர்கள் சிண்டை அவிழ்த்து

விட்டு, வீதிக்கு வந்தார்கள். அரசு ஆணையை நிறைவேற்றும் பொறுப்பில் இருந்த பார்ப்பன அதிகாரிகளும் இவர்களுக்குத் துணை நின்றார்கள். இதனால் 6 ஆண்டுகளாகியும் அரசின் ஆணை நடைமுறைக்கு வரவில்லை!

இதன்பின்னர் பதிவுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற எஸ். முத்தையா முதலியார் அனைத்துத் துறைகளிலும் வகுப்புரிமையை நடைமுறைப்படுத்தினார். முத்தையா முதலியார் வாழ்க! என்று குடியரசு இதழில் தலையங்கம் தீட்டி, பாராட்டினார், பெரியார். "வகுப்புப் பித்தம் தலைக்கேறிவிட்டதா?" என்ற நஞ்சைக் கக்கி சுதேசமித்திரன் (8.11.1928) தலையங்கம் தீட்டியது.

தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு, அவர்கள் மக்கள் தொகைக்கேற்ப 12.5 விழுக்காடு இருக்க வேண்டும் என்று நீதிக்கட்சி பரிந்துரைத்த போது, இதனைச் செய்தால், பார்ப்பனரல்லாதாரும் கேட்பார்கள். எனவே இதனை ஏற்க இயலாது. அந்த கோப்பிலேயே எழுதி, திருப்பி அனுப்பப் பட்டது. நீதிக்கட்சியை மீண்டும் ஆட்சிக்கு வரவிடாமல் செய்வதிலும் இவர்கள் வெற்றி கண்டார்கள்.

இதன் பின்னர் ஆட்சிக்கு வந்த ஆந்திரப் பார்ப்பனரான, முதல்வர் பிரகாசம், 20.8.1946 அன்று சட்டமன்றத்திலேயே "நான் கம்யூனில் ஜி.ஓ.வுக்கு எதிரானவன் என்பதை வெளிப்படையாகவே ஒப்புக் கொள்கிறேன்" என்று பிரகடனம் செய்தார்.

இந்தப் பிரகாசத்திற்கு அரசியல் நெருக்கடி வந்தது. நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறிய நிலையில், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதல்வரானார். பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு செய்த முதல் முதல்வர் என்ற பெருமையை ஓமந்தூரார் பெற்றார். இதனை எதிர்த்து, இந்திய நடுவண் அரசின் பொறுப்பில் இருந்த காங்கிரசு அரசு, பிற்படுத்தப்பட்டோருக்கு தனி ஒதுக்கீடு தரக்கூடாது என்ற ஆணையையும் ஏற்க மறுத்துவிட்டார் முதல்வர் இராமசாமி ரெட்டியார்.

தாடி இல்லாத இராமசாமி என்று பார்ப்பன ஏடுகள் முதல்வரைக் குறிவைத்துத் தாக்கி எழுதின. தமிழகத்திற்கு அப்போது வந்திருந்த காந்தியாரிடம் ஓமந்தூராரைப் பற்றி புகார் கூறினார்கள். அவர் பதவி விலகும் அளவுக்கு, சதிச் செயலில் ஈடுபட்டு, சூழ்ச்சி வலையை விரித்தார்கள். இதன் விளைவாக ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும் முதல்வர் பதவியில் இருந்து விலகினார். தொடர்ந்து குமாரசாமி ராஜா முதல்வரானார். எதிர்க்கட்சித் தலைவரான பிரகாசம் சட்ட மன்றத்திலும், வெளியேயும் இடஒதுக்கீட்டுக்கு எதிரான கருத்துக்களை பேசிக் கொண்டே இருந்தார். அவருடன் இணைந்து பாஷ்யம் அய்யங்கார் என்ற முன்னாள் அமைச்சரும் சட்டமன்றத்தில் தாண்டவமாடினார்.

"சென்ற 25 வருட காலமாகவே இருந்து வரும் கம்யூனல் ஜி.ஓ.வின் காரணமாகவே திறமையுள்ள மக்கள் நிர்வாகத்தில் இடம்பெற வில்லை. பார்ப்பனர்கள் என்ற காரணத்தால் அவர்களைப் புறக்கணிப்பது தவறு. இந்த கம்யூனல் ஜி.ஓ.வை ரத்து செய்தால்தான் நாட்டில் சிறப்பான நிர்வாகம் நடைபெறும்" என்று பொய் அழுகை அழுது புலம்பினார் பாஷ்யம் அய்யங்கார்!

இந்தச் சூழ்நிலையில், நீதிமன்றத்தின் மூலம் வகுப்புரிமையின் குரல்வளையை நெறித்துக் கொல்ல பார்ப்பனர்கள் சதிச் செயலில் ஈடுபட்டார்கள். இவர்கள் செண்பகம் துரைராசன் என்பவரை ஏவிவிட்டார்கள்.

செண்பகம் துரைராசன் என்னும் பார்ப்பனப் பெண் கணவனை இழந்தவர். பி.ஏ. பட்டம் பெற்று 15 ஆண்டுகள் கழித்து, மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பித்ததாகவும் தகுதி இருந்த போதிலும், தமிழக அரசின்

இடஒதுக்கீட்டுக் கொள்கையால்தான் தமக்கு இடம் கிடைக்கவில்லை என்றும், தகுதி திறமையைப் புறக்கணிக்கும் வகுப்புவாரி உரிமை தடையாக இருக்கக்கூடாது என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் பார்ப்பன மாணவிக்காக வழக்காடினார். "சென்னை இராஜ்ய மக்கள், புதிய சகாப்தத்துக்கேற்ப தங்களை அமைத்துக் கொள்ள வேண்டுமேயன்றி, வகுப்புரிமை போன்ற பிற்போக்கான விஷயங்களில் தலை யிட்டு வாதிடலாகாது" என்று நீதிமன்றத்தில் உபதேசம் செய்தார் அல்லாடி!

*27.7.1950* அன்று அரசமைப்புச் சட்ட விதி *29(2)*க்கு முரண்பட்டது கம்யூனல் ஜி.ஓ. என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. தமிழக அரசு தீர்ப்பினை எதிர்த்து *9.4.1951* அன்று உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்தது.

திருமதி. செண்பகம் துரைராசன் எந்த மருத்துவக் கல்லூரிக்கும் மனு செய்யவே இல்லை என்பது உச்சநீதிமன்ற விசாரணை யின் போது அம்பலமானது. அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல், உச்சநீதிமன்றமும் இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியது. இதனை ஏற்க மறுத்து பெரியார் தலைமையில் தமிழகம் போர்முரசு கொட்டியது. அண்ணாவின் தி.மு.கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கியாய் வெடித்துக் கிளம்பியது. பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சித் தீயை முதலில் பற்ற வைத்தார்கள். வகுப்புரிமைக்காக முதன் முதலாக அரசு ஆணை அறிவித்த முத்தையா முதலியாரும் நமக்கு ஆதரவாக களம் இறங்கினர். இதன் விளைவாகத்தான், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம் செய்யப்பட்டு, இடஒதுக்கீட்டு உரிமை காக்கப்பட்டது. இதன்பின் இந்திய அளவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைக் கண்டறிய, அவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வகை செய்ய காகா கலேல்கர் தலைமையிலான குழுவை நடுவண் அரசு அமைத்தது. அந்தக் குழுவும் பல பரிந்துரைகளைச் செய்திருந்தது. இந்த நிலையில் பிரதமர் ஜவகர்லால் நேரு, கலேல்கரைக் கடுமையாகக் கண்டித்ததைச் சோசலிஸ்ட் தலைவர் மதுலிமாயி பின் நாளில் அம்பலப்படுத்தினார்.

இதன் விளைவாக, பிற்படுத்தப்பட் டோரின் நலனுக்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவரான கலோல்கரே, சமூக நீதிக்கு எதிராக, குடியரசுத் தலைவருக்கு *30* பக்கங்கள் கொண்ட நீண்ட கடிதத்தை எழுதி, இந்த பரிந்துரைகளை நிறைவேற்றக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

"அரசுப் பதவிகளில் இடஒதுக்கீடு செய்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். ஏனெனில் அரசுப் பணிகள் என்பவை வேலைக்காரர்களுக்காக (Servants) இல்லை. அவை மொத்த சமூகங்களுக்கும் பணியாற்று வதற்காக" என்று இடஒதுக்கீட்டு எதிர்ப்பாளர் களின் குரலையே கலேல்கர் அக்கடிதத்தில் பதிவு செய்திருந்தார்.

இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராக முனைப்புடன் ஈடுபட்ட இராஜகோபாலாச்சாரி யின் அரசின் சதிவேலைகளையும் நம்மால் எளிதில் மறக்க இயலாது. "எல்லோரும் படித்துவிட்டால் வேலை எங்கிருந்து கிடைக்கும்? எனவே அவரவர் குலத் தொழிலையே செய்ய வேண்டும்" என்று சலவைத் தொழிலாளர் மாநாட்டிலேயே முதல்வர் இராஜாஜி உபதேசம் செய்தார். பள்ளி இறுதி வகுப்பில் (S.S.L.C.) வடிகட்டும் முறையை (Selection) புகுத்தி ஒடுக்கப்பட்டவர்களை கல்விச் சாலையின் உள்ளே நுழையவிடாது 'நந்தியாய்' நின்று தடுத்தார். *6000* தொடக்கப் பள்ளிகளை இழுத்து மூடி கல்விக்கான வாய்ப்புக் கதவை இழுத்து மூடினார்.

குலக்கல்வித் திட்டத்தை அறிமுகம் செய்து, பாதிநேரம் படிப்பு, பாதிநேரம் குலத்தொழில் என வருணாசிரமம் உயிர்த் தெழ ஆணையிட்டது ஆச்சாரியாரின் அரசு! மனுதர்மத்தின் மறுபதிப்பான இந்தச் சட்டத் தை எதிர்த்து பெரியாரும் - அண்ணாவும் போராடினார்கள். ஒட்டுமொத்தத் தமிழர் களும் போர்க்குரல் எழுப்பியதன் விளைவாக, தமிழகச் சட்டமன்றம் 29.7.1953 அன்று விவாதத்திற்கு எடுத்துக் கொண்டது. விவாதத் தின் முடிவில் வாக்கெடுப்பு நடந்தது.

தீர்மானத்திற்கு ஆதரரவாக 138 வாக்கு களும், எதிர்ப்பாக 138 வாக்குகளும் பதிவானது. எதிர்க்கட்சித் தலைவரான, கம்யூனிஸ்ட் கட்சியின் பி. ராமமூர்த்தி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை! இந்த நிலையில் அவைத் தலைவர் அரசுக்கு ஆதரவாக வாக் களித்து குலக்கல்வி ஒழிப்புத் தீர்மானத்தை தோற்கடித்தார்.

ஆனாலும்கூட, இத்தீர்மானத்தில் "ஒரு குழு அமைத்து முடிவு கூறும் வரை குலக் கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும்" என்ற திருத்த தீர்மானத்தின் மீதும் வாக் கெடுப்பு நடைபெற்றது. இதற்கு ஆதரவாக 139 வாக்குகளும், எதிர்ப்பாக 137 வாக்கு களும் பதிவாகி திருத்தம் நிறைவேற்றப்பட்ட தையும் நினைவுகூற வேண்டும். அப்போதே ஆட்டம் கண்ட ஆச்சாரியாரின் அரசு, திராவிட இயக்கம் நடத்திய எழுச்சிமிகு போராட்டத்தின் விளைவால், உடல்நலம் சரியில்லை என்று முதல்வர் பதவியில் இருந்து இராஜாஜி விலகும் நிலையை அடைந்தது.

அதன்பின்னர் காமராசரின் அரசும், அண்ணா, கலைஞர் அரசுகளும் சமூக நீதி காக்க நிறைவேற்றிய அனைத்துத் திட்டங் களையும் நம் இன எதிரிகள் மூர்க்கத்தனமாக எதிர்த்தார்கள். அதே நேரத்தில் எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க. அரசு பிற்படுத் தப்பட்டோருக்கு 9000 ரூபாய் ஆண்டு வருமானம் நிர்ணயித்த போது அவர்கள் வானளாவ புகழ்ந்தார்கள்! அவரது அமைச்சர் அவையில் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த டாக்டர் அண்டே என்ற பார்ப்பனர், மருத்துவத் துறையில், பொதுப் போட்டி (Open Competition) என வழங்கப்பட்ட அச்சொற்றொடரின் சுருக்கமான O.C. என்ற வார்த்தையைத் திரிபுவாதம் செய்து Other communities என மாற்றி அதன் அடிப் படையில் ஒதுக்கீடு செய்யப் போவதாக அறிவித்தார்.

மக்கள் எதிர்ப்பையும், நாடாளுமன்றத் தேர்தலில் அளித்த பெரும் தோல்வியையும் கண்டு 9000 ரூபாய் ஆணையை திரும்பப் பெற்று, பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 50 விழுக்காடு என உயர்த்தினார். எம்.ஜி.ஆர். இடஒதுக்கீட்டு எதிர்ப்பாளர்கள் இதனைக் கண்ணை மூடிக்கொண்டு எதிர்த்தது மட்டுமல்ல, உச்சநீதிமன்றத்தில் எம்.ஜி.ஆர். அரசை எதிர்த்து வழக்கும் தொடர்ந்தனர். அதன் பின்னர் 1989ஆம் ஆண்டில் ஆட்சி அமைத்த தேசிய முன்னணியின் அரசின் பிரதமர் வி.பி. சிங் அவர்கள், 6.8.1990 அன்று மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். அதே நேரத்தில் அன்றைய நாள் இரவில், புதுதில்லி ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில், பா.ச.க. பொதுச் செயலாளர் முரளி மனோகர் ஜோஷியும், பார்ப்பனர்களும் ஒன்றுகூடி மந்திராலோசனை நடத்தினார்கள்.

1979-ஆம் ஆண்டு பிரதமர் மொரார்ஜி தேசாய் அரசு, மண்டல் குழுவை அமைத்த போதிலிருந்தே இன எதிரிகள் சதி வேலை யைத் தொடங்கிவிட்டார்கள். மண்டல் குழு பரிந்துரைகள் குப்பைத் தொட்டியில் வீசப் பட்ட நிலையில், வே.ஆனைமுத்து அவர்கள் 26.1.1982 மற்றும் 4.3.1982 ஆகிய நாள் களில் அன்றைய உள்துறை அமைச்சர் ஜெயில்சிங் அவர்களைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டதன் விளைவாக 30.4.1982-இல் மண்டல்குழு அறிக்கை நாடாளுமன்றத்தில்

வெளியிடப்பட்டது. பின்னர் அவைகளை நிறைவேற்றிடவும், நீண்ட போராட்டம் தமிழகத்தில் நடைபெற்றது. வடமாநிலங்களில் அய்யா வே. ஆனைமுத்து தலைமையில் பிரச்சாரம், போராட்டம் எழுச்சியுடன் மக்கள் இயக்கமானது.

அதன் விளைவாக வி.பி. சிங் அரசிற்கு அளித்த ஆதரவை பா.ச.க. திரும்பப் பெற்றது. ராமனின் கமண்டலத்தை மண்டலுக்கு எதிராகத் திருப்பிவிட்டனர். அத்வானியின் ரத யாத்திரை, இரத்த யாத்திரையானது. அதையடுத்து பா.ச.க. அரசுக் கொடுத்துவந்த ஆதரவை விலக்கிக் கொள்ள சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களை ஆட்சியை விட்டு இறக்கினர்.

அதன்பின்னர் மதவாத பா.ச.க. அறுதிப் பெரும்பான்மையுடன் மத்தியில் ஆட்சியில் அமர்ந்தது. கிறித்தவ, இஸ்லாமிய சிறுபான்மையினர்கள் குறிவைத்துத் தாக்கப்படுகிறார்கள். பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்குத் தாரை வைக்கப்படுவதால் வகுப்புவாரி உரிமைக்கு அங்கு வாய்ப்பு இல்லை. தனியார் துறையில் இடஒதுக்கீடு தொடர வேண்டும் என்ற உரிமைக்குரல் மறுக்கப்பட்டுவிட்டது. கிரிமிலேயர் என்ற பொருளாதார அடிப்படை சட்ட விரோதமாகத் திணிக்கப்படுகிறது. பொருளாதார அளவுகோலை முன்வைத்து, முன்னேறிய சமுதாய மக்களுக்கு இடஒதுக்கீடு, 10 விழுக்காடு என புதிய அறிவிப்பை வெளியிட்டு இடஒதுக்கீட்டுக் கொள்கை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மறுக்கப்படும் அநீதி நடைமுறைக்கு வந்ததுவிட்டது.

சமூகநீதி வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவுக்கு பா.ச.க. ஆட்சியில் தடைக்கற்கள் பெருமளவில் பிரளயமாய் எழுந்து நிற்கின்றன. அதனை முறியடிக்க, பெரியாரிய, அம்பேத்கரிய கொள்கையினர், மார்க்சியர்கள் அணிதிரள வேண்டியது முதன்மையான கடமையாகும். தடைக்கற்களைத் தகர்த்தெறிந்து, சமூகநீதியை மீட்டெடுக்க நாம் முழுவீச்சில் களமாடுவோம்!

●

தமது வாழ்வின் சமூகப் பொருளுற்பத்தியில் மனிதர்கள் திட்டவட்டமான உறவுகளை மேற் கொள்கிறார்கள். இவை இன்றியமையாதவன; அவர்களது சித்தத்திலிருந்து சுயேச்சையாக நிற்பன. இந்த உற்பத்தி உறவுகள் அவர்களது பொருள் வகையான உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலுள்ள ஒரு திட்டவட்டமான கட்டத் துக்கு இணைப் பொருத்தமாக அமைகின்றன. இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டுத் தொகை, சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பாக, உண்மையான அடித்தளமாக அமைகிறது. இவ் அடித்தளத்தின் மீது ஒரு சட்ட மேலடுக்கும் அரசியல் மேலடுக்கும் எழுகின்றன. இந்த அடித்தளத்துக்கு இணைப் பொருத்தமாக சமூக உணர்வின் திட்டவட்டமான வடிவங்கள் அமை கின்றன. மனிதர்களின் வாழ்நிலையைத் தீர் மானிப்பது அவர்களது உணர்வு அல்ல, மாறாக அவர்களது சமூக வாழ்நிலையே அவர்களது உணர்வைத் தீர்மானிக்கிறது.

**- காரல் மார்க்ஸ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

உற்பத்தியின்போது மனிதர்கள் இயற்கை மீது மட்டும் செயலாற்றுவதில்லை. கூடவே ஒருவர் மீது ஒருவரும் செயற்படுகின்றனர். தம்மில் ஒருவரை ஒருவர் பாதித்தும் கொள்கின்றனர். ஒரு குறிப்பிட்ட முறையில் ஒத்துழைப்பதன் மூலமும் தமது செயற்பாடுகளை ஒருவருக் கொருவர் பரிமாறிக் கொள்வதற் மூலமுமே உற்பத்தி செய்கின்றனர். உற்பத்தியில் ஈடு படும் பொருட்டு அவர்கள் ஒருவருடன் ஒருவர், திட்டவட்டமான தொடர்புகளையும் உறவு களையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும். இந்த சமூகத் தொடர்புகள், உறவுகள் ஆகிய வற்றுக்கு உள்ளேதான் மீதான அவர்களது இயக்கம், உற்பத்தி நடைபெறுகிறது.

**- காரல் மார்க்ஸ்**



# திராவிடம் தமிழியத்துக்கு அரண் சேர்க்கும்!

*- ப. திருமாவேலன்*

**த**மிழ்-தமிழன்-தமிழ்நாடு ஆகிய மூன்றுக்காகவும் முக்கால் நூற்றாண்டுகாலம் எழுதியும் பேசியும் செயல்பட்ட தமிழ்த்தேசியரே தந்தை பெரியார்.

அவர் நடத்திய இந்தி - சமஸ்கிருதப் போர் என்பது தமிழ் காக்கும் போரே!

இடஒதுக்கீடு - சமூகநீதி என்பது தமிழனை முன்னேற்றும் கொள்கைத்திட்டமே!

வடவர் மற்றும் பிற மொழியாளர் எதிர்ப்பும், தனி நாடு முழக்கமும் தமிழ்நாடு காக்கும் அரணே!

இந்தியை எதிர்த்தவர் உண்டு. ஆனால் அவர்கள் சமஸ்கிருதத்தை எதிர்த்திருக்கமாட்டார்கள். சமூகநீதியை ஆதரித்தவர்கள் உண்டு. ஆனால் ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டத்தை அவர்கள் கண்டித்திருக்க மாட்டார்கள். தமிழக எல்லை காத்த போர் வீரர்கள், மாகாணக் காவலர்கள் உண்டு. ஆனால் அவர்கள் வடவர் ஆதிக்கம், பனியா - மார்வாடி, இந்தியப் பேரரசவாதத்தை மறந்தும் விமர்சித்திருக்க மாட்டார்கள். இம்மூன்றையும் ஒன்றாய்ச் செய்த ஒரே தலைவர் தந்தை பெரியார்!

தமிழ்காக்கும் போராட்டத்தில் இந்தித் திணிப்புக் காலகட்டத்தில் மட்டும் வந்து போனவர்கள் உண்டு.தமிழக எல்லைக் காப்புப் போராளிகள் மொழிவாரி மாகாணங்கள் பிரிந்த பிறகு 'இந்திய தேசியம்' காக்கப் போய்விட்டார்கள். ஆனால் 1925 முதல் 1973 வரை தன் இலக்கு மாறாத, எந்தத் திசைக்கும் மாறாமல் தமிழ் - தமிழன் - தமிழ்நாடு என இருந்தவர் தந்தை பெரியார் மட்டுமே.

ஒரு தமிழ்த்தேசியர் எதைப் பேசவேண்டுமோ அவை அனைத்தையும் பேசிய 'ஒரே' தமிழ்த்தேசியர் தந்தை பெரியார் மட்டும் தான், 'தமிழ்த்தேசியர்' என்று சொல்லிக் கொள்ளாமலேயே!

மனிதர்களில் இரத்தபேதம் இல்லை, பால் பேதம் இல்லை என்பதே அவரது ஒற்றை வரிக் கொள்கை. தமிழினத்துக்குள் இரத்த பேதம் செய்த ஆரியத்துக்கு எதிராக, தமிழின விரோதிகளுக்கு எதிராக அவர் தொடங்கிய தன்மான இயக்கமே சுயமரியாதை இயக்கம்.

இவ்வியக்கம் 1929 செங்கற்பட்டில் நடந்த முதலாவது சென்னை மாகாணச் சுயமரியாதை மாநாட்டில் முழுவடிவம் எடுத்தது.



சமூகநீதி, பெண்களுக்குச் சொத்துரிமை, தீண்டாமை ஒழிப்பு, அனைத்துப் பொது இடங்களிலும் பட்டியலினத்தவர்க்கு தடை இருக்கக்கூடாது, நிலஉரிமை, விதவை மணம்-என்ற உரிமை சார்ந்த விழுமியங்களை இம்மாநாடு தனது வேலைத் திட்டமாகக் கொண்டது. இந்த நாத்திக இயக்கமானது, சுயமரியாதை - சமதர்ம இயக்கமான கால கட்டம் இது. இதற்குள் தமிழியத்தைக் கொண்டு வந்து சேர்த்தது 1938.

பெரியார், 1926-ஆம் ஆண்டிலேயே இந்தியை எதிர்த்து எழுதியவர். 1930 நன்னிலம் சுயமரியாதை மாநாட்டில் இந்திக்கு எதிராக தீர்மானம் போடப்பட்டது. அதனைப் பெரும் போராட்டமாக மாற்றியவர் இராஜாஜி. 'இது மொழித் திணிப்பு மட்டுமல்ல, கலாச்சாரப் படையெடுப்பு. வடநாட்டாரின் ஆதிக்கப் படையெடுப்பு' என்றார் பெரியார். திருச்சியில் இருந்து இந்தி எதிர்ப்புத் தமிழர் படை புறப்பட்டது. இதை திருச்சியில் வழியனுப்பி வைத்தவரும், சென்னையில் வரவேற்றவரும் பெரியாரே. 'தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் தான் தமிழர் உரிமை பாதுகாக்கப்படும். பிரிவினை தவிர இதற்கு வேறு வழியில்லை' என்றார் பெரியார்.

1940-இல் கட்டாய இந்தி ஒழியும் வரை இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தார். 1940களின் தொடக்கக் காலத்தில் நடந்த தமிழிசை இயக்கத்தையும் முழுமையாக பெரியார் ஆதரித்தார். பாடல்கள் அனைத்தும் தமிழில் இருக்க வேண்டும்; தெலுங்கில், சமஸ்கிருதத்தில் கூடாது என்றார். 1948-இல் மீண்டும் இந்தி திணிக்கப்பட்ட போதும் போராட்டங்களை முன்னெடுத்தார். இதைத் தொடர்ந்து திருக்குறளை பெரியார் கையில் எடுத்தார். 'ஆரியம் இல்லாத இலக்கியம் குறள்' என்றார். 'திராவிட நாடு தனியாக வேண்டும், வெள்ளையனைப் போல வடநாட்டான் சுரண்டிக் கொண்டிருக்கிறான் என்று தொடர்ந்து பேசினார். எனவே காங்கிரஸ் எதிர்ப்பைத் தீவிரப்படுத்தினார். இந்தியைத் தார் கொண்டு அழித்தார். அப்போது, மண்ணெண்ணெய் கொண்டு அதைத் துடைக்கும் பணியைச் செவ்வனே செய்த இயக்கம்தான் தமிழ்த்தேசியப் பேரியக்கங்களின் மூலஇயக்கமான ம.பொ.சி.-யின் 'தமிழரசுக் கழகம்'.

இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தை நடத்திய பெரியார் இந்தி ஆதிக்கம், வடநாட்டு ஆதிக்கம் ஆகியவற்றை எதிர்க்கும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே எரிக்கத் திட்டமிட்டார். பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனமும் (1952) இதே காலகட்டத்தில் தான் உருவானது. இதன்மூலமாகத் திருக்குறள் மலிவுப் பதிப்புகள் விற்பனை செய்யப் பட்டது. சென்னை மாகாணத்தில் இருந்து ஆந்திரா தனியாக பிரிந்த நேரத்தில் சென்னை என்பது தமிழ் நாட்டுக்கே சொந்தம் என்று பெரியார் வாதிட்டார். சென்னையை ஆந்திராவுக்கும் பொது தலைநகராக்கலாம் என்பதை ஆராயவந்த வாஞ்ச் ஆணையத்தைக் கடுமையாக எதிர்த்தார். இராஜாஜி பதவி விலகி காமராசர் முதல்வர் ஆனபோது மகிழ்ந்தார். 'நீண்ட நாட்களுக்குப் பின் பார்ப்பனரல்லாத - ஆந்திரரல்லாத - தெலுங்கரல்லாத - ஒரு தமிழர் முதல் மந்திரியாக வந்துள்ளார்' - என்று பெருமைப் பட்டவர்தான் தந்தை பெரியார். காமராசரை ஆதரித்ததன் நோக்கம் என்பது இராஜாஜியின் எதிரி என்பதற்காக; தமிழர் என்பதற்காக; தெலுங்கரல்லாதவர் என்பதற்காக; ஆந்திரர் அல்லாத ஒருவர் என்பதற்காக; தமிழர் என்பதற்காக. இவர் தான் பெரியார்!

தமிழரல்லாதார் பெரிய பதவிகளில், அரசு வேலைகளில் உட்கார்ந்திருப்பதை 1954 முதல் கண்டித்தார். 'ஆந்திரா தனியாகிவிட்டது, கேரளாவும் கன்னடமும் போய்விட்டால் அதுதான் தனித்தமிழ்நாடு' என்றார்.

மலையாளிகள் 100க்கு 8 பேர் கன்னடத்தார் 100க்கு 5 பேர் பார்ப்பனர் 2 3/4 சதம், கிறிஸ்தவர் 4 பேர், முஸ்லீம்கள் 5 பேர், மொத்தம் 25 சதவிகிதமாக உள்ள தமிழரல்லாதார் அரசு உத்தியோகங்களில் 60 சதவிகிதம், 70 சதவிகிதம் இருக்கிறார்கள் என்று வருந்தினார். 'மலையாளிகள் தொல்லையே பெருந்தொல்லை' என்றார். ஒன்று பார்ப்பான் இருக்கிறான், பார்ப்பான் இருக்க முடியாத இடத்தில் மலையாளியை ஆதரிக்கிறான் என்றார். 'இப்படியே நீடித்தால் தமிழன் வாழ்வது எப்போது?' என்று கேட்டார். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தமிழர் அடக்கப்படுவதை எதிர்த்து எழுதினார் (17.9.1954).

இந்தக் காலகட்டத்தில் தட்சிணப் பிரதேசம் எண்ணத்தை மத்திய அரசு விதைத்தது. தென் மாநிலங்களை இணைத்து ஒரே மாநிலம் ஆக்குவது என்பதே அத்திட்டம். இதனைக் கடுமையாக எதிர்த்தார். 'தட்சிண பிரதேசம் வந்தால் தமிழர்களுக்குத்தான் ஆபத்து. தமிழ், கன்னடம், மலையாளம் ஆகிய மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்தால் பார்ப்பானுக்கு போக மற்ற உத்தியோகமெல்லாம் மலையாளி, கன்னடியர் கைக்கே போய் விடும். நமக்கு கக்கூஸ் எடுத்தல், போலீஸ் காண்ஸ்டபிள், ரயில்வே கூலி போர்ட்டர் உத்தியோகம் தான் மிச்சமாகும். இப்போதே நம்மை அடிமைபோல் நடத்துகிறார்கள். தட்சிணப்பிரதேசம் என்று சொல்லிக் கொண்டு அன்னியர்தான் ஆதிக்கம் செலுத்தி வருவார்கள். ஆந்திரா பிரிந்ததே நல்லது. இனி மலையாளியும் கன்னடியரும் ஆளுக்கொரு ஜில்லாதானே?'-இவர்களும் போகட்டும். மீதி 12 ஜில்லாக்களையும் கொண்ட தமிழ்நாடு தனிச் சுதந்திர நாடாகி நமது சமய சமுதாய தேசிய சுதந்திர முயற்சிகளுக்கு எதிர்ப்பு இருக்காது என்று நம்பினேன். இப்போது இதற்கும் தமிழ்நாடு என்று பெயர் தராமல் சென்னை ராஜ்யம் என்பதாகத்தான் பெயர் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இது சகிக்க முடியாத அக்கிரமம். அவமானம். இதைத் திருத்துமாறு தமிழ்நாட்டு மந்திரிகளையும் சென்னை தில்லி சட்டசபை மேல்சபை அங்கத்தினர்களையும் இறைஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு என்ற பெயர்கூட இல்லாமல் எங்களுடைய வாழ்வு எதற்காக இருக்க வேண்டும்?' - என்று கேட்டவர் பெரியார்.

எப்போது 1954-ல்! கேட்டவர் பெரியார்!

தட்சிணப்பிரதேசத்தின் தீமையை முதல்வர் காமராசருக்கு உணர்த்தியவர் பெரியாரே. 'இது தமிழர்களுக்கான தற்கொலை' என்றவர் பெரியார். (1956 - பிப்ரவரி) அதன்பிறகே காமராசர் நிராகரித்தார். (23.2.1956) திருவண்ணாமலையில் பேசும்போது, 'இப்போது ஆந்திரம் பிரிந்துவிட்டது. அடுத்து சென்னை மாகாணத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் இரண்டு மாவட்டம் தென்கன்னடம், கர்நாடகத்தோடும் தென்மலபார் கேரளத்தோடும் போய்விடும். மிச்சமுள்ளது தமிழ்நாடு. அந்தத் தனித்தமிழ்நாடே திராவிடநாடு. அதற்குத்தான் இனி சுதந்திரம் கேட்போம்' என்றார் (19.8.1956) இதன் பிறகு அவர் பேசியது எல்லாமே 'தனித்தமிழ்நாடு' தான் 'திராவிடநாடு' அல்ல. 1956ல் பெரியார் கைவிட்ட 'திராவிடநாடு' சொல்லைப் பிடித்துக் கொண்டு தமிழ்த்தேசியர்கள் இன்று தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். 'திராவிட நாடு' என்ற சொல்லை 1956-இல் கைவிட்டு விட்டார் பெரியார் என்பதே தெரியாமல் வரலாறு வாசிக்கும் குருட்டுத்தனம் கொண்டவர்கள் இவர்கள்.

தமிழ்நாட்டில் தமிழை ஆட்சிமொழியாக்கும் சட்ட முன்வடிவு 22.12.1956 அன்று சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இதனை பெரியார் வரவேற்றார். தமிழகக் கோவில்களில் தமிழில் வழிபாடு செய்யப்பட வேண்டும் என்பதற்காக குன்றக்குடி அடிகளார் போராட்டம் நடத்தியதை ஆதரித்தார்.

1. தமிழ்நாட்டில் தமிழன் கோயில் உள்ள கடவுளுக்கு தமிழில் பூசை செய்யப் படவேண்டும்.

2. தமிழ்நாட்டில் தமிழன் கோவிலுக்குள் தமிழரால் பூசை செய்யப்பட வேண்டும் என்று அடிகளாருக்கு எழுதினார் பெரியார்.

'இந்த இரண்டு காரியங்களும் தமிழனின் தன்மானத்தையும் தமிழ்மொழியின் தன்மானத்தையும் பற்றியவையாகும். தமிழ் மிலேச்ச மொழி என்பதாலும், தமிழன் சூத்திரன் என்பதாலுமே இந்த உரிமைகள் மறுக்கப்படுகின்றன' என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்ட பெரியார், **'நான் தமிழன் என்று கருதுவது நம் நாட்டிலுள்ள சூத்திரர்களே யாகும்'** என்றும் விளக்க மளித்தார்.

1957-ஆம் ஆண்டு அக்டோபர் 26 அன்று அரசியல் சட்டத்தில் சாதியை பாதுகாக்கும் பிரிவுக்குத் தீ வைத்து கைது ஆனார். 1958 சூன் 13-ஆம் நாள் பெரியார் விடுதலை செய்யப்பட்டார். 'சாதி ஒழிப்புக்கு நாடு பிரிவினையே முன்னணித் திட்டம். தமிழக விடுதலையை வற்புறுத்தத் தமிழ்நாடு நீங்கலாக உள்ள இந்திய யூனியன் படம் எரிக்கப்படும்' என்று அறிவித்தார். வேலூரில் நடந்த நாம் தமிழர் மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசும்போது, 'தமிழர் திராவிடரே! தமிழ்நாடும் திராவிடமே!' என்றார் பெரியார். (25.8.1958). "முன்பு சென்னை ராஜதானி என்பது தமிழ்நாட்டுடன் ஆந்திர, கேரள, கர்நாடகமும் இணைந்திருந்த பகுதி. இன்று மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட பின்பு சென்னை ராஜ்யம் என்பது தமிழ்நாடு மட்டுமே. அதனால் நம் கோரிக்கை மாற வில்லை. எல்லை தான் சுருக்கப்பட்டுவிட்டது' என்றார் பெரியார் (23.11.1958).

தமிழ் இலக்கியங்கள் மீதான அவர் விமர்சனம் என்பது தமிழ்மீதான வெறுப்பு அல்ல. ஆங்கிலம் படிக்கச் சொன்னது ஆங்கி லத்தின் மீதான ஆசை அல்ல. பார்ப்பான் ஆங்கிலம் படித்து முன்னேறி விடுகிறான்; தமிழா நீ தமிழை மட்டுமே படித்துத் தேங்கி விடாதே! ஆங்கிலம் படித்து முன்னேறிச் சென்றுவிடு என்று தான் சொன்னார் பெரி யார்; ஒரு தந்தையாக!

அவர் ஆங்கிலத்தைப் பரிந்துரைத்தது முன்னேற்றதுக்கான ஏணிப்படி என்பதால் தான். ஆங்கிலத்தின் இடத்தில் செர்மன், பிரஞ்சு இருந்திருந்தால் அதைத்தான் பரிந் துரை செய்திருப்பார். 'உனது தலையில் இந்தியைக் கட்டிவிட்டு பார்ப்பான் ஆங்கிலம் படித்து முன்னேறி விடுகிறான்' என்ற தந்திரத்தை முதலில் சொன்னவர் அவர்தான். இன்றைக்கு இந்தியைத் திணித்துவிட்டு, ஆங்கிலத்தை அகற்றப் பார்க்கிறது வடவாரிய ஆதிக்க வர்க்கம். தமிழும் ஆங்கிலமும் வாளும் கேடயமுமாக இருக்க வேண்டும் என்பதே அவர் எண்ணம். தமிழர்களுக்கு வேலை வாய்ப்பில் பிரதிநிதித்துவம் குறைந்துவிட்டது. பார்ப்பனர்களுக்கு அடுத்தபடியாக மலை யாளிகள் ஆக்கிரமித்து விட்டார்கள் என்று பேசினார்.

1965 இந்திப்போர் காலகட்டம். இந்தப் போராட்டத்தை மொழி போராட்டமாக அல்லாமல் அரசியல் போராட்டமாகப் பார்த் தார் பெரியார். காங்கிரஸை வீழ்த்துவதற்கு தி.மு.க பயன்படுத்தும் ஆயுதம் இந்த மொழிப்போர் எனக் கணித்தார். 'இந்தியைத் திணிக்கும் பிரச்னைக்கே இப்போது இடமில்லை' என்று 17.1.1965 விழுப்புரத்தில் பேசினார். இதனை வெளியிட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 'பெரியார் இந்தியை எதிர்க்கவில்லை' என்று எழுதியது. 'இப்படி திசை திருப்புவது அசல் அக்கிரகாரத்தன்மையல்லவா?' என்று பெரியார் எழுதினார். (19.1.1965) போராட்டத்தின் வன்முறையையும் கடுமையாக விமர்சித்தார். 'இப்போராட்டத்தை அடக்கியாக வேண்டும்' என்று அரசுக்கு கோரிக்கை வைத்தார் (8.2.1965).

'இப்போதும் நான் இந்தியை எதிர்க்கிறேன்' என்றார். (3.3.1965). 'என்னைப் பொறுத்த வரையில் காமராசர் ஆட்சி அவசியமா? இந்தி ஒழிய வேண்டியது அவசியமா? என்றால் காமராசர் ஆட்சி இந்தியை ஒழித்து விடும் என நம்புவதால் முதலில் காமராசர் ஆட்சி நிலைக்கவே பாடுபடுவேன்' என்றார். (3.3.1965). இந்த ஆட்சியை ஒழிக்கவே இந்தப் போராட்டங்கள் என்றார். இந்திப் போராட்டத்தைக் கடுமையாக விமர்சித்த சூழலிலும், இந்தித் திணிப்பின் நோக்கத்தை மிகச் சரியாகச் சொன்னார்.

''இந்தியைப் புகுத்தியவர்கள் அரசியலுக்கு ஆகப் புகுத்தவில்லை. கலாச்சார மாற்றத் திற்காகவே இன உணர்ச்சியை மறக்கடிப் பதற்காகவே புகுத்தினார்கள். காந்தியின் கருத்தும் ஆச்சாரியாரின் கருத்தும் வெறி யர்களின் கருத்தும் இதுவேயாகும்' என்றார். (விடுதலை 3.3.1965). 'இந்தியை எதிர்க்கிற வர்களிடத்தில் நாணயம் இருக்குமானால் அவர்கள் எப்படி ஏக இந்தியாவை ஒத்துக் கொண்டு இந்தியை வேண்டாம் என்று தடுக்க முடியும்? இந்தியை ஏற்றுக் கொண்டவர்கள் பெரும்பான்மையான நாட்டுக்காரர்களா யிற்றே! இந்தி ஒழிய வேண்டுமானால் ஒரே வழி பிரிவினை தானே. இந்தப் பிரிவினை இலட்சியத்தை நாங்கள் தானே வைத்து இருக்கின்றோம்'' என்றும் பேசினார் (விடு தலை 15.6.1965).

போராட்டத்தைத் தூண்டினார், தடையை மீறினார் என்று கைது செய்யப்பட்ட குன்றக் குடி அடிகளாருக்கு 500 ரூபாய் அபராதம் போடப்பட்டதைப் பெரியார் கண்டித்தார். 'ஒரு தமிழினத்தின் சன்னிதானத்துக்கு ஒரு தமிழர் மந்திரி ஆட்சியில் இப்படி அவமரி யாதை நடப்பதா?' என்று கேட்டார். (14.9.1965)

இந்தியை, இந்தித் திணிப்பை பெரியார் ஆதரிக்கவில்லை. இந்தியாவுக்குள் இருந்தால் இந்தி திணிக்கப்படத்தான் செய்யும் என்பதே அவரது நிலைப்பாடு. 1965 இந்திப் போராட் டத்தின் போது நடந்த நிகழ்வுகளை விமர் சித்தார் என்பதற்காக அவரை இந்தியின் ஆதரவாளர் என்று காட்டுவதுதான் தமிழ்த் தேசியர்களின் கடைந்தெடுத்த கயமை. இப்போராட்டத்தை 'காலித்தனம்' என்ற பெரியார்தான் மாணவர்களின் எதிர்காலம், படிப்பு பற்றிய கவலையில் இருந்தார் என் பதற்கும் பல பதிவுகள் உள்ளன. (தமிழ்த் தேசியர்களின் மூலவரான ம.பொ.சி.1965 மொழிப்போராட்டத்தின் போது என்ன சொல்லை பயன்படுத்தினார் என்பதை ம.பொ.சி. தாசர்கள் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும்!)

1965 இந்திப் போராட்டத்தைப் பெரியார் ஆதரிக்கவில்லை என்று அவர் மீது பாய்ப வர்கள், 1965 இந்திப் போராட்டத்தை ஆதரிக்கிறார்களா? அப்படி ஆதரிக்கிறேன் என்றால் அவர்களை நிச்சயம் பாராட்ட வேண்டும் ஏனென்றால் அந்தப் போராட் டத்தை நடத்தியதும் தி.மு.க. என்ற 'திராவிடக்' கட்சியே!

1967 தி.மு.க. ஆட்சியை சுத்தத் தமிழர் ஆட்சி என்றார் பெரியார். தி.மு.க. அரசு ஸ்ரீ, ஸ்ரீமதி என்பதற்குப் பதிலாகத் திரு, திருமிகு என வழங்க வேண்டும் என்ற உத்தரவை வரவேற்றார். மெட்ராஸ் ஸ்டேட் என்பது தமிழ்நாடு என்று மாற்றப்பட்டதை வரவேற்று எழுதினார். மும்பையில் சிவசேனா காரர்களால் தமிழர்கள் தாக்கப்பட்டதைக் கடுமையாகக் கண்டித்தார். 'பம்பாயில் சிவசேனாக்காரன் தமிழனை அடித்தால் அதற்குப் பரிகாரமாக இங்கிருக்கிற பம்பாய்க் காரனை நாம் விரட்ட வேண்டாமா? வெறுக்கத் துணிந்தவன்தான் வெற்றி பெறுவான்' என்று எழுதினார். சிவசேனை எதிர்ப்பு மாநாடு நடத்த வேண்டும் என்றார். திருச்சியில் நடந்த சிவசேனை எதிர்ப்பு மாநாட்டில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று கூறச் சொன் னார். 9 பேர் கொண்ட சிவசேனை எதிர்ப்புக் குழுவை அறிவித்தார். 1.10.1967 அன்று சென்னையில் நடந்த சிவசேனை எதிர்ப்பு ஊர்வலத்தில் பெரியாரும் கலந்து கொண்டார்.

உலகத் தமிழ்மாநாட்டை விமர்சித்தார். 'உலகத் தமிழ்மாநாடு நடந்து முடிந்தபிறகும்

சூத்திரன் சூத்திரனாகத்தானே இருக்கப் போகிறான். இழிவு ஒழியப்போகிறதா?' என்று கேட்டார். 'தமிழ்நாடு' பெயர் மாற்றத்தை வரவேற்ற பெரியார், 'ஆனாலும் இந்தியாவுக்குள்தானே இருக்கிறோம்?' என்று கேட்டார். சென்னை உயர்நீதிமன்றத் தில் 16 பிரதிநிதிகளில் 10 பேர் தமிழர்கள் என பெருமைப்பட்டார். மேலக்கற்கண்டார் கோட்டை பொதுக்கூட்டத்தில். 5.3.1969 எழுதிய தலையங்கத்துக்கு 'அரசாங்கம் கவனிக்க வேண்டும்' என்பது தலைப்பு. இந்த தலையங்கத்தைத் தமிழ்த் தேசியர்கள் படிக்க வேண்டும்.

"தி.மு.க. ஆட்சி ஒவ்வொரு பதவி, உத்தியோகம் பற்றிக் கையெழுத்துப் போடும் போதும் இந்த ஆள் பார்ப்பானா, கிறிஸ்தவனா, முஸ்லீமா, சைவனா, மலையாளியா, என் பதைப் பார்த்துத்தான் கையெழுத்துப் போட வேண்டும். காமராசர் தமிழனுக்குக் கண் கொடுத்தார். ஆனால் கண்ணிருந்தும் குருட ராயிருப்பதால் பயனில்லை. ஆகையால் தி.மு.க. ஆட்சி தமிழர்களை எழுந்து நடக்கச் செய்ய ஆவன செய்திட வேண்டும். கண்டிப் பாய் இதில் கவனம் செலுத்திட வேண்டும்" என்று எழுதினார்.

தமிழர் ஒருவர் தலைமை நீதிபதி ஆனதைப் பாராட்டி எழுதினார். (1.5.1969) தி.மு.க. அமைச்சர்கள் 13 பேரில் 13 பேரும் தமிழர் கள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் 18 பேரில் 14 பேர் தமிழர்கள் என்று சொல்லிக் கொண் டார் (15.9.1969).

சூத்திரன் என்ற இழிவு நீக்க கோயில் கருவறை நுழைவுக் கிளர்ச்சி தொடங்கினார். 'தமிழர் ஒரே இனம். நாம் ஒரே சாதி' என்று மதுரையில் பேசினார். (16.2.1970) அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கும் மசோதா, தமிழில் வழிபாடு ஆகியவை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதனை வரவேற்றார் (25.3.1970). 'ஆரியம் சமயத்துறையில் ஆதிக்கம் பெற்றதாலும், ஆங்கிலம், அரசியல் முதலிய பல துறைகளில் ஆதிக்கம் பெற்ற தாலுமே தமிழர்களுக்கு இன உணர்ச்சி புலப்படவில்லை'' என்றார். (24.7.1972) 'தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் தமிழரல்லாதாரின் ஆதிக்கமே மிகுந்துவிட்டது. பாதிக்கு மேல் மலையாளிகளின் ஆதிக்கம் தான் இருக்கிறது' என்று சோலையில் பேசி னார் (5.11.1972). "எல்லாத் துறைகளிலும் மலையாளிகளின் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்ட ஒரு திட்டம் வகுத்தாக வேண்டும். அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் திராவிடர் கழகம் மாநாடு நடத்தும்' என்று மதுரையில் பேசினார். (1.12.1972). 'சுதந்திரத் தமிழ்நாடு எனது இலட்சியம்' என்று பல்லாயிரக்கணக் கில் அச்சடித்து அனை வருக்கும் கொடுக்கப் போகிறேன்" என்று அறிவித்தார். (15.8.1973)

30.9.1973ஆம் நாள் மதுரையில் நடந்த கருஞ்சட்டை மாநாட்டில் பேசும்போது, 'சுதந்திரத் தமிழ்நாடு கேட்பது சமுதாய விடுதலை பெறுவதற்காகத்தான். கேட்டது சட்டவிரோதம்தான் ஆனால் நியாய விரோதமல்ல! ஏழாண்டு சிறையிலிட்டால் பரவாயில்லை என நீங்கள் ஏற்க வேண்டும்' என்று பேசினார். 'தமிழர்களே பிரிவினைக் காகப் பிரிவினை கேட்கவில்லை. நான் சூத்திரன், தாசிமகன் என்கிற இழிவு நீங்கப் பிரிவினை தவிர வேறு வழி என்ன என்று கேட்டார். (30.10.1973) 'வட நாட்டானே நீ உடனே உன்னுடைய மூட்டை முடிச்சுக் களைக் கட்டிக்கொள். இனிமேல் உனக்கு இங்கே வேலையில்லை' என்று திருச்சியில் பேசினார் (19.11.1973).

'இனி நான் என் வாழ்நாள் முழுவதும் சிறையில் தான் கழிப்பேன்' என்று தஞ்சையில் பேசினார். 'நான் மறைந்தால் ஆரியம் தலைதூக்கும். அப்புறம் தமிழர்களின் இழிவை ஒழிக்கப் போவது யார்?' என்றும் கேட்டார் (22.11.1973).

*1973 டிசம்பர் 8, 9 தேதிகளில் தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. வரவேற்புரை ஆற்றிய ஆசிரியர் கி. வீரமணி அவர்கள், "அண்ணா அவர்கள் 'தமிழ்நாடு' தந்தார். அய்யா அவர்களே நீங்கள் 'தமிழருக்கே' தாருங்கள்!" என்றார். 'இது நமது இறுதிப் போராட்டம்' என்றார் பெரியார்.*

*19.12.1973 இறுதி உரையாகச் சென்னையில் பேசும்போது, 'தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் ஒரு பத்து வருசத்துக்குள்ளாக நாமெல்லாம் 100 வயது வாழ்வோம் ஒவ்வொருவரும் தனித்தனியே இறக்கை வைத்துக்கொண்டு பறப்போம்' என்று முடித்தார். 24.12.1973 காலை 7.22 மணிக்கு சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்.*

*1938ல் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று தொடங்கியதுதான், 1973-இல் 'தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு' வரை தொடர்ந்தது. தொடக்கமும் முடிவும் 'தமிழர்களே!'*

*சுயமரியாதை இயக்கம், தென்னிந்திய நல உரிமைச் சங்கம், நீதிக்கட்சி, திராவிடர் கழகம் - என எந்தப் பெயரில் இயக்கம் நடத்தினாலும் பேசியது எல்லாமே தமிழர்களுக்காகத்தான். தமிழ் நாட்டுக்காகத்தான். தமிழுக்காகத்தான்.*

*தமிழை விமர்சித்தார். தமிழ் மீதான வெறுப்பில் அல்ல. தமிழ் மீதான அதீதமான அன்பால். 'தமிழ்' என்று மட்டும் இருந்து தேங்கிவிடாதே, தமிழோடு சேர்த்து ஆங்கிலத்தையும் கற்றுக்கொண்டு முன்னேறி விடு, உலகின் எந்த மூலைக்காவது ஓடிச் சென்று முன்னேறி விடு' என்று ஒரு தந்தையைப் போல நினைத்தார். பார்ப்பனர்கள் ஆங்கிலம் படித்து முன்னேறிவிட்டார்கள். உயர்ந்த அரசுப் பதவிகளை அடைந்து விட்டார்கள் என்ற கோபம் அவரது பேச்சில் வெளிப்பட்டது. எனவேதான் பயிற்றுமொழி மட்டும் ஆங்கிலமாக இருக்க வேண்டும் என்றார்.*

*மற்றபடி ஆட்சிமொழி, அலுவல்மொழி, நீதிமன்ற மொழி, வழிபாட்டு மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும், தமிழ் மட்டுமே இருக்க வேண்டும் என்றே செயல்பட்டவர் பெரியார்.*

*இந்தி வந்தால் தமிழ் அழிந்து விடும் என்று கவலைப்படவில்லை. ஏனென்றால், 'தமிழ் எதனாலும் அழியாது' என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. இந்தியை ஏன் எதிர்க்கிறேன் என்றால் 'தமிழர் பண்பாடு அழிந்து விடும்' என்றே 1938ல் அவர் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போதும் சொன்னார். 1965-இல் அவர் 'எதிர்த்த' இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போதும் சொன்னார். இந்திய எல்லைக்குள் தமிழுக்குப் பாதுகாப்பு இல்லை. இந்திய எல்லைக்குள் தமிழனுக்கு உயர்வு இல்லை. இந்திய எல்லைக்குள் தமிழ் நாட்டுக்கு வளர்ச்சியும் உயர்வும் இல்லை என்பதற்காகவே துடித்த தமிழர் தலைவர் அவர்! உண்மைத் தமிழ்த் தேசியர் அவர்!*

*பெரியார், தமிழினத்துக்குத் 'திராவிடர்'கள் என்று பெயர் சூட்டவில்லை. அவர் ஆரம்பித்த ஆரியருக்கு எதிரான இயக்கத்துக்குத்தான் 'திராவிடர் கழகம்' என்று பெயர் சூட்டினார். அந்த திராவிடர் கழகம் போராடியதும் வாதாடியதும் தமிழர்களுக்காகத்தான். 1929 செங்கற்பட்டு சுயமரியாதை மாநாடு முதல் 1973 தமிழர் இன இழிவு நீக்க மாநாடு வரை அவர் செயல் அனைத்தும் தமிழர்களுக்குத் தானே தவிர தெலுங்கர்களுக்கோ மலையாளிகளுக்கோ கன்னடர்களுக்கோ அல்ல என்பதை கருத்துக் குருடர்கள் அறிய வேண்டும்.*

*பெரியாரின் திராவிடம்தான் தமிழியத்துக்கு அரண் சேர்த்தது. அதுதான் அரண் சேர்க்கும். ஏனென்றால் திராவிட இயக்கம் என்று சொல்லிக் கொண்ட இயக்கம் தமிழர்களுக்காகவே செயல்பட்டது என்பதற்கான வரலாற்றுக் குறிப்புகள் இவை. இப்படிச் செயல்பட்ட ஒரு தமிழ்த்தேசிய இயக்கம், தமிழ்த்தேசியத் தலைவர் யாராவது 1925 - 1975 காலக்கட்டத்தில் உண்டா?*

●



# இந்தி சமற்கிருத எதிர்ப்பே தமிழ்த் தேசியத்தின் எழுச்சி

**- காஞ்சி அமுதன்**

இந்தி மொழியைத் தேசிய மொழி என்றும் தமிழ் உள்ளிட்ட மற்ற மொழிகளை வட்டார மொழிகள் என்றும் தொடர்ந்து அரசியல் சட்ட வழியும், கல்வி, நீதி, நிர்வாகம், ஊடகம் வழியாகவும் திணிப்பதுடன், இந்தியாவை ஆள்வோர் எவராயினும் இந்தி, சமற்கிருதம் தேசிய மொழிகள் எனும் ஒரு மாயைப் பரப்பி வருகின்றனர். இப்படி நமது தாய் மொழியான தமிழை இழித்தும் பழித்தும் புறக்கணித்தும் வரும் நெருக்கடியான காலத்தில் நாம் இப்போது வாழ்கின்றோம்.

நமது தேசிய எழுச்சிக்குத் தடைக்கல்லாய் இருப்பது யார் என்பதிலும் ஒரு குழப்பமான நிலையைத் தற்போது உருவாக்க சிலர் முயல்கின்றனர். தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் தடையாய் இருப்பது யார், எதிரிகள் யார் என்பதை அறிவதன் வழியே தமிழ்த்தேசிய எழுச்சியை நாம் உருவாக்க முடியும். அசோகர் கால பிராமி எழுத்துக்களுக்கு முன்பே கி.மு.6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எளிய மக்கள் தங்கள் பெயர்களைப் பானைகளில் எழுதி வைத்திருப்பது தமிழி என்று அறிப்படுகிறது.

தமிழகத்தில் இன்றும் திருமணமானவர்களுக்கு வழங்கப்படும் பித்தளை, சில்வர் பாத்திரங்களில் தங்கள் பெயர்களைப் பொறித்துத்தரும் வழக்கம் இருப்பது கீழடி காலத் தமிழர்களின் தொடக்கமாகக்கூட இருக்கலாம். இப்படிப்பட்ட தொன்மையான தமிழ் நாகரிகத்திற்கு சொந்தக்காரர்களான நமது வரலாற்றை கண்டு அஞ்சும் ஒரு கூட்டம் கி.மு.238-இல் அசோகர் கல்வெட்டில் எழுதிவிட்டுப்போன எழுத்துக்களுக்குப் பிற்காலத்தில் பிராமி எனப் பெயரிட்டுத் தமிழின் தொன்மையைச் சமற்கிருதத்திற்குக் கீழானதாகக் கருதுவதுடன், இன்றைக்குக் கீழடியில் கிடைத்துள்ள தமிழி எழுத்துக்களைத் தமிழ் பிராமி என கூறி சிறுமைப்படுத்தி வருகிறது.

தமிழர்களின் கீழடி நகர நாகரிகம் உலகம் அறியப்படுவதைத் தடுப்பதுடன், அங்கே தமிழ்க் குடிமக்கள் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதையும் கண்டு அஞ்சும் அவர்கள் கீழடி தமிழர் நாகரிகத்தைப் பாரதப் பண்பாடு என்று வெட்கமற்று கூறுகின்றனர். சமற்கிருத மற்றும் மத அடையாளங்களை இதில் ஏற்றி தமிழ்-தமிழர் தொன்மையை மறைக்கத் திட்டமிடுகின்றனர்.



இது இன்று நேற்றல்ல வரலாறறிந்த காலம் தொட்டு தொடர்கிறது.

1920-ஆம் ஆண்டு தில்லிக்கும் லாகூருக்கும் இடையே ஆங்கிலேயர்கள் இருப்புப்பாதை அமைத்த போது பல மணல் மேடுகள் எதிர்ப்பட்டன. அவற்றைத் தகர்த்து எறிந்தபோது பானை ஓடுகள், காசுகள், வீட்டுப்பயன் பாட்டுப்பொருள்கள் எல்லாம் கிடைத்தன. பிறகு அந்த மேடுகளில் முறையான ஆய்வுகள் மேற்கொண்டபோது அங்கே ஒரு நகரமே புதைந்து கிடப்பதைப் பார்த்தார்கள், அது தான் மொகஞ்சதாரோ.

இது என்ன நாகரிகம்? இங்கே வாழ்ந்த மக்கள் யார்? என்றெல்லாம் தெரியாத நிலையில் இது ஆரிய நாகரிகம் என்று அவசரகதியில் ஆராயாமல் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் அறிவித்து விட்டார்கள். அப்போது பம்பாய் நகரில் கல்லூரிப் பேராசிரியராக பணிபுரிந்து வந்த ஈராஸ் என்னும் பாதிரியார் மொகஞ்சதாரோ, சிந்து சமவெளி பகுதிகளுக்குச் சென்று அங்கே கிடைத்த பானை ஓடுகள், வரிவடிவ எழுத்துக்கள் இன்னபிற பொருள்களை எல்லாம் ஆய்வு செய்து அங்கிருந்த தமிழர் நாகரிகத்தை திராவிட நாகரிகம் என அறிவித்தார்.

ஆரியச்சார்புடைய ஆய்வாளர்கள் அவரைப் பைத்தியக்காரன் என்று தூற்றினார்கள். கி.மு.530 முதல் 486 வரை பாரசீகத்தை ஈரான் ஆண்ட மன்னர் டேரியஸ் வரலாற்றை விவரிக்கும் கெர்மன்ஷா மாநிலத்தில் பெஹிஸ்டன் மலையில் உள்ள கல்வெட்டில் ஆரியன் என்ற வார்த்தை காணப்படுகிறது. 1846 முதல் இங்கிலாந்தில் அமர்ந்து கொண்டு ரிக் வேதத்தை ஆய்வு செய்த செர்மானியரான மாக்ஸ் முல்லர் இந்தச் சொல்லை ஓர் இனத்திற்கான அடையாளமாக மாற்றி ஆரியர்கள் ஆளப்பிறந்தவர்கள் என்ற உணர்வை ஐரோப்பாவில் ஊன்றினார்.

இவரைத் தொடர்ந்து பிரம்மஞான சபையைத் தோற்றுவித்த ஹெலனா பெட்ரோவ்னா பிளாவட்ஸ்கி ஆரியர் உயர்ந்த இனம் மற்றவர்கள் ஆரியர்களுக்கு கீழானவர்கள் என்ற நச்சு விதைகளைப் பரப்பினார். இந்தியாவில் இக்கொள்கைகளை முன் வைத்து இயங்கிய பாரப்பனர்களுக்கு இது பெரு வாய்ப்பாக அமைந்தது. சமற்கிருதம் உலகிலுள்ள பல மொழிகளில் ஒரு மொழி மட்டுமல்ல மாறாக உன்னதமான ஆரியரைப் பிரித்துக்காட்டவும், ஆரியரின் சாத்திர, சடங்குகளைப் பாதுகாக்கவும் உதவிய மொழியே சமற்கிருதம் என்பது பார்ப்பனர்களின் கருத்து.

மேலும் ஆரிய தர்மம், அதன் தூய்மை, அதன் நிலைத்த தன்மை, பண்பு தவறா நிலை ஆகிய அனைத்துமே சமற்கிருத மொழியின் தூய்மையே சார்ந்திருக்கின்றன என்பது ஆரியப் பாரப்பனர்களின் மேலான எண்ணமாகும்.

இக்கருத்தின் பின்புலத்தில் சிந்து வெளி தொடங்கி இன்றைய கீழடி வரை கிடைத்து உள்ள தமிழ், தமிழர் தரவுகளைப் பார்த்து பதைக்கிறார்கள். தங்களின் ஆரிய, சமற்கிருத புனைவுகளுக்கு ஆபத்தாக இது அமையும் என்பதால் தமிழர் அடையாளத்தை மறைத்து, சமற்கிருத மேலாண்மையை நிறுவ முயல்வதுடன், சமற்கிருதத்தை திணித்து தமிழை ஒழிக்கப் பார்க்கிறார்கள். உத்திரப் பிரதேசத்தின் முதல்வராக இருந்தவரும் இந்துப் பழமைவாத சிந்தனையில் முகிழ்ந்த வருமான சம்பூர்ணானந்த் ஆரியர்களின் தாயகம் இந்தியாதான் என்றும் இங்கிருந்துதான் அவர்கள் கிழக்கிலும் மேற்கிலும் பரவினார்கள் என்று இந்து மகாசாபை அமைப்பின் கருத்துக்களுக்கு புத்துயிர் ஊட்டினார்.

இந்திய ஒன்றியத்தின் தொடர்பு மொழிக்கான தீர்வு என்ற வகையில் சமற்கிருதம் அந்த இடத்தைப் பிடிக்கும்

காலம் வரையில் வசதியின் பொருட்டு இந்திக்கே நாம் முன்னுரிமைக் கொடுத்தாக வேண்டும் என ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மேனாள் தலைவர் கோல்வால்கர் கூறினார். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் குசராத்தைச் சார்ந்தவரும் ஆரிய சமாஜத்தை அமைத்த வருமான சுவாமி தயானந்தர், இந்துப் பழமை வாதச் சடங்குகளை எதிர்த்த வங்காளியான இராசாராம் மோகன்ராய் போன்றோர் இந்தி மொழியை இந்தியாவின் ஆட்சிமொழி ஆக்கக் கோரினர்.

ஆரிய சமாஜத்தில் சேர்ந்த சிற்றரசர்கள் தங்கள் நிர்வாகப் பகுதிகளில் இந்தியை ஆட்சி மொழியாக்கினர். பலதேசிய இனமக்கள் வாழும் இந்திய ஒன்றியத்தில் காந்தி, நேரு, படேல், லால்பகதூர் சாஸ்திரி போன்ற காங்கிரசுகாரர்களும், இந்து மகாசபையைச் சேர்ந்தோரும் இந்தியைத் திணித்தனர். இந்தியாவில் நிலவும் பன் மொழிகளையும் அவர்கள் மதிக்க மறுத்தனர். ஆங்கிலேயர் ஆண்டபோதே 1937-இல் சென்னை மாகாணத்தின் ஆட்சியைப்பிடித்த காங்கிரசு கட்சியின் பிரதம அமைச்சர் இராஜாஜி ஜமன்லால் பஜாஜ் என்ற பெருவணிகரின் வற்புறுத்தலுக்கு இணங்கி தமிழகப் பள்ளிகளில் இந்தித்திணிப்பைச் செய்தார்.

அப்போது சட்டசபை உறுப்பினராக இருந்த பி. கலிபுல்லா சாகிப் இந்தித்திணிப்பு என்பது ஒரு பார்ப்பனச் சதி; இந்தியாவை இந்து இந்தியாவாக உருவாக்குவது; இந்தியைப் புகுத்தி அதை சமற்கிருத மயமாக்கி விடுவது என்கிற அவர்களின் சூழ்ச்சியைச் சட்டசபையிலேயே அம்பலப்படுத்தினார். அதுவரை எதிரும் புதிருமாய் செயல்பட்டுவந்த மறைமலையடிகள், சோமசுந்தரபாரதியார், கி.ஆ.பெ. விசுவநாதன், அண்ணா, மருத்துவர் தர்மாம்பாள், மீனாம்பாள் சிவராசு உள்ளிட்ட பலரும் தந்தை பெரியார் தலைமையில், தமிழறிஞர்கள். பொதுமக்கள், பெண்கள் என அனைவரும் தமிழ் காக்க வேற்றுமைகளைக் கடந்து ஒன்று திரண்டு இந்தி எதிர்ப்புப் போர் முரசு கொட்டினர். சிதறிக்கிடந்த தமிழர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து ஒன்றுபட்டு போராடினர். தமிழ் நாடு தமிழருக்கே என்ற உரிமை முழக்கத்தை எழுப்பினர். இராஜாஜி 1940-இல் பதவி விலகியதை ஒட்டி பள்ளிகளில் இந்தித் திணிப்பு முயற்சியும் கைவிடப்பட்டது.

சுதந்திர இந்தியாவில் ஆட்சி மொழி குறித்து அரசமைப்புச் சட்ட அவையில் பல சூழ்ச்சிகளைச் செய்து தேவநாகரி வரிவடிவிலான இந்தியை அரசமைப்புச் சட்டப் பகுதி 17-ஐ உருவாக்கி, விதி 343 முதல் 351 வரை ஏற்படுத்தி இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழி ஆக்கிக் கொண்டனர். இந்தி அல்லாத பல இனமக்களின் மொழிகளை ஒடுக்கினர். இரவீந்திரநாத் தாகூர் வங்காள மொழியை இந்திய ஆட்சிமொழி ஆக்கிட கோரினார். தமிழகத்தைச் சேர்ந்த காயிதே மில்லத் அவர்கள் தமிழை இந்தியாவின் ஆட்சி மொழியாக்கிட கோரினார். இக்கோரிக்கைகள் தனிநபர் கோரிக்கைகளாக முன்வைக்கப் பட்டு யாரும் கண்டு கொள்ளாத நிலையில் அப்போது புறந்தள்ளப்பட்டது.

இந்தியாவின் ஆட்சி மொழி இந்தியா? ஆங்கிலமா? என்ற விவாதம் நடைபெற்றதே அன்றி இந்தியாவில் உள்ள தமிழ் வங்காளம் குசராத்தி, கன்னடம் தெலுங்கு, மலையாளம் உள்ளிட்டு இனவழி தேசிய மொழிகள் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக்கப்படுவது குறித்த எந்த விவாதமும் எழுப்படவில்லை. ஆரிய இனம், ஆரிய தேசம், ஆரிய மொழி என அறியப்பட்ட சமற்கிருத வழி இந்தியை இந்தியாவில் திணிக்க அன்றைக்குச் செல்வாக்குச் செலுத்திய தலைவர்கள் பேயாட்டம் ஆடினர். இந்தித் திணிப்பை எதிர்த்து 1938, 1948, 1953, 1963, 1965

தமிழகத்தில் நடைபெற்ற போராட்டங்களை ஈவுஇரக்கமற்று ஒடுக்கினர்.

*1965*-இல் இந்தியைத் திணிக்கும் அரசமைப்புச் சட்டப் பகுதி *17*-ஐ நீக்கப் போராடிய தமிழக மாணவர்களைப் பொது மக்களைக் காக்கை குருவிகளைப் போல் சுட்டுப்பொசுக்கிக் கொன்று புதைத்தனர். தமிழகத்தின் வேலைவாய்ப்பில், பள்ளிகளில் ஆட்சி, நீதி, நிருவாகத்தில் இன்றைக்கும் இந்தித் திணிப்பை மேற்கொள் கின்றனர். முன்னாள் பிரதமர் வாஜ்பாய் நாம் விரும்பும் இடத்தை இந்தி இன்னும் பிடிக்க வில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

தகவல் தொடர்புக்கேற்ற செழுமை நிறைந்த மொழியாக இந்தி ஆக்கப்படுவதை எது தடுக்கிறது. எதனால் இந்த முயற்சியில் தோல்வி அடைந்தோம் என்பது குறித்து கவலைப்பட்டு இந்தியைத் திணிக்க முயன்றாரே அன்றி தமிழ் உள்ளிட்ட எட்டாவது அட்டவணையில் உள்ள மொழிகளை ஆட்சி மொழிகளாக்க அவர் விரும்பவில்லை.

கெட்ட மரத்தில் விளைந்த நல்ல கனி என்று போற்றப்பட்ட வாஜ்பாய் நிலையே இது வென்றால் அவரின் அரசியல் வாரிசாக தன்னை காட்டிக்கொண்டு ஒரே இந்தியா, ஒரேமொழி, ஒரே பண்பாடு என இந்தி, சமற்கிருத்த வளர்ச்சிக்கும் ஆதிக்கத்திற்கும் வழிவகை செய்யும் பாசகவின் மோடி அரசு தமிழை அழிக்க திட்டமிடுவதில் வியப்பேதும் இல்லை. தமிழ் அழிப்பு என்பது தமிழகத்தை அழிப்பது, தமிழர் அடையாளத்தை, இயற்கை வளத்தை அழிப்பது தமிழ்நாட்டை, நாட்டின் அரசியல் இறைமையை அழிப்பது என்பதாகும். சாதி ஏற்றத்தாழ்வாலும், மத வேற்றுமைகளாலும் பிரிந்து வீழ்ந்து கிடந்த தமிழகத்தில் பேரெழுச்சியை *1938* இந்தி எரிப்பு போராட்டம்தான் தமிழ்நாடு தமிழருக்கே என ஒருங்கிணைத்தது. இன்றைக்கும் நமக்குள் பல வேற்றுமைகளை உருவாக்கித் தமிழையும் தமிழர்களையும் அழிக்க பல சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. நமக்குள் இருக்கும் வேற்றுமைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, ஒரே நாடு, ஒரே மொழி என ஒற்றை இந்தியாவை உருவாக்கிட இந்தி - சமற்கிருதத்தை திணிக்கும் ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராக தமிழ்மொழியை முன்வைத்து ஒன்றிணைவோம். தமிழ்த்தேசத்தின் வாழ்வும் எழுச்சியும் இந்தி - சமற்கிருத ஆதிக்கத்தை வீழ்த்துவதில்தான் மையம் கொண்டுள்ளது என்பதை உணர்ந்து தமிழர்களே ஒன்றிணைவோம். தமிழ்த்தேசத்தை எழுச்சி கொள்ள உழைப்போம். வாரீர்! ●

பெண்களின் அடிமைத்தன்மை பெண்களை மாத்திரம் பாதிப்பதில்லை; அது மற்றொரு வகையில் ஆண்களையும் பெரிதும் பாதிக்கின்றது. இதைச் சாதாரண ஆண்கள் உணருவதில்லை. ஆனால், நாம் இச்சமயத்தில் அதைப் பற்றி சிறிதும் கவலை கொள்ளவில்லை. பெண்களைப் பற்றியே கவலைக் கொண்டு சொல்லுகின்றோம்.

தற்கால நிலையில் பெண்கள் விடுதலைக்குப் பெண்கள் வேறுவிதமான முயற்சி செய்தாலும் சிறிது சிறிதாவது ஆண்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால், இந்தக் காரியத்தில் அதாவது, பெண்கள் பிள்ளை பெறுவதில்லை என்கின்ற காரியத்தில் ஆண்களுக்கு எவ்விதக் கஷ்டமும், நஷ்டமும் கிடையாது என்பதோடு ஆண்களுக்கு இஷ்டமும் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். எப்படியெனில், ஒரு மனிதன் தான் பிள்ளை குட்டிக்காரனாய் இருப்பதனாலேயேதான் யோக்கியமாகவும், சுதந்திரமாகவும் நடந்து கொள்ளப் பெரிதும் முடியாமலிருக்க வேண்டியவனாய் விடுகிறான். அன்றியும் அவனுக்கு அனாவசியமான கவலையும். பொறுப்பும் அதிகப்படவும் நேரிடுகின்றது. மற்றபடி இதனால் ஏற்படும் மற்ற விஷயங்களையும், முறைகளையும் விரிக்கில் பெருகும் என்று இத்துடன் முடித்துக் கொள்கின்றோம்.

**- பெரியார் ஈ.வெ.ரா.**



# நூற்றாண்டு காணும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் தாக்கம்

- பேராசிரியர் சே. கோச்சடை

இந்திய பொதுவுடைமைக் கட்சி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு குறித்து இருவேறு கருத்துகள் உள்ளன. எம்.என். ராய், எல்லின்ராய் - டிரெண்ட், அபானி முகர்ஜி, ரோசாஃபிட்டிங் கோவ், முகமது அலி, முகமது ஷாபிக், ஆச்சாரியா ஆகிய ஏழு பேர் கூடி தாஷ்கெண்ட்டில் 17.10.1920-இல் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியைக் கட்டினர். 1913-14-இல் கதார் கட்சி என்ற ஒன்றும் கட்டப்பட்டது. இதனால் எழுச்சி பெற்ற முசாஃபர் அகமது, எஸ்.ஏ. டாங்கே, சிங்காரவேலர் ஆகியோர் மும்பை, கொல்கத்தா, சென்னை, இலாகூர் மற்றும் கான்பூரில் சிறுசிறு பொதுவுடைமைக் குழுக்களைக் கட்டினர். 1925-இல் இந்தியாவில் பொதுவுடைமைக் கட்சி தொடங்கப்பட்டதை வைத்து அதையே தொடக்க ஆண்டாகச் சிலர் எடுத்துக் கொள்கிறார்கள். நாம் தாஷ்கெண்டில் தொடங்கப் பட்டதை வைத்து இவ்வாண்டை நூற்றாண்டாகக் கொள்கிறோம். இதன் வரலாறை 1969 வரையில் ஒரு பகுதியாகவும், 1969-இல் நடந்த நக்சல்பாரி எழுச்சி நடந்த ஆண்டுக்குப் பிறகு இன்னொரு பகுதியாகவும் காணலாம்.

1920-ஆம் ஆண்டு தாஷ்கெண்ட்டில் இ.பொ.க. தொடங்கப் பட்ட காலம் முதலே முஸ்லிம்கள் தலையாய பங்காற்றி வருகின்றனர். தமிழே தெரியாத அமீர் ஹைதர் கான் தமிழ்நாட்டில் கட்சிகட்ட அனுப்பப்பட்டார். பி.சுந்தரய்யா அவரால் கட்சியில் சேர்க்கப் பட்டவர், 1920-30களில் அமைப்பு நிலை வலுவின்றி இருந்தது. பல குழுக்களாகச் செயல்பட்டனர். 1934-இல் பிரிட்டிஷார் கட்சி யைத் தடை செய்தனர். 1921-க்கும் 1924-க்கும் இடையில் பெஷாவர், மீரட், கான்பூர் சதிவழக்குகள் போடப்பட்டன. சிங்கார வேலர் உடல்நலக் குறைவால் விடுவிக்கப்பட்டார். எம்.என்.ராய் ஜெர்மனி யிலிருந்தார். ஆர்.சி. சர்மா புதுவையிலிருந்தார். இவ்வழக்கு களில் பலர் சிறைப்பட்டனர். கடும் அடக்குமுறைகள் ஏவப்பட்டன. வெளிப்படை யான பொதுவுடைமைக் கட்சி நடவடிக்கைகள் உழைப்பாளர், உழவர் கட்சியின் (WPP) வாயிலாக நடந்தன.

பொதுவுடைமை அகிலத்தின் 6-ஆவது பேராயம் கோமிண் டாங்கில் கூடியது. வன்குடியேற்ற (காலனி) நாடுகளில் தேசிய முதலாளிகளுடன் சேர்ந்து கூட்டணி கட்டலாம் என்ற தீர்மானத்தை மீளாய்வு செய்தது. இந்திய தேசியக் காங்கிரசின் தேசியச் சீர் திருத்தவாதத்தை எதிர்த்து முகமூடியைக் கிழிக்குமாறு அறைகூவல் விடுத்தது. அது அமைதி வழிப் புரட்சியை எதிர்த்தது. காங்கிரசு சுயராச்சியக் கட்சியை நம்பக்



கூடிய கூட்டாளி யாகவோ, எதிரியாகவோ பார்க்க முடியாது என்ற நிலைபாடு எடுத்தது. தேசிய முதலாளிகளுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் இடையே யுள்ள முரண்பாடுகளைப் பயன் படுத்துமாறு பொதுவுடைமையர் கேட்டுக் கொள்ளப்பட்டனர். எனவே பொதுவுடைமையர் இந்தியப் பேராயக் கட்சியில் ஊடுருவினர். *1936-37*-ல் பேராய நிகர்நிலைக் (சமத்துவக்) கட்சியாக (CSP) வேலை செய்தனர். பேராய நிகர்நிலை கட்சி மாநிலப் பேரவைக் கோரிக்கையை ஏற்றது. ஆனால் அது ருஷ்ய சோவியத்துகளுக்கு ஈடாகாது என்று கருதியது.

*1940*-இல் நடந்த இராம்கர் இ.பொ.க. மாநாட்டில் 'பாட்டாளி வர்க்கப்பாதை' என்ற கொள்கை அறிக்கையை வெளியிட்டது. முதல் உலகப் போரில் ஈடுபட்டு நலிந்த பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்துப் பொது வேலை நிறுத்தம், வரிகொடாமை, வாடகை/குத்தகை கொடாமை ஆகிய இயக்கங்கள் வாயிலாகவும், ஆய்த எழுச்சிக்கான தயாரிப்பு வாயிலாகவும் ஏகாதிபத்திய (வல்லரசிய) எதிர்ப்பில் ஈடுபட்டது.

பர்தோலியில் *1922*-இல் ஒத்துழையாமை இயக்கம் காந்தியாரால் அறிவிக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசு உழவர்களைக் கடுமையாக ஒடுக்கியது. சில நாள்களில் சௌரிசௌராவில் ஒரு காவல் நிலையம், சில காவலருடன், மக்களால் எரிக்கப்பட்டது. துவக்குகள் சூறையாடப்பட்டன. இயக்கம் வன்முறைக்குத் திரும்பியது காந்தியாருக்குப் பிடிக்கவில்லை. உடனடியாக ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப் பெற்றார். வரிகளை அரசுக்கும் நில வுடைமையருக்கும் செலுத்துமாறு பேராயக் கட்சியின் செயற்குழு தீர்மானம் இயற்றியது. இது சிறையிலிருந்த பேராயக் கட்சியினருக்கே பிடிக்கவில்லை. ஏனெனில், சௌரிசௌராவில் *172* பேருக்குச் சாவுத் தண்டனை கொடுக்கப்பட்டது. இயக்கம் அதே வழியில் ஆய்த எழுச்சியாகத் தொடர்ந்திருந்தால் உழவர் புரட்சி ஏற்பட்டிருக்கலாம்.

*13.4.1936*-இல் அனைத்திந்திய உழவர் பேரவை லக்னோவில் தொடங்கப்பட்டது. வேளாண்மைத் துறையில் நடந்த பல கொடுமைகளுக்கு எதிராக ஏராளமான போராட்டங்கள் நாடெங்கும் நடந்தன. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தலைமறைவு வாழ்க்கையிலும், சிறைகளிலும் தம் வாழ்வைத் தொலைத்தனர். பலர் உயிரிழந்தனர். கடுமையான நெருக்கடிகளையும் ஒடுக்கு முறைகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. இந்த ஈகமெல்லாம் இயக்கத்தை இரும்புக் கோட்டையாக்கியது.

குருத்துவாரர் சீர்திருத்த இயக்கம், கேரளா மாப்பிள்ளைக் கலவரம் போன்ற பல உழவர் இயக்கங்கள் நில உடைமையரையும் அவர்களைத் தூக்கிப்பிடித்த பிரிட்டிஷ் வல்லரசையும் எதிர்த்து நடந்தன. கேரளாவில் நில உடைமையர் இந்துக்கள். உழவர்களோ முஸ்லிம்கள். இதில் *3266* முஸ்லிம் மாப்பிள்ளைகள் கொல்லப்பட்டனர்.

அதேநேரத்தில், கொல்கத்தா, மும்பை, சென்னைத் துணி, சணல் ஆலைத் தொழிலாளரும்; வடகிழக்கில் தொடர்வண்டித் துறை, நிலக்கரிச் சுரங்கங்கள், மும்பை அஞ்சல் துறை, அசாம் தோட்டத் தொழிலாளர், கொல்கத்தா டிராம் தொழிலாளர் இடையேயும் அமைப்புக் கட்டி இயக்கம் நடத்தப்பட்டது. இப்போதைக்கு உழவர் இயக்கம் ஏறத்தாழ *10* இலட்சம் பேரை உறுப்பினராகக் கொண்டுள்ளது. இதன் போராட்டம் நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் நடக்காத நாளில்லை. இப்போராட்டங்களால் இனாம் ஒழிப்புச் சட்டம், நில வாரச் சட்டம், நில வெளியேற்றச் சட்டம், நில உச்சவரம்புச் சட்டம், நிலம் உழுபவனுக்கே சொந்தம் எனும் சட்டம் ஆகியவை நடைமுறைக்கு வந்தன. *1968*-இல் அரைப்படி நெல் கூலி அதிகம் கேட்டதனால், கீழ்வெண்மணியில் *43* உயிர்கள் எரித்துப் பறிக்கப்பட்ட கொடிய நிகழ்வு போன்ற எண்ணற்ற ஈகங்களால்தான் இவற்றை அடைய முடிந்தது. தஞ்சை மாவட்டத்தில் சீனிவாசராவ் போன்ற தலைவர்கள் நடத்திய இயக்கத்தால் சாணிப்பால், சவுக்கடி போன்ற கொடிய அடக்குமுறைகளுக்கு முடிவு கட்டப்பட்டது.

*1936-37*-இல் சோசலிஸ்டுகளுக்கும் (CSP) பொதுவுடைமையருக்கும் இடையிலான கூட்டுறவு உச்சநிலையிலிருந்தது. 1936 மீரட்டில் நடந்த இரண்டாவது பேராயம் ஓர் ஆய்வறிக்

கையை வழங்கியது. அது மார்க்சிய இலெனினிய அடிப்படையில் ஓர் ஒன்றுபட்ட இந்திய சமத்துவக் (சோசலிசக்) கட்சியை நிறுவுவதற்கான தேவையை அறிவித்தது. பைஜ்பூரில் நடந்த பேராய சமத்துவக் கட்சியின் 3ஆவது பேராயத்தில் பல பொதுவுடைமையர்கள் அதன் தேசியச் செயற்குழுவில் சேர்க்கப்பட்டனர். இப்படிப் பொதுவுடைமையர்கள் தனித்தும், பேராயக் கட்சிக்குள் ஊடுருவி அழுத்தக் குழுவாகச் செயல்பட்டும் சமத்துவக் குமுகாயம் படைக்கப் பாடுபட்டனர். 1942 சூலையில் பிரிட்டனும் சோவியத் ஒன்றியமும் செர்மன் நாஜிகளுக்கு எதிராகக் கூட்டணி அமைத்ததால், இ.பொ.க. சட்ட பூர்வமாக்கப்பட்டது. இதனால் அனைத்திந்திய தொழிற்சங்கப் பேராயத்தில் (AITUC) அதன்பிடி வலுப்பட்டது.

1946 மாகாண சட்டப்பேரவைத் தேர்தலில், 1585 தொகுதிகளில், 108-இல் போட்டியிட்டு 8-இல் வென்றது. இக்கட்டத்தில் கட்சிக்குள்ளே வலது-இடது ஊசலாட்டம் நிலவியது. 1948 கொல்கத்தா இரண்டாவது பேராயத்தில் பி.டி. இரணதிவே பொதுச்செயலாளரானார். அவரது வழிகாட்டலில் பல பகுதிகளில் தம் அதிகாரத்தை விட்டுக் கொடுக்கத் தயங்கிய உள்ளூர் நிலவுடைமையாளர்களை எதிர்த்துப் பல ஆய்தப் போராட்டடங்களைக் கட்சி தொடர்ந்து நடத்தியது. அத்தகைய ஆய்தக் கிளர்ச்சிகள் திரிபுரா, தெலுங்கானா மற்றும் கேரளாவிலும் தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்திலும் நடந்தன. இவற்றில் முகாமையானது ஐதராபாத் நிசாமுக்கு எதிராக நடந்த தெலுங்கானா எழுச்சியாகும். பொதுவுடைமையர் மக்கள் படையையும், குடிப்படையையும் கட்டி, 30 இலட்சம் மக்கள் வாழ்ந்த பகுதியைத் தம் கட்டுப்பாட்டுக்குள்ளே கொண்டு வந்தனர். நிலவுடைமையை ஒழிக்க விரும்பாத நேருவின் நடுவணரசு படை வலிமையால் மக்களின் எழுச்சியை நசுக்கியது. பி.டி. இரணதிவேயின் ஆய்தப் போராட்டம் ‘இடது துணிச்சல்வாதம்’ என்று கட்சியால் பழிசுமத்திக் கைவிடப்பட்டது. மணிப்பூரிலும் பீகாரிலும் உழவர் போராட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. 1950-களின் முற்பகுதியில் இளம் பொதுவுடைமையரின் தலைமையில் துணி ஆலைத் தொழிலாளரையும் வங்கி ஊழியர் களையும் அமைப்புசாராத் தொழிலாளர்களை யும் திரட்டியது. அதனால் வடஇந்தியாவில் மக்கள் ஆதரவு உறுதியானது. ஆனால் 1951-இல் கட்சிப் பேராயம் ‘மக்கள் குடிநாயகம்’ என்பதை மாற்றித் ‘தேசியக் குடிநாயகம், (சனநாயகம்)’ என்பதை முதன்மை முழக்கமாயிற்று. தேசத்தைக் காப்பதை முதன்மைப் பணியாக்கி மக்களை விடுதலை செய்வது பின்னுக்குத் தள்ளப்பட்டது.

கட்சியின் மக்கள் திரள் அமைப்புகள் நடத்திய போராட்டங்களால் செல்வாக்குப் பெற்ற இ.பொ.க. 1952-இல் நாடாளுமன்ற எதிர்க்கட்சியாகியது. 1952 திருவாங்கூர்-கொச்சித் தேர்தலில் இ.பொ.க. தடை செய்யப்பட்டது. ஆனால் தடை நீங்கியதும் 1957-இல் கேரள மாநில ஆட்சியைப் பிடித்தது. இ.எம்.எஸ். நம்பூத்ரிபாட் தலைமையில் அமைச்சரவை அமைந்தது. அநியாயமாக நேரு அரசு அதைக் கலைத்தது. பின்பு மணிப்பூர், திரிபுரா, மேற்குவங்கத்தில் அமைந்த அரசுகள் பல மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றின.

1962-இல் நடந்த இந்திய சீனப் போருக்குப் பிறகு கட்சிக்குள்ளே கருத்து வேறுபாடுகள் நிலவின. பன்னாட்டளவில் குருச்சேவ் முன்வைத்த நாடாளுமன்றப் பாதை, சமாதான சக வாழ்வு ஆகிய முழக்கங்களை ஆதரிப்போராக இ.பொ.க.வும்; ஆய்த எழுச்சி, பாட்டாளி வகுப்பு சர்வாதிகாரம் என்பதை ஆதரிப்போராக இ.பொ.க.-மாவும் பொதுவுடைமையர் பிரிந்தனர். முன்னவர் ருஷ்யாவையும், பின்னவர் சீனாவையும் ஆதரித்தனர். இந்திராகாந்தி இறந்த பிறகு இருபிரிவுகளும் சில நிலைமைகளில் இணைந்து வேலை செய்கின்றனர்.

பொதுவுடைமையர்கள் கொடுத்த அழுத்தத்தாலே இங்கே பொதுத்துறை நிறுவனங்கள் நிறுவப்பட்டன. உலகெங்கும் பொருளியல் வீழ்ச்சி நடந்த போதும், இந்தியா சரிவை அன்று சந்திக்காமைக்கு இதுவே காரணம். அதேவேளையில் 2004-இல் பேராயக் கட்சியுடன் சேர்ந்து (UPA) பொது வேலைத் திட்ட அடிப்படையில் அரசமைத்த பொதுவுடைமையர் வடஅமெரிக்காவுடனான இந்தி

யாவின் அமைதிவழி அணு ஆற்றல் ஒப்பந்தத்தை எதிர்த்து விலகியதால், மன்மோகன் அரசு தானடித்த மூப்பாக மக்களுக்கு எதிராகச் செயல்பட்டது.

*1948*-இல் பிடி இரணதிவே பொதுச் செயலரானபின் 'குடிநாயகப் புரட்சி வேலைத் திட்டத்தை' ஏற்றது. சாதிக்கு எதிரான போராட்டம் இந்த ஆவணத்தில்தான் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டது. இன்றைக்கு நாம் எதிர்கொள்ளுகிற பிரிவினை, சாதி, மதச் சிக்கல்களும்கூட *1947*-க்கு முன் பின்னாகப் பேராயக் கட்சியின் கொள்கைகளிலிருந்தே தோன்றுகின்றன. உழைக்கும் வகுப்போடு கூட்டுச் சேர்ந்து உழவர் புரட்சியை நடத்தி முடிக்கத் தடையாக இருந்தனர். நிலக்கிழாரியத்தைத் துடைத்தழிக்காமல் புதிய சட்டங்கள் வாயிலாக அவர்களுக்குச் சலுகைகளை வாரி இறைத்தமை ஆகியவை, அடித்தட்டு மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. எங்கெல்லாம் நிலக்கிழாரிய, அரை நிழக்கிழாரிய உறவுகள் ஒழித்துக் கட்டப்பட்டு உழவர் புரட்சி முழுமையாக நடந்ததோ அங்கேதான் சாதி, மதவாதம் வெல்லப்படும் என்று வரலாறு காட்டுகிறது. உடைமையாளர்கள் தலைமை யேற்று நடத்திய தேசிய விடுதலைப் போராட்டங்கள் முற்றுப் பெறாத நாடுகளில் சிக்கல்கள் அப்படியே நிலவுவதோடு அதை மிகுவித்து, மக்களின் மனநிறைவின்மையைத் திசைதிருப்பி, சனநாயக இயக்க ஒற்றுமையைக் குலைக்கப் பயன்படுகின்றன. உழவர் இயக்கங்கள் வலிமையோடிருந்த இடங்களில் சாதி ஒற்றுமையும், இந்து-முஸ்லிம் ஒற்றுமையும் கட்டப்பட்டது. உழவர் பேரவை (அகி கிசான் சபா) அதன் மேடையில் சாதிவாதமோ, மதவாதமோ ஏற ஒருபோதும் அனுமதிக்கவில்லை. பஞ்சாப், பீகார், வங்காளத்தில் நடந்த கலவரங்களின் போது, உழவர் பேரவை தன் மதச்சார்பின்மையைப் பேணியதுடன் மதவாதக் கருத்தியலை அம்பலப்படுத்தி, அந்த நச்சுயிரியை எதிர்த்துப் போரிட்டது. இப்போரில் கொள்கைக்காக அதன் தலைவர்களும் ஊழியர்களும் உயிர் நீத்தனர்.

இவ்வாறாக நாட்டு விடுதலை இயக்கத் தலைமை உடைமையாளரிடம் இருந்தாலும் தொழிற்சங்க இயக்கங்களும், உழவர் பேரவைகளும் சார்புப்படுத்திய போர்க் குணமிக்க மாற்று அரசியல் ஆற்றல்கள், உலகப்போர் முடிவில் உடைமையாளருக்கு ஒரு மெய்யான சவாலாக எழுந்தன. இது முதலாவது இந்தியப் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தெளிவானது. எங்கெல்லாம் உழவர் அமைப்புகள் வலுவாக இருந்தனவோ அங்கெல்லாம் இடது மற்றும் எதிர்ப்பாற்றல்கள் மாபெரும் வெற்றி பெற்றன.

இருப்பினும் பின்வந்த ஆண்டுகளில் நாடாளுமன்ற வாதத்தில் மூழ்கி, நிலக்கிழாரிய, முதலாளிய ஆற்றல்கள் கிழித்த கோட்டுக்குள்ளே பொதுவுடைமையர் ஆடியதால் மக்கள் கொதிநிலையில் இருந்தார்கள்.

*1967*-இல் மேற்குவங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டம் நக்சல்பாரி வட்டாரத்தில் ஆயுத மேந்திய உழவர்கள் நிலக்கிழாரியத்துக்கு எதிராகக் கலகம் செய்தனர். அப்போது இ.பொ.க. (மார்க்சிஸ்ட்) அமைப்பில் வேலை செய்த சாரு மஜூம்தார் அப்போராட்டத்துக்குத் தலைமை தாங்கினார். பழங்குடி மக்களும், ஏழை-கூலி உழவர்களும் நடத்திய இந்தப் போராட்டம் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் வரலாற்றில் இன்னொரு தொடக்கமாக அமைந்தது. மார்க்சியக் கட்சி இதை விரும்பவில்லை. சாரு மஜூம்தார் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

*1969*-இல் அவரால் இ.பொ.க. (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) தொடங்கப்பட்டது. நக்சல்பாரி எழுச்சி மேற்குவங்கம், ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் இருந்த புரட்சியாளர்களுக்கு ஊக்கம் ஊட்டியது. ஆங்காங்கே நிலப்பறி இயக்கம் தொடர்ந்தது. *3.3.1967*-இல் நக்சல்பாரிப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களும் ஒரு குழந்தையும் காவல் துறையால் சுட்டுக் கொல்லப்பட்டனர். உழவர் குழுக்கள், ஆங்காங்கே நிலக்கிழார்களின் நிலங்களைக் கையகப்படுத்துதல், தானியங்களையும் ஆயுதங்களையும் பறித்தெடுத்தனர். இது சுரண்டிக் கொழுத்த ஆளும் வகுப்புக்கு அச்சமூட்டியது.

**வகுப்பு எதிரிகளை அழித்தொழிப்பதே வகுப்பு (வர்க்க)ப் போராட் டத்தின் உயர்ந்த வடிவம் என்றும், எதிரியின் குருதியில் கைவைத்தவரே உண்மையான**

பொதுவுடைமையர் என்றும் சாரு மஜூம் தார் கூறினார். கட்சிக்கொள்கையாக எட்டு ஆவணங்களை வெளியிட்டார். இளைஞர்கள் படிப்பை நிறுத்திவிட்டுச் சிற்றூர்களுக்குச் சென்று கட்சிப்பணி ஆற்றி னர். ஸ்ரீகாகுளம், கொல்கத்தா, ஆந்திரா, கேரளா, தமிழ்நாட்டில் காவல்துறை நூற்றுக்கணக்கான இளைஞர்களைச் சுட்டுக் கொன்றது; கொன்று கொண்டிருக் கிறது.

சிரீகாகுளம் பழங்குடி உழவர் இயக்கம் பல போராடடங்களை நடத்தியது. பழங்குடி மக்கள் காலங்காலமாகப் பயிரிட்ட நிலத்தை விட்டு வெளியேற, அரசு கட்டாயப்படுத்தியது. ஆனால் அவர்கள் 10000 ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றினர். 1967-72 காலக்கட்டத்தில் சிரீகாகுளம் மலைவாழ் உழவர் புரட்சியின் போது 350 உழவர்களும், பொதுவுடைமைப் புரட்சியாளரும் கொல்லப்பட்டனர். இப்பகுதி யில் பழங்குடியினரால் 6000 ஏக்கருக்கு மேல் கைப்பற்றப்பட்டது. தரிமெலக நாகிரெட்டி தலைமையில் அவரது சொந்த மாவட்டமான அனந்தப்பூரில் நிலமற்ற உழவர்கள் 3600 ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றினர். இவ்வளவும் கடுமையான அடுக்குமுறைகளைச் சந்தித்தும், ஈகங்களைச் செய்தும் குருதி சிந்திப் பெற்ற வெற்றிகள்! தமிழகத்திலும், கேரளாவிலும் நடந்த போர்க்குணமிக்க போராட்டங்கள் ஆளும் வர்க்கம் பழைய முறையிலேயே நடத்த முடியாமல் கூலி உயர்வு, நில உச்சவரம்பு போன்றவற்றை நிறைவேற்ற வைத்தது.

இப்போது சாரு மஜூம்தாரின் கோட் பாடுகள் கடுமையாக விமர்சிக்கப்படு கின்றன. 1970 வேலைத் திட்டம் கொள்கை வேறுபாடுகளாலும், தனிமனித விருப்பு வெறுப்புகளாலும் மா.லெ. கட்சி பல சிறிய குழுக்களாகப் பிளவுபட்டுள்ளது. **எனினும் மதவாத ஆற்றல்கள் எல்லா அரசியல் கட்சிகளிலும் ஊடுருவியுள்ளதாலும், இந்துத்துவ பா.ச.க. பெரும்பான்மை பெற்று ஆட்சியைப் பாசிச மயமாக்கி வருவதாலும் இக்குழுக்கள் சிக்கல்களின் அடிப்படையிலாவது ஒன்றுசேர்ந்து வேலை செய்ய வேண்டிய தேவையை உணர்கின்றன.**

உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கிற **கூட்டிணைவு (Corporate) நிறுவனங்கள், தமக்கு எதிர்ப்பு வராமலிருக்க இந்தியாவுக்கே உரித்தான சாதிப்பிளவுகளையும், மதவெறுப்பையும் தூண்டி வளர்க்கின்றன. மக்களின் உணவு உற்பத்தி உரிமை பறிக்கப்பட்டுள்ளது. தொழில் துறையிலும் அரசியலிலும் இறைமை இல்லை. இந்த நிலையிலும் கூட நிலக்கிழார்களிடமிருந்தும், பெரிய கூட்டிணைவு நிறுவனங்களிடமிருந்தும் நிலங் களைப் பறித்து மக்களின் உடைமை யாக்க வேண்டியுள்ளது. இதற்கு மக்களை வகுப்பு அடிப்படையில் திரட்ட வேண்டியுள்ளது. கடந்த காலத்தில் வகுப்பு அடைப்படையில் மக்களைத் திரட்டிய பொதுவுடைமைக்கட்சிகளும் வெல்ல முடியவில்லை. ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு இடஒதுக்கீடு போன்ற சலுகைகளின் வாயிலாகவும் அச்சாதி களுக்கு விடுதலை கிட்டவில்லை. பொதுவுடைமைக் கட்சிகள் ஆண்ட மாநிலங்களில் உழவர்களின் தலையாய சிக்கலான நிலச் சிக்கலைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மார்க்சியமோ, பெரியாரியமோ, அம்பேத்கரியமோ தம்மளவிலான போராட்டங்களால் மட்டுமே வெல்ல முடியவில்லை. இதை உணர்ந்து மூன்று தரப்பும் கூட்டாக வேலை செய்வது வரவேற்கத்தக்கது.**

மொத்தத்தில் பொதுவுடைமை இயக்கங் களின் போராட்டமில்லாமல், இந்தியா இப்போதுள்ள வளர்ச்சியைக் கூடப் பெற்றிருக்க முடியாது. மாநில அரசுகளின் உரிமையையும், மக்களின் உரிமைகளையும் பறித்து ஒற்றை அடையாள ஆட்சியை நிறுவுவதை நோக்கிப் பாசிச மயமாகும் பா.ச.க. அரசைப் - பொது மக்களும், சிறு இயக்கங்களும், தேசிய இனங் களும், பொதுவுடைமையரும் ஓரணியில் மக்களி டையே வேலை செய்து, முறியடிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் 8.5 விழுக்காட்டிலிருந்து 4.5 விழுக்காடாகச் சரிந்துவிட்ட பொருளியல் வளர்ச்சி எதிர்த் திசையில் போய் மக்களை வாட்டி வதைத்துவிடும். ●



# இந்தியா : சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்கள்

*- மரு.சா.மா. அன்புமணி*

*இந்திய ஒன்றியத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு பல வளரும் நாடுகளை ஒப்பிடுகையில் மிகவும் குறைவு. பல நாடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6-12 விழுக்காடு நிதி ஒதுக்கும் நிலையில் இந்திய அரசு 1.02-1.28 நிதி மட்டுமே ஒதுக்கி வருகிறது. 2025-ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5 விழுக்காடு நிதி ஒதுக்கவேண்டும் என்று தேசிய நலவாழ்வுத் திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதை நோக்கிய சாதகமான நடவடிக்கைகள் ஏதும் இல்லை. 2019 - 20-ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 65037.88 மட்டுமே சுகாதாரத் துறைக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. ஒரு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்குவோம் என்று சொன்ன 'நீடித்த வளர்ச்சி இலக்கை' நடுவண் அரசு அடைய வில்லை.*

*பெண்கள் குழந்தைகள் இளைஞர்கள் இவர்களைக் கருத்தில் கொண்டே ஒவ்வொரு திட்டத்தையும் கொண்டு வருவதாக நடுவண் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி சொல்கிறார். மருத்துவத்திற்காகத் தங்கள் கையிலிருந்து மக்கள் செலவு செய் வதை தடுத்து நிறுத்திவிடுவோம் என்கிறார். அதற்காகவே ஆயுஷ்மான் பாரத்யோஜனா, பிரதமர் ஜன ஆரோக்கிய யோஜனா என்கிற திட்டங்கள் மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண் டொன்றுக்கு 5 லட்சம் ரூபாய் சுகாதார காப்பீடு வழங்கப்படும் என்கிறது நடுவண் மோடி அரசு. இதன்மூலம் 50 கோடி ஏழை இந்திய மக்கள் பயனடைவார்கள் என்று சொல்கிறார்கள்.*

**சுகாதாரத் துறை நெருக்கடி நிலைமை**

*2014ஆம் ஆண்டு பா.ச.க. அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற திலிருந்து சுகாதாரத் துறையில் உள்ள தடைக்கற்களை அகற்று வோம் என்று சொல்லிவருகிறார்கள். உள்கட்டமைப்பு வசதிக் குறைபாடு, சுகாதாரச் சேவைகளைப் பெறுவதில் உள்ள தடை, அதிகரிக்கும் மருத்துவச் செலவு இவற்றையெல்லாம் மாற்றுவோம் என்று பேசுகிறார்கள். ஆனால் நிலைமையோ கவலைக்கிடமாக உள்ளது. பெரிய மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் ஆக்சிஜன் கிடைக்காமல் மருத்துவமனையில் குழந்தைகள் நூற்றுக்கணக்கில் இறக்கின்றனர். பீகார் மாநில முசாபர்பூரில் 150க்கும் மேற்பட்ட*



குழந்தைகள் சத்துக் குறைபாட்டால் மூளை அழற்சி நோயால் இறந்தனர். உலகிலேயே அதிகசத்துக் குறைபாடுள்ள குழந்தைகள் இந்தியாவில்தான் உள்ளனர். பேறுகால மரணங்கள் சிசுமரணங்கள் இன்னும் குறைக்கப் படவில்லை. இதுபோன்ற தவிர்க்கப்படக் கூடிய இழப்புகள் இறப்புகள் ஆண்டுதோறும் ஏராளமாக நடந்துகொண்டே இருக்கின்றன.

ஊரக சுகாதாரப் புள்ளிவிவரம் 2017-18-இன்படி இந்திய அளவில் இன்னமும், 32900 துணை சுகாதார நிலையங்கள் (5000 மக்கள் தொகைக்கு ஒன்று) 6430 ஆரம்ப சுகாதார நிலையங்கள் (30000 மக்கள் தொகைக்கு ஒன்று), 2188 சமூகநல மையங்கள் (80000-120000 மக்கள் தொகைக்கு ஒன்று) ஊரகப் பகுதிகளில் தேவைப்படுகின்றது. தற்போது செயல்படும் அரசு துணை சுகாதார நிலை யங்களில் ஏழு விழுக்காடும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 12 விழுக்காடும், சமூகநல மையங்களில் 13 விழுக்காடு மட்டுமே இந்தியப் பொதுச் சுகாதாரத் தரநிறுவனம் நிர்ணயித்துள்ள தரத்தில் செயல்படுகின்றன. அரசு மருத்துவமனைகளில் மருத்துவர் : மக்கள் தொகை விகிதமானது உலக நல வாழ்வுக் கழகம் நிர்ணயம் செய்ததை விட 25 மடங்கு குறைவாக உள்ளது.

## இந்தியாவில் மருத்துவக் காப்பீடு ஒரு பார்வை

மக்களுக்கு ஏற்படும் மருத்துவச் செலவுகள் மக்களின் வறுமைக்குக் காரணமாக உள்ளது. வறுமை பல நோய்கள் ஏற்பட முக்கிய காரணி யாக உள்ளது. உலக மக்கள் தொகையில் இந்தியர்கள் 16 விழுக்காடு உள்ளனர். உலக அளவில் மருத்துவத்திற்காகச் செலவிடப் படும் தொகையில் ஒரு விழுக்காடு மட்டுமே இந்தியாவில் செலவிடப்படுகிறது. உலக வங்கி அறிக்கையின்படி 2003-04ஆம் ஆண்டு களில் 5.5 கோடி இந்தியர்களும், 2010ஆம் ஆண்டு முப்பது கோடி இந்தியர்களும் காப்பீடு பெற்றனர். இவர்களில் 18 கோடிபேர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள். இந்திய அரசு அறிக்கைப்படி 2014ஆம் ஆண்டு 17 விழுக்காடு இந்தியர்கள் அதாவது 21.6 கோடி இந்தியர்கள் மட்டுமே காப்பீடு பெற்றி ருந்தனர். 2015ஆம் ஆண்டு 63 கோடிபேர் இந்தியாவில் ஏதேனும் ஒருவகை சுகாதாரக் காப்பீடு பெற்றிருப்பார்கள் என்று உலகவங்கி அறிக்கை கூறியது.

2009-10ஆம் ஆண்டுகளில் மொத்த மருத்துவச் செலவில் 6.4 காப்பீடு திட்டம் மூலமாக செலுத்தப்பட்டது. அது அதிகரித்து 2015ஆம் ஆண்டு 8.4 உயர்ந்துள்ளது. மோடி யின் ஆயுஷ்மான் பாரத் காப்பீடு திட்டம்; 2018ஆம் ஆண்டு செப்டம்பர் 25ஆம் நாள் இத்திட்டம் தொடங்கப்பட்டது. வருவாய் குறைந்த 40 விழுக்காடு மக்களுக்கு 10 கோடி குடும்பங்களுக்கு அதாவது 50 கோடிப் பேர் சட்டத்தால் பலன் கிடைக்கும் குடும்பத் திற்கு ஓர் ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபாய் காப்பீடு கிடைக்கும். 2011-ஆம் ஆண்டு எடுக்கப் பட்ட சமூக, பொருளாதார, சாதிப் புள்ளி விவரத்தின்படி பயனாளிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.

ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலையில் பணி யாற்றும் தொழிலாளர்கள் அஸ்பெஸ்டோசிஸ் உள்ளிட்ட நுரையீரல் நோய்களுக்கு ஆளாவது பற்றி, அவர்களின் உடல்நலம் பற்றிய வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்தில் 1995இல் வந்தபோது உச்சநீதிமன்றம் மருத்துவவசதி என்பது ஒவ்வொரு இந்தியரின் அடிப்படை உரிமை என்று தீர்ப்பளித்தது. அதற்குப் பிறகு 23 ஆண்டுகளுக்குப்பின் இந்திய அரசு பொது மக்களுக்கான ஒரு காப்பீட்டுத் திட்டத் தைக் கொண்டு வந்துள்ளது குறிப்பிடத் தக்கது. நடுவண் அரசு காப்பீட்டுத் திட்டத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் 8000 இணைக்கப்பட்டுள்ளன. பயனாளிகள் பற்றிய தகவல்கள் இணையம் மூலம் இணைக் கப்பட்டு மருத்துவமனைகளில் உள்ள காப்பீட்டு அலுவலர் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

காப்பீட்டுக்கு நிதி மூலம் இந்தியாவில் பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் மாநிலப் பட்டியலில் உள்ளது. மருத்துவசேவைகள் மற்றும் மருத்துவக் கல்விக்கு மாநில அரசு நிதி வழங்குகிறது. நடுவண் அரசின் மோடி காப்பீடு திட்டம் வேறு, மாநில அரசுகள் வழங்கும் காப்பீட்டு திட்டம் வேறு. இருப்பினும் இந்தியாவின் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பகுதிகளும் நடுவண் அரசு காப்பீட்டுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. தில்லி, கேரளா, தெலுங்கானா, பஞ்சாப், ஒடிசா ஆகிய மாநிலங்கள் தங்களது கோரிக்கைகளைச் சரிசெய்யாவிட்டால் அதில் சேரப்போவ தில்லை என அறிவித்துள்ளன. நடுவண் அரசு காப்பீட்டுத் திட்டத்தில் சேரும் மாநிலங்களுக்கு 60 விழுக்காடு நிதியை நடுவண் அரசு வழங்கும் என்றும் மீதமுள்ள நிதியை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் திட்டம் கூறுகிறது. மாநில அரசுகள் தனியார் காப்பீடு நிறுவனங் களுடன் இணைந்து திட்டத்தை செயல்படுத் தலாம் என்கிறது திட்ட அறிக்கை. நடுவண் அரசு, சுகாதார காப்பீட்டுக்கு முதலில் 2000 கோடி ரூபாய், பிறகு 12 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்றது. 50 கோடி பேருக்கு 10 கோடி குடும்பங்களுக்கு இது எப்படிப் போதுமானது என்று நலவாழ்வுப் பொருளியல் ஆய்வாளர்கள் கேட்கின்றார் கள்.

நடுவண் அரசுக் காப்பீட்டுத் திட்டம்-2018 வருவதற்கு முன்பே பல மாநில அரசுகள் காப்பீட்டுத் திட்டத்தை செயல் படுத்தி வருகின்றன. 2009ஆம் ஆண்டில் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் என்ற பெயரில் தமிழகத்தில் தி.மு.க. அரசு காப் பீட்டுத் திட்டத்தைத் தொடங்கியது. ஆண்டு வருமானம் ரூபாய் 72 ஆயிரம் வரை உள்ள வர்களுக்கு 51 நோய்களுக்கு ஆண்டுக்கு ஒரு இலட்சம் காப்பீடு அளிக்கப்பட்டது. அதற்குமுன்பே ஆந்திர மாநில அன்றைய ராஜசேகரரெட்டி தலைமையிலான காங்கிரஸ் அரசு ஆரோக்கியஸ்ரீ என்ற காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கி இருந்தது. அதில் பயனாளிகளே காப்பீட்டு பிரிமியம் தொகை யை அளிக்கவேண்டும். ஆனால், தமிழக அரசு காப்பீட்டுத் திட்டத்தில் அரசு காப்பீட்டுத் தொகையை அளித்தது. 2011 ஆம் ஆண்டில் அ.தி.மு.க. அரசு அமைந்த பிறகு, ஏற்கனவே இருந்த கலைஞர் காப் பீட்டுத் திட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டு முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட காப் பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் 1027 சிகிச்சை முறைகள் 154 தொடர் சிகிச்சை முறைகள் 38 அறிதல் கண்டுபிடிப்பு முறைகளுக்கும் காப்பீடு அளிக்கப்படுகின்றன. 1.57 கோடி குடும்பங் கள் பயன்பெறுகின்றன. நடுவண் அரசு காப்பீட்டுத் திட்டத்தில் தமிழகத்தில் 77 இலட்சம் குடும்பங்கள்தான் இணைக்கப் பட்டுள்ளன. அதேவேளை நடுவண் அரசுத் திட்டத்தில் 1350 சிகிச்சைகள், மாநில அரசு திட்டத்தில் 1027 சிகிச்சைகள். தமிழக அரசு திட்டத்தில் 158 சிகிச்சைகள் அரசு மருத்துவ மனையில் மட்டுமே செய்யமுடியும். தமிழக அரசு காப்பீட்டுக்காக ஆண்டுதோறும் சுமார் 1360 கோடி ரூபாய் ஒதுக்குகிறது. தமிழகத்தில் நடுவண் அரசு மற்றும் மாநில அரசு 2 காப்பீட்டுத் திட்டத்திலும் ஒருவர் ஒரேநேரத்தில் பயன்பெறமுடியாது என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

அரசு காப்பீட்டுத் திட்டம் ஆண்டு வருமானம் 72 ஆயிரத்திற்கும்கீழ் இருப்பவர் களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. அதற்கு மேல் வருமானம் உள்ளவர்கள் நடுத்தட்டு மக்கள், கீழ்நடுத்தட்டுவர்க்க மக்கள் ஆகி யோருக்கு அரசு எந்தவித மருத்துவ வசதி அளிப்பதையும் உறுதிசெய்யவில்லை. நடுத்தர வர்க்கப்பிரிவினர் தனியார் காப்பீட்டு

நிறுவனங்களில்தான் சுகாதாரக் காப்பீடு செய்து கொள்ளவேண்டும். அப்படி இல்லையேல், சொந்தச் செலவில் மருத்துவம் செய்து கொள்ளவேண்டும். மேலும், அரசு காப்பீடு, தனியார் காப்பீடு எந்தக் காப்பீடாக இருப்பினும் வரையறுக்கப்பட்ட நோய்கள், வரையறுக்கப்பட்ட சிகிச்சை முறைகளுக்கு மட்டுமே பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகளில் காப்பீடு கிடைக்கும். அதிலும் 100 விழுக்காடு காப்பீடு கிடைக்குமா என்றால் உறுதியாகச் சொல்ல முடியாது. மக்களுக்கு அவ்வப்போது ஏற்படுகின்ற காய்ச்சல், வயிற்றுப்போக்கு மற்றும் சிறு சிறு நோய்கள், சிறு காயங்கள் போன்றவற்றிற்கு காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை எடுத்துக் கொள்ள முடியாது. தொடர் மருத்துவம் செய்ய வேண்டிய சர்க்கரை நோய், மிகைக் குருதி அழுத்தம், இதயநோய், சிறுநீரக நோய், கல்லீரல் நோய், வலிப்பு நோய் உள்ளிட்ட வாழ்நாள் முழுவதும் மருத்துவம், மருந்துகள் எடுக்க வேண்டிய நோய்களுக்கு மருந்து மாத்திரை மற்றும் ஆய்வகச் செலவுகளுக்கு நடப்பிலுள்ள காப்பீட்டுத் திட்டங்கள் உதவுவதில்லை. மேற்கண்ட நோய்களுக்கு மக்கள் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவிட்டு மருத்துவம் செய்து கொள்ள வேண்டியதுதான்.

காப்பீட்டுத் திட்டங்கள் அரசு மருத்துவமனைகளை மெல்லமெல்லத் தனியார் மருத்துவமனைகள் போல ஆக்கிவருகின்றன. காப்பீட்டு அட்டை இல்லாமல் இன்று அரசு மருத்துவமனைகளில் எந்த ஒரு அறுவை சிகிச்சையும் செய்ய முடியாது. சி.டி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் போன்ற அறிதல் முறைகளையும் செய்யமுடியாது என்ற நிலைமை உருவாகியுள்ளது. இதனால் காப்பீடு இல்லாத மக்கள் அரசு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை பெறமுடியாது என்ற நிலைமை ஏற்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழக சுகாதாரக் கட்டமைப்பின் முதுகெலும்பு போன்றவை ஆகும். **இன்று நடுவண் அரசு துணை சுகாதார நிலையங்களையும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களையும் நலவாழ்வு மையங்கள் என்ற பெயரில் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் நடக்கின்றன. அவற்றைத் தனியார் நிறுவனங்கள் மூலம் நிர்வாகம் செய்யவும் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.** ஏற்கனெவே நடுவணரசு மாநில அரசு மருத்துவமனைகளில் 30 விழுக்காடு படுக்கைகளைத் தனியாருக்கு அளிக்க வற்புறுத்தி வருகின்றது. நாட்டிலுள்ள 70 விழுக்காடு மருத்துவர்கள் தனியார் மருத்துவமனைகளில் பணிபுரிகிறார்கள். 70 விழுக்காடு மருத்துவ சேவை வசதிகள் நகர்ப்புறங்களில்தான் உள்ளன. 70 விழுக்காடு நோயாளர்கள் தங்கள் கைப்பணத்தில்தான் இத்தனை காப்பீட்டு திட்டங்கள் இருந்தும் மருத்துவம் பார்த்துக் கொள்கின்றனர். ஏழை எளிய மக்கள் நகர்ப்புற கார்ப்பரேட் மருத்துவமனையில் நுழையக்கூட முடியாது என்ற நிலைமைதான் உள்ளது. தனியார் கார்ப்பரேட் மருத்துவமனைகள் மோடி கேர் திட்டத்தில் இணைவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர். காரணம் என்னவெனில் நடுவண் அரசு மருத்துவ சிகிச்சைகளுக்காகத் தருவதாக உறுதிசெய்துள்ள தொகை மிகவும் குறைவாக உள்ளதாகக்கூறி, திட்டத்தில் இணைய மறுக்கின்றனர். இங்கிலாந்து நாட்டில் தேசியச் சுகாதாரச் சேவை செயல்படுகிறது. இத்திட்டத்தில் அந்நாட்டு மக்கள் அனைவருமே பயன்பெறமுடியும். ஆனால் இந்தியாவில் மோடி கேர் திட்டம் நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்காகவும் தொடங்கப்படவில்லை. ஏழை மக்களுக்காக மட்டுமே தொடங்கப்பட்டுள்ளது. அதுவும் குறிப்பிட்ட சிகிச்சை முறைகளுக்கு மட்டுமே பலன்பெற

*முடியும். அமெரிக்காவில் ஒபாமா கேர் குடிமக்கள் அனைவருக்கும் சுகாதாரக் காப்பீட்டை கட்டாயம் ஆக்கியது. மக்கள் முதலில் காப்பீட்டுத் தொகையைக் கட்ட வேண்டும். பிறகு அரசு அதை மானியமாக வழங்கும் என்பது ஒபாமா கேர் திட்டமாகும்.*

*140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் போதுமான நவீன மருத்துவர்கள் இல்லை.* **உலக சுகாதாரக் கழகம் ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு நவீன மருத்துவர் இருக்கவேண்டும் என்கிறது. இந்த இலக்கை தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் மட்டுமே அடைந்துள்ளன.** *இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இன்னும் அடையவில்லை. மேலும் செவிலியர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள் போதுமான அளவிற்கு இல்லை. அரசு மருத்துவமனை களில் போதுமான அளவு மருத்துவப் படுக்கைகள் மக்கள்தொகைக்கு ஏற்ப உருவாக்கப்படவில்லை. இந்தியாவில் 11072 மக்களுக்கு ஒரு நவீன மருத்துவர், 1744 பேருக்கு ஒரு மருத்துவப் படுக்கை 55591 பேருக்கு ஒரு அரசு மருத்துவமனை மட்டுமே உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அனைவருக்கும் நலவாழ்வு என்ற இலக்கை அடையவேண்டும் என்றால், அரசு சுகாதாரத் துறைக்கு நிறைய நிதிஒதுக்க வேண்டும். அனைத்து வகையான மருத்துவ சிகிச்சை முறைகளும் தனியார் மருத்துவமனைகளுக்கு ஈடான வகையில் தரமாகவும் விரைவாகவும் மக்கள் வாழ்விடங்களுக்கு அருகாமையிலும் கிடைக்கச் செய்திட அரசு முயற்சிக்க வேண்டும். அதற்குப் பொது மருத்துவத் துறையையும் அரசு மருத்துவக் கட்டமைப்பு களையும் மேற்சொன்ன வகையில் உயர்த்தி மேலும் வலுப்படுத்த வேண்டும். வெறுமனே காப்பீடு அட்டைகளை அளித்துவிடுவதால் மட்டுமே நிலைமை மாறிவிடாது.* ●

# மக்கள் நிலை

## சிட்டு

தென்னை மரத்தில் – சிட்டுப்
பின்னும் அழைக்கும் – ஒரு
புன்னை மரத்தினில் ஓடிய காதலி
‘போ போ’ என்றுரைக்கும்
வண்ண இறக்கை – தன்னை
அங்கு விரித்தே – தன்
சென்னியை உள்ளுக்கு வாங்கிஅச் சேவலும்
செப்பும் மணிவாயால்:
’என்னடி பெண்ணே – உயிர்
ஏகிடும் முன்னே – நீ
என்னிடம் வா, எனையாகிலும் கூப்பிடு.
தாமதம் நீக்கிவிடு’
என்றிது சொல்லப் – பெட்டை
எண்ணம் உயர்ந்தே – அத்
தென்னையிற் கூடிப்பின் புன்னையிற் பாய்ந்தது
பின்னும் அழைக்கும் சிட்டு.

## அணில்

கீச்சென்று கத்தி – அணில்
கிளையொன்றில் ஓடிப் – பின்
வீச்சென்று பாய்ந்து தன் காதலன் வாலை
வெடுக்கென்று தான் கடிக்கும்
ஆச்சென்று சொல்லி – ஆண்
அணைக்க நெருங்கும் – உடன்
பாய்ச்சிய அம்பென கீழ்த்தரை நோக்கிப்
பாய்ந்திடும் பெட்டை அணில்!
மூச்சுடன் ஆணோ – அதன்
முதுகிற் குதிக்கும் – கொல்லர்
காய்ச்சும் இரும்பிடை நீர்த்துளி ஆகக்
கலந்திடும் இன்பத்திலே.
ஏச்சுக்கள் அச்சம் – தம்மில்
எளிமை வளப்பம் – சதிக்
கூச்சல் குழப்பங்கள் கொத்தடி மைத்தனம்
கொஞ்சமும் இல்லை அங்கே!

**- பாரதிதாசன்**



# புறநானூறு வழியே தமிழ்ச் சமுதாயத்தைக் காணல்

– இராமியா

### முன்னுரை

புறநானூறு பழந்தமிழர்களின் வாழ்நிலையைத் தெரிவிக்கும் மிகச் சிறந்த நூல். உ.வே.சாமிநாதய்யர் புறநானூறு ஓலைச் சுவடிகளைத் தொகுத்த பொழுது 267ஆவது, 268ஆவது பாடல்கள் முழுவதுமாகச் செல்லரித்து இருப்பதைக் கண்டார். 244ஆவது, 355ஆவது பாடல்கள் பெரும் பகுதி சிதைந்த நிலையிலும் மேலும் 32 பாடல்கள் சிறிது சிதைந்த நிலையிலும் கிடைத்தது, 398 பாடல்களும் அச்சில் ஏறி, அக்காலத் தமிழர்களின் வாழ்க்கையை விவரிக்கும் அரிய கருவூலங்களாக நமக்குக் கிடைத்துள்ளன.

### சமூக அமைப்பு

நடோடிச் சமுதாயமாக இருந்த மனித இனம் நாகரிகச் சமூகமாக வளர்ச்சி அடைந்த பொழுது ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகள் உலகின் மற்ற பகுதிகளில் ஒரு விதமாகவும், ஆரியர்கள் குடியேறிய இந்தியாவில் வேறு விதமாகவும் ஏற்பட்டன. ஆரியர்கள் திணித்த வர்ணாசிரம முறையின் ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிரான போராட்டமே இந்திய வரலாறாக உள்ளது.

ஆரியர்களின் ஆதிக்கம் தமிழ் நாட்டிலும் பரவி இருந்தது. ஆரியர்களின் சூழ்ச்சித் திறனை எதிர்த்து வெல்ல முடியாதவர்கள், அடிபணிந்தவர்கள் மருத நிலத்திலும் நெய்தல் நிலத்திலும் நாகரிகச் சமூகமாக வளர்ச்சி அடைந்தனர். மற்றவர்கள் குறிஞ்சி முல்லை நிலங்களில் குறுநில மன்னர்களாக இருந்தனர்.

மறையோர் வாழ்த்தும் பொழுது தலை தாழ வேண்டும் (பாடல் 6) என்று காரி கிழார் பாண்டிய மன்னனிடம், கூறுவதும், தாமப்பல் கண்ணனார் எனும் பார்ப்பனப் புலவரும் சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தானும் விளையாடிக் கொண்டு இருக்கும் பொழுது, மாவளத்தான் விட்டெறிந்த வட்டில் புலவர் மேல் பட்டதற்காக அவன் மேல் சினந்து அவனது முன்னோர்கள் பார்ப்பனர்கள் நோவுமாறு நடந்து கொள்ள மாட்டார்கள் என்பதால் அவன் சோழர் குடியில் பிறந்தவன்தானா என்று ஐயம் அடைவதாகக் கூறிப் பணிய வைக்கும் காட்சியும் (பாடல் 43), ஔவையார் பூவையும் பொன் னையும் பார்ப்பனர்களுக்கு அள்ளித் தருமாறு கூறி அதுவே வாழ்வின் இலக்கணம் என்று மூவேந்தர்களிடம் கூறுவதும் (பாடல் 367),



பேரரசர்கள் ஆரியப் பண்பாட்டிற்கு அடி பணிந்து இருந்தனர் என்பதைத் தெரிவிக் கின்றன. ஆனால் வேள்பாரி போன்ற குறிஞ்சி / முல்லை நில அரசர்களைப் பற்றிய பாடல் களில் இது போன்ற ஆரிய ஆதிக்கச் செய்தி கள் இல்லை.

இது நாடோடிச் சமுதாயம் உடைந்து நாகரிகச் சமூகமாக வளர்ச்சி அடைந்த பொழுது, நாகரிக வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் வலிமை இல்லாமலும், அதே சமயம் ஏற்றத் தாழ்வுகளை ஏற்க முடியாமலும் போன மக்கள் திரளினர் குறிஞ்சி, முல்லை நிலப்பகுதிகளில் பழங்குடியினராக வாழ்ந்தனர் /வாழ்கின்றனர் என்ற அறிவியல் உண்மையை உணர்த்துகிறது

**பழந்தமிழர் மதம் :** புறநானூறில் மத நம்பிக்கைகளைப் பற்றி விரிவான விளக்கங்கள் காணக் கிடைக்காவிட்டாலும் அவற்றைப் பற்றிய குறிப்புகள் இருக்கவே செய்கின்றன. சிவன் வழிபாடும் (பாடல் 6) திருமால் வழிபாடும் (பாடல் 56,58) இருந்தது என்பது சிவன் கோவிலைப் பற்றியும் அரசர் களைத் திருமாலுக்கு நிகராக உவமித்தும் பாடிய பாடல்களில் இருந்தும் தெரிந்து கொள்ள முடிகிறது. மேலும் நல்லதன் நன் மையும் தீயதன் தீமையும் இல்லை என்பா ரோடு சேராது இருப்பாயாக (பாடல் 29) என்று அறிவுறுத்துவதன் மூலம் நாத்திகக் கருத்து இருந்ததும், ஆட்சி புரிவோர் நாத்தி கத்திற்கு எதிராகவும், மதக்கருத்துகளுக்கு ஆதர வாகவும் இருந்தது தெரிய வருகிறது.

**உணவுப் பழக்கம் :** மனிதன் இயற்கை யில் கிடைக்கும் காய், கனிகளையும் விலங்கு, பறவை, மீன் போன்ற உயிரினங்களின் இறைச் சியை உண்டு உயிர் வாழ்ந்தான். காலப் போக்கில் வேளாண்மையைக் கற்றுக் கொண்டு அரிசி, கோதுமை போன்ற தானியங்களையும் விளைவித்து உண்டான். பொதுவாக மனிதனு டைய உணவில் மரக்கறியும், புலாலும் சேர்ந்தே இருந்தன. ஆனால் அப்படிப் புலால் உண்பதில் தமிழர்களுக்கும் ஆரியர்களுக்கும் இடையில் வேறுபாடுகள் இருந்தன. ஆரியர்கள் ஆதிசங்கரரின் காலத்திற்குப் பிறகு புலால் உண்பதை, அதிலும் குறிப்பாக மாட்டிறைச்சி உண்ணும் வழக்கத்தைக் கைவிட்டனர்.

அதற்கு முன் ஆரியர்களுடைய உவப்பான உணவு உழவுக்குப் பயன்படும் மாட்டின் இறைச்சியும் பயணங்களுக்குப் பயன்படும் குதிரையின் இறைச்சியுமே ஆகும். கையிருப்பில் ஆயத்தமாக இருக்கும் அவற்றைக் கொன்று சாப்பிடுவதினால் உழவுக்கும் பயணத்திற்கும் ஏற்படும் கேடுகளைப் பற்றிய அக்கறை இன்றி ஆரியர்கள் அவற்றை உண்டனர். உழைத்துப் (வேட்டையாடி) பெற வேண்டிய வேலைகளைத் தவிர்த்தனர். ஆனால் தமிழர்கள் உணவிற்காகத் தங்கள் உழைப்பை ஈந்து அதன் மூலம் பெற்ற வற்றையும், பிற தொழில்களுக்குத் தேவைப் படாத ஆட்டையும்தான் உண்டனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்கள் உடும்பு (பாடல் 325), முயல் (பாடல்கள் 33, 319, 395, 396), மீன் (பாடல்கள் 61, 320, 395, 399), மான் (பாடல்கள் 150, 152, 168, 398), பன்றி (பாடல் 177), ஆமை (பாடல் 212), ஆடு (பாடல்கள் 96, 113, 261, 262, 364), புறா (பாடல் 319), ஈசல் (பாடல் 119) ஆகிய வற்றின் இறைச்சியை உண்டனர். உழவுக்கும் தொழிலுக்கும் ஊறு விளைவிக்கக் கூடாது என்ற சமூக அக்கறையுடன் உணவுப் பழக் கத்தை வைத்துக் கொண்ட தமிழர்கள் அவற்றைச் சுவையோடு சமைத்துச் சாப்பிடும் பழக்கத் தையும் கொண்டிருந்தனர். சூடான முயற்கறி யையும் வாளை மீனையும் பல வகைகளில் பக்குவப் படுத்திய கறிகளையும் சோற்றுடன் உண்டனர் (பாடல் 395). மேலும் உண விற்குச் சுவை கூட்டும்படி கடுகு, கறிவேப் பிலை முதலியன தூவி எண்ணெய் அல்லது நெய்யில் காய்ச்சித் தாழிதம் செய்தனர்

(பாடல் 127). உணவிற்குச் சுவை கூட்டும் தாழித்தலைக் கண்டவர்கள் தமிழர்களே.

**பழந்தமிழர்களும் போரும் :** புறநானூறிலும் மற்ற புறத்திணை நூல் களிலும் பழந் தமிழர்களின் போர் ஆர்வம் வெகுவாகப் பாடப்பட்டு உள்ளது. ஆனால் அப்போருக்குக் காரணமாக விளங்கிய சமூக முரண்பாடுகள் பற்றிய செய்திகள் இல்லை. மன்னனும் போர் வீரர்களும் போர் புரிவதைத் தவிர வேறு எண்ணமே இல்லாமல் இருந்தனர் (பாடல் 31). புலவர்களும் தங்களுக்குப் பரிசில் அளித்த அரசர்களின் போர்த் திறமையைப் புகழ்ந்து மேலும் மேலும் வெற்றி பெறவேண்டும் என்றே வாழ்த்தினர்.

இவ்வாறு நடக்கும் போர்களில், மனிதர்கள் மட்டுமன்றி, ஒன்றும் அறியாத விலங்குகள் வதைக்கப்பட்டது மனித இனத்திற்குப் பெருமை சேர்ப்பதாகக் கொள்ள முடியவில்லை. குதிரையின் முகக் கருவி உராய்ந்து உதிரம் சிந்திச் சிவந்த வாய், உதிரம் குடித்த புலி வாயை ஒத்தது; மதிற் கதவுகளைக் குத்தி உடைத்து மழுங்கிய தந்தங்களோடு வரும் யானைகள் கூற்றுவனை ஒத்தன என்ற பரணரின் வர்ணனையில் (பாடல் 4) போரில் புகுத்தப்பட்ட குதிரை களும் யானைகளும் அடைந்த துன்பங்களைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. அக்கால மக்கள் போர் வெறியில் பிற உயிர்களுக்கு நேரும் துன்பங்களைக் காணும் தன்மையைப் பெற்று இருக்கவில்லை எனத் தெரிகிறது.

**போருக்குப் பிந்தைய அநாகரிகம்**

போரின் போதுதான் கொடுமைகள் நிகழ்ந்தன என்றால், போருக்குப் பின் நடந்த கொடுமைகள் அநாகரிகத்தின் உச்சத்தைத் தொட்டன எனலாம். தோற்றவர் நாட்டிலே வென்ற மன்னன் ஊரை எரிப்பதும், நல்ல பொருள்கள் எதுவும் மிஞ்சி இராமல் அழிப்பதும், நீர்ப் பெருக்கை அடைப்பதும் (பாடல் 7), நெல் விளையும் கழனியைக் கொள்ளையிட்டும், வீடுகளை எரியூட்டியும், காவற்குளங்களில் யானைகளை இறக்கி அழித்தும் (பாடல் 16), தேரோடும் தெருக்களில் கழுதைகளைப் பூட்டி உழுது, சாலைகளை அழித்தும், வயல்களில் குதிரைகள் பூட்டிய தேர்களைச் செலுத்தி அழித்தும் (பாடல் 15), விளைநிலங்களில் புகுந்து கொள்ளை அடித்தும் (பாடல் 23), பகைவர்களின் தலைகளைக் கொய்து அடுப்பாக்கிக் குருதியைப் புனலாகப் பெய்து, பகைவர் தசையையும் மூளையையும் அதனுள் இட்டு, வெட்டிய தோள்களைத் துடுப்பாகக் கொண்டு, வேள்வி செய்தும் (பாடல் 26), இது போன்ற மனதாலும் நினைக்க வொண்ணாத கொடுஞ் செயல்களைச் சாதாரண மக்கள் மீது ஏவிய அநாகரிகம் அக்காலத்தே இருந்திருக்கிறது. இதைப் புலவர்கள் வீரம் என்று புகழ்ந்து இருக்கின்றனர்.

தொலை நாடுகளுடன் தொடர்பும் அறிவியல் வளர்ச்சியும் போரில் அநாகரிகம் மிகுந்திருந்த போதிலும், பொதுவாழ்வில் பல துறைகளிலும் முன்னேற்றத்தைக் கண்டிருந்தனர். யவனர்களுடன் வணிகம் செய்து கொண்டு (பாடல் 56) இருந்த தமிழர்கள், காற்று உரிய திசையில் வீசாததால் கப்பல்கள் ஓடாத போது பொறிகளைக் கையாண்டு அவற்றை இயக்கும் அளவிற்கு அறிவியலிலும் தொழில் நுட்பத்திலும் திறன் பெற்றிருந்தனர். அதியமானின் முன்னோர்கள் சீனத்தில் இருந்து கரும்புப் பயிரைக் கொண்டு வந்து பயிரிட்டனர் (பாடல் 99) என்றால் புதியனவற்றைக் கற்றுக்கொள்ளும் அறிவியல் அறிவைக் கொண்டிருந்தனர் எனத்தெரிகிறது.

ஆனால் புவியை/அண்டத்தை அறிவதில் வானத்தை நிலம் சுமந்து இருப்பதாகவும் (பாடல் 2), வானம் எந்த ஆதாரமும் இன்றி நிற்பதாகவும் (பாடல் 30) வெவ்வேறு வழிகளில் புரிந்து கொண்டு இருந்தனர். இது தொழில் செய்யும் மக்கள் அறிவியலில் சிறந்து விளங்கிய அளவிற்குக் கற்றோர்

கூட்டம் சிறந்து விளங்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

## பண்டமாற்று

புறநானூற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே தமிழர்கள் நாகரிகச் சமூகமாக வாழ்ந்தனர். நாகரிகச் சமூகத்தில் பண்ட உற்பத்தி பிரிக்க முடியாத கூறு ஆகும். மருத நிலத்து மக்கள் தங்களுக்கு இடையே உணவு தானியங்கள், ஆடைகள், கருவிகளின் பரிவர்த்தனையில் நாணயங்கள் புழங்கிய செய்திகள் புறநானூற்றில் கிடைக்கவில்லை; ஆனால் குறிஞ்சி முல்லை நில மக்களான வேடர்களும் ஆய் மகளிரும் மான் இறைச்சியையும், தயிரையும் உழவர் வீட்டிலே கொடுத்து வயல்களில் விளைந்த நெல்லுக்குப் பண்டமாற்று செய்து கொண்டனர் (பாடல் 33) என்ற செய்தி உள்ளது.

## நெருப்பு

மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கு நெருப்பு ஒரு முக்கியமான கண்டுபிடிப்பு. அக்காலத்தில் நெருப்பை உண்டாக்க ஞெலிகோல் (தீக் கடைக் கோல்) பயன்படுத்தப்பட்டது. நிரந்தரமான வீடுகளில் வாழும் மருத நில மக்கள் இதை எந்நேரத்திலும் எளிதில் எடுக்கக் கூடிய வகையிலும் தாழ்வாரத்தின் முன் கூரையில் செருகி வைத்து இருந்தார்கள் (பாடல் 315) குறிஞ்சி, முல்லை நில மக்களும் வேட்டைக்குச் செல்பவர்களும் எப்பொழுதும் கையிலேயே வைத்து இருந்தனர் (பாடல் 247, 33, 1501).

## சடங்குகளும் பழக்க வழக்கங்களும்

பிறப்பு முதல் இறப்பு வரையிலும் சடங்கு கள் வாழ்க்கையின் பிரிக்க முடியாத கூறு களாக இருந்தாலும் புறநானூறில், பிறப்பின் போதும், திருமணத்தின் போதும் பின்பற்றப் படும் சடங்குகளைப் பற்றிய செய்திகள் காணப்படவில்லை.

போருக்குப் புறப்படும் முன்னே அரசர்கள் வீரர்களுக்குக் கள் வழங்கும் பழக்கம் 258, 262, 286, 290, 292-ஆவது பாடல்களில் காணப்படுகிறது.

மன்னர்கள் இறக்கும் பொழுது அவர் களுடைய உடல்களை எரிக்கும் வழக்கமும் (பாடல்கள் 231, 239, 240, 245) முதுமக்கள் தாழியில் இட்டுக் கவிழ்த்துப் புதைக்கும் வழக்கமும் (பாடல்கள் 228, 238, 239) இருந்தன என்று தெரிகிறது. எரித்தாலும், புதைத்தாலும், அதன் பின் பிண்டம் இடுதலும் (பாடல் 234) நடுகல் நட்டலும் (பாடல்கள் 221, 223, 232) ஆகிய சடங்குகளும் பின்பற்றப் பட்டுள்ளன.

## போர்வெறிக்கு எதிரான குரல்

பழந்தமிழர்கள் போர் புரிவதையும், போரில் வெல்வதையும், வெல்ல முடியா விடத்துப் புறங்காட்டாமல் மடிவதையும் பெரும் புகழுக்குரியனவாக நினைத்தனர். ஆளும் வகுப்பாரின் இக்கருத்தைப் பெரும்பான்மை யான புலவர்களின் பாடல்கள் எதிரொலித் தாலும், போரை விட வேளாண்மையையும் பிற தொழில்களையும் ஊக்குவிப்பதே சிறப்பு என நல்லறிவுரை கூறும் போர் வெறிக்கு எதிரான குரலும் இல்லாமல் போய்விடவில்லை. குடபுலவியனார் எனும் புலவர், உலகம் முழுவதும் வெல்ல நினைத்தால் நீரையும் நிலத்தையும் ஒருங்கு கூட்டி வேளாண்மைக்கு உதவுக (பாடல் 18) என்றும் வேளாண்மையின் மூலம் பெறும் புகழே போரில் கிடைக்கும் புகழைவிடச் சிறந்தது என்று அறிவுறுத்துகிறார்.

வெள்ளைக்குடி நாகனார் எனும் புலவர் படைவீரர்கள் போர் முகத்தில் காணும் வெற்றிக்குக் கொழுமுனை கிழித்த விளை வயலின் நெல்லின்பயன் தான் என்றும், உழவர் குடியினரை முதற்கண் பாதுகாத்து, அதனால் ஏனைய குடிமக்களையும் காப்பாற்றினால், படை வலிமைக்கு அடங்காதவர்களும் அடங்கி நடப்பார்கள் (பாடல் 35) என்று அறிவுரை கூறுகிறார்.

### புலவர்கள்

பழந்தமிழர்களின் வாழ்க்கை முறையைத் தெரிவிக்கும் முக்கியமான ஆதாரம் அக்காலப் புலவர்களின் படைப்புகளே. அக்கால அரசர்களின் வாழ்நிலையை ஆவணப்படுத்திய அப்புலவர்களின் வாழ்க்கையோ மிகவும் இரங்கத்தக்கதாக இருந்திருக்கிறது. வறுமை நிலையின் காரணமாகப் பால் குடிக்கும் வயதுள்ள தன் மகன் தன்னைப் பழித்துக் காட்டுவதைப் பெருஞ்சித்திரனார் எனும் புலவர் குமணனிடம் எடுத்துக் கூறுவதில் (பாடல் 160) இருந்தும், பிற புலவர்களின் வேறு பாடல்களிலிருந்தும், அக்காலத்தில் புலவர்கள் கற்பனைக்கும் எட்டாத வறுமையில் வாழ்ந்திருந்தனர் எனத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வாறு வறுமையில் வாடும் புலவர்கள், அரசர்களின் பரிசிலைப் பெறும் பொருட்டு அரசர்களின் எண்ணம் போலவே நடந்து கொள்வது இயல்பு. ஆனால் அந்த வறுமை நிலையிலும் தவறு செய்யும் அரசர்களை இடித்துரைக்கத் தயங்காத புலவர்களும் இருந்திருக்கின்றனர்.

பேரரசர்களே ஆயினும் தங்களை மதியா தோரைத் தாங்களும் மதிப்பதில்லை என்றும் (நெல்லஞ்சோறு தரும் அளவிற்குச் செல்வம் படைக்காத) சிற்றரசர்கள் அன்புடன் வரகஞ் சோறு தரினும் அதை உவப்புடன் ஏற்றுக் கொண்டு பாராட்டுவோம் (பாடல் 197) என்று மாடலன் மதுரைக் குமரனார் எனும் புலவர் பாடியுள்ளார்.

மயிலுக்குப் போர்வை ஈந்த வள்ளல் பேகன், தன் மனைவியை விடுத்து வேறு பெண்ணுடன் வாழ்ந்து வந்த காலை, அரிசில் கிழார், பரணர், கபிலர் ஆகிய புலவர்கள் அச்செயலைக் கண்டித்து, அவன் தன் மனைவியுடன் வாழ்வதே தாங்கள் விரும்பும் பரிசில் என்றும் வேறு பரிசில் வேண்டாம் என்றும் (பாடல்கள் 143-147) இடித்துரைத்து இருக்கின்றனர்.

### வள்ளன்மை

வேளாண்மையே முக்கியத் தொழிலாகவும் அடுத்து நெசவும், பிற துணைத் தொழில்களும் அக்காலத்து மக்களிடையே இருந்தன. இத்தொழில்கள் மக்களை ஓரிடத்தில் பிணைத்து வைத்திருந்தன. இந்நிலையில் நாடுகளுக்கு இடையிலான தகவல் பரிமாற்றத்திற்கு உடலாகவும் உயிராகவும் விளங்கியவர்கள் புலவர்கள், பாணர்கள், விறலியர்கள், கூத்தர்கள் ஆகியோரே. அவர்களை உயிர்ப்புடன் வைத்துக் கொள்ளும் கடமை அரசர்களுக்கு இருந்ததால் வள்ளன்மையைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால் அனைவருமே மனமுவந்த வள்ளலாக இருக்கவில்லை.

சேரமான் குடக்கோச்சேரல் இரும்பொறை பெருங்குன்றூர் கிழாருக்குப் பரிசில் அளிப்பது போலப் போக்குக்காட்டி, காலத்தை நீட்டிய தும், அதனால் பரிசில் பெறாமலே புலவர் திரும்ப நேர்ந்ததும் (பாடல் 210, 211) இதே போன்ற அனுபவம் மூவன் என்னும் சிற்றர சனிடம் பெருந்தலைச் சாத்தனாருக்கு (பாடல் 209) ஏற்பட்டதும் புறநானூறில் காணக்கிடக்கிறது.

ஆனால் பொதுவாக மன்னர்கள், புலவர்கள் முதலிய இரவலர்களுக்குப் பரிசில்களை அளித்து, அவர்களை உயிர்ப்புடன் வைத்துக் கொண்டுதான் இருந்தனர். அவர்களிலும் சிலர் தங்கள் தேவைகளையும் குறைத்துக் கொண்டு ஈவதில் தயங்கவில்லை. ஆய் அண்டிரன் எனும் வள்ளல் தன்னிடம் உள்ளதை எல்லாம் கொடுத்து, ஒரு நிலையில் அவனுடைய மனைவியின் மங்கல நாண் மட்டுமே மிஞ்சி இருந்ததாக (பாடல் 127) உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் கூறி யுள்ளார்.

### வள்ளல்கள்

பாரி, ஓரி, காரி, பேகன், எழினி, நள்ளி, ஆய் அண்டிரன் என எழுவரை வள்ளல்கள்

என்றுதான் பெருஞ்சித்திரனார் (பாடல் 158) குறிப்பிடுகிறார். கடை ஏழு வள்ளல்கள் என்று குறிப்பிடவில்லை. கடை ஏழு வள்ளல்கள் என்று கூறுவது ஆரியத் தொல்கலைஞர் களின் மோசடி வேலை என்று மொழியியல் வல்லுநர் தேவநேயப் பாவாணர் கூறுகிறார். சேர, சோழ, பாண்டியர்கள் உள்ளிட்ட பேரரசர்கள் ஆரியர்களுக்கு அடிபணிந்து கிடக்கையில், குறிஞ்சி, முல்லை நில மன்னர்கள் அவர்களுக்கு அடிபணிய மறுத்ததும் தமிழ்க் கலை வளர்ச்சிக்கு ஊக்கம் ஊட்டி வந்ததும், மக்களிடையே அவர்களுக்கு நல்ல பெயர் இருந்ததும் ஆரியர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஆகவே அவர்களைச் சிறுமைப்படுத்த விழைந்த ஆரியர்கள், அவர்களுள் வள்ளல்கள் என்று பெயர் எடுத்தவர்களின் சிறப்பைக் குறைத்துக் காட்ட முற்பட்டனர். புறாவைக் காப்பாற்றும் பொருட்டு, செம்பியன் தன் உடலைக் கழுகு உண்ணக் கொடுத்த கற்பனைக் கதையைத் திணித்தும், அவன் போன்ற எழுவரை வரையாது கொடுத்த தலை ஏழு வள்ளல்கள் என்றும், கர்ணன் முதலிய எழுவரைக் கேட்கக் கொடுத்த இடை ஏழு வள்ளல்கள் என்றும், பாரி முதலிய எழுவரைப் புகழக் கொடுத்த கடை ஏழு வள்ளல்கள் என்றும் பெயரிட்டனர்.

அதியமான் நெடுமான் அஞ்சியும், குமணனும் அப்படிப் பெயரிடப்பட்ட கடை ஏழு வள்ளல்களில் அடங்குவர் என்று பலர் நினைக்கின்றனர். ஆனால் அவ்வள்ளல்கள் இப்பட்டியலில் இல்லை என்பது தமிழ் மக்கள் அறிய வேண்டிய அரிய செய்தி.

### வள்ளலின் இடறல்

ஒருமுறை அதியமான் நெடுமான் அஞ்சி, பரிசிலைக் காலத்தே தராததால், சினந்த ஔவையார் வாயில் காப்போனிடம் அஞ்சி தன் தரமறியானோ? அன்றி என் தரமறியானோ?' என்று கூறி, தான் எங்கும் சென்று பரிசில் பெற முடியும் என்பதை வேந்தனுக்கு அறிவிக்கும்படி (பாடல் 206) கூறிச் சென்றார்.

அதே போல் பெருஞ்சித்திரனார் அதியமானைக் காணச் சென்றபோது, அவன் அவரைக் காணாமல் பரிசிலை வழங்க, அவரோ, தான் வணிகப் பரிசிலன் அல்லன் என்றும் தன் தரம் அறியாமல் கொடுக்கப்பட்ட பரிசைப் பெற்றுக் கொள்ள மாட்டேன் (பாடல் 208) என்றும் கூறித் திரும்பிவிட்டார். வரையாது கொடுத்த வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சி பெரும் புலவர்களின் கண்ட னத்திற்கு ஆளானது ஓர் அரிய செய்தியாகும்.

### முடிவுரை

பழந்தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றிய இக்கட்டுரை புறநானூற்றுப் பாடல்களில் உள்ள செய்திகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டு உள்ளது. தமிழ் மக்களிடையே பழங்காலத் தமிழர் வரலாற்றைப் பற்றி உலவி வரும் செவிவழிச் செய்திகள் புறநானூற்றுப் பாடல்களுடன் ஒத்துப் போவதானது தமிழர்கள் தங்கள் வரலாற்றை உயிர்ப்புடன் வைத்துக் கொள்பவர்கள் என்று தெரிவிக்கிறது. ●

ஒருவன் எப்படிப்பட்ட மனிதனாயினும், மனிதத் தன்மைக்கு மேற்பட்டவன் என்று சொல்லப்படுவானா கிலும் அவனது அப்பிராயங்கள் எப்படிப்பட்ட மனிதராலும் பரிசோதிக்கப்படவும், தர்கிக்கப்படவும் தக்கதாகும் என்பதே எனது அபிப்பிராயமாகும். யாருடைய அபிப்பிராயத்தையும்-எவ்விதமான அபிப் பிராயத்தையும் ஆட்சேபிக்கவும், அடியும் மறுத்து எதிர்க்கவும் யாருக்கும் உரிமை உண்டு என்பதும் எனது அபிப்பிராயமாகும். ஆதலால் எனது அபிப் பிராயங்கள் பற்றிக் குறைகூறவோ, தர்க்கிக்கவோ யாரும் தகுதியுடையவர்கள் அல்ல என்று தோழர் சிவதாணுப்பிள்ளை அவர்கள் சொன்னதை நான் ஏற்க முடியாமல் இருக்கிறது.

**- பெரியார் ஈ.வெ.ரா.**



# மறைமலை அடிகளாரும் தமிழ்மறவர் வை. பொன்னம்பலனாரும்!

- செந்தமிழ்க்கொற்றி
*(வை. பொன்னம்பலனாரின் மகள்)*

*மறைமலை அடிகளார் அவர்கள் நாகையில் செல்வந்தர் குடும்பத்தில் சொக்கலிங்கம்பிள்ளை - சின்னம்மை அம்மையார் அவர்கட்கு 15.7.1876-இல் பிறந்தார். மிகுந்த செல்வாக்குடன் வளர்ந்தார். தமது 21ஆவது வயதில் தமிழை நன்கு படித்து விட்டார். பிறகு ஆங்கிலம், வடமொழியையும் நன்கு படித்துப் புலமை பெற்றார். 1898 முதல் 1950 வரை அழகான ஆங்கிலத்தில் நாள்குறிப்பு எழுதியுள்ளார். அடிகளார் அவர்கள் 1916 முதல் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தார். தனித்தமிழ் இயக்கத்தால் அடிகளார், பாவாணர், திரு.வி.க., பாவேந்தர், பாவலரேறு, தவத்திரு. ஞானியாரடிகள், பாண்டித்துரைத் தேவர், பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார், பா.வே. மாணிக்கநாயக்கர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், உமாமகேசுவரம் பிள்ளை போன்ற பல சான்றோர்களால் பாராட்டப்பட்டவர். வடநாட்டுக் குப் பயணம் செய்தார்.*

*அடிகள் பேச்சு பல பேச்சாளர்களைப் படைத்தது. எப்போதும் படிப்பதில் ஆர்வம் உடையவர். எப்போதும் நூல்களை வாங்கித் தொகுத்து வைத்திருந்தார். தமிழுக்கும், தமிழருக்கும் இவர் ஆற்றிய தொண்டு தலைசிறந்தது. தமிழ்மொழி தனித்து இயங்க வல்லது என்பதை, தனது எழுத்தாலும் பேச்சாலும் உலகறியச் செய்த பெருமை அடிகளையே சேரும். "மறைமலையடிகளார் நடை" என ஒன்று உருவெடுத்துத் தோன்றிப் பரவியுள்ளது.*

*வடமொழியை நன்கு கற்று, தமிழ்மொழியின் பெருமையை விளக்கியவர் மறைமலை அடிகள். "மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை" என்னும் சீரிய நூலைத் தமிழில் இயற்றித் தமிழ்நாட் டிற்குத் தந்தார்.*

**சென்னை வாழ்க்கை**

*அக்காலத்தில் சென்னை மாநகரில் புகழ்பெற்று விளங்கியது கிருத்துவக் கல்லூரியாகும். அந்தக் கல்லூரிக்குத் தமிழாசிரியர் ஒருவர் தேவைப்பட்டார். அக்காலத்தில் பெருந்தமிழாசிரியர் களிடத்தில் முறையாகத் தமிழைக் கற்றவர்களே கல்வி நிலையங் களில் தமிழாசிரியர்களாயினர். அப்போது கிருத்துவக் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தவர் திரு. சூரிய*



நாராயண சாஸ்திரியார். அவர் பரிந்துரை யால், அடிகள் 9.3.1898-இல் கிருத்துவக் கல்லூரியில் தமிழாசிரியரானார். சம்பளம் இருபத்தைந்து ரூபாய்தான். பிராமணர்கள் பால் அடிகட்கு நம்பிக்கை இருந்ததில்லை. அதற்கு விலக்கானவர்கள் ஒரு சிலரே. அவர்களில் தலையானவர் நம் சாத்திரியாரே யாவார். தனித்தமிழ் இயக்கங் காண்பதற்கு முன்பே அவர் தன் வடமொழிப் பெயரைப் பரிதிமாற்கலைஞர் என்று மாற்றிக் கொண்டார். அடிகளார் அவர்களும் பரிதிமாற் கலைஞரும் ஒரு சில ஆண்டுகளே பழகினாலும், அவர் கள் நட்பு மிகப் பெரியது.

1903-இல் ஞானசாகரம் (அறிவுக்கடல்) என்னும் முதல் இதழ் வெளியிட்டார். மாதம் ஒருமுறை வந்தது. தொடர்ந்து நடத்தாது, இடையில் விட்டுவிட்டு வெளியிட்டார். அக்காலச் சென்னைப் பல்கலைக்கழகம், கலைப்பட்டப் படிப்புகளுக்கு ஆங்கிலமே போதும்; தாய்மொழியை மாணவர்கள் கட்டாயமாகப் படிக்க வேண்டியதில்லை. விரும்பியவர்கள் படிக்கலாம். விருப்பம் இல்லாதோர் ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழிகளை எடுத்துப் பயிலலாம் என்று முடிவு செய்தது. இதனால் பல தமிழாசிரி யர்கள் வேலை இழந்தனர். என்ன கொடுமை! சென்னைப் பல்கலைக்கழகம் தாய்மொழிக் கல்வியை ஒதுக்கித் தள்ளியது; ஆங்கில மொழி மோகம் இன்றளவும் நீங்கவில்லை. மேலும் வளர்ந்து வருகிறது. பல தமிழாசி ரியர்கள் வேலை இழந்ததில் நம் அடிகளாரும் ஒருவர். ஆனால் நம் அடிகளின் அரும்புல மையும் கற்பிக்குந் திறமும் உணர்ந்தவர் களாதலின் அடிகளுக்குக் கல்லூரியில் வேலை தர ஏற்பாடு செய்தனர். ஆனால் அடிகள் வேலை பார்க்க மறுத்துவிட்டார். அவர் மனம் துறவை நாடியது.

### பல்லாவரம் குடிபுகுதல்

அடிகளார் அவர்கள் 9.3.1898 முதல் கிருத்துவக் கல்லூரியில் பார்த்து வந்த தமிழாசிரியர் பணியை 10.4.1911-இல் விடுத்து, சென்னைக்கு அருகே, பல்லாவரத்தில் 1.5.1911-இல் குடிபுகுந்தார். பல்லாவரம் புகைவண்டி நிலையத்திற்குத் தெற்கே ¼ கல் தொலைவில் அடிகள் மாளிகை இருந்தது. பல்லாவரத்துக்கு வந்த போது அடிகளின் வயது 35. அவரின் தாயாருக்கு வயது 70. மனைவிக்கு 32. அடிகளாருக்கு 4 மகன் களும், 3 மகள்களும் இருந்தனர். பல்லாவரத்தில் குடியேறிய சில திங்களில் கடைசி மகள் திரிபுரசுந்தரி பிறந்தார். இவர் பிறந்து சில திங்களில் அடிகளார் 27.8.1911-இல் துறவி யானார். இதன் பிறகு "சுவாமி வேதாசலம்" என்னும் பெயரே நீடித்தது.

அதன்பிறகு நூல்களை ஆராய்தல், எழுதுதல், வெளியிடல் முதலிய பணிகளில் மிகவும் முனைந்தார். அடிகளின் அறிவும், ஆற்றலும், தோற்றமும், பொலிவும் எழுத்தும் கண்டாரை எல்லாம் காந்தங் கண்ட இரும் பைப் போல் ஈர்த்தன. அதன்பிறகு விழாக் களில் தலைமை தாங்கல், சொற்பொழி வாற்றல், இதற்காக யாத்திரை போதல் முதலியவற்றை மேற்கொண்டார். அந்தக் காலத்தில் இருபது ஆயிரம் ரூபாய்க்கு நூல்கள் வாங்கி ஆராய்ந்தார்.

### தனித்தமிழ் தோற்றம்

1916-இல் மகள் நீலாம்பிகைக்கு வயது 13. ஒருநாள் மாலையில் தந்தையும் மகளும் தம் தோட்டத்தில் உலவிக்கொண்டு இருந்தனர். அப்போது இராமலிங்க அடிகளார் அருளிச் செய்த திருமுறையிலுள்ள பாடலில் தேகம் என்ற வடசொல் இருந்தது. அடிகளார், அவர்கள் மகள் நீலாவிடம் "இப்பாட்டில் உள்ள தேகம் எனும் வடசொல்லை நீக்கி விட்டு, யாக்கை என்ற தமிழ்ச்சொல் இருந்தால் அவ்விடத்தில் செய்யுள் ஓசையின்பம் பின்னும் அழகாக இருக்கும்" என்று கூறினார்.

அதன் பிறகு அயன்மொழிச் சொற்களை நீக்கித் தனித்தமிழிலேயே பேசுதல் வேண்டும்

என்று மகளின் வேண்டுகோளை ஏற்று, சுவாமி வேதாசலம் என்ற தம் பெயரை மறைமலையடிகள் ஆக்கினார். அடிகளார் *1898* முதல் *1950* வரை தவறாமல் நாட் குறிப்புகளை ஆங்கிலத்தில் எழுதி வந்தார்.

### பெரியாரும் அடிகளாரும்

பெரியார் அடிகள் மீது கொண்டிருந்த பற்று தமிழினப் பற்று. பெரியாரின் கிளர்ச் சியோ சிற்றூர், பேரூர்களிலெல்லாம் பரவிப் பயன் விளைவிக்கிறது. இதனால் என் நோக் கங்களும் விருப்பங்களும் அவராலே எளிதில் எங்கும் பரவி விடுகின்றன. ஆதலால் பெரியார் நெடிதினிது வாழ்க! அவர் முயற்சி வெல்க! என்று அடிகள் வாயார வாழ்த்திக் கொண் டேயிருந்தார்.

**பெரியார் மதித்த ஆன்மிகத் தலைவர் மூவரில் முதன்மையானவர் அடிகள் ஆவார் எனலாம்.**

### இந்தி எதிர்ப்பு

நாடு முழுவதும் *1937, 38*-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம்; இராசாசியின் கட்டாய இந்தியை எதிர்த்து ஓர் அணியில் திரண்டனர். *11.9.1937*-இல் சென்னைத் திருவல்லிக்கேணியில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் கூடியது. அடிகளின் தலைமையில் பெரியார், கி.ஆ.பெ. பல தமிழறிஞர்கள் உணர்ச்சிமிகு உரையாற்றினார்கள். *3.6.1938*-இல் சைதாப்பேட்டையில் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அடிகள் தலைமை தாங்கி, இந்தியை எதிர்த்துப் போர்முரசு கொட்டினார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அடிகளாரின் மகன் மறை. திருநாவுக்கரசர், மருமகள் ஞானம், இரு குழந்தைகள், மாணிக்கவாசகத்தின் மனைவி சரோசினி அவர் மகனுடன் கட்டாய இந்தியை எதிர்த்துச் சிறை சென்றனர்.

### பெரியார் என்ற பட்டம்

தமிழ்நாட்டுப் பெண்கள் சென்னையில் *13.11.1938*-இல் மாநாடு ஒன்றை நடத்தினர். அது சென்னை ஒற்றைவாடை அரங்கில் நடைபெற்றது. அடிகளாரின் மகள் நீலாம்பிகை அம்மையார் தலைமையில் தருமாம்பாள் அவர்களும் இணைந்து மாநாட்டினை நடத்தினார்கள். இம்மாநாட்டில் ஈ.வெ.ரா. அவர்களின் தன்னலங்கருதாத ஈடுஇணையற்ற பெருந்தொண்டைக் கருதி அவருக்குப் **"பெரியார்"** என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கினார்கள். அன்றிலிருந்து, பெரியார் என்றே அழைக்கப்பட்டார். அடிகளாரின் நாள்குறிப்பில், "*4.8.1950*-இல் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் ஆடலரசுடன் என்னைக் காண வந்தார். ஒரு மணிநேரம், உரையாடி னோம்" என்று குறிப்பிட்டுள்ளார். அடிகள் மறைவதற்கு *40* நாட்களுக்குமுன் சந்தித்தார் கள். அடிகளார் 15.9.1950-ஆம் நாள் மறைந்தார்.

### தமிழ் மறவர்

புலவர் வை. பொன்னம்பலனார் அவர்களுக்கும் அடிகளார் அவர்களுக்கும் இருந்த தொடர்பு பற்றி எப்படி என்றும் எவ்வளவு ஆழமானது என்றும் காண்போம். பொன்னம்பலனார் அவர்கள் திருவையாறில் உள்ள அரசர் கல்லூரியில், *1926* முதல் *1931* வரை படித்தார். பொன்னம்பலனார் கல்லூரி யில் சேர்ந்த ஆண்டு அடிகளார் அவர்களின் மூன்றாவது மகன் திருநாவுக்கரசர் அவர்களும் சேர்ந்தார். பொன்னம்பலனார், திருநாவுக் கரசர், குஞ்சிதபாதம் அவர்களும் படித்தார்கள். குஞ்சிதபாதம் அவர்கள் அடிகளாரின் கடைசி மருமகன். அடிகளின் மகன் மறை. திருநாவுக் கரசர் அவர்களும், பொன்னம்பலனார் அவர் களும் பிசிராந்தையார், கோப்பெருஞ் சோழன் மாதிரி இருவரும் கடைசி வரை அவ்வளவு நட்புடன் இருந்தனர்.

பொன்னம்பலனார் அவர்கள், விடுமுறைக்குத் திருநாவுக்கரசர் அவர்களுடன் பல்லாவரம் வந்து அடிகள் வீட்டில் தங்கி இருப்பார்கள். திருநாவுக்கரசர் அவர்கள் கீழ மாளிகைக்கு பொன்னம்பலனார் வீட்டிற்கும் வந்து தங்குவார்கள்.

திருநாவுக்கரசரும் பொன்னம்பலனாரும் ஒரே அறையில் இருந்ததால், பொன்னம்பல னாரிடம் தனித்தமிழ்ப் பற்று வளர்வதற்கு மிகவும் வாய்ப்பாக இருந்தது. முதலில் திருநாவுக்கரசர் அவர்கள் பொன்னம்பலனார் அவர்களிடம் இவரின் தோற்றத்தைக் கண்டு பேசமாட்டார். நாள்கள் செல்லச் செல்ல பொன்னம்பலனாரின் அன்பைக் கண்டு மிகவும் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். அதனால் விடுமுறைக்குப் பல்லாவரம் வந்து ஒரு மாதம் கூடத் தங்கி இருப்பார். காலை யிலேயே எழுந்து அடிகளார்க்குப் பணிவிடை செய்யக் காத்திருப்பார். விடாமல் வினாக்கள் கேட்பார். வினாக்களுக்கு உரிய விடைகளை அடிகளார் கூறுவார். வினாக்கள் எல்லாம் இலக்கியங்கள், வரலாறுகள், மேனாட்டு ஆராய்ச்சிகள், தமிழ், தமிழர் ஆராய்ச்சி போன்றவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்வார். பொன்னம்பலனார் அவர்கள் அடிகளுடன் தொடர்பு கொண்ட பிறகுதான், கனகசபை என்ற தன்பெயரை பொன்னம்பலனார் என மாற்றிக் கொண்டார். பொன்னம்பலத்தின் ஆர்வம் நிறைந்த வினாக்களும், அதற்கு நான் கொடுக்கும் விடைகளும் அதை அவர் ஏற்று மகிழ்தலும் அவர் தூய வெண்பல் வரிசை களும் அன்பு நிறைந்த முகமும் இனியன என்றார் அடிகளார். இவர்களின் நட்பால் இரண்டு குடும்பங்களும் மிக நெருங்கிய நட்புக் குடும்பங்கள் ஆயின.

வை. பொன்னம்பலனார் தன் இல்லத் துக்கு "மறைமலையடிகள் தனித் தமிழ்ப் பூங்கா" என்று வைத்தார். பொன்னம்பலனார் அவர்கள் இரவில் சாப்பிடும் போது எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவோம். பொன்னம்பலனார் அவர்கள் மணிக்கணக்காக அடிகளைப் பற்றியும், பெரியாரைப் பற்றியும் கூறுவார். அடிகள் அவர்களிடம் நட்பு கொண்ட பிறகுதான் பொன்னம்பலனாருக்கும் திருக்குறள் நாள்குறிப்பு எழுதும் பழக்கம் வந்ததாக நான் கருதுகிறேன். பொன்னம்பல னாரும் 1932 முதல் நாள்குறிப்பு எழுதும் பழக்கம் இருந்தது. அதனால்தான் தூய தமிழில் பேசவும் செய்தார். வீட்டில் எல் லோரும் தூய தமிழில்தான் பேச வேண்டும் என்று கூறுவார்.

அடிகள் அவர்களைப் பற்றி, பொன்னம் பலனார் அவர்கள் கூறும் போது அவ்வளவு மகிழ்ச்சியாகப் பேசுவார். நாங்கள் எல்லாம் சிறு பிள்ளைகளாக இருக்கும்போது மணிக் கணக்காகப் பேசுவார்கள். அடிகளின் பாதம் தரையில்படாமல் செருப்புடன்தான் வீட்டி லும் நடப்பார். அவருடைய கால் நிலத்தில் பட்டதே இல்லை. அவரது நிறம் அப்படி இருக்கும். கைவிரல்கள் எல்லாம் இளஞ் சிவப்பு நிறத்தில் பட்டு மாதிரி இருக்கும் என்றும் கூறுவார். அடிகளாரின் தொடர் பினால்தான் மிகப்பெரிய பெரிய ஆள்களு டன் பொன்னம்பலனார் அவர்கள் தொடர்பில் இருந்தார்.

சென்னையில் அவர்கள் 1921-ஆம் ஆண்டு மே 19-ஆம் நாள் வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழறிஞர்கள் கூட்டம் கூடியது. அடிகளார் அவர்கள் தலைமை ஏற்க கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் வரவேற்பு உரை ஆற்றிட, 1.30 மணிநேரம் திருக்குறளையும் திருவள்ளுவரையும் பேசி, திருவள்ளுவர் ஆண்டாகக் கணக்கிட்டு முடிவுசெய்தார்கள்.

அடிகளார் அவர்கள் குடும்பத்துடன் இரண்டுமுறை கீழமாளிகைக்கு வந்து இரண்டு, மூன்று நாள்கள் தங்கியிருந்தார்கள். ஒரு முறை மருதூரில் உள்ள சித்து அம்மாவைக் குடும்பத்துடன் போய்ப் பார்த்தார்கள். அடுத்த முறை வரும்போது வ.உ.சி. அவர்களை அழைத்து வந்து கீழமாளிகையில் தங்கி இருந்தார்கள். பொன்னம்பலனார் அவர் கட்கு மூன்று திருமணமும் மறை. திருநாவுக் கரசர் அவர்கள்தான் நடத்தி வைத்தார்கள். இரண்டு மனைவிகளும் இறந்துவிடவே, மூன்றாவது திருமணத்தை நடத்த மறை.

திருநாவுக்கரசர் அவர்கள் “நான் வரவில்லை. நீ இப்போது, நாத்திகவாதி. அதனால் நீ வேறு எவரையேனும் வைத்துத் திருமணம் செய்து கொள்” என்று மடல் எழுதிவிட் டார். ஆனால் பொன்னம்பலனார் அவர்கள், “நீ வந்தால்தான் திருமணம்; நீ வராவிட் டால் திருமணத்தை நிறுத்திவிடுவேன்” என்று மடல் எழுதிய பின் மறை. திருநாவுக் கரசர் அவர்கள் வந்து நடத்தி வைத்தார்கள். ஆனால், மறை. திருநாவுக்கரசர் அவர்கள் வீட்டில் உள்ளவர்களிடம் நான் ராசி இல்லாதவன்; நான் நடத்தி வைத்த திருமணத்தில் இருவரும் இறந்துவிட்டார்கள். அதனால்தான் நான் வரவில்லை என்று அவர் மனைவி, குழந்தை களிடமும் சொல்லி இருக்கிறார்கள். இந்தச் செய்தியை (2019-இல்) அவரது மகன் திரு. தாயுமானவன் அவர்கள் எங்களிடம் கூறினார். மறை. திருநாவுக்கரசர் அவர்கள் இந்தி எதிர்ப்பில் சிறையில் இருந்தபோது, திருநாவுக்கரசரின் மனைவி ஞானம், இருபிள்ளைகளையும் பொன்னம்பலனார் தம் வீட்டில் வைத்து உதவி செய்தார்கள். மறை. திருநாவுக்கரசர் அவர்கள் ஞானம் அம்மையாரைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று கூறிவிட்டார்கள். பெரிய அக்காள் மகள் என்பதால் நான் திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று கூறிவிட்டார். பொன்னம்பலனார் அவர்கள் பேசித்தான் அத்திருமணத்தை நடத்தி வைத்தார்கள். ஞானம் அம்மையார் அவர்கள் பொன்னம் பலனார் அவர்களை அப்பா என்று தான் அழைப்பார்கள். திருமதி.ஞானம் அம்மையார் இறந்த போது, ஒரு மடல் எழுதியிருந்தார் மறை. திருநாவுக்கரசு.

என் தாய் தங்கம்மாள் அவர்கள் படுக்கையில் இருந் தார்கள். நாங்கள் விடுமுறைக்குச் செந்துறை சென்று இருந்தோம். தங்கம்மாள் அவர்கள் என்னிடம் அந்த மடலைக் கொடுத்து, நீ மறை அப்பாவுக்கு மடல் எழுதி அவர் இருக்கும் போது, நீ போய்ப் பார்த்து வா என்றார். நான் மறை. திருநாவுக்கரசர் அவர்களுக்கு மடல் எழுதினேன். நாங்கள் எப்போது வந்து உங் களைப் பார்க்கலாம். நீங்கள் மடல் எழுதி னால், நாங்கள் வந்து பார்க்கிறோம் என்று எழுதினேன். அவர் “சனி, ஞாயிறு பார்க்க வா” என்று எழுதினார். ஆனால் வெள்ளிக்கிழமை மாலையே அவர் வந்து என்னைப் பார்க்க வந்துவிட்டார். ஏன் அப்பா வந்துவிட்டீர்கள் என்று கேட்டதற்கு அழுது கொண்டே என்ன கூறினார் என்றால், அம்மா நீ என்கெழுதகை நண்பனின் பெண். என் அன்பை எப்படி வெளிப்படுத்துவேன்? அதனால்தான் நான் உன்னைப் பார்க்க வந்தேன் என்று என்னைக் கட்டிப்பிடித்து அழுதார். இதுதான் அம்மா எங்களின் நட்பு என்று கூறினார்கள். எனக்கு அதை நினைத்தால் இன்றும் கண்ணீர் வரும். அவருடைய மகன்கள் இருவர் அங்குதான் இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய வீட் டிற்குச் சென்றது இல்லை என்று கூறினார். பிறகு மகன் வீட்டிற்குச் சென்றார்கள். அதன் பிறகு இறக்கும் வரை அவரை நாங்கள் சென்று பார்த்து வந்தோம், இப்போதும் அந்த நட்பு தொடர்கிறது. இரு குடும்பமும் தமிழின் பால் உள்ள பற்றால், அடிகள்மீது உள்ள பற்றால், அன்பால் தொடர்ந்து மூன்று தலை முறைகளாக நட்புடன் உள்ளோம்.

பல அரிய செய்திகளை எனக்குத் தெரிந்த சிலவற்றை எழுதியுள்ளேன்.

❖

*வர்க்கப் போராட்டத்திலும் இயற் கைக்கு எதிரான போராட்டத்திலும் பாட்டாளி வர்க்கம் சமுதாயம் முழுவதையும் மறு வார்ப்பு செய்கிறது. அதேசமயம் தன்னை யும் மறுவார்ப்பு செய்து கொள்கிறது.*

**- காரல் மார்க்சு**



# அண்ணா பல்கலைக்கழகம் இனி மேட்டுக்குடி பல்கலைக்கழகம்

*- பேராசிரியர் ப. சிவகுமார்*

**த**மிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு இடஒதுக்கீடு இல்லையே என்றும் அந்த நிறுவனங்களில் பேராசிரியர் நியமனங்களில் பட்டியலினத்த வருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் அநீதி இழைக்கப்படுகிற தென்றும் நாம் பரவலாக விவாதம் செய்திருக்கிறோம். இந்த நிலையில் தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள், மத்திய அரசின் தேசியக் கல்விக் கொள்கை 2019 அமலாக்கத்தால் எவ்வாறு இடஒதுக்கீடு இல்லாமலும், அடித் தட்டு மக்களுக்கு எட்டாக்கனியாகவும் மாற்றப்படப் போகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

அண்மையில் தமிழ்நாட்டை ஆளுகின்ற அ.தி.மு.க. அரசு சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரிப்பதற்காக அமைச்சர்கள் செங்கோட்டையன், தங்கமணி, ஜெயக்குமார், சண்முகம் மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் அன்பழகன் ஆகியோரையும் நிதித்துறை, சட்டத்துறை, உயர் கல்வித் துறை செயலர்களையும் உள்ளடக்கிய குழு ஒன்றை அமைத்துள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதனுடைய பலன்கள், கேடுகள் குறித்து எந்தவிதமான விவாதமும் பொது வெளியில் எழவில்லை. ஒரு சில தோழர்கள் மட்டும் முகநூலில் பதிவிட்டுள்ளனர். ஊடக விவாதங்கள் சில நடந்தன. தேசியக் கல்விக் கொள்கை 2019 கேடான கூறுகளுடன் நடைமுறைக்கு வருகிறதே என்ற கவலை எதிர்கட்சிகளுக்கும் தோன்றியதாகத் தெரியவில்லை.

அண்ணா பல்கலைக்கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு "அண்ணா உயர்சிறப்பு கல்வி நிறுவனம்" (Anna Institute of Eminence) என்ற ஒன்றும் "அண்ணா பல்கலைக்கழகம்" (Anna University) என்று மற்றொன்றும் உருவாக்கப்படும் என உயர்கல்வித் துறை செயலர் மங்கத் ராம் சர்மா வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டுள்ளது. அண்ணா உயர் சிறப்பு கல்வி நிறுவனம் நிர்மாணிக்க மத்திய அரசு பங்களிப்பு 75 விழுக்காடு நிதி எனவும், தமிழக அரசு பங்களிப்பு 25 விழுக்காடு நிதி எனவும் அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டில் இந்த "உயர் சிறப்புக் கல்வி நிறுவனம்" என்ற பெயரில் அமைக் கப்படும் நிறுவனம் தமிழ்நாட்டு மாணவர் களின் உயர்கல்வி வாய்ப்புக்குப் பெரும் உதவியாக இருக்கும் என்ற எண்ணம் பலருக்குத் தோன்றலாம். Institute of Eminence (IoE) எனப்படும் உயர் சிறப்பு நிறுவனம் என்றால் என்ன? மத்தியில் ஆளும் பா.ச.க. அரசு இத்தகைய உயர் சிறப்பு நிறுவனங் களை உருவாக்க ஏன் முனைகிறது? இந்த முனைப்புக்கும் தேசியக் கல்விக் கொள்கை 2019-க்கும் தொடர்பு உண்டா? இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டால் அடித்தட்டு மாணவர்க்கு உதவியாக இருக்குமா? இடஒதுக்கீடு தொடருமா? என பல கேள்விகள் எழலாம்.

தேசியக் கல்விக் கொள்கை 2019-க்கு முன்பே டி.எஸ்.ஆர்.சுப்பிரமணியன் தலை மையிலான குழு 2016-இல் வரைவு அறிக்கை ஒன்றை அரசுக்குத் தந்தது. அந்த அறிக்கை யில் உயர்கல்வித் துறையில் 100 உயர்கல்வி சிறப்பு மையங்களை நிறுவ வேண்டுமெனவும், தனியாரோ, புரவலர்களோ முதல் ஐந்து ஆண்டுகளுக்கு 1000 கோடி ரூபாய் முதலீடு செய்ய விரும்பினால் அவர்களுக்கு முழுச் சுதந்தரம் தரவேண்டுமெனவும், உள்நாட்டி லிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பேரா சிரியர்களை நியமிக்க உரிமை தரலாமென வும், பயிற்றுவிக்கும் பாடங்களை முடிவு செய்ய முழு அதிகாரமும், பயிற்சிக் கட்டணம் முடிவு செய்துகொள்ள முழு சுதந்தரமும் தரப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளது அந்த வரைவு அறிக்கை. உயர் கல்வி வணிகத்துக்கான முன்னறிவிப்பைக் கூறியது அந்த அறிக்கை. தனியார் முதலீடு செய்யும் உயர்கல்வி நிறுவனங்களில் எங் கிருந்தும், வெளிநாட்டில் இருந்தும் பேரா சிரியர்கள் நியமித்துக் கொள்ளலாம். கல்விக் கட்டணத்துக்கும் கட்டுப்பாடு இல்லை என்றால் பொருள் என்ன? உலகக் கல்விச் சந்தையில் போட்டியிடும் நோக்கத்துக்கு ஊக்கமே தவிர ஒடுக்கப்பட்டவர்க்கான கல்வி குறித்த அக்கறையின்மையின் வெளிப் பாடுதானே!

பின்னர் மற்றொரு அறிக்கையைப் பார்ப் போம். இந்த அறிக்கையைத் தந்தவரும் கல்வியாளரல்ல. "உயர் கல்வித் துறையில் கூட்டிணைவு நிறுவனங்களின் பங்கேற்பு" (Committee on Corporate Sector Participation in Higher Education) என்ற குழுவின் தலைவராக இருந்தவர் இன்போசிஸ் என்ற மென்பொருள் நிறுவனத் தலைவர் நாராயணமூர்த்தி. இன்போசிஸ் நாராயணமூர்த்தி தன்னுடைய அறிக்கையில் கூட்டிணைவு நிறுவனங்கள் நிறுவும் பல்கலைக்கழகங்களுக்கு அரசாங்கம் இலவசமாக நிலம் தரவேண்டும், வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும், இடஒதுக் கீட்டை வலியுறுத்தக் கூடாது எனக் கூறப் பட்டது.

டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் அறிக்கை மற்றும் நாராயணமூர்த்தி அறிக்கைக்கு முன்பாகவே வாஜ்பேயி தலைமை அமைச்ச ராக இருந்த போது இரண்டு கூட்டிணைவு நிறுவன முதலாளிகளான பிர்லா மற்றும் அம்பானி தலைமையில் அமைக்கப்பட்ட குழுவும் கல்வி வணிகத்தை மேம்படுத்தவே ஆலோசனை வழங்கியது. "உலகத்தரம் வாய்ந்த உயர்கல்வி நிறுவனங்களை நிறுவு வதில் வணிக மற்றும் தொழில் நிறுவனங் களுக்கு முக்கியப் பங்கு உண்டு" என பிர்லா அம்பானி அறிக்கை கூறியது. மேலும் "தொழில்சார் சமூகத்துக்குப் பொருளாதாரக் கட்டமைப்பு எவ்வளவு இன்றியமையாத தோ, அதைப் போல அறிவுசார் சமூகத்துக்குக் கல்விக் கட்டமைப்பு" (Educational Infrastructure) இன்றியமையாததாகும். இதை அடைய அரசு படிப்படியாகப் பல்கலைக்கழகங்களுக் கான நிதி ஆதாரத்தைக் குறைக்க வேண்டும். இந்தப் பல்கலைக்கழகங்கள் மாணவர் கல்விக் கட்டணங்களை உயர்த்துவன் மூலமும், நன்கொடைகள் மூலமும், முன்னாள் மாணவர்

பங்களிப்பு மூலமும் தம் பாதையை வகுத்துக் கொள்ள வேண்டும் எனவும் பிர்லா அம்பானி அறிக்கை பரிந்துரைத்தது.

இந்த அறிக்கைகள் யாவுமே கல்வியாளர்கள் அடங்கிய குழுவால் அளிக்கப்படவில்லை என்பது நமக்குப் புரிகிறது. 1995-இல் நிறுவப்பட்ட உலக வர்த்தகக் கழக நிபந்தனைகள்படி கல்வியைக் குறிப்பாக உயர்கல்வியை வணிகச் சந்தையில் எவ்வாறு நிலைநிறுத்துவது என்பது குறித்த சிந்தனையின் அடிப்படையிலேயே இந்தக் குழுக்களை மத்திய அரசு அமைத்து சமயோசனைகள் பெற்று இன்று நடைமுறைப்படுகிறது. அரசு நிர்வகிக்கும் உயர்கல்விப் பல்கலைக்கழகங்களும் இந்த கல்விச் சந்தையில் போட்டியிட அரசு பல்கலைக்கழகங்களையும் மத்திய அரசு இறக்கிவிடும் முயற்சியே "உயர்நிலை பல்கலைக்கழக" முத்திரை IoE.

2019-இல் வெளிவந்த கஸ்தூரிரங்கன் தலைமையில் ஆன தேசியக் கல்விக் கொள்கைக்குழு அறிக்கையில் நடைமுறை உத்திகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. உயர்கல்வி நிறுவனங்களை மூன்றாக வகைப்படுத்துவது கஸ்தூரிரங்கன் குழு பரிந்துரை. வகை 1 எனப்படும் **ஆய்வுப் பல்கலைக்கழகங்கள்,** வகை 2 எனப்படும் **பயிற்றுவிக்கும் பல்கலைக்கழகங்கள்,** வகை 3 **தன்னாட்சிக் கல்லூரிகள்** என்று பிரித்து முதல்வகைப் பல்கலைக்கழகங்கள் 5000 முதல் 25000 வரை மாணவர்களைச் சேர்க்கலாம் எனவும் பட்ட வகுப்பு முதல் ஆய்வு வரை நடத்தலாம் எனவும் பரிந்துரைத்துள்ளது. நிதி ஆயோக் தன்னுடைய 2017-இல் வெளியிட்ட பரிந்துரையில் வகை 1 பல்கலைக்கழகங்களுக்கே இனி நிதி உதவி செய்யப்படும் என கோடிட்டுக் காட்டியுள்ளது.

இந்தப் பின்னணிகளைப் புரிந்து கொண்டால்தான் Institute of Eminence (IoE) எனப்படும் மீச்சிறப்பு அல்லது உயர்நிலைப் பல்கலைக்கழகத் தரப் பின்னணியில் நடைமுறை அமலாக்கத்தின் தாக்கங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

உயர்கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டுக்கு மாணவர்களின் ஆய்வு உதவிக்கு நிதி வழங்கிய பல்கலைக்கழக நல்கைக் குழுவைக் கலைப்பதெனவும், மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரை இனி உயர்கல்வித் துறை அமைச்சர் என்று அழைப்பதெனவும், தேசியக் கல்வி ஆணையம் (Rashtriya Shiksha Ayog) எனும் உயர்மட்ட அமைப்பை நிறுவுவதெனவும் பல மாற்றங்களை மத்தியில் ஆளும் பா.ச.க. அரசு நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது. IoE எனப்படும் உயர்நிலைப் பல்கலைக்கழக நிலை என்றால் என்ன என்பது குறித்த வழிமுறைகளைப் பல்கலைக்கழக நல்கைக்குழு 2017-இல் வெளியிட்டது.

2016-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "உயர்கல்வி நிறுவனங்களை உலகத்தரம் வாய்ந்த பயிற்றுவிக்கும் மற்றும் ஆய்வு நிறுவனங்களாக உயர்த்துவது எங்களின் கடப்பாடு ஆகும். பத்து அரசு மற்றும் பத்து தனியார் நிறுவனங்களை உலகத் தரம் வய்ந்த பயிற்றுவிக்கும் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களாகப் பரிணமிக்கும் வகையில் ஒழுங்காற்றுக் கட்டமைப்புகளாக உருவாக்கித் தரப்படும்" என்று அப்போதைய நிதி அமைச்சர் கூறினார். இந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டதுதான் அண்ணா பல்கலைக்கழகம்.

IoE எனப்படும் உயர்நிலை நிறுவனம் எந்த வகையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்ய மேனாள் தேர்தல் ஆணையத் தலைவர் என். கோபால்சாமி தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு "உயர்நிலைப் பல்கலைக்கழக" நிலை கோரி விண்ணப்பிக்கும் நிறுவனங்களில் இருந்து இருபதைத் தேர்ந்தெடுத்

துள்ளது. அந்த இருபதில் ஒன்று அண்ணா பல்கலைக்கழகம்.

2019-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் IoE தீர்மானிக்கும் குழு, 10 மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. தனியார் சுயநிதி மற்றும் நிகர்நிலை நிறுவனங்கள் 10-ஐ தேர்ந்தெடுத்து அறிவித்துள்ளது.

ஐ.ஐ.டி. பம்பாய், ஐ.ஐ.டி. டெல்லி, ஐ.ஐ.டி. சென்னை, ஐ.ஐ.டி. கரக்பூர், இந்திய அறிவியல் ஆய்வு நிறுவனம் பெங்களூரு, பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் வாரணாசி, தில்லி பல்கலைக்கழகம், ஐதராபாத் பல்கலைக்கழகம் ஆகிய எட்டு மத்திய உயர்கல்வி நிறுவனங்களும்; கல்கத்தாவில் உள்ள ஜாதவ்பூர் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு மாநிலப் பல்கலைக்கழகங்களும் IoE நிலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

தனியார், சுயநிதி நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் இராஜஸ்தான் BITS, கர்நாடகாவின் மணிப்பால் அகாடமி, பெங்களூருவில் உள்ள அமிர்த விஸ்வ வித்யாபீடம், ரிலையன்ஸ் நிறுவன ஜியோ பல்கலைக்கழகம், புதுதில்லி ஜாமியா ஹம்தார்த், புவனேஸ்வரில் உள்ள கலிங்கா தொழில்நுட்ப நிறுவனம், அரியானாவில் உள்ள ஜிண்டால் பல்கலைக்கழகம், உத்தரப்பிரதேச ஷிவ் நாடார் பல்கலைக்கழகம், தில்லி பார்தி பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாட்டு வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகம் ஆகிய பத்துக்கு IoE நிலை வழங்கப்பட்டுள்ளது. இதில் ரிலையன்ஸ் ஜியோவும், ஏர்டெல் பார்திக்கும் கட்டடங்கள் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பட்டியல்களில் தமிழ்நாட்டு அரசாங்க அண்ணா பல்கலைக்கழகம் IoE நிலைக்கு பரிந்துரைத்துள்ளது வரவேற்கத் தகுந்த செய்தி என்று தானே பார்க்கத் தோன்றும். மத்திய அரசின் ஆதிக்கத்தில் அண்ணா பல்கலைக்கழகம் சென்று விடுகிறதோ என்றும் விவாதங்கள் எழுகின்றன. IoE நிலை வேண்டுமென்றால் என்னென்ன நிகழும் என்பதை மத்திய அரசின் அறிவிப்பும் பல்கலைக்கழக நல்கைக் குழு அறிவிக்கையும் விளக்கும்.

IoE நிலை பெறும் உயர்கல்வி நிறுவனங்கள் 30 விழுக்காடு வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பேராசிரியர்களில் 25 விழுக்காடு வெளிநாட்டுப் பேராசிரியர்கள் நியமிக்கலாம். தங்களுடைய கல்வித் திட்டமிடுதலில் 20 விழுக்காடு தொலைக்கல்வி வழி நடத்தலாம். கலைத்திட்டம் (Curriculam) மற்றும் பாடத்திட்டம் (Syllabus) ஆகியவற்றை வடிவமைக்க இலகுவான நடைமுறைகளைக் கையாளலாம். வெளிநாட்டு மாணவர்களின் கல்விக் கட்டணத்துக்கு வரம்பு இல்லை. மத்திய அரசு நிறுவனமாக இருந்தால் 1000 கோடி நிதி அளித்து உதவப்படும். மாநிலப் பல்கலைக்கழகமாக இருந்தால் 50 விழுக்காடு மட்டுமே மத்திய அரசு நிதி உதவி வழங்கப்படும்.

அண்ணா பல்கலைக்கழகம் உயர்நிலை (IoE) அறிவிக்கப்பட்டு அதற்கான நடைமுறையை செயல்படுத்தத் தமிழ்நாடு அரசு தலையாட்டி வருகிறது. இனி அண்ணா உயர்நிலைப் பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டுப் பேராசிரியர்களும், வெளிநாட்டு மாணவர்களும் படிக்கும் மேல்தட்டு வர்க்க பல்கலைக்கழகமாக மாறப் போகிறது; 30 விழுக்காடு மாணவர் இடம் காலியாகப் போகிறது; தற்போது தமிழ்வழி பி.இ. பட்டப் படிப்பில் எந்திரவியல், கட்டடவியல் பாடங்களுக்கு மட்டுமே. அதுகூட தொடர வாய்ப்பில்லை. மாணவர் கல்விக் கட்டணம் பல மடங்கு உயர வாய்ப்பு உண்டு.

இதுவரை மாநிலப் பல்கலைக்கழகங்களுக்குப் பல்கலைக்கழக நல்கைக்குழு


வழங்கிய நிதி உதவி இனிமேல் இருக்காது. கல்விச் சந்தையில் உலக அளவில் IoE நிறுவனங்கள் மட்டுமே போட்டியிடப் போகின்றன. தமிழ்நாட்டு பல்கலைக்கழகங் கள் பலவும் IoE நிலை பெறத் துடிக்கின்றன. ஏன் சில அரசு, தனியார் கல்லூரிகளும் IoE நிலைக்குத் தயாராகின்றன. எதிர்காலத்தில் உயர்கல்வி தளத்தில் முதல்படி (Tire I) உயர்கல்வி நிறுவனங்கள் மட்டுமே நிலைத்து நிற்கும்.

கல்வியாளர்கள் இராதாகிருட்டிணன் மற்றும் கோத்தாரி தலைமையிலான குழுக் கள் உயர்கல்வி மேம்பாட்டுக்குப் பரிந் துரைத்தவை எல்லாம் இன்று தூக்கி எறியப் படுகின்றன. கல்விக்கான நிதி ஒதுக்கீடு கோத்தாரி கூறிய உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் (ஜி.டி.பி. - GDP) 6 விழுக்காடு கூட ஒதுக்க தயாராக இல்லாத மத்திய அரசு 86 புதியக் கல்விக் கொள் கைப்படி சுயநிதிக் கல்லூரிகளை, நிகர் நிலைப் பல்கலைக்கழகங்களை வளர்த்தது. கல்வி வியாபாரிகள் பெருகி கல்வித் தந்தைகள் ஆகினர். இன்றோ அரசு மற்றும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களை உலக வணிகச் சந்தையில் போட்டியிடத் தயார் படுத்தும் முயற்சியில் மத்திய அரசும் மாநில அரசும் களமிறங்குகின்றன.

ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தரமான கல்வியை இலவசமாக வழங்க வேண்டிய அரசு உயர்கல்வித் துறையில் IoE எனும் தீவுகளை உருவாக்கப்படுகிறது. அண்ணா பல்கலைக்கழகம் தமிழ்நாட்டு உயர்கல்வித் துறையில் ஒரு தீவாகப் போகிறது.

மாநிலப் பட்டியலில் கல்வி திரும்ப வரவும், தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி வரை உரிய நிதி உதவியை அனைத்து அரசு கல்வி நிறுவனங்களும் சமமாகப் பெறவும், போராடவில்லை எனில் எதிர்காலத்தில் உயர்கல்வி வாய்ப்பு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முழுவதுமாக மறுக்கப்படும். ●

## மதம் மக்களுக்கு அபின்



*மனிதன் என்று சொல்கையில் மனி தனின் உலகம், அரசு, சமுதாயம் என்ப தாகும். இந்த அரசு, இந்தச் சமுதாயம், சமயத்தை, தலைகீழாக்கப்பட்ட உலக உணர்வை உருவாக்குகிறது. அதற்குக் காரணம் அவையே தலைகீழான உலக மாக இருப்பதுதான்... சமயம் என்பது இந்தத் தலைகீழ் உலகம் பற்றிய பொது வான கோட்பாடு; அதனுடைய அறிவுக் களஞ்சியத் தொகுப்பு; ஜனரஞ்சக வடிவங் களினூடாக வெளிப்படும் அதன் தர்க்க நெறி விளக்கம்; அதன் ஆன்மீகத்தின் உச்சம்; அதன் உற்சாகம்; அதற்கான தார்மீக ஒப்புதல்; அதனை முழுமையடையச் செய்வது; அதனை நியாயப்படுத்தவும் தேற்றவும், உதவும் உலகுதழுவிய விளக்கம்; சமயம் என்பது மனித சாரத்தை அதிகற்பனை யில் எய்துவதாகும்; ஏனெனில் மனித சாரத்தை யதார்த்ததில் எய்த முடிவ தில்லை... சமயத்தில் வெளிப்படுத்தப்படும் அவலம் ஒரு பக்கம் உண்மையிலேயே நிலவும் அவலத்தின் வெளிப்பாடாகும்; மற்றொரு பக்கம் இந்த உண்மையான அவலத்திற்கு எதிரான எதிர்ப்புக் குரலு மாகும். சமயம் என்பது ஒடுக்கப்பட்ட சிலரின் பெருமூச்சு; இதயமற்ற உலகிற்கு ஓர் இதயக் கனிவு; சத்தற்ற வாழ்வில் ஒரு சத்து; அது மக்களுக்கு வாய்த்த ஓர் அபின்.*

**- காரல் மார்க்சு**



## கீழடி அகழாய்வும்

# தமிழர் நாகரிகமும்

*முனைவர் ப.வெங்கடேசன்,* வாலாசாப்பேட்டை

**சி**வகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மதுரையில் இருந்து தென்கிழக்கில் 13 கி.மீ. தொலைவில் வைகை நதிக் கரைக்கு அருகில் கீழடி என்னும் ஊர் அமைந்துள்ளது. 95129 வடக்கு அட்சரேகைக்கும் 781169 கிழக்கு தீர்க்கரேகைக்கும் இடையே அமையப்பெற்ற ஊர் இதுவாகும். கீழடியின் எல்லையாகக் கிழக்கே மணலூர், மேற்கே கொந்தகை, தெற்கே அகரம், வடக்கே வைகை ஆறு ஆகியவை அமைந்துள்ளன.

இவ்வூரில் 110 ஏக்கர் பரப்பில் பழந்தமிழர் வாழ்விடம் இந்தியத் தொல்லியல் துறையினரால் கண்டறியப்பட்டு கி.பி.2014-15 2015-16 ஆகிய ஆண்டுகளில் தொல்லியல் கண்காணிப்பாளர் திரு. அமர்நாத் இராமகிருஷ்ணா அவர்கள் தலைமையிலும் 2016-17ஆம் ஆண்டில் ஸ்ரீராமன் அவர்கள் தலைமையிலும் அகழாய்வு செய்து பழந்தமிழர் வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைக் காட்டும் பல்லாயிரக் கணக்கானத் தொல்லியல் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 2017-18 2018-19 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு தொல்லியல் துறையினர் அகழாய்வு செய்து பல்லாயிரக்கணக்கான தொல்லியல் பொருட்களை வெளிக்கொண்டு வந்தனர். 2015 முதல் 2017 வரை மூன்று கட்டங்களாக நடந்த அகழாய்வின் ஆய்வு அறிக்கையினை இன்னும் இந்தியத் தொல்லியல் துறை வெளியிடவில்லை. 2017 முதல் 2019 வரை இரண்டு கட்டங்களாக அகழாய்வு செய்த தமிழ்நாடு தொல்லியல் துறையினர் அகழாய்வின் சுருக்கத்தினை வெளியிட்டுள்ளனர்.

2017-19ஆம் ஆண்டுகளில் அகழாய்வு நடத்திய தமிழ்நாடு தொல்லியல் துறையினர் பல்லாயிரக்கணக்கான பொருட்களைக் கண்டறிந்துள்ளனர். அவை கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் ரௌலட்டட் மற்றும் அரிட்டின் வகைப் பானை ஓடுகள், தங்க அணிகலன்கள், செப்புப் பொருள்கள், இரும்புக் கருவி பாகங்கள், சுடுமண் சொக்கட்டான் காய்கள், சுடுமண் காதணிகள், அகேட் சூதுபவள மணிகள் ஆகியன கிடைத்துள்ளன. மேலும் செங்கற் கட்டுமானங்கள், உறைகிணறுகள், வடிகால் அமைப்புகள், கூரை ஓடுகள் கிடைத்துள்ளன.

தமிழ்நாடு தொல்லியல் துறையினர் இவ்அகழாய்வின்போது கண்டறிந்த ஆறு கரிம மாதிரிகளை காலக்கணிப்புச் செய்வதற்கு



அமெரிக்காவில் புளோரிடா மாநிலம் மியாமி நகரத்தில் அமைந்துள்ள பீட்டா பகுப்பாய்வுச் சோதனை ஆய்வகத்திற்கு அனுப்பினர். இவ் ஆறு கரிம மாதிரிகளில் 353 செமீ ஆழத்தில் கிடைத்தக் கரிமத்தின் காலம் கி.மு.580 என அறிவியலாளர்கள் காலக்கணிப்புச் செய்துள்ளனர். ஆதலால் கி.மு.6ஆம் நூற்றாண்டு அதாவது 2600 ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழர்கள் நகர நாகரிகத்தில் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது. அக்காலம் சங்க காலமாகும்.

**கட்டடமும் கட்டுமானப் பொருட்களும்:**

இங்கு மக்கள் வாழ்ந்த வீட்டின் கட்டட அமைப்பில் 13 மீ. நீளமுள்ள மூன்று வரிசை கொண்ட சுவர் ஒன்று கண்டறியப்பட்டு உள்ளது. இச்சுவற்றில் 38 x 23 x 6 செமீ. அளவுள்ள செங்கற்களும் 38 x 26 x 6 அளவுள்ள செங்கற்களும் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இங்குள்ள கட்டடம் சிலிக்கா மண் சுண்ணாம்பு செங்கல் ஆகியவை கொண்டு கட்டப்பட்டுள்ளன. வீட்டின் தரைத்தளம் நன்கு சன்னமான களிமண்ணைக்கொண்டு அமைத்து செங்கற்களால் பக்கச்சுவர்களை எழுப்பியுள்ளனர்.

**கட்டடம் - அடித்தளப்பகுதி**

வீட்டிற்குச் சுடுமண்ணாலான கூரை ஓடுகள் பயன்படுத்தியுள்ளனர். மேற்கூரை மீது விழும் மழைநீர் எளிதில் கீழே விழும் வகையில் கூரை ஓடுகளில் பள்ளமான அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இங்குள்ள மரச்சட்டங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மேற்கூரையின்மீது கீழிருந்து மேலாக சுடுமண்ணாலான ஓடுகளைக் கொண்டு வேய்ந்து கட்டப்பட்டுள்ளன. இக்கட்டட அமைப்பு சங்க காலத்தைச் சேர்ந்ததாகும்.

**உறைகிணறு :**

பண்டைக்காலத்தில் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படும் நீரை மணற் பாங்கான இடங்களில் உறைகிணறுகளை அமைத்து சேகரித்துப் பயன்படுத்தினர். இதுபோன்ற உறைகிணற்றைக் கீழடியில் 8 உறைகள் கொண்ட ஓர் உறைகிணற்றைத் தொல்லியலாளர்கள் கண்டறிந்தனர். உறைகிணறு உறைகள் ஒவ்வொன்றும் 93 செமீ. விட்டமும் 80 செமீ. உயரமும் 4 செமீ. தடிமனும் கொண்டுள்ளன. இந்த உறைகிணற்றின் ஆழம் 2.02 மீ. ஆகும். இது அக்கால நீர்மட்டத்தின் அளவினைக் குறிப்ப தாகும். இந்த உறைகிணற்றின் உறைகள் ஒவ்வொன்றும் சுடுமண்ணால் செய்யப் பட்டதாகும்.

**மட்கலன்களும் சுடுமண் உருவங்களும் :**

சங்ககாலத்தில் மக்கள் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுத்திய மட்கலன்கள் பல இவ் அகழ்வாய்வில் கிடைத்தன. இவைகளில் சில உடையாமலும் பல உடைந்தும் காணப்பட்டன. இங்கு கருப்பு சிவப்பு, சிவப்பு கருப்பு ஆகிய ஆகிய நிறங்களைக் கொண்ட பானையோடுகள் கிடைக்கப் பெற்றன. இவற்றில் 17 வகை ஓடுகளை இத்தாலியிலுள்ள பைசா பல்கலைக் கழகத்தின் புவியியல் துறைக்கு அனுப்பப் பட்டு பானைகளின் கனிமங்கள் பானைத் துகளின் தன்மை ஆகியவை கண்டறியப் பட்டன. மேலும் இப்பானைகள் தனித்த பானை வனைவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளூரிலேயே வனையப்பட்டது என்பதினையும் கண்டறிந்தனர். மட்கலன்கள் இங்கு கிடைத்த கருப்பு சிவப்பு பானைகளில் சிவப்பு நிறத்திற்கு இரும்பின் தாதுப்பொருளான ஏமடைட்டையும் கருப்புநிறத்திற்கான தாதுப் பொருளான கரியையும் பயன்படுத்தி உள்ளனர். பொதுவாக கருப்பு சிவப்பு பானைகளில் உட்பகுதி கருப்பாகவும் வெளி ப்பகுதி சிவப்பாகவும் காணப்படும். கருப்பு நிறம் வெப்பத்தைக் கிரகித்து வைத்துக் கொள்ளும் தன்மையுடையது. கருப்பு நிறப் பானைகளிலும் சிவப்பு நிறப் பானைகளிலும் வைக்கப்படும் உணவுப் பொருட்கள் நீண்ட நேரம் வெப்பமாகக் கெடாமல் பாதுகாக்கப்

படும். இங்கு கிடைத்த பானைகள் 1110°C வெப்பநிலையில் சுட்டு உருவாக்கப்பட்ட வையாகும். இப்பானைகளின் காலம் கி.மு.6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தாகும். மேலும் சுடுமண்ணால் 13 மனித உருவங்களும் 3 விலங்கின உருவங்களும் கிடைத்துள்ளன.

**சுடுமண் உருவங்கள்**

**பானைகளில் குறியீடுகள் :**

தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், கொற்கை, அழகன்குளம், கரூர், தேருவேலி, உறையூர், பேரூர், பேருர் கீழடி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அகழாய்வில் சிந்துவெளி எழுத்தை ஒத்த குறியீடுகள் பானைகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் 4500 ஆண்டுகள் பழமை வாய்ந்த சிந்துவெளி எழுத்து வரிவடிவங்கள் கிடைத்துள்ளன. கீழடி பானைக்குறியீடுகள் சிந்துவெளி எழுத்துகள் தமிழ்நாட்டில் கிடைத்த சங்க கால கல்வெட்டுகள் பானைப் பொறிப்புகள் தொன்மைத் தமிழ் எழுத்து (தமிழ்பிராமி எழுத்து)க்கு முந்தைய வரிவடிவமாக விளங்கிய குறியீடுகள் கிடைத்துள்ளன. இலங்கையில் கந்தரோடை மாந்தை திசமகரம ரிதியாகாமா போன்ற இடங்களில் நடத்திய அகழாய்வில் பானைகளில் இதுபோன்ற குறியீடுகள் கிடைத்துள்ளன.

**தொன்மைத் தமிழ் எழுத்துகள் :**

பண்டைத் தமிழ் எழுத்துகளை ஆய்வாளர்கள் தமிழ்பிராமி என்றும் தமிழி என்றும் அழைக்கின்றனர். தமிழைத் தமிழ் என்றே அழைக்கவேண்டும். ஆகையால் பழந்தமிழ் எழுத்தைத் தொன்மைத் தமிழ் எழுத்து என்று அழைப்பதே சிறந்ததாகும். தமிழகத்தில் இதுவரை தொன்மைத்தமிழ்க் கல்வெட்டுகள் (தமிழ்பிராமி) 110 கிடைத்து உள்ளன. அகழாய்வில் பானையோடுகளில் ஏராளமான தொன்மைத்தமிழ் எழுத்துப் பொறிப்புகள் கிடைத்துள்ளன. இவற்றில் குவிரன் ஆதன் ஆதன் முதலிய மக்கள் பெயர்களும் முழுமைப் பெறாத பெயரோ அல்லது சொற்றொடரோ பொறிக்கப்பெற்ற பானையோடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. இங்கு ஆதன் என்னும் பெயர் அதன்என்றே பொறிக்கப்பட்டுள்ளது. காலத்தால் முந்திய தொன்மைத்தமிழ் எழுத்துகளில் உயிர்க்குறில் வடிவத்திலிருந்து உயிர்நெடிலை வேறுபடுத்திக் காட்டும் வழக்கம் இல்லை என்று தொல்லியல் அறிஞர் கா. இராசன் அவர்கள் கூறுகிறார். ஆகவே கீழடியில் கிடைத்தப் பானைப் பொறிகள் காலத்தால் முந்தியவையாகும். பெரும்பாலும் பானைப் பொறிப்புகள் பானையின் கழுத்துப் பகுதியில் பொறித்து உள்ளனர். அரிதாகச் சில பானையின் உடற்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ளன. பானை வனையும்போது ஈரநிலையில் அல்லது பானை உலர்ந்தபின் கூர்மையான ஆணியைக்கொண்டு தமிழர்கள் எழுத்துகளைப் பொறித்தனர். கீழடியில் கிடைத்தப் பானைப் பொறிப்புகளின் எழுத்தமைதி வேறுவேறாக உள்ளதால் பானை வனைவோரிடமிருந்து வாங்கிப் பயன்படுத்தியப் பயனாளர்கள் தங்களுடையப் பெயர்களை அல்லது செய்திகளைப் பொறித்தனர். இங்கு வாழ்ந்த தமிழர்கள் கி.மு.6ஆம் நூற்றாண்டளவிலே சிறப்பான எழுத்தறிவைப் பெற்றிருந்தனர் என்பதினை அறியமுடிகிறது.

**உழவும் கால்நடை வளர்ப்பும் :**

மக்களின் உயிரைக் காக்கும் தொழில் உழவுத்தொழில். கீழடியில் உழவு தொடர்பான செய்திகள் பல கிடைத்துள்ளன. அகழாய்வில் கிடைத்த விலங்குகளின் எலும்புத்துண்டு களைப் புனேவிலுள்ள டெக்கான் கல்லூரிக்கு அனுப்பி ஆய்வு செய்ததில் திமிலுள்ள காளை, பசு, எருமை, வெள்ளாடு, கலைமான், காட்டுப்பன்றி ஆகியவற்றின் எலும்புகள் என அடையாளம் காணப்பட்டன. இவற்றில் பெரும்பகுதி எலும்புகள் காளை, பசு, எருமை, ஆடு ஆகியவையுடையதாகக் காணப்பட்டன. ஆகையால் இவ்விலங்குகளை உழவுக்கும் கால்நடைக்கும் தமிழர்கள் வளர்த்

தனர் என்பதனை அறியமுடிகிறது. இவ்விலங்கு எலும்புகளில் கலைமான், வெள்ளாடு, பன்றி ஆகியவற்றில் வெட்டுத் தழும்புகள் காணப் படுவதால் தமிழர்கள் இவைகளை உணவிற் காகப் பயன்படுத்தி உள்ளனர் என்பதனைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

**நெசவு :**

பண்டைத் தமிழர்கள் உழவுத்தொழிலுக்கு அடுத்து நெசவுத்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். ஏனென்றால் மனிதனின் மானம் காப்பது ஆடையாகும். ஆடையை நெய்யும் தொழில் நெசவு ஆகும். தக்களி எலும்பினா லான வரைகோல் நெசவில் நூல்களை நூற்கப் பயன்படும் தக்களி துணி களில் உருவம் வரைய உதவும் எலும்பினாலான தூரிகை தறியில் தொங்கவிடப்படும் கல் செம்பினா லான ஊசி எலும்பினாலான வரைகோல் ஆகியன இவ்அகழாய்வில் கிடைத்துள்ளன. ஆகையால் பண்டைக் காலத்தில் இங்கு நெசவுத்தொழில் சிறந்து விளங்கியது என்பதனை அறியமுடிகிறது.

**வணிகம் :**

தமிழகத்தில் கடல் வணிகம் சிறப்புற்று விளங்கியது. காரணம் நீண்ட கடற்கரையைக் கொண்டிருந்ததே ஆகும். கப்பல்கள் வந்து செல்லவும் நங்கூரமிட்டு நிற்கவும் ஏதுவாக அமைந்தது தமிழகக் கிழக்குக் கடற்கரை யாகும். வைகை ஆறு கடலில் கலக்கும் இடத்தில் அழகன்குளம் துறைமுகம் பண்டைக் காலத்தில் அமைந்திருந்தது. வைகை ஆற்றின் அருகில் அமைந்த கீழடியிலிருந்து அழகன் குளம் துறைமுகம் வழியாக சங்கு வளையல் கள், கண்ணாடி வளையல்கள், முத்து மணிக் கற்கள், துணி வகைகள், மிளகு மற்றும் வாசனைப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. கண்ணாடி மணிகள், அகேட் மற்றும் சூது பவளமணிகள் இவைத்தவிர அகேட் மற்றும் சூதுபவளம் மணிகளும் ரோம் நாட்டிற்கு அனுப்பப் பட்டன. தங்கம், பானங்கள், நறுமணத் திரவியங்கள், குதிரை ஆகியவை ரோமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ரோம் நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி இங்கேயே ரௌலட்டட் அரிட்டைன் பானை வகைகள் வனையப்பட்டன. கீழடியில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் வைகை ஆற்றின் மூலமாக அழகன்குளம் துறைமுகம் வழியாக எகிப்து, ரோம், தென்கிழக்கு ஆசிய நாடுகள், இலங்கை, வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன.

**விளையாட்டுப் பொருட்கள் :**

இவ்அகழாய்வில் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குப் பொருள்களும் கிடைத்து உள்ளன. தற்சமயம் பெண்கள் விளையாடும் பாண்டி எனப்படும் விளையாட்டுக்குரிய 600 வட்டச் சில்லுகள் கிடைத்துள்ளன. பகடைக்காய்கள் வட்டச்சில்லுகள் சதுரங்கக் காய்கள் தாயம் விளையாடுவதற்குரிய பகடைக் காய்கள் சதுரங்கம் விளையாடத் தேவையான சதுரங்கக் காய்கள் கிடைத்துள்ளன. இப் பொருட்கள் எல்லாம் சுடுமண்ணால் ஆனவை.

**பண்பாட்டுக் காலமுறைகள் :**

கீழடியில் நடந்த அகழாய்வில் கண்டறியப்பட்ட மண்ணடுக்குக் கட்டட அமைப்பு, பானை ஓடுகள், எழுத்துப் பொறிப்புகள், அணிகலன் ஆகியவற்றைக் கொண்டு கீழடியின் பண்பாட்டுக்காலம் பிரிக்கப்படுகிறது. கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.3ஆம் நூற்றாண்டு வரை முதல் பண்பாட்டுக்காலம். கி.மு.3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.5ஆம் நூற்றாண்டு வரை இரண்டாம் பண்பாட்டுக் காலம். கி.பி.5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.12ஆம் நூற்றாண்டு வரை மூன்றாவது பண்பாட்டுக் காலம் எனக் கொள்ளலாம்.

இதுகாறும் நாம் ஆய்ந்தவற்றால் கீழடியில் கி.மு.6ஆம் நூற்றாண்டளவிலேயே தமிழர்கள் நகர நாகரிகத்தில் சிறந்து எழுத்தறிவு பெற்றவர்களாக வாழ்ந்தனர் என்பதனை அறியலாம். ●



# சிந்தனையாளன் பொங்கல் மலர் வரலாறு

- கலசம்

**தோ**ழர் மருதூர் சி.பெரியசாமியின் அறிமுகத்துடன், நான் 1975-ஆம் ஆண்டு தொடங்கி சிந்தனையாளன் படித்து வருகிறேன். பிறகு 1977ஆம் ஆண்டில் தோழர் வே. ஆனைமுத்து அவர்களுடன் நேரடித் தொடர்பும் பழக்கமும் ஏற்பட்டது. எந்த நாளில் நான் தோழர் வே. ஆனைமுத்து அவர்களைச் சந்தித்தேன் என்கின்ற நினைவு இல்லை. அப்போது அவர் திருச்சியில் வசித்து வந்தார். அவர் சென்னை வந்தபோது எழும்பூர் பீப்பிள்ஸ் லாட்ஜில் அவரைச் சந்தித்து, “பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்” முதல் பதிப்பின் மூன்று தொகுதிகளையும் பெற்றது நினைவில் உள்ளது. அவற்றைப் படித்த போது பெரியாரின் கொள்கைகளை வருங்காலத் தலைமுறையினர் அறியும் வகையில் செயற்கரிய செய்து பெரியாருடைய சிந்தனைகளை நூல் வடிவில் நிலைபெறச் செய்த தோழர் வே. ஆனைமுத்து அவர்களுக்கு, அவருடைய பணிகளில் உற்ற துணையாக விளங்குவது என்ற எண்ணங்கொண்டேன். அதன்படி அவர் சென்னை வந்தபோதெல்லாம் அவரைச் சந்தித்தும்; சென்னைக்கு வந்தபிறகும் அவருடைய பணிகளுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கி வந்தேன்; வருகின்றேன்.

தோழர் வே.ஆனைமுத்து 1982-ஆம் ஆண்டில் தம் பணிகளைச் சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு செயல்பட முடிவு செய்தார். அவ்வேளையில் நான் அவரிடம் திருவல்லிக்கேணியில் தங்கிப் பணியாற்றுங்கள் என்று கருத்துத் தெரிவித்தேன். விரும்பி அவர் அதை ஏற்றுக்கொண்டார். திருவல்லிக்கேணியில் லால்பேகம் தெருவில், 5-ஆம் எண் கொண்ட வீட்டை ரூ.1500/- வாடகையில் அவருக்குப் பெற்றுக் கொடுத்தேன். அந்த முகவரியில் சிந்தனையாளன் அலுவலகமும் அச்சகமும் செயல்படத் தொடங்கியது. தமிழக அரசின் அன்றைய அமைச்சர் கா.காளிமுத்து திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். நான் அப்போது அதற்கு அடுத்த பெரிய தெருவில் குடியிருந்தேன். தினமும் காலை, மாலை, இரவு வேளைகளில் சிந்தனையாளன் அலுவலகத்தில் அச்சுப்பணி தவிர்த்த எல்லாப்பணிகளையும் கவனித்தும் செய்தும் வந்தேன்.

தொழிலாளிகளுக்கு வாரந்தோறும் கூலிகொடுப்பது, கட்டடத்துக்கு மாத வாடகை, மின்கட்டணம், தொலைபேசிக் கட்டணம், சிந்தனையாளனுக்குத் தாள் வாங்கிய வகையில் கடன் எனப் பெரும்



செலவினங்கள். அப்போது சிந்தனையாளன் வார ஏடாக வெளிவந்து கொண்டிருந்தது. கட்சிக்கான நன்கொடை வரவும் சிந்தனை யாளன் சந்தாத் தொகையும் மட்டுமே வரவினங்கள். அதிகப்படியான செலவினங் களுக்குத் தோழர் ஆனைமுத்து சொந்தப் பொறுப்பில் கடன் வாங்கியும் சொந்தப் பணத்தைச் செலவு செய்தும் செலவுகளைச் சமாளித்து வந்தார். அவர் வெளியூர்ப் பயணங்கள் மேற்கொண்ட நாள்களில் பணம் தேவைப்பட்டபோது நண்பர்களிடம் கை மாற்று வாங்கிச் செலவுகளைச் சமாளித்து வந்தேன்.

அந்தப் பணச்சுமை, நெருக்கடி ஆகிய வற்றை எதிர்கொண்ட வேளையில்தான் சிந்தனையாளனுக்குத் தேவைப்படும் வருவாய்க்கு ஏதேனும் வழிகாணவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. அதன்பொருட்டுத் தொடர்ந்து சிந்தித்தவாறு இருந்தேன். ஒருநாள் நான் அவரிடம் '30 ஆயிரம் ரூபாய் அளவுக்கு செலவினமும் கடன் நெருக்கடியும் இருக்கிறது. என்ன செய்யப்போகிறீர்கள்' என்று கேட்டேன். 'என்னிடம் எதுவும் கேட்காதே. நாளை பொதுக்குழுவில் பேசு' என்று சொல்லிவிட்டார்.

மறுநாள் விழுப்புரம் நகராட்சிப் பயணியர் விடுதியில் கட்சியின் பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. 'கடன் சுமை' நெருக்கடி ரூ.30 ஆயிரம் பற்றிய, வரலாற்றை விவரமாகக் கூறினேன். கடன் சுமையை எதிர்கொள்ளத் தோழர்கள் முன்வந்தார்கள். அப்போதே தோழர்கள் மனமுவந்து ரூ.15 ஆயிரம் கொடுத்தார்கள். மீதித்தொகையை அனுப்பி வைப்பதாகத் தோழர்கள் உறுதி கூறினார் கள். கூறியபடியே அனுப்பி வைத்தார்கள். நெருக்கடி சமாளிக்கப்பட்டது என்றாலும் தொடர்ந்து வருவாய்ப் பற்றாக் குறையுட னேயே சிந்தனையாளன் நடத்தப்பட்டு வந்தது.

சிந்தனையாளன் இதழுக்கான நிதி வருவாயை வலுப்படுத்த "சிந்தனையாளன் பெரியார் பிறந்தநாள் மலர்" வெளியிடுவது சிறந்தது என்று எனக்குத் தோன்றியது. அதில் கிடைக்கும் உபரியை சிந்தனை யாளனுக்குச் செலவிட வேண்டும். உடனே அதன்பொருட்டு 5.3.1988-ஆம் நாள் வரவு செலவுத் திட்ட அறிக்கை தயாரித்தேன். அந்த அறிக்கையை அப்போது நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் ஆலோசிக்க அளித்தேன். பொதுக்குழு அரியலூரில் நடைபெற்றதாக நினைவு. 'மலர் வெளியிடுவது கட்சியின் வேலை அல்ல; அது முதலாளித்துவ அணுகுமுறை; வெளியிடக்கூடாது' என்று பொதுக்குழு மறுத்துவிட்டது. ஆனால் பொதுச்செயலாளர் வே. ஆனைமுத்து தம் நிறைவுரையில் பெரியார் காலத்தில் விடுதலை பெரியார் பிறந்தநாள் மலர் வெளியிடப் பட்டதைச் சுட்டிக்காட்டி மலர் வெளியிடுவது கட்சிப் பணிதான் என்றும் மக்களிடமும் வணிகர்களிடமும் தொழிலதிபர்களிடமும் மலருக்கு விளம்பரம் பெறுவது கொள்கைக்கு எதிரானது ஆகாது என்றும், ஆனால் நம்மால் இப்போது மலர் வெளியிட இயலாது என்றும் குறிப்பிட்டார். பின்னர் 1989-ஆம் ஆண்டில் சிந்தனையாளனுக்குக் கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டது. ஏற்கெனவே நான் அளித்திருந்த மலர் பற்றிய திட்ட அறிக்கை யைக் கட்சி ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டது. 1989-ஆம் ஆண்டில் சென்னை யில் சிந்தனையாளன் அலுவலகத்தில் நடை பெற்ற பொதுக்குழுவில் "சிந்தனையாளன் பெரியார் பிறந்தநாள் மலர்" வெளியிடுவது என்று முடிவு செய்யப்பட்டது. முதலாவது மலர் 1989-ஆம் ஆண்டில் வேலூர் மாநாட் டில் வெளியிடப்பட்டது. அதுவே பின்னர் பொங்கல் மலராகப் பெயர் மாற்றம் பெற்று இன்றளவும் தொடர்ந்து வெளியிடப் பட்டு ஆண்டுதோறும் தொடர் வருவாயை அளித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு என்னுடைய திட்ட அறிக்கை அடிப்படையாக அமைந்தது.

அந்தத் திட்ட அறிக்கையில் நான் மலரின் தேவை பற்றியும் மலரில் விளம்பரங்கள் மற்றும் கட்டுரைகள் ஆகியவற்றுக்கான பக்கங்களின் எண்ணிக்கையும், பதிப்புச் செலவு, கிடைக்கும் வருவாய், கிடைக்கும் உபரி ஆகியவற்றை உத்தேச வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

மலரின் தேவை பற்றி நான் நான்கு காரணங்களைக் குறிப்பிட்டிருந்தேன். அவை வருமாறு :

1. கடந்த 11 ஆண்டுகளில் பெரியார் சம உரிமைக்கழகம் (பின்னர் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி எனப் பெயர் மாற்றம் பெற்றது) ஆற்றி வரும் பல பணிகளையும் தொகுத்து மக்கள் அறியச் செய்தல்.
2. பெரியார் சமஉரிமைக் கழகத் தோழர் களை அறிமுகம் செய்தல்.
3. பெரியார் சமஉரிமைக் கழகத்தின் கொள்கைகள் - பணிகள் ஆகியவற்றை விரித்துரைக்கும் கட்டுரைகளை வெளியிடுதல்.
4. மலரின் வரவு-செலவில் கணிசமான அளவுக்கு உபரியை ஏற்படுத்தி அதைச் சிந்தனையாளன் வளர்ச்சிக்குத் துணைப் படுத்துதல்.

### மலர் பற்றிய விவரங்கள்

மொத்த பக்கங்கள் 160. அதில் விளம்பரம் 30 பக்கம்; படங்கள் 24 பக்கம்; சிறப்புக் கட்டுரைகள் 70 பக்கம்; பிறகட்டுரைகள் 36 பக்கம்.

### படிகளின் எண்ணிக்கை

3 ஆயிரம் படிகள் அச்சிட வேண்டும். அதில் விளம்பரக்காரர்களுக்கு மற்றும் இலவசங்களின் எண்ணிக்கை 500 படிகள். விற்பனைக்குரியவை 2500 படிகள்.

### பதிப்புச் செலவும் விலையும்

மொத்தச் செலவு ரூ.27,000/- அதில் அச்சிடுதல் செலவு ரூ.8000/- கட்டடச் செலவு ரூ.1800/- தாள் மற்றும் அட்டைச் செலவு ரூ.14,200/- விலை ஏற்றத்துக்கும் நிர்வாகச் செலவுக்கும் ரூ.3,000/- ஒரு படியின் அடக்கவிலை ரூ.9/- விற்பனை விலை ரூ.20/- முன்பதிவு விலை ரூ.10/- பத்துப் படிகளின் முன்பதிவுத் தொகை ரூ.100/-

### விளம்பரக் கட்டணம் வருவாய்

அட்டை 4-ஆம் பக்கம் ரூ.3,000/- 3-ஆம் பக்கம் ரூ.2,000/- 2-ஆம் பக்கம் ரூ.1,500/- உள்பக்கம் முழுப்பக்கம் ரூ.1000/- பக்கம் ரூ.500/- பக்கம் ரூ.250/- உள்பக்க விளம்பரம் 30 பக்கங்கள் பெறவேண்டும். அப்போது விளம்பர வருவாய் ரூ.36,500/- அதில் விளம்பரம் பெறும் வகையில் நேரிடும் பயணம் மற்றும் இதர செலவினங்களுக்கான கழிவுத் தொகை 30 விழுக்காடு அதாவது ரூ.10,950/- போக எஞ்சிய விளம்பர வருவாய் (ரூ.36,500 (-) ரூ.10,950/-) ரூ.25,550/-

### விற்பனை வருவாய்

விற்பனைக்குரியது 2500 படிகள். விலை ரூ.20/-. கிடைக்கும் விற்பனைத் தொகை ரூ.50,000/- அதில் விற்பனை தொடர்பான பயணம் மற்றும் இதர செலவுகளுக்கான கழிவுத் தொகை 25 விழுக்காடு அளவில் ரூ.12,500/- போக எஞ்சிய விற்பனைத் தொகை (ரூ.50,000 (-) ரூ.12,500) ரூ.37,500/-

### உபரி

விளம்பரம் வகையில் செலவு போக நிகர வருவாய் ரூ.25,550/- விற்பனை வகையில் செலவு போக நிகர வருவாய் ரூ.37,500/- இரண்டும் சேர்த்து மொத்த நிகர வருவாய் ரூ.63,050/-. இதில் பதிப்புச் செலவு ரூ.27,000/ - போக எஞ்சிய தொகை (ரூ.63050 - ரூ.27000) ரூ.36,050/- உபரித் தொகையாகும்.

இந்தத் திட்ட அறிக்கையைப் பொதுக் குழு நம்பிக்கை வைத்து ஏற்றுக்கொண்டு பெரியார் பிறந்தநாள் மலரினை 1989-இல் வெளியிட முடிவு செய்தது. அந்தப் பொதுக் குழுவில் அப்போது பொதுச்செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து, 'திட்டத்தைக் கொடுத்த கலசம், விளம்பரம் 30 பக்கம் வாங்க வேண்டும் என்று சொல்லியுள்ளார். அவர் 10 பக்கத்துக்கு விளம்பரம் பெற்றுத் தருவதானால் மலர் வெளியிடும் பணியை எடுத்துக் கொள்ளலாம்' என்று கூறினார். நானும் சரி என்று சொன்னேன். அவ்வாறே 10 பக்கம் விளம்பரம் மற்றும் நன்கொடையினை நானும் தோழர் சி. பெரியசாமியும் பெற்றுக் கொடுத்தோம். மலரும் வேலூர் மாநாட்டில் வெளியிடப்பட்டது. இப்போது பொங்கல் மலர் என்கிற பெயரில் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது.

சிந்தனையாளன் தொய்வின்றித் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்று சிந்தித்து அளிக்கப்பட்ட என்னுடைய 5.3.1988-ஆம் நாளிட்ட திட்ட அறிக்கையை 1989-ஆம் ஆண்டின் பொதுக்குழுவில் பொதுச்செயலாளர் வே. ஆனைமுத்து முன்மொழிய பொதுக்குழு நம்பிக்கை வைத்து ஏற்றுக்கொண்டு சிந்தனையாளன் பெரியார் பிறந்தநாள் மலரை வெளியிட்டதையும் பின்னர் அதையே பெயர் மாற்றம் செய்து சிந்தனையாளன் பொங்கல் மலர் என்னும் பெயரில் தொடர்ந்து வெளியிட்டு அதன் உபரியைக் கொண்டு சிந்தனையாளன் ஏட்டையும் தொடர்ந்து வெளியிட்டு வருவதையும் மலர் வரலாற்றின் 30-ஆம் ஆண்டில் எண்ணிப் பார்க்கிறேன். **மலர் தரும் பொருளில் சிந்தனையாளன் ஏடு தவழ்கிறது.**

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்"

என்னும் குறள் தரும் பொருளில் என் மனம் தவழ்கிறது.

**வளர்க சிந்தனையாளன்!**

●

*பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அநேக இடங்களில் அநேக சங்கங்களும், முயற்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம்முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலையுள்ளவர்கள் போலக் காட்டிக் கொண்டு மிகப் பாசாங்கு செய்து வருகின்றார்கள். ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும் எவ்வழியிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது. தற்கால பெண்கள் விடுதலைக்காகப் பெண்களால் முயற்சிக்கப்படும் இயக்கங்களும் யாதொரு பலனையும் கொடுக்காமல் போவதல்லாமல், மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத்தனத்திற்கே கட்டுப்பாடுகளைப் பலப்படுத்திக் கொண்டே போகும் என்பது நமது அபிப்பிராயம். எதுபோலென்றால், திராவிட மக்கள் விடுதலைக்குப் பார்ப்பனரும், பார்ப்பனர்தான் இந்நாட்டுக்குப் பிரதிநிதித்துவம் வாய்ந்தவர்கள் என்று கருதிக் கொண்டிருக்கும் அந்நிய நாட்டினர்களும் பாடுபடுவதாக ஏற்பாடுகள் நடந்து வருவதன் பலனாக எப்படி நாளுக்கு நாள் திராவிட மக்களுக்கு அடிமைத்தனமும், என்றும் விடுதலை பெற முடியாதபடி கட்டுப்பாடுகளின் பலமும் ஏற்பட்டு வருகிறதோ அது போலவும், சமூகச் சீர்திருத்தம், சமத்துவம் என்பதாக வேஷம் போட்டுக் கொண்டு பார்ப்பனர்களும் ஆரியப் புராணக்காரர்களும் சீர்திருத்தத்தில் பிரவேசித்து வருவதன் பலனாக எப்படிச் சமூகக் கொடுமைகளும், உயர்வு தாழ்வுகளும் சட்டத்தினாலும், மதத்தினாலும் நிலை பெற்றுப் பலப்பட்டு வருகின்றதோ அதுபோலவுமே என்று சொல்லலாம்.*

***- பெரியார் ஈ.வெ.ரா.***



# பெரியார் ஈ.வெ.ரா. – நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை அமைப்பும் செயல்பாடுகளும்

துரை. கலையரசு

மனித வாழ்வு தனியாக இயங்கும் தனி வாழ்வு அல்ல. புற உலகைப் புறந்தள்ளிவிட்டு ஒரு மனிதன் இயல்பான வாழ்க்கை வாழ இயலாது. புற உலகில் நிகழும் நிகழ்வுகள் ஒவ்வொரு தனிமனித வாழ்விலும் அதன் அழுத்தத்தைத் திணித்து பாதிப்பை பதித்துக் கொண்டுதான் இருக்கின்றது. இந்தப் பாதிப்பு ஏற்படுத்தும் தாக்கமே தாம் பெற்ற துன்பம் பிறரும் படக்கூடாது என்று எண்ணி உலகினைச் செதுக்கும் உளியாகப் பலரும் மாறி, பொதுவாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுகின்றனர். அவ்வாறு பொதுநலம் பேணுதல் புண்ணியம் என்று மதம் சொல்கிறது. அது விரிந்து கடவுள், பாவம், புண்ணியம், மோட்சம், நரகம், மறுபிறவி என சமூகத்தில் நிலைபெற்றுவிட்டது. எனினும் இதற்கு எதிர்த்திசையில் பயணம் செய்யும் பொதுநலம் பேணுபவர் உலகில் உள்ள மனித இனம் படுகின்ற துன்பத்தினை உள்வாங்கி, அவற்றினைப் போக்கிட தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் அவரவர் இயல்பில் விதைத்து மறைந்துள்ளார்கள்.

அவ்வாறு எதிரெதிர்த் திசையில் பயணிக்கும் தத்துவங்களும், சித்தாந்தங்களும் எல்லா காலகட்டத்திலும் மனித சமூகத்தை வழிப்படுத்தும் என்ற நம்பிக்கையில், அவற்றை வடித்தெடுத்தவர்கள் இயக்கம், கழகம், கட்சி மற்றும் பல்வேறுபட்ட நிறுவனங்களை நிலைபெறச் செய்துவிட்டுச் சென்றுள்ளனர். மதம், கடவுள் அவற்றையொட்டிய நிறுவனங்கள் அனைத்தும் மனிதனின் ஆசையைத் தூண்டிவிட்டு அவனை விட்டில் பூச்சியாக்கி விளக்கொளியில் விழுந்து மடியும் தனிமனித வாழ்க்கை முடித்து வைத்து விடுகின்றது. மாறாக, எதிர்த்திசையில் பயணிக்கும் சிந்தாந்தவாதிகள் உலகம், நாடு, மாநிலம், சமூகம், குடும்பம், சுற்றம், தனிமனிதன் என அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வியலைக் கணக்கில் கொண்டு உலகைச் சரியான பாதையில் இயக்கி இருக்கின்றனர்.

அவ்வாறு இயக்கங்களைப் படைத்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்; மேலை நாடுகளில் காரல்மார்க்சு, ஏங்கல்சு, ஸ்டாலின், லெனின்; இந்தியாவில் புலே, வள்ளலார், அயோத்திதாசர், அத்திப்பாக்கம் வேங்கடாசல நாயக்கர், ஈ.வெ. இராமசாமி, நாராயணகுரு, டாக்டர் அம்பேத்கர் ஆகியோரைக் குறிப்பிடத் தக்கவர்களாகக் கொள்ளலாம். தென்னகத்தில், தமிழ்நாட்டில் தந்தை



பெரியார் அவருடைய சித்தாந்தங்கள், சிந்தனைகள், பேச்சு, எழுத்து, இவற்றை அவர் காலத்திலேயே அவரின் குடியரசு, விடுதலை, உண்மை போன்ற ஏடுகளில் பதி விட்டுச் சென்றார். இவ்வியக் கத்தில் ஈர்க் கப்பட்டவரும், பெரியாரோடு இணைந்து பணியாற்றியவருமான திருச்சி. வே.ஆனைமுத்து பெரியாரின் சிந்தனைகள், பேச்சுகள் இவற்றினை உலகில் நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற முனைப்பிலேயே பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள் என்ற மூன்று தொகுப்புகளை வெளிக்கொண்டு வந்தவர். அதன் தொடர்ச்சியாக அவர், சிந்தனையாளன் பெரியார் சமஉரிமைக் கழகம் (பின்னர் மாற்றப்பட்டு மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சி), சிந்தனையாளன், பெரியார் சமஉரிமைக்கழகம் (மா.பெ.பொ.க.) அனைத் திந்தியப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் வகுப்பினர்-பழங்குடியினர் மதச் சிறுபான் மையினர் பேரவை, பெரியார் அச்சிடுவோர், வெளியிடுவோர் குழுமம், பெரியார் இரா (Periyar Era-ஆங்கிலம்) பெரியார் ஈ.வெ. ராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக் கட்டளை என இயக்க ரீதியாகச் செயல்படும் நிறுவனங்களைத் தன் வாழ்நாளில் நிறுவியுள் ளார்.

இந்நிறுவனங்களில் பெரியார் ‘இரா’ மாத ஏடும், பெரியார் அச்சிடுவோர் மற்றும் வெளியிடுவோர் குழுமமும் பொருளாதார நலிவால் காலவோட்டத்தில் கரைந்துவிட்டன; எனினும் கட்சி, அறக்கட்டளை, சிந்தனை யாளன் மாத ஏடு இவை மூன்றும் தோழர் வே. ஆனைமுத்துவின் அர்ப்பணிப்பால் இது நாள் வரை எல்லாக் காலங்களிலும் உயிர்ப்புடன் தடம்பதித்துக்கொண்டு நடைபோடுகின்றன.

கட்சி அகில இந்திய அளவில் சமூக நீதியை வென்றெடுக்க மண்டல் குழுவை அமைத்திடவும், அதன் அறிக்கையை வெளியிட வைத்தும், அதன் விளைவாக பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு மைய்ய அரசு பணிகளில் இடஒதுக்கீடு பெற்றது, பீகார் மாநிலத்தில் இடஒதுக்கீடு பெற வழி செய்தது, தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் ஐம்பது விழுக்காடு இடஒதுக்கீடு (பிற்படுத்தப் பட்டோருக்கு 30 விழுக்காடு, மிகப்பிற்படுத்தப் பட்டோருக்கு 20 விழுக்காடு) பெற வழி செய்தது. நீர்மேலாண்மை, மொழித் தன்னுரிமை இவற்றில் தொடர்ந்து களம் கண்டுள்ளது. சிந்தனையாளன் நாளேடு தொடர்ந்து பெரியார், அம்பேத்கர், மார்க்சு இவர்களின் சித்தாந்தங் களைப் பாமர மக்களிடையே இடைவிடாது கொண்டு சேர்த்து வருகிறது.

அறக்கட்டளைக்கு நிரந்தர இடம் தேவை என்பதை கருத்தில் கொண்டு 3 ஆண்டுகள் தொடர்ந்து பாடுபட்டு சென்னை - திருவள்ளூர் சாலையில் சர்வே எண்.277/2 என்ற அரசு இடத்தை தேர்வு செய்ததில் தோழர் தே. முத்து அளித்த பங்கு ஈடு இணையற்றதாகும். இதனை ஆண்டு குத்தகை ரூ.10,000/-க்கு 1997-இல் தமிழக அரசு அரசாணை பெற்றிட உதவியவர் மறைந்த எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் ஆவார்; அவர் அன்னாளைய வருவாய் துறை அமைச்சர். இதில் 920 சதுர அடியில் தரைத் தளம் கட்டப் பட்டு 2009-இல் திறப்பு விழா நடைபெற்றது. இக்கட்டடம் கட்டத் தொடக்கக் காலத் திலிருந்தே பொறியாளர் இரா. சிவப்பிர காசம் முழுப்பொறுப்பேற்று பல தோழர் களின் துணையுடன் கட்டடம் முழுமை பெறச் செய்தார். இதில் முதல்தளம் கட்டடம், அடுத்து கட்டப்பட்ட நூலகம் இவைகள் அனைத்தும் முழுமைபெற பொறுப்பேற்றுக் கொண்டவரும் அவரே.

இந்நிலப்பரப்பை அறக்கட்டளையின் நிரந்தர இடமாக்கிட அரசுக்கு 2010-இல் விண்ணப்பித்து தொடர்ந்து முயற்சி செய்தது திரு. வே. ஆனைமுத்து. இதற்கு உறுதுணையாக இருந்து உதவியவர் திரு. இராசமாணிக்கம், I.A.S. அப்போதைய முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் நேர்முகச் செயலாளர். இவ்விடத்தை முழுவதும் விலைக்குப் பெற, அல்லது 99 ஆண்டு நீண்டகாலக் குத்தகைக்குப் பெற முயற்சிகள் மேற்கொண்ட போது, கலைஞர் அவர்கள் அனைத்தையும் கருத்தில் எடுத்துக்கொண்டு, 30 ஆண்டுகள் காலத்திற்குக் குத்தகைக்கு அளித்து அரசாணை பிறப்பித்திட ஒப்புதல் அளித்தது பெருமைக்குரியது.

அதற்கு அடுத்ததாக நூலகக் கட்டடம் அமைந்துள்ளது. இதனை அறக்கட்டளைக்கு அளித்திட கருப்பொரு ளாக அமைந்தவர் தொழிற்சங்கத் தலைவர் திரு. இரா.குசேலர், அசோக் லைலண்டு தொழிற் சங்கம் இக்கட்டடத்தை தன் முழு பொறுப்பில் கட்டிக்கொடுத்துள்ளது.

**அறக்கட்டளை ஆற்றிய முக்கிய பணிகள் :**

1. பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள் நூலை விரிவு செய்து மறுமதிப்பு செய்தது.
2. தனெஞ்செய்கீர் எழுதிய டாக்டர் அம் பேத்கர் வாழ்க்கை வரலாறை தமிழ்ப் மொழிபெயர்ப்பு இரண்டாம் பதிப்பினை வெளியிட்டுள்ளது.
3. ஓராண்டு முழுவதும் விடுமுறை நாள் களில் 11 தலைப்புகளில் பௌத்தம், வள்ளுவம், மார்க்சியம், லெனினியம், காந்தியம், பெரியாரியம், அம்பேத்கரியம், பாவேந்தம், தமிழ்மொழித் திறன், மெய்ப்புத் திருத்துதல், கணினி அறிமுகப் பயிற்சி என சித்தாந்தங்கள், மொழித்திறன் வளர்த்தல் இவற்றினை பயிலரங்கம் வழியாகப் பல தோழர்களிடம் கொண்டு சேர்த்துள்ளது.
4. புரட்சிகர இயக்க நூல்களைத் திரட்டி வெகுமக்கள் பயன்பெற நூலகம் அமைத் துள்ளது.

இவ் அறக்கட்டளை 1993-இல் தோழர்கள் வே. ஆனைமுத்து - மேலாண்மை அறங்காவல ராகவும், தே. முத்து-அறக்கட்டளைச் செயலாள ராகவும், மறைந்த மா.முத்துசாமி, மறைந்த து. தில்லைவனம் மற்றும் க.முகிலன், இரா. பச்ச மலை, துரை கலையரசு அறங்காவலர்களாகவும் பொறுப்பில் அறக்கட்டளை பதிவு செய்யப் பட்டது.

அறக்கட்டளை 1993இல் பதிவு செய்த நாளிலிருந்து, அதனைத் தொடர்ந்து 1997-இல் இருந்து ஆண்டுக் குத்தகைக்கு அரசிடமிருந்து அம்பத்தூரில் நிலத்தை பெற்றிடவும், 2010-இல் அதையே நீண்டகால குத்தகைக்குப் பெற்றிடவும், அறக்கட்டளையில் நிலைபெற் றுள்ள கட்டடங்கள் கட்ட எல்லாத் துறை களிலும் அனுமதி பெற்றிடவும், தோழர் வே.ஆனைமுத்துவுக்கும் அம்பத்தூர் மேட்டுக் குப்பம் தோழர் தே.முத்து மற்றும் தோழர் சீர்காழி ம. முத்துசாமி ஆகியோருக்குப் பல தோழர்களும் தோன்றாத் துணையாக நின்றனர்.

பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள் முதல் பதிப்பு 1974-இல் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் திருச்சியில் வெளியிடப்பட்டது. பின்னர் அதில் விடுபட்ட பெரியாரின் பேச்சு, எழுத்து இவற்றினைத் தொகுத்து இரண்டாம் பதிப்பு 2010-இல் கலைஞரின் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் 21.03.2010 அன்று வெளியிடப்பட்டது. இதனை கலைஞரால் அறிவாலயத்தில் வெளியிடப்பட உறுதுணை யாக அமைந்தவர் சிந்தனையாளன் மாத ஏட்டில் கொள்கைப் பதிவுகளைப் பதித்த வருமான பேராசிரியர் மு.நாகநாதன். இவ்விழா விற்குத் தலைமைதாங்க கலைஞரை நேரில் சென்று தோழர் வே. ஆனைமுத்துவும் நானும் வேண்டுகோள் விடுத்தபோது கலைஞர் “வாங்க ஆனைமுத்து, நலமாக உள்ளீர்களா?” எனத் தோழமையுடன் மனிதநேயத்துடன் பேசியதும் விழாவிற்குத் தலைமை தாங்க இசைவு அளித்தது, சமூக மேம்பாடு குறித்து கலந்துரையாடியது என அனைத்தும் இன்றும் என் மனக்கண்முன் நிழலாடுகிறது.

அடுத்து அறக்கட்டளை வெளியிட்டது டாக்டர் - அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு இரண்டாம் பதிப்பாகும். தனெஞ்சைகீர் ஆங்கிலத்தில் எழுதிய இதன் மூலநூலைத் தமிழில் மொழிபெயர்க்க ஏறத் தாழ ஒன்றரை ஆண்டுகள் தோழர் க.முகிலன், தோழர் ஆனைமுத்துவுடன் தன்னை அர்ப் பணித்துக் கொண்டவர். இதன் தமிழ்மொழி நடை தமிழறிஞர்களாலும் மிகவும் பாராட் டப் பெற்றது.

இனிவரும் காலத்தில், மார்க்சு, புலே, பெரியார், அம்பேத்கர், லோகியா இவர்கள் காட்டிய அடையாளப்படுத்திய பாதையில் தோழர் வே. ஆனைமுத்துவின் அடியொற்றி தமிழ்ச் சமூகத்திற்கு இந்த அறக்கட்டளை தொடர்ந்து பணியாற்றும்!

●



# உலகமயமும் நுகர்வியப் பண்பாடும்

*- தங்க. செங்கதிர்*

*நகரத்தில் வாழும் நடுத்தர வர்க்கக் குடும்பம் அது. மனைவியும் கணவனும் அன்றைய இரவு உணவு செய்வது குறித்துப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். வீட்டின் அழைப்பொலி சப்தம் கேட்கக் கதவைத் திறந்தவர்களிடம், டிப்டாப் உடையுடன் வந்த டெலிவரி பாய், டின்னர் ஆர்டர் பண்றீங்களா? என்ற கேள்வியுடன் உணவுப் பட்டியல் அடங்கிய அட்டையை நீட்டுகிறார். சமைக்கத் தயாராய் இருந்தவர்களுக்கு இன்றைக்கு மட்டும் ஆர்டர் செய்து சாப்பிடலாமே என்கிற சபலம் தோன்ற கணவனும் மனைவியும் ஆன்லைன் உணவை ருசித்துச் சாப்பிடுகிறார்கள். இனிவரும் காலங்களில் அவர்களது அன்றாட இரவு உணவை அந்த ஆன்லைன் உணவு நிறுவனங்களே தீர்மானிக்கப் போகின்றன என்ற சதி அந்த இணையருக்குத் தெரியாது!*

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து இறுதியில் மனிதர் களைக் கடித்த கதையாக நம் வீட்டின் அடுப்பில் இருந்த கொள்ளிக் கட்டையை உருவி, மரபுவழி உணவு உரிமைக்கு வேட்டு வைத்து, ஆன்லைன் உணவை நீட்டுகின்றன சுமோட்டோ, சுவிகீகி, வாபல் ஈட்ஸ் போன்ற ஆன்லைன் உணவு நிறுவனங்கள். நமது உணவு உரிமையைத் தட்டிப் பறித்த இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து நேற்றுக் கிளம்பியவர்கள் இல்லை.

1991இல் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் தங்கள் வல்லாதிக்க நலனை விரிவாக்கம் செய்யும் பொருட்டு நிறுவிய காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட கனமே உலகமயப் புதைச் சேற்றுக்குள் சிக்கிக் கொண்டது இந்தியா. உலகமயமாக்கல், புதிய தாராளவாதம் ஆகியவற்றின் வழிகாட்டுதலால் பிறந்த புதிய பொருளாதாரக் கொள்கையால் பன்னாட்டு வணிக நிறுவனங் களுக்கு ஏகபோக மூலதனக் குவிப்புக்கும் எல்லையற்ற சந்தை அனுமதிக்கும் வசதியாகிப் போனது. உலகமயத்தின் வரவால் வேளாண்மை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு பெருகியது; தொழில்நுட்பங்களின் மிகுதியான இறக்கு மதியால் நமது மரபான தொழில்கள் படிப்படியாக அழிவுக்குள்ளா கின்றன் பொதுத்துறை நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்து தனியார் துறையாகத் தடம்புரண்டன. இதனால் வேலைவாய்ப்புகள் மறுக்கப் பட்டன. பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக் காடாக நமது இயற்கை வளங்கள் பலி கொடுக்கப்பட்டன.

இந்தியா போன்ற வளர்முக நாடுகள் பன்னாட்டு நிறுவனங் களின்; கொள்ளைக்குக் கதவு திறந்து விட்டு வாசலில் காத்து



நின்றன. மெய்யான மக்கள் நலன் ஆட்சி யாளர்களோடு தொடர்பற்றதாகிப் போனது. குறிப் பாக கல்வி, மருத்துவம் உள்ளிட்ட வற்றில் மக்களுக்கு நேரிடையாக சேவை யாற்ற வேண்டிய கடமையிலிருந்து அரசு விலகி நின்று வேடிக்கை பார்க்கிறது. அதனால் இந்தத் துறைகளில் தனியார் நிறுவனங்கள் புகுந்து தாண்டவமாடுகின்றன. அவர்களின் வசூல் எல்லைக்கு வரையறை இல்லை. தனியார் பள்ளி, கல்லூரிகளில் மாணவர் களுக்கான கட்டண நிர்ணயம் இருந்தும் அது காற்றில் பறக்கவிடப்படுகிறது. அரசுப் பள்ளிகள் மீதான அரசின் பாரா முகத்தாலும் தனியார் பள்ளிகள் மீது கொள்ளும் கரிசனத்தாலும் தனியார் பள்ளி களே தரமான பள்ளிகள் என்ற முடிவுக்கு மக்கள் எளிதில் வந்து விடுகிறார்கள். எனவே தனியார் துறையினரிடம் இலாபம் குவிகிறது. ஏனெனில் உலகமயம் விதித்திருக்கும் பொருளில் கல்வி ஒரு இலாபம் தரும் தொழில்.

தனியார் மயம், தாராளமயம், உலகமயம் அமல்படுத்தப்பட்ட பிறகு இந்தியர்கள் அனைவரும் பணக்காரராகி விடுகிறார்கள் என்று அதன் ஆதரவாளர்களான ஆட்சியா ளர்களும், முதலாளிகளும் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். ஆனால் நடந்தது என்ன? பன்னாட்டு பகாசுர நிறுவனங்களின் இலாப வெறிக்கு இலக்காகி நமது விவசாயம் இருப்பு இழந்து போனது. வளர்ந்த நாடுகள் அந்தந்த நாடுகளின் வேளாண்மைக்கு அதிகப்படியான மானியத்தை வழங்கி விளைச்சலைப் பெருக்கி, குறைந்த விலையில் இந்தியா போன்ற வளர்முக நாடுகளுக்கு இறக்குமதி செய்வது சந்தைப்படுத்தியதன் காரணமாக, நம் விவசாயிகள் வியர்வை மழையில் நனைந்தும் வெயிலில் கருகியும் பாடுபட்டு விளைவித்த பொருட்களுக்கு சந்தையில் கட்டுப்படியான விலை கிடைக் காமல் போனது. இதனால் மனவேதனை யாலும், கடன் தொல்லையாலும் இந்தியா வில் சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து மரண மடைந்துள்ளார்கள்.

உயிருக்கே உத்திரவாதமற்ற நாட்டில் பணக்காரர் என்ற சொல்லே பகட்டானதாக போலித் தனம் நிறைந்ததாகத் தெரியவில் லையா நம் ஆட்சியாளர்களுக்கு? ஆதிக்கம் செலுத்தும் எந்த ஒரு வர்க்கமும் தனது மேலாண்மையை நிலைநிறுத்திக் கொள்வ தற்காகத் தனது கருத்தியலை அந்த தேசத்தின் ஒட்டுமொத்த கருத்தியலாக முன்னிறுத்தும். அதை எல்லா இடங்களிலும் திணிக்கும் என்று இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்சிய சிந்தனையாளர் அந்தோனியே கிராம்ஷியின் கூற்று எத்தகைய பொருத்தப்பாடானது என்பதை நம் ஆட்சியாளர்களின் வாய்மொழி உரைகள் உறுதிப்படுத்துகின்றன.

நாம் காலையில் எழுந்ததும் பல் துலக்கப் பயன்படுத்தும் வேப்பங்குச்சியைப் பிடுங்கிக் கொண்டு டூத் பிரசைக் கொடுத்து, டூத் பேஸ்டில் உப்பிருக்கிறதா? காரமிருக்கிறதா? எனக் கேட்டு அதிகாரம் செய்த அமெரிக்க நிறுவனம், நம் வீட்டின் வாசலில் - வயல் வெளியில் - நீர்நிலைகளின் கரையில் எனக் கானகமெங்கும் பசுமை பொங்க எழுந்து நின்று, தமிழர்களின் பாரம்பரிய மருத்துவ அறிவுப் பெட்டகமாய் விளங்கிய வேப்ப மரத்திற்குக் காப்புரிமை வாங்கிக் கொண்டு அடாவடி செய்கிறது. ஏன் தெரியுமா? அமெரிக்க மக்களிடத்தே வேப்பங்குச்சியை விற்றுப் பணம் பார்ப்பதற்காகவும், அவர்களின் நலனைக் காப்பதற்காகவும். டபுள்யு.ஆர். கிரேஷ் நிறுவனம் வாங்கியிருந்த காப்புரி மையை நம் சூழலியலாளர்கள் போராடி மீட்ட கதை வேறு. இப்படியாக பல தேசிய இன மக்களின் முன்னோர் அறிவுச் செல் வத்தைச் சுரண்டி அதில் இலாபம் கறக்கும் போக்கு பன்னாட்டு நிறுவனங்களுக்கு எளிய கலை. குறிப்பாகத் தமிழகத்தில் இயற்கை வேளாண்மை இயற்கை உணவுகள் குறித்த விழிப்புணர்வுகள் பரவலாக்கம் பெற்று வரும் இச்சூழலில் அதனைத் தனது இலாப வெறிக்குத் தீனியாக்கிக் கொள்ள பன்னாட்டு நிறுவனங்கள், இயற்கை வேளாண் உணவுப் பொருட்கள் (Organic Food) விற்பனை

அங்காடியை சென்னை உள்ளிட்ட நகரங்களில் ஆங்காங்கே தொடங்கி கொள்ளை இலாபம் சம்பாதித்து வருகின்றன. ஆனால் அந்நிறுவனங்கள் விற்கும் இயற்கை வேளாண் பொருட்கள் 100 விழுக்காடு இயற்கையான முறையில் விளைந்தவைதானா? என்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறது ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழக ஆய்வு. உடல்நலத்திற்கு உவப்பான உணவாகக் கருதப்படும் வெங்காயத்தையும் பூண்டையும் அருவறுக்கத்தக்க பொருளாகத் தொலைக்காட்சி விளம்பரங்கள் காட்டுகின்றன. இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், வெங்காயம் - பூண்டு ஆகியவற்றைத் தாம் பயன்படுத்துவதில்லை என்று பொது வெளியில் பெருமிதம் கொள்கிறார். பூண்டு வெங்காயம் போன்ற மருத்துவக் குணமுள்ள நல்ல உணவுப் பொருட்களை மக்களிடமிருந்து அபகரித்துக் கொள்ள பன்னாட்டு நிறுவனங்கள் போட்டி போட்டு நிற்கும் தற்போதைய சூழலில், அவரின் இந்தப் பேச்சைத் தற்செயலானதாகவோ, எதார்த்தமானதாகவோ எடுத்துக் கொள்ள முடியாது. அதில் நுண்ணிய அரசியல் ஒளிந்திருக்கிறது.

உலகமயம் தான் என்கிற சுயநலத்தைத் தூண்டிவலுப்படுத்தி வருகிறது. தானும் தன் குடும்பமும் சுகபோகமாக வாழவேண்டும்; தான் விலையுயர்ந்த உடைகளை உடுத்த வேண்டும்; சொகுசுக் கார்களில் பயணிக்க வேண்டும் என்று தனக்கென ஓர் உலகத்தைக் கட்டமைத்துக் கொண்டு சுயநல ஊஞ்சலில் பயணிக்க உலகமயம் வழிகாட்டுகிறது. மக்கள் நலன் சார்ந்த பொதுச் சிந்தனை அவர்களை நெருங்கவிடாமல் பார்த்துக் கொள்கிறது. ஏனெனில் மக்கள் நுகர்வுக்கு அப்பால் செல்வதை உலகமயம் விரும்புவதில்லை.

சந்தையில் இது புதுசு என்ற தலைப்புடன் தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்கள் போட்டி போட்டுக் கொண்டு புதிதாக வந்திருக்கும் வாகனங்களை விளம்பரப்படுத்துகின்றன. இந்தப் புதிய வாகனங்கள் ஏற்கனவே ஒருவர் பயன்படுத்தி வருகின்ற வாகனத்தோடு ஒப்பிடுகையில் சின்னஞ்சிறு மாற்றங்கள் கொண்டவையே. ஆனால் அதையே உயர்தனி மொழியில் பேசி, பழைய வாகனத்தை விற்றுவிட்டுப் புதிய வாகனத்தை வாங்க வைக்கும் தரகராகச் செயல்படுகின்றன ஊடகங்கள். சென்ற ஆண்டு வாங்கிய வாகனங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் திட்டமிட்டே பழையதாக மாற்றுகிறது.

மின்னணு சாதனங்கள், கைப்பேசிக் கருவிகள் போன்றவற்றிலும் சிறிய அளவிலான மாற்றங்களைச் செய்து விற்பனைத் தொகையை அதிகரித்து விற்கின்றார்கள். மேலும் கழிவு என்ற பெயரில் மக்களைக் கவரும் வகையில் விளம்பரப்படுத்தி காலாவதிகாலப் பொருட்களை அவர்கள் தலையில் கட்டி விடுகின்றனர். நிக்கி சூ என்ற இந்தோனேசிய செருப்புத் தொழில் நிறுவனம் ஒரு நடிகருக்கு ஒரு தடவை மட்டும் விளம்பரத்தில் தோன்றுவதற்கு 2 கோடி டாலர்களை வழங்கியுள்ளது. இது அந்த நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளிகளின் கூலித் தொகையை விட 10 மடங்கு அதிகம். மக்களை வேறெங்கும் திரும்பவிடாமல் தங்கள் நிறுவனப் பொருட்களை நோக்கிக் கவனத்தைக் குவிப்பதற்காக கோடிக்கணக்கில் செலவழித்து சினிமா, கிரிக்கெட் பிரபலங்களை வைத்து விளம்பரங்களைத் தயாரிக்கின்றனர். விளம்பரத்திற்கு ஆகும் செலவையும் இறுதியில் மக்கள் சுமக்க வேண்டியிருக்கிறது. தொலைத் தொடர்புச் சந்தையிலும் மக்களைத் தன் வயப்படுத்த ஒரு ஆண்டிற்கு முற்றிலும் இணைய சேவையை அறிமுகப்படுத்தி போட்டியிலிருந்த இதர நிறவனங்களை ஓரங்கட்டிவிட்டு, இன்று முற்றுரிமை நிலையில் தான்தோன்றித்தனமாகக் கட்டணத்தை நிர்ணயித்து இலாப வெறியில் திளைத்து வருகிறது அம்பானியின் ஜியோ நிறுவனம். கேழ்வரகுக் கூழும், வரகுக் கஞ்சியும், கம்புத் தோசையும் இன்றைய தலைமுறை அறியாத உணவுகளாக மாறி விட்டன. வாழும் சூழலுக்கு ஏற்ப நம்

முன்னோர்களால் உண்ணப்பட்ட உணவு ரகங்களை ஏளனம் செய்து ஒதுக்கியதன் காரணமாக இன்று பீட்சா, பர்க்கர் போன்ற மேற்கத்திய உணவு வகைகள் நாக்கின் அருகே வந்து நர்த்தனம் ஆடுகின்றன. ஊடகங்கள் கட்டமைத்த விளம்பரங்களால்தான் ஜியோ வின் நிறுவனத்திற்கு இந்த இலாபம் கைகூடியது.

விளம்பரங்கள் நம் மக்களுக்கு உளவியல் ரீதியான நெருக்கடியைக் கொடுத்து வருகிறது என்பதை மறுக்க முடியாது. இன்று ஏழை எளிய மக்கள் அனைவரது வீட்டிலும் தொலைக்காட்சி உள்ளது. ஆனால் அவர்களின் வயிற்றுக்கு உணவு உத்திரவாதமில்லை. ஆனால் தொலைக்காட்சி விளம்பரமோ எச்சிலை ஊற வைக்கும் உணவுப் பதார்த்தங் களைக் காடசிப்படுத்தி, வயிற்றுப் பசியுடன் வாழ்க்கையைக் கழிக்கும் ஏழைகளின் வயிற் றெரிச்சலை வாங்கிக் கொட்டிக் கொள்கிறது.

மேலும் குழந்தைகள் நல்ல உணவின் மீது கை வைத்து, தத்தித் தழுவி உண்ண எத்தனிக்கும் ஒவ்வொரு முறையும் தொலைக் காட்சி விளம்பரங்கள் தட்டை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு குர்குர்ரே, லேய்ஸ், மாகி, கிண்டர்ஜாய், சீட்டோஸ், சிட்டால் போன்ற தீங்கிழைக்கும் தீனிகளை ஊட்டி விடுகின்றன. தெலைக்காட்சிகளில் காட்டப் படும் பெரும்பாலான உணவுகள் ஜங்புட் எனப்படும் குப்பை உணவுகளாகவே இருக் கின்றன. இவை அனைத்தும் மெல்லக் கொல்லும் விசம் என்பதை அறிந்தும் பணத் திற்காகப் பன்னாட்டுப் பெரு நிறுவனங் களிடம் பல்லிளித்துக் கொண்டு, குழந்தை களின் எதிர்காலத்தைக் காவு கொடுத்து வருகின்றன தொலைக்காட்சி நிறுவனங்கள்.

மேலே கண்ட நொறுக்குத் தீனிகள் கிராமப்புறக் கடைகளில் கூட பல வண் ணங்களில் காற்றடைத்த பைகளில் சரம்சர மாகத் தொங்கி குழந்தைகளைக் கவர்ந்திழுத்து வருகின்றன. சில பெற்றோர்கள் பன்னாட்டு நிறுவனங்களின் உணவு அரசியலை அறியாது தனது குழந்தைகளுக்கு இந்தக் குப்பை உணவுகளை வாங்கிக் கொடுத்து அவர்கள் உண்பதைப் பார்த்து இரசித்துக் கொண்டி ருக்கிறார்கள். உலகமயம் விதைத்த நஞ்சு கலந்த உணவுகள் உடல்நலத்திற்குச் சவால் விடும் இந்த உணவுகள் மக்களிடம் பல்வேறு நோய்களைக் கொண்டு வந்து சேர்க்கின்றன. ஊட்டச்சத்து குறைந்த கொழுப்புச் சத்து மிகுந்த துரித உணவுகளால் இதயநோய், புற்றுநோய், நீரழிவு, உடல்பருமன் போன்ற உடல்நலச் சிக்கல்கள் உண்டாகின்றன. இதனால் மனிதனின் வாழ்நாள் குறைந்து வருவதை மருத்துவ ஆய்வுகளின் மூலம் ஒப்பீடு செய்து எதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும். இனிவரும் காலங்களில் நிலைமை இன்னும் மோசமாகி இளம் வயது மரணங்கள் அதிகரிக்கும் என்று மருத்து வர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள். ஆனால் பொது சமூகம் அது பற்றியெல்லாம் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. இன்றைய சீரற்ற குப்பை உணவு முறையால் பெண்கள் இளம் வயதிலேயே பருவமெய்தி விடுகிறார்கள். சில பத்தாண்டுகளுக்கு முன்பெல்லாம் ஒல்லியான உருவமைப்பு உடையவர்களைத் தெருக்களில் அதிகமாகப் பார்க்கமுடியும். ஆனால் இன்று உடல் பருமன் என்பது தவிர்க்க முடியாததாகி, அதற்கே தனியே மருத்துவம் பார்ப்போரும் உண்டு.

தொலைக்காட்சிகளில் காட்டப்படும் பெரும்பாலான விளம்பரங்கள் எளியோரை நகையாடுவதாகவும், எதார்த்த சிந்தனைக்கு எதிரானதாகவும் இருப்பதைக் காணமுடி கிறது. அட்சய திருதியை நாளன்று நம்மிடம் ஒரு கிராம் தங்கத்தையாவது திணித்து, சட்டைப்பையில் உள்ளதைப் பிடுங்கிக் கொள்ள நகைக்கடை முதலாளிகளும், தொலைக்காட்சி நிறுவனர்களும் வரிந்து கட்டி நிற்கிறார்கள். அன்றைய நாளில் ஒரு கிராம் தங்கத்தையாவது வாங்கிவிட வேண்டு மென்று, நெரிசலில் பிதுங்கி அதனை வாங்கிச் செல்கிறார்கள். இந்த விடயத்தில் மக்களின் மூளையில் புகுத்தப்பட்டிருக்கின்ற மூடத்தனத்தை நகை முதலாளிகள் நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இன்னொரு விளம்பரம் 'திருமணம் செய்து கொள்ளாமலே சேர்ந்து வாழ்வோம்' முறையில் ஒரு மங்கையோடு குடும்பம் நடத்தி வரும் நகரத்தில் இருக்கும் தன் மகனைச் சந்திக்கக் கோபத்தோடு வரும் பெற்றோர்கள் அந்த மங்கை போட்டுக் கொடுத்த தேனீரில் சொக்கிப் போய் தனது மகனின் அந்த அறமற்ற செயலை அங்கீகரித்தது போல் புன்னகைக் கிறார்கள். தமிழர் பண்பாட்டைக் கேளிக் கூத்தாக்குகிறது. அந்த விளம்பரம் நம் இளைஞர் இளைஞிகளைப் பெருமளவு சீரழிவை நோக்கித் தள்ளிவிடுகிறது.

நுகர்வியம் பெண்களைச் சந்தைப் பொருளாகப் பாவிக்கிறது. அதனால்தான் ஆண்கள் பயன்படுத்துகின்ற உள்ளாடை விளம்பரங்களுக்குக்கூட பெண்களை ஆயாச மாகக் காட்டுகிறது. சின்னத்திரையில் காட்டப் படும் சினிமா மற்றும் நெடுந்தொடர்கள் குடும்ப அமைப்பைச் சிதைப்பதற்கும், பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்கும் ஒருவகையில் காரணமாக இருப்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. ஊடகங்கள் திணித்த செயற்கையான நுகர்விய வறட்சி யால் வாங்கும் திறனற்ற இளைஞர்கள் தங்கள் நுகர்வு வெறியைத் தீர்த்துக்கொள்ள கடத்தல் செயலில் ஈடுபட்டு, அது கொலை, கொள்ளையில் முடிந்த சம்பவங்களும் உண்டு. உலகமயப் பொருளியல் சுரண்டலும் நுகர் வியப் பண்பாடும் நாட்டில் குற்றச் செயல் பாடுகளை அதிகரிக்கச் செய்துள்ளது என் கிறார்கள். சமூக நோக்கர்கள் பாலியல் வன்முறை, கடத்தல், கொலை, கொள்ளை நிகழ்வின் போதும் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து விடுகிறோம். ஆனால் அதற்கானத் தூண்டல் காரணிகளை அடையாளம் காணத் தவறுகிறோம். ஏனெனில் அவர்கள் செல்வாக்கு மிக்கவர்கள்; அரசையே தீர்மானிக்கும் ஆற்றல் கொண்டவர்கள்!

வலிமையான ஊடக விளம்பரங்களின் வழியே இல்லத்திலிருக்கும் மனித மூளைக் குள் புகுந்து, சந்தையில் அதைச் சாத்தியப் படுத்துகிறது. உலகமயத்தின் சந்தைத் தளத் திலிருந்து யாரும் தப்பித்துவிட முடியாது. அத்தகைய மேலாதிக்கக் கட்டமைப்பால் அது பின்னப்பட்டிருக்கிறது.

ஏகாதிபத்தியவாதிகளில் இன்றைய அபரி மிதமான வளர்ச்சிக்கு உலகமய முதலாளி களால் கட்டியெழுப்பப்பட்ட நுகர்வியப் பண்பாட்டுச் சுரண்டலே காரணமாகும்.

இருபதாம் நூற்றாண்டின் முதற்பாதியில் போர்கள் நடத்தி மக்களையும் அரசையும் அடிமைப்படுத்தினர். ஆனால் இன்று பன்னாட்டு வணிக நிறுவனங்கள் உலகத்தின் சந்தையைத் தக்கவைக்க தம் நிறுவனப் பொருட்களுக்கு மக்களை அடிமைப்படுத்தும் நுகர்வியப் போரை நடத்திக் கொண்டிருக்கின்றன. இந்தப் போரில் ஆட்சியாளர்களும் பன்னாட்டு நிறுவனத்தினரும் ஓரணியில் நிற்கிறார்கள். ஏகாதிபத்திய உலகமயமும், உலகமயச் சட்டத்திற்குள் கட்டுண்டு கிடக்கும் இந்திய ஆளும் வர்க்கமும் நம்மைச் சுரண்டிக் கொழுக் கும் நட்புச் சக்திகளாகத் திகழ்கின்றார்கள்.

உலகத்தையே சந்தையாகவும் உழலும் யாவரையும் நுகர்வோராகவும், இலாப வெறியே இலட்சியமாகவும் கொண்டு இயங்கி வரும் உலகமயம்! மோசமான பண்பாட்டு விளைவுகளையும், சுற்றுச்சூழல் சீர்கேடுகளையும் உண்டாக்கி வருகிறது. சுவாசிக்கும் காற்றைக்கூட காசு கொடுத்து முகர வேண்டிய அவல நிலை நம்மைச் சூழ்ந்துள்ளது. இந்த நேரத்தில் மனித இனத் திற்கு எச்சரிக்கை என்ற பெயரில் அக்கறை யுள்ள அறிவியலாளர்கள் சங்கம் வெளி யிட்ட அறிக்கை நினைவுக்கு வருகிறது. எல்லையற்ற பொருள் குவிப்பின் ஆசையால் வேரூன்றியுள்ள மரபான கலாசார அமைப்பு களை மாற்றியமைப்பது மிக அவசரமான தேவையாகியுள்ளது. இத்தகைய புரிதலோடு ஏகாதிபத்திய பண்பாட்டுச் சூழலுக்கு எதிராகப் பாடாற்ற வேண்டியது நமது வரலாற்றுக் கடமை.

●



# பஞ்சமி நிலங்கள் எங்கே?

**இரா. திருநாவுக்கரசு**

இதுவரை எழுதப்பட்ட வரலாறுகள் அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே என்றார் மாமேதை மார்க்சு

*அண்மையில் அசுரன் என்றொரு திரைப்படம் வந்திருந்தது. தலித் அரசியலைப் பேசிய அப்படத்தில் தலித் மக்கள் பிரச்சனைகளாக இரண்டு கருத்துகள் வலியுறுத்தப்பட்டிருந்தன. ஒன்று பஞ்சமி நிலம்; மற்றொன்று கல்வி.*

*இப்படத்தைப் பார்த்துவிட்டு அசுரன் படம் அல்ல; பாடம்! பஞ்சமி நில உரிமை மீட்பை மையமாக வைத்து சாதியச் சமூகத்தைச் சாடும் சாதி வன்மத்தைக் கேள்வி கேட்கும் துணிச்சல்காரன் என்று தி.மு.க தலைவர் மு.க. ஸ்டாலின் கருத்து சொல்லியிருந்தார்.*

*அதற்கு அசுரன் கற்றுத்தந்த பாடத்தை ஏற்று, முரசொலி அலுவகத்திற்காக வழக்கப்பட்ட பஞ்சமி நிலங்களை உரியவர்களிடம் மீண்டும் ஒப்படைப்பார் என நம்புவோம்! என பா.ம.க. நிறுவனர் டாக்டர். ராமதாசு பதில் சொல்லியிருந்தார். பிறகு இரண்டு பேருக்குமிடையே வழக்கமான வாக்கரசியல் நடந்து கொண்டிருக்கிறது.*

*பஞ்சமி நில விவகாரத்தில் இவர்கள் யோக்கியர்களாகவே இருக்கட்டும். மற்றுள்ள அரசியல் தலைவர்களும், அரசு உயரதிகாரிகளும் தொழிலதிபர்களும் கூட யோக்கியர்களாகவே இருக்கட்டும். மகிழ்ச்சி !*

*மனுதர்ம அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பிரமிடு கூம்பு வடிவ சமூக அமைப்பில் உச்சத்தில் பிராமணர்களும் அடுத்தடுத்த நிலைகளில் சத்திரியர்களும், வைசியர்களும் என்று மேலிருந்து கீழாக வைக்கப்பட்டு, மேற்குறிப்பிட்ட வர்ணத்தாருக்கு அடிமை வேலை பார்க்க நான்காவது நிலையில் சூத்திரர்களும் வைக்கப்பட்டுள்ளனர்.*

*இந்த நான்கு வர்ணத்தாருக்கும் கீழே ஐந்தாவதாக வைக்கப்பட்ட ஒரு சமூகப் பிரிவினர்தான் பஞ்சமர் என்று சொல்லப்படுகிறது. புத்தரின் பஞ்சசீலக் கொள்கையைக் கடை பிடிப்பதினால் இவர்களுக்குப் பஞ்சமர் என்று பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.*

*எப்படியாகினும் இந்து மத தர்மத்தால் வெளியில் வைக்கப்பட்ட மக்கள்தான் பஞ்சமர்கள் என்பது விளங்கிக்கொள்ள முடிகிறது.*



இம்மக்கள் மீது மற்ற நான்கு வர்ணத்தா ரால் தீண்டாமை திணிக்கப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்நிலை தொடர்கிறது. ஆளும் வர்க்கத்தினராலும், ஆதிக்க வர்க்கத்தினராலும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்ட நிலையிலே இவர்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

அரசியல், சமூக, பொருளாதார, பண் பாட்டுத் தளங்களில் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இம்மக்களுக்கு உடமை என்பது கேள்விக்குறிதான். அதுவும் நிலவு டைமையைப் பொருத்தவரையில் தீண்டப் படாத மக்கள் பன்னெடுங்காலமாக வஞ்சிக் கப்பட்டே வந்திருக்கின்றனர்.

பிரிட்டிஷார் இந்திய நிலப்பரப்பைக் கைப்பற்றியபோது வளம் நிறைந்த நீர்ப் பாசனமுள்ள விளை நிலங்களெல்லாம் ஒரு சில பார்ப்பன, வெள்ளாளப் பண்ணை களிடம் குவிந்திருந்தன. அப்பண்ணைகள் தங்கள் நிலங்களைப் பயிரிடப் பண்ணை யடிமைகளாகப் பெரும்பாலும் பஞ்சமர் களைத்தான் வைத்திருந்தனர்.

வளமான பகுதிகளான செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருநெல்வேலி, போன்ற இடங் களில் இதுதான் நிலை.

பஞ்சமி நில வரவாற்றை நாம் கொஞ்சம் பின்னோக்கிப் பார்ப்போம்;

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராக இருந்த கே.ஹெச்.ஏ. திரமென்ஹீர் ஹெரே என்பவர் 1891ல் அன்றைய பிரிட்டிஷ் அரசுக்கு 17 பகுதிகள் கொண்ட நீண்ட தொரு அறிக்கை அனுப்புகிறார்.

பஞ்சமர்கள் (பறையர்கள்) மனிதர்களாக நடத்தப்படவும், சுயமரியாதையுடன் சுய முன்னேற்றம் காணவும், வாழ்க்கைத்தரம் மேம்படவும் அவர்கள் நிலவுடைமையாளர் களாக இருக்க வேண்டியது கட்டாயம் என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அவருக்கு முன்னதாகவே பல்வேறு அறிக்கை கள், மாநாடுகள், பத்திரிக்கைகள் மூலம் பலர் கோரிக்கைகள் வைத்திருந்தனர்.

அதில் முதன்மையானவர்களாக திராவிட மகாஜனசபை நிறுவனரும், மற்றும் ஒரு பைசா தமிழன் பத்திரிக்கை ஆசிரியருமான அயோத்திதாச பண்டிதர், கிருஸ்து மிஷனரி சபையைச் சேர்ந்த ஆடம் ஆண்ட்ரூ, மற்றும் வெஸ்லியன் சபையைச் சார்ந்த வில்லியம் கௌடி ஆகிய மூவரையும் குறிப்பிடலாம். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான விவாதத்தைத் தொடங்கி வைத்தவர்கள் இவர்கள்தான்.

செங்கல்பட்டு மாவட்ட நிலையைத் திரமென்ஹீர் விளக்கியது என்னவெனில், 1844ல் அடிமை முறை ஒழிக்கப்பட்ட பின்பும் அடிமைகளாக இருந்து பறையர்கள் படியாட்கள் என்ற முறையில் மீண்டும் அடிமைகளாக்கப்படுகின்றனர். இவர்கள் தாங்கள் வாங்கிய கடனை அடைப்பதற் காகத் தங்களயும் தங்கள் வாரிசுகளயும் மொத்தமாக அடிமைகளாக்கிக் கொள் கின்றனர். அதிலிருந்து விடுபட இவர்களுக்கு ஒரே வழிதான் இருந்தது. அதாவது மற்றொரு எஜமானனிடமிருந்து கடன் வாங்கிக் கொடுத்துவிட்டு புது எஜமானனிடம் மனித அடமானமாகப் போவதுதான் அந்த வழி. வேறு வழியில் விடுபட முயன்றாலும் பறை யர்கள் கிராமம் அல்லது தாலுகா நீதிமன்றத் தில் உடன்பாட்டை மீறினார்கள் என்று உடன்பாட்டு மீறல் சட்டத்தின் கீழ் எஜ மானர்கள் வழக்குத் தொடுத்துத் தண்டணை வாங்கிக்கொடுக்கிறார்கள்.

மிராசுதார்களாகப் பிராமணர்களும், வெள்ளாளர்களும் மட்டுமே இருக்கிறார்கள். இவர்கள் நிலங்கள் அனைத்தும் வைத்திருக் கிறார்கள். ஆனால் விளிம்பு நிலையிலுள்ள பறையர்கள் எல்லோருமே நிலமற்ற அடிமை களாக இருக்கிறார்கள். அப்படியே பறை

யர்கள் புறம்போக்கு நிலத்திற்கு அரசிடம் விண்ணப்பம் செய்தாலும் அந்த நிலம் மிராசு தாருக்கு வேண்டுமா அல்லது வேண்டாமா என்று அரசு கேட்கும். மிராசுதாரர்கள் வேண்டாம் என்று சொல்வதும் கிடையாது. அடுத்து பட்டாதாரரிடம் அந்த நிலம் வேண்டுமா என்று அரசு கேட்கும். அவரும் வேண்டாம் என்று சொன்னால்தான் அந்தப் புறம்போக்கு நிலம் பறையர்களுக்குக் கிடைக்கும். ஆனால் பறையர்கள் நிலம் வைத்திருக்க விரும்பி அரசைக் கேட்டால் கொடுக்க மாட்டார்கள் என்று எண்ணி புறம்போக்கு நிலத்தை எடுத்து அதை கஷ்டப் பட்டு பண்படுத்தி விள நிலமாக்கினால் அதுவரை அமைதியாய் இருக்கும் மிராசுகள் கடைசியில் அந்த நிலத்தை அபகரித்து விடு கின்றனர் என்று தெளிவாக விளக்குகிறார்.

மேலும் அந்த அறிக்கையில் அவரது ஆலோசனைகளாக சில குறிப்புகளைப் பட்டியலிடுகிறார். அதாவது,

மாகாணத்தில் நில விண்ணப்பச் சட் டத்தின்படி பட்டாதாரருக்கு உள்ள உரிமை யைக் கிராமத்திலுள்ள அனைவருக்கும் கிடைக்கும்படி மேற்படி சட்டத்தைத் திருத்த வேண்டும்.

சாகுபடிக்கேற்ற புறம்போக்கு விவசாய நில பகிர்மானத் திட்டம் கிராமத்திலுள்ள பறையர்களுக்கும் பயன்படும்படி சட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டும். 1875-க்கு முன்பு வரிபாக்கிக்காக மிராசுதார் மற்றும் பட்டா தாரர்களிடமிருந்து அரசு கைப்பற்றிய நிலத் தைப் பறையர்களுக்கும் பயன்படும்படி சட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டும்.

தேவையில்லாமல் வனத்துறையுடன் சேர்க்கப்பட்ட விவசாயத்திற்கு ஏற்ற நிலங் களிலும் மிராசுதார் இல்லாத கிராமங்களில் அதிகமாக விவசாயத்திற்குப் பயன்படும் நிலம் உள்ள இடங்களில் பறையர்கள் குடி யிருப்பை அமைக்க வேண்டும்

இத்தகைய குடியிருப்புகளில் உள்ள பறை யர்களுக்கு விவாசயத்திற்கேற்ற மற்ற நிலத்தை அரசு கொடுக்க வேண்டும்.

சென்னை மாகாண குத்தகைச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் பறையர்களும் மற்ற விவசாயிகளும் மிராசுதாரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

பறையர்களுக்கும் மற்ற விவசாயிகளுக் கும் சார்பாக இருக்கும்படி சட்டம் திருத்தப் பட வேண்டும்.

கூலி விவசாயிகள் அடிமை முறைகளி லிருந்து விடுபடும் விதத்தில் உடன்படிக்கை மீறல் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். கூலி உடன்படிக்கையை ஒரு ஆண்டிற்கு உட்பட்டதாக ஆக்கப்பட வேண்டும்

பறையர்கள் வாழும் வீட்டிற்குப் பட்டா உரிமை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

பறையர்கள் அரசு உதவியுடன் மற்ற நாட்டிற்குக் குடிபெயரும் நிலமை உருவாக் கப்படவேண்டும்.

கள்ளு, சாராயக் கடைகள் அதிகமாகப் பறையர்களுக்கென்று இருப்பதைக் கட்டுப் படுத்த வேண்டும்.

பறையர்களுக்குக் கல்வியை அனுமதித்து அரசு தெளிவாகவும் நேரடியாகவும் அவர் களின் கல்விக்கு வழிவகுப்பது அரசின் கட மையாகும்.

பறையர்களின் சுகாதரத்தையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

பறையர்கள் வீடுகளை மற்றவர்கள் உரிமை கொண்டாடுவதிலிருந்து விடுவிப்பது.

பறையர்களின் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பது.

சிறிது நிலம், சொந்தமான குடிசை, எழுதப்படிக்கத் தெரிந்திருத்தல், தனது உழைப்பில் சுதந்தரம், தன்மானம் ஆகிய

வற்றை அவர்களுக்குக் கொடுத்தல் பறையர்களின் வாழ்வு இப்போதிருக்கும் மகிழ்ச்சியற்ற அடிமை நிலையிலிருந்து மாறுபட்டதாக இருக்கும் என 1891 அக்டோபர் 5-ஆம் தேதி அரசுக்கு எழுதுகிறோம்.

இந்த அறிக்கை வெறும் செங்கல்பட்டு மாவட்டத்தில் மட்டும் அவர் நேரில் கண்ட பாதிப்பில் எழுதியது. ஆனால் இந்தியா முழுக்க இந்த நிலையை நாம் பொருத்திப் பார்த்துக்கொள்ளலாம்

திரமென்ஹீர் அனுப்பிய இந்த ஆய்வறிக்கை பிரிட்டிஷ் தலைமையகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1891 ஆம் ஆண்டு அங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

இது, 30.9.1892ல் இந்த ஆய்வறிக்கையே செங்கல்பட்டுப் பறையர் மக்களைப் பற்றி குறிப்புகள் வருவாய் அரசாணையாக வெளியிடப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டப் பறையரின மக்களைப் பற்றிய குறிப்புகள் என்ற அறிக்கையின் தொடர் நடவடிக்கையாகத்தான் பஞ்சமி நிலம் வழக்கப்பட்டது என்றாலும் நிலவுரிமை மீது ஒடுக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்த ஆர்வமும், தேவையும்தான் அப்படியொரு நிலை உருவாக்கிடப் பின்புலமாக அமைந்தது என்று சொல்லலாம்.

இச்சட்டத்தின்படி பஞ்சமி நிலம் என்ற டி.சி. நிலம் என்ற பெயரிலும் மட்டும் சுமார் 12 லட்சம் ஏக்கர் நிலம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகிறது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பஞ்சமி நிலம் வழங்கப்பட்டபோது பிரிட்டிஷ் அரசு சில நிபந்தனைகளின் அடிப்படைலேயே வழங்கியது.

முதல் பத்தாண்டுகளில் யாருக்கும் விற்கவோ, தானம் செய்யவோ, அடமானம் வைக்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ கூடாது.

பத்தாண்டுகளுக்குப் பிறகு வேறு பட்டியலின மக்களுக்கு மட்டுமே விற்கவோ, தானம் செய்யவோ, அடமானம் வைக்கவோ அல்லது தேவைக்குத் தரவோ செய்யலாம்.

நிபந்தனை மீறிச் செய்யப்படும் உரிமை மாற்றங்கள் சட்டப்படி செல்லாது என்ற விதிமுறைகள விதித்தது. (பார்வை: வருவாய்த் துறை நிலையான ஆணை 15.9 மற்றும் அரசாணை 2217 நாள் 01.10.1941.)

இத்தகைய குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் நிலம் வழங்கப்பட்டதாக இவை டி.சி மற்றும் ஆதி திராவிடர் நிலங்கள் என்று இன்றளவும் வருவாய்த் துறை பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 05.10.1891-இல் திரமென்ஹீர் அவர்கள் சைதாப்பேட்டை, கலெக்டர் அலுவலகத்தில் உட்கார்ந்து அவர் எழுதிய நீண்ட அறிக்கையில் கடைசியில் ஒரு கருத்தைப் பதிவு செய்கிறார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஓரளவு நிலமும், சொந்தமான குடிசையும், எழுதப்படிக்கத் தெரிவதும், தன் உழைப்பைத் தான் விரும்புவதுபோல் பயன்படுத்தும் உரிமையும் இருந்தால் அவர்கள் சுயமரியாதை உள்ளவர்களாகி, மரியாதை எனும் திசை நோக்கி அடி எடுத்து வைப்பார்கள். அப்படி ஒரு நிலை ஏற்படும்போது அவர்கள் பட்டுழலும் ஆழ்ந்த துயரம் எப்படி என்னை எழுதிட கட்டாயப்படுத்தியதோ, அந்த மகிழ்ச்சியற்ற இக்காலக் கொடுமையை விட மாறுபட்ட எதிர்காலத்தை நோக்கி அவர்களால் அடி எடுத்து வைக்கமுடியும். என்று மேதை அப்பேத்கர் பிறந்த அதே ஆண்டிலேயே பிறந்த ஒரு வெள்ளகார கலெக்டர் இப்படி எழுதிருப்பது நம்மை மிகவும் நெகிழ வைக்கிறது.

சுரண்டுவதற்காக வந்த பிரிட்டிஷார் மூலமாக நிலவுரிமை விடுதலை கிடைத்தது. அதை அவர்கள் பன்னெடுங்காலமாக ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகத்திற்குச் சட்டப்பூர்வமாக ஒரு பாதுகாப்பு ஏற்பாட்டை

செய்துவிட்டே சென்றுள்ளனர். சுயராஜ்ஜியம் எங்கள் பிறப்புரிமை என்ற முழக்கத்தோடு வெள்ளயரிடமிருந்து விடுதலை வாங்கிய தாக சொல்லப்படும் இவர்கள் ஆட்சியிலே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆங்கிலேய ஆட்சியில் கிடைத்த பஞ்சமி நிலத்தின் நிலை எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்;

*தமிழகத்தில் வழங்கப்பட்ட பஞ்சமி நிலம் 12 லட்சத்து 61 ஆயிரத்து 13 ஏக்கர் நிலம்.*

*இதில் மாவட்டம் வாரியாக பார்ப்போம்; (ஏக்கரில்)*

| | |
|---|---|
| கோயம்புத்தூர் | 1,838.00 |
| கடலூர் | 118.26 |
| தர்மபுரி | 4,253.81 |
| திண்டுக்கல் | 3,402.43 |
| காஞ்சிபுரம் | 507.80 |
| கரூர் | 545.72 |
| கிருஷ்ணகிரி | 5,749.34 |
| மதுரை | 3,096.15 |
| நாகை | 8.38 |
| நாமக்கல் | 8,060.01 |
| சேலம் | 4,504.74 |
| சிவகங்கை | 21.88 |
| தஞ்சாவூர் | 322.88 |
| நீலகிரி | 3,774.46 |
| தேனி | 1,010.10 |
| திருச்சி | 3,420.77 |
| நெல்லை | 2473.88 |
| திருவள்ளூர் | 662.04 |
| திருவண்ணமலை | 33,034.99 |
| திருவாரூர் | 24.08 |
| வேலூர் | 20,339.44 |
| விழுப்புரம் | 16,446.44 |
| மொத்தம் | 1,26,113.60 |

*ஆனால் தற்போது தமிழகத்தில் 1 இலட்சத்து 26 ஆயிரத்து 13.6 ஏக்கர் நிலம்தான் இருப்பதாக நில நிர்வாகத்துறை கூறுகிறது. மீதியுள்ள 10 இலட்சத்து 73 ஆயிரத்து 887 ஏக்கர் நிலத்தை விழுங்கியது யார்?*

தலித் மக்களிடமிருந்து மெல்ல மெல்லப் பறிக்கப்பட்ட இவ்வளவு நிலங்களும் இப் போது யார் யார் கையில் இருக்கிறது? இதை ஒரு அரசங்கத்தால் எளிதாகக் கண்டுபிடிக்க முடியும் தானே; ஏன் அதற்கு நடவடிக்கை எடுக்க முடியவில்லை? பஞ்சமி நிலத்தை இழந்த தலித் மக்களுக்குப் பதில் என்ன? போன்ற கேள்விகளை முன்வைத்து 1994-ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி செங்கல்பட்டு மாவட்டம் காரணை என்னும் இடத்தில் பஞ்சமி நில மீட்பு அமைப்பினர் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். அவ்வேளை யில் தாமஸ், ஏழுமலை என்கிற இரண்டு போராட்டக்காரர்களின் உயிரைக் குடித்தது அன்றைய ஆளும் அதிகார வர்க்கம்.

10 இலட்சம் ஏக்கருக்கு மேலான நிலங் களைச் சுருட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அதனை மீட்டு பஞ்சமி நிலத்துக்கு உரியவர்களிடம் ஒப்படைக்க முடியாத அரசு, உரிமைக்காகப் போராடும் ஏழை தலித் மக்களைச் சுட்டுக்கொல்லுகிறது என்றால், இது யாருக்கான அரசு என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிறது. அப்படி யானல் பஞ்சமி நிலங்களை அபகரித்தவர் களைப் பாதுகாக்கிறது என்றுதானே அர்த்தம்.

தமிழ்நாட்டில் இருக்கும் மத நிறுவனங் கள், பெரும் வணிக நிறுவனங்கள், அரசியல் கட்சிகளின் சொத்துகள் எல்லாமே பஞ்சமி நிலங்கள் மீதுதான் நிற்கின்றன. அதன் உள் புகுந்து ஆய்வு செய்ய வேண்டிய அரசு அதைச் செய்யாமல், நியாயம் கேட்கும் அப்பாவித் தலித் மக்களின் உயிரைக் குடிக்கிறது.

அர்ச்சகன் பொறுக்கித் தின்ன கோவில்; அதிகாரி பொறுக்கித் தின்ன அரசாங்கம்; அயோக்கியன் பொறுக்கித் தின்ன அரசியல். என்றார் பெரியார். சுரண்டுவதற்கும் இரத்

தத்தைக் குடிப்பதற்கும் பொறுக்கித் தின்னு வதற்கும் இவர்களுக்குப் பட்டியலின மக்கள் தான் கிடைத்தார்களா?

எங்களிடம் நிலமே இல்லை. ஏனெனில் மற்றவர்கள் எங்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள். என்று மேதை அம்பேத்கர் சொன்னதை ஆளும் வர்க்கமும், ஆதிகார வர்க்கமும் திரும்பத் திரும்ப நம்மிடம் நிரூபித்துக் கொண்டேயிருக்கிறது.

தனியுடமைச் சமூகத்தில் முதன்மை யான உடைமையாகக் கருதப்படுவது நிலம்தான். ஒருவர் நிலம் வைத்திருக்கும் அளவைப் பொருத்தே சமூகத்தில் அவரது தகுதியும் அளவிடப்படுகிறது. பஞ்சமி நில மீட்பு, இடஒதுக்கீட்டு உரிமை போன்ற வற்றின் மூலமாக மட்டுமே விடுதலை கிடைத்துவிடும் என ஒருபோதும் எண்ணி விடக்கூடாது. இந்திய அரசமைப்புச் சட்டத் திலேயே கெட்டியாகப் பாதுகாக்கப்படும் மனுநீதியால் இந்திய மக்கள் அனைவரும் குறுக்கு நெடுக்காக பிரிக்கப்பட்டுத்தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்து மதச் சட்டப்படி சிதறடிக்கப் பட்ட மக்களாகிய பட்டியலின மக்கள் அடி மைகளுக்கும் அடிமைகளாகவே வைக்கப் பட்டிருக்கிறார்கள். வர்ண, சாதிகள் ஒழிக்கப் படும் போதுதான் பெருவாரியான சூத்திர மக்களுக்கே விடுதலை கிடைக்கும். இடைப் பட்ட காலத்தில் ஆதி சூத்திரர்களுக்கு விடுதலை என்பது வெற்று முழக்கம்தான். ஆனால், அதுவரை, உடல் உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு வாழும் தலித் மக்கள் அமைதியாக இருக்க முடியாது. தேர்தல் நேரங்களில் வாக்குப் போடுவதற் காக மட்டும் இம்மக்களை இயந்திர மனிதர் களாக வைத்திருக்கும் இந்த அரசை எதிர்க் காமல் இருக்கக்கூடாது.

இடஒதுக்கீட்டு போராட்டம், பஞ்சமி நில மீட்பு போராட்டம் இவைகளெல்லாம் இழந்த உரிமைகளுக்கான உரிமைக்குரல் தானே தவிர; பிச்சைக்காரன் குரல் அல்ல!

●



வரலாற்றின் ஒவ்வொரு சகாப்தத்தி லும் பொருளாதார உற் பத்தியும் தவிர்க்க முடி யாதபடி இதிலிருந்தும் எழும் சமூகக் கட்டமைப் பும் அந்தச் சகாப்தத்தின் அரசியல், அறிவுத்துறை வரலாற்றுக்குரிய அடித் தளமாய் அமைகின்றன; ஆகவே (புராதன நிலப் பொதுவுடைமை சிதைந்து போன காலம் முதலாய்) அனைத்து வரலாறும் வர்க்கப் போராட் டங்களின் வரலாறாகவே, சமூக வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும் சுரண்டப்படும் வர்க்கத் துக்கும் சுரண்டும் வர்க்கத்துக்கும், ஆதிக்கத்துக்கு உட்படுத்தப்படும் வர்க்கத்துக்கும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்துக்கும் இடையே நடை பெறும் போராட்டங்களின் வரலாறாகவே இருந்து வருகிறது; ஆனால் இந்தப் போராட்டம் தற் போது வந்தடைந்திருக்கும் கட்டத்தில் சுரண்டப் பட்டும் ஒடுக்கப்பட்டும் வரும் வர்க்கம் (பாட்டாளி வர்க்கம்) சுரண்டியும் ஒடுக்கியும் வரும் வர்க் கத்திடமிருந்து (முதலாளித்துவ வர்க்கத்திட மிருந்து) இவர் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமானால், சமுதாயம் அனைத்தையும் அதேபோது சுரண்டலிலிருந்தும் ஒடுக்கு முறை யிலிருந்தும் என்றென்றுக்குமாய் விடுவித்தே ஆகவேண்டும் என்கிற இந்த அடிப்படை கருத்து- முற்றிலும் மார்க்ஸ் ஒருவருக்கு மட்டுமே உரியதாகும்.

முன்பே இதை நான் பல தடவை கூறியிருக் கிறேன். முக்கியமாய் இப்பொழுது அறிக்கை யின் முகவுரையில் இதுவும் குறிக்கப்படுதல் அவசியமாகும்.

***- பிரெடரிக் எங்கெல்ஸ்***



# பெரியாரின் இராமாயண எதிர்ப்பும் இன்றைய அயோத்தி அரசியலும்

- தி.ச. குணசேகரன், திருக்கழுக்குன்றம்

திராவிடர்களாகிய நம்மீது ஏற்றப்பட்ட இழிவையும் நம்மிடையே புகுத்தப்பட்ட பேதங்களையும் சற்றும் பொறுக்காமல் பல கோட்பாடுகளை வகுத்துத் தந்த பெரியார் பெரிதும் கடைப்பிடித்த குணங்கள் ஒழுக்கம், வாய்மை, மானம் ஆகியனவாம். அவர் இத்தன்மையில் வாழ்ந்ததனால், "மானமும் அறிவும் மாந்தருக்கு அழகு" என்று நமக்கெல்லாம் பகுத்தறிவையும் சுயமரியாதையையும் ஊட்டிச் சென்றுள்ளார்.

பெரியாரின் இக்குணங்கள் வள்ளுவர் வகுத்த குறள்நெறியுடன் ஒத்துப்போகின்றனவா? என்று ஆராயுங்கால் குடிமை அதிகாரம் தென்பட்டது.

"ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்" (குறள் 952)

உயர்குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கம், வாய்மை, நாணம் இம்மூன்றிலும் தவறாது நடப்பர். பெரியாரின் குணங்கள் இக்குறளுடன் ஒத்துப்போகின்றன. பெரியாரின் இக்கொள்கை முறையினால் அவரின் குடிப்பிறப்பு மட்டும் உயரவில்லை. சுயமரியாதைக்காரர்கள் அனைவரின் குடிப்பிறப்பும் உயர்ந்துள்ளது என்பது கண்கூடு. பெரியாரின் குடிப்பிறப்பு இத்தன்மை வாய்ந்தது. இராமனின் குடிப்பிறப்பை வால்மீகி இராமாயணத்தைப் படிக்கும் போது எத்தன்மையது என்பதை அறியலாம்.

அயோத்தி இராமனின் தந்தை தசரதனுக்கு (60000) அறுபதாயிரம் மனைவிகள். இத்துணை மனைவிகள் இருந்தும் புத்திர பாக்கியம் உண்டாகவில்லை. இதனால் மோட்சமும் ஆட்சியும் நிலைக்காது எனக் கருதிய தசரதன் வேதியர்களைக் கொண்டு அசுவமேதயாகம் நடத்தினான். யாகத்தில் எழுந்த ஒருவன் கொடுத்த பாயாசத்தைத் தசரதன் மனைவிகளை அருந்தச் செய்து, யாகக் குதிரையை மூன்று கூறாக வெட்டித் தழுவிய பின் இராமன், பரதன், இலட்சுமணன், சத்ருக்கனன் ஆகியோர் பிறந்தனர் என்கிறது இராமாயணம். மனிதனாகப் பிறந்து கடவுளான இராமனின் மனிதப் பிறப்பில் ஒழுக்கத் தன்மையும் மானமும் மிக்கதாக இல்லை.

இராமாயணம் மட்டுமின்றி, பல புராணங்களையும் இதிகாசத்தையும் படித்தறியும்போது இரண்டு சொல்லாடல் களில்



தொடக்கமும் முடிவும் அமைகின்றன. ஒன்று ‘அதர்மம்’ - இதைத் தொடக்கமாகவும், மற்றொன்று தர்மம் - முடிவில் வெற்றி கொள்வதாக எல்லாமும் விளம்புகின்றன. தருமம் நிலைக்க வேண்டுமாயின் அதர்மத்தை அழிக்க வேண்டும்; வெல்ல வேண்டும் என்பதை உள்ளீடாகக் கொண்டு தனக்குச் சாதகமான செயல்களைச் செய்து வருகின்றனர். நம்மில் பொருளில்லார்க்குப் பொருள் தந்து உதவுவதே தருமம் என்ற சிந்தனை ஓங்குவது இங்குப் பொருந்தாது. இதைப் புராண இதிகாசங்களினூடே பொருத்திப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் ‘தர்மம்’, ‘அதர்மம்’ என்பதற்கான உள்பொருள் அறிய முடியும்.

தருமத்தைக் காக்கப் பிறந்தவனாம் இராமனின் நாடான அயோத்தியில், பிராமணன் ஒருவனின் குழந்தை எந்தக் காரணத்தினாலோ இறக்கிறது. இராமன் தருமத்தைக் காக்கவில்லை என்று அப்பிராமணன் குற்றஞ்சாற்றுகிறான். எவ்வாறெனில்? ஒரு சூத்திரன் தவம் செய் கிறான்; ஆகவேதான் என் குழந்தை இறந்தது என்ற குற்றச்சாற்றிலிருந்து விடுபட அப்பிரா மணன் சொற்படி இராமன் தருமத்தைக் காக்கப் புறப்படுகிறானாம்.

புறப்பட்ட இராமன் நாட்டைச் சுற்றி வரும் போது விந்தியமலைக்குத் தெற்கில் ஒருவன் தலைகீழாகத் தொங்கித் தவம் செய்வதைப் பார்க்கிறான். நீ, நால்வருணத்தில் எவன்? என்று இராமன் வினவ, நான் சூத்திரக்குலத்தில் பிறந்தவன் என்றும், நான் தேவனாகிக் கடவுளைப் பார்க்க வேண்டும். தேவருலகைக் கைப்பற்ற வேண்டும் என்ப தற்காக இத்தவத்தைச் செய்கிறேன் என்கிறான் சம்பூகன். இப்படி அவன் பேசிக்கொண்டி ருக்கும்போதே இராமன், தன்வாளை எடுத்து சம்பூகனின் தலையை வெட்டிக் கொல் கிறான். அதே வேளையில் இறந்த பிராமணக் குழந்தை உயிர் பெறுகிறது.

சம்பூகன் தலைகீழாகத் தவம் செய்தது வழக்கத்துக்கு மாறாக உலகம் தலைகீழாகி விட்டது என்றும், கீழ்ச்சாதி ஒருவன் திமிராகப் பேசுகிறான். இவனை வெட்டுவது, உருக் குலைப்பது தருமம் என்று நியாயப்படுத்து கிறது இராமாயணம். ஈங்கே சம்பூகனை வெட்டிக் கொல்லப்பட்டதால் அதர்மம் அழிக்கப்பட்டதாகச் சொல்கிறது.

சம்பூகன் இராமனையோ, அவனின் சகோதரர்களையோ அயோத்தி அரண்மனைப் பெண்களையோ கடத்தினானா? துன்புறுத்தி னானா? இல்லையே. இராவணனைப் பழிப்பவர்கள் சம்பூகனுக்கு நிகழ்த்தப்பட்டதில் இருந்து சிந்தித்துத் திருந்த வேண்டும்.

சம்பூகன் கடவுளை நேரில் கண்டு தேவனாக வேண்டும் என்று நினைத்தது தவறா? இது அதர்மமா?

பிராமணர்களையும் வருணாசிரமத் தையும் காப்பதொன்றே தருமம் என்கிற படியால், இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போரை, ஆரிய-திராவிடர் போர் என்கிறார் பெரியார். ஆரியப்படையெடுப்பைத் தடுத்து நிறுத்துபவர்களைக் களங்கப்படுத்தி அழித்தொழிப்பதே இராமாயணத்தின் கருப்பொருளாகும்.

இராவணன் தங்கை சூர்ப்பனகையின் ஆளுகைக்குட்பட்ட காட்டில் அலைந்து திரிந்த ஒருவன், புதிய ஆடவனாக இருப்பதால் இராமனை நெருங்கி வந்து விரும்புவதாகக் கூறுகிறாள். கணவனை இழந்து வாடும் சூர்ப்பனகையிடம், இராமன் தனக்குத் திருமணமாகிவிட்டதென்று சொல்லிவிட்டு, உடன்வந்த இலக்குமணனை அடையாளப் படுத்துகிறான். இராமன் சொல்படி சூர்ப்பனகை, இலக்குமணனைத் தேடி அணுகிய போது அங்கயீனப்படுத்தி அவமதிக்கிறான். இன்றுங் கூட கணவனை இழந்தவர்கள், பிரிந்தவர்கள் மறுமணம் செய்ய முனையும் போது, அப்பெண்களை மானபங்கப்படுத்துவது இராமாயணத்தின் நீட்சியாகக் காண்கின்றோம்.

இராமாயணம், ஆரியத்தை எதிர்ப்பவர் களை அழித்தொழித்து அடிமைப்படுத்திக் கொள் என்கிறது. வாலி-இராவணன் சகோதரர்களுக்குள் பேதத்தை உருவாக்கி, பகையை வளர்த்து முடித்துக் கொண்டு, சுக்ரீவன்-விபீடணன்களை அடிமையாக்கிக் கொண்டது. இவ்வடிமைகள் இருவரும் ஆழ்(ள்)வார்களாயினர்.

இப்படிப்பட்ட இராமாயணத்தை, பெரியார் கொடுத்துதவிய நுண்ணோக்கி கொண்டு ஆராய்ந்தால்தான் புனிதத்துக்குள் புதைந்து இருக்கும் புன்மைகளை அறிய முடியும்.

**விதவை மறுமணத்தை ஆதரிக்காத**
**இராமா-யணம்,**

**சீதை பிறரிடத்தில் தங்கியதாலே**
**சந்தேகிக்கும் இராமா-யணம்,**

**சீதை கருவுற்றதும் சந்தேகித்து நாடு**
**கடத்திய இராமா-யணம்**

இம்மூன்றும் பெண்களை இழிவுபடுத்து வதாகவே பார்க்கிறார் பெரியார்.

பார்ப்பனர்களின்றி மந்திரம் ஓதுவதும், கடவுளைக்கான விழைவதும், சூத்திரர்கள் தவமிருக்கக் கூடாதென்று தடைவிதிக்கும் இராமா-யணம் இராமனைக் கடவுளாகவும், சீதையைப் பத்தினியாகவும், திராவிடர்களைக் குரங்குகளாகவும், அடிமைச் சேவகர்களாகவும் சித்தரிக்கின்றதால், பெரியார் சீறியெழுந்து சீர்திருத்தங்காண விழைகிறார்.

பெண் விடுதலை, கற்பு நிலை, இன இழிவு போன்றவற்றின் உரிமைகளுக்காகப் போராடிய பெரியார், ***1922***-ஆம் ஆண்டு திருப்பூர் காங்கிரசு மாநாட்டில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத் தீர்மானம் கோரினார். காங்கிரசில் இருந்த பார்ப்பனத் தலைவர் களால் இத்தீர்மான வடிவத்தை ஏற்க மறுத்துப் புறக்கணிக்கப்பட்டது.

பெரியார், அம்மாநாட்டிலேயே மேற் சொன்ன இராமாயணக் கூறுகளை விளக்கிப் பேசியதன்றி, “இந்த இராமாயணம் எங்களை இழிவுபடுத்துகிறது; உரிமைகளைப் பறிக்கிறது” என்று கூறி, “இராமாயணத்தைக் கொளுத்த வேண்டும்” என்று எதிர்த்தார். அன்று இவ்வாறு பிரகடனப்படுத்திய நாள் முதல் இன இழிவைத் துடைக்கின்ற நாள் வரையில் பெரியாரின் இராமாயண எதிர்ப்பு நம்மிடையே இருந்து வரும் என்பதில் அய்யமில்லை.

பெரியார் தன்னறிவால் இராமாயணத்தை எதிர்த்தாலும், மூடத்தனத்தால் இராமனைக் கடவுளாகப் பாவிப்பவர்கள் எண்ணிக்கை பெருத்திருப்பதால் நம்பிக்கை, அய்தீகம், பழக்க வழக்கம் போன்றவற்றின் அடிப்படை யில் சட்டத்தைத் துணைக்கொள்கின்றனர். இதன் வழியில் இன்றைய அயோத்தியத் தீர்ப்பும் வெளியாகியுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள், தீர்ப்பை வெளியிடுவதற்குமுன், நாட்டின் பாதுகாப்புக் கருதி அரசின் உறுதிமொழியைக் கேட்டுப் பெற்ற பின்னரே தீர்ப்புரைத்தனர். ஆட்சியாளர் களும் ஊடகங்களின் வழியே மக்களிடம் பேசினர். “பாதகமோ சாதகமோ எது வந்தாலும் ஏற்போம்! அமைதி காப்போம்!” என்றனர். கலவரமோ கல்வீச்சோ எதுவும் நிகழாவண்ணம் ***2019*** நவம்பர் ***9***-ஆம் நாள் சனிக்கிழமை விடுமுறை நாளில் தீர்ப்புரைத்தனர்.

தீர்ப்பு எப்படியாயினும் சகிப்புத் தன்மை யுடன் ஏற்றுச் சமாதானமாகிச் சகச நிலைக்கு வரவேண்டும் என்பதே நீதிபதிகளின் கருத்தாக வும் கட்டளையாகவும் இருந்துள்ளன. நீதிபதிகள் ஒவ்வொருவரும் தங்களின் தடையடையாளத்தைத் துறந்து, கூட்டாகத் தீர்ப்புரைக்கையில் பெரும்பான்மையோர் ஆர்ப்பாட்டமின்றி சகச நிலையில் மகிழ்ந்திருக்கவும், சிறுபான்மையோர்

சகிப்புத் தன்மையை மேற்கொள்ளவும், நூற்றாண்டுக்கு மேலாக நடைபெற்றுவரும் அயோத்தி வழக்கினை முடித்து வைக்க வேண்டும் என்ற நோக்கம் வெளிப்பட்டன.

நாடு சுதந்தரம் அடைந்த பிறகு நாட்டிற் கான அரசமைப்புச் சட்ட வரைவுகளை விவாதித்து உருவாக்கிக் கொண்டிருந்த வேளையில் *1948*-ஆம் ஆண்டு இராசுட்ரிய சுயம்சேவக் சங்கம் என்னும் ஆர்.எசு.எசு. அமைப்பினர், பாபர் மசூதி குறித்து விவாதித் தனர். இராமர் கோயிலை இடித்து அதன்மே மல் மசூதி கட்டியதாக முடிவெடுத்து, அதற் காகப் பணியாற்றத் துடித்தனர்.

*1949* நவம்பர் *26* அன்று சட்ட வரைவுக் கான விவாதங்கள் முடித்து, இறுதியாக்கப் பட்டது. அதில், “இந்திய நாடு மதச்சார்பற்ற நாடு” என்ற வாசகம் இடங்கொண்டிருப்பதால் ஆர்.எசு.எசு. அமைப்பினர் அதிருப்தியாயினர். இவ்வமைப்பினர் விரும்பியவாறு ‘இந்து நாடு’ என்று அறிவிக்கப்படாது போகவே, இராமர் சிலையைக் கையிலெடுத்தனர்.

*1949* திசம்பர் *23*ஆம் நாள் நள்ளிரவில் ஒரு கும்பல் மசூதியின் பூட்டை உடைத்து இராமன் பொம்மையை உள்ளே வைத்தனர். நள்ளிரவில் திருட்டுத்தனமாக மசூதிக்குள் நிறுவியதைக் கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.

சிலை திருட்டுத்தனமாக வைக்கப் பட்டதால் சிலரை குற்றவழக்கில் கைது செய்து, வழக்கைப் பதிந்தது காவல் துறை. இவ்வழக்கு ஃபைசாபாத் நீதிமன்றம் சென்றதில், இடைக்கால உத்தரவு ஒன்று பிறப்பித்தது. இடைக்கால உத்தரவுப்படி *1949* திசம்பர் *29*ஆம் நாளன்று மசூதியின் முக்கிய வாசல் பூட்டப்பட்டு, தனி அலுவலர் வசம் ஒடைப்பக்கப்பட்டது. ஒரு வாரக் காலக்கெடுவில், தனி அலுவலர் தல அறிக்கையொன்றைத் தயாரித்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதில் மீண்டுமொரு உத்தரவு *1950* சனவரி *5*-இல் பிறப்பித்தபடி மசூதிக்குள் இருக்கும் சிலைக்குப் பூசாரி ஒருவரையும் அரசு சார்பில் அன்றாட பூசையும் நடத்திட ஆணையிட்டது. பொம்மை வைத்த *15* நாள்களுக்குள் எந்நாளும் அகற்றக் கூடாதென்று நிரந்தரப்படுத்தியது நீதிமன்றம்.

நள்ளிரவில் சிலை வைத்த போது குற்ற வழக்கு, சிலையை நிரந்தரப் படுத்தியதும் உரிமையியல் வழக்கமாக மாறுகிறது. நிறுவப் பட்ட சிலையை அகற்றவோ, பூசைக்குத் தடைவிதிக்கவோ கூடாதென்றும் பூசை செய்யும் உரிமை, நிறுவியதன் நில உரிமை இவைகள் குறித்து மேலும் மேலும் வழக்கு கள் தொடுக்கப்பட்டதால், சிலை யுள்ள இடம் சர்ச்சைக்குரியதானது. எனவே, நீதி மன்றம் “சர்ச்சைக்குரிய இடம் இருக்கும் நிலையிலேயே தொடரும்” என்று அறிவித்தது. பின்னர் சர்ச்சைக்குரிய நிலம் யாருக்குச் சொந்தம்? என்றும் ஆராய முற்பட்டது.

இந்திய அரசமைப்புச் சட்டம் சொல்வ தென்ன? என்றால், நாடு சுதந்தரம் அடைந்த போது எந்தெந்த இடங்களில் மதவழிபாட்டுத் தலங்கள் இருந்ததோ அது அப்படியே தொடரும் என்றது. சுதந்தர நாட்டில் சட்டத்தை அமல்படுத்திய நாளைக் குடியரசு நாள் என்கிறோம். இந்நாளுக்குள் *1950* சனவரி *16* அன்றே பாபர் மசூதியைச் சர்ச்சைக்குரிய இடமாக அறிவித்தது நீதிமன்றம். வரைவு செய்யப்பட்ட சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குள், மூன்று வாரங்களில் நீதிமன்றம் முந்திக்கொண்டது. இதனால், முன்னே சொன்ன எந்தெந்த இடங்களில் எப்படி இருந்ததோ அது அப்படியே இருக்கும் என்பதை, இந்நீதிமன்றம் தகர்த்துவிட்டது.

அயோத்தி வழக்கின் போக்கறிந்த நரசிம்மராவ் அரசு, "வழிபாட்டுத்தலங்கள் தொடர்பாக ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் அவை நீதிமன்றம் மூலம் தீர்த்துக் கொள்ள லாம்" என்று Places of Worship (Special Provision) Act 1991 என்ற சட்டம் கொண்டு வந்தது.

இச்சட்டத்தைச் சாதகமாக்கிக் கொண்ட ஆர்.எசு.எசு. உள்ளிட்ட சகோதர அமைப்பு கள் தலைவர் அத்வானி தலைமையில் இரத யாத்திரை தொடங்கினர். நாடு முழுதும் சுற்றி வந்து கரசேவகர்களை அழைத்துக் கொண்டு 1992 திசம்பர் 6ஆம் நாளன்று அயோத்திக்குள் நுழைந்தனர். பாபர் மசூதி மேலேறி கரசேவை செய்து சிதைத்தனர்.

சிதைவுற்று கால் நூற்றாண்டுக்குமேல் 2019 நவம்பர் 9ஆம் நாளில் வழங்கிய தீர்ப்பில் மசூதியை இடித்தது சட்ட விரோதம் என்றனர். இரத யாத்திரையின் போது, இதே உச்சநீதிமன்றம் விதித்திருந்த தடையை மீறியதற்காக, 'சட்ட விரோதம்' என்று தீர்ப்பளித்தனரோ!

இத்தீர்ப்பு, வழக்கின் வாதுரைகள், நம்பிக்கை, அய்தீகம், தொல்லியல், வருவாய் ஆவணங்கள் போன்றவைகளின் அடிப்படை யில் வழங்கப்பட்டிருந்தாலும் மதக்கலவரங்கள் வெடிக்கக் கூடாது என்ற கண்ணோட்டத்தில் வழங்கப்பட்டதாகவே கருதப்படுகிறது.

### முடிவாக

நள்ளிரவில் நிறுவப்பட்ட சிலைக்கு கோவில் கட்ட அனுமதித்தது என்பது, வால்மீகி இரா மனை கடவுள் அவதாரமாக்கியது போன்றுள் ளது. இதையே இன்றைய அயோத்தி அரசிய லாகப் பார்க்க நேர்கிறது. பெரியாரின் இரா மாயண எதிர்ப்பு நிறைவுறும் போதில் தான் அயோத்தி அரசியலும் முற்றுப்பெறும் என்பதை அறிவோமே! ●



**தீண்டாமை என்பது ஒருமத அமைப்பு என்று பெரும்பால னவர்கள் நம்புகிறார்கள். அது உண்மைதான். ஆனால் ஒரு மத அமைப்பு என்று மட்டுமே கருதுவது தவறு. தீண்டாமை என்பது மத அமைப்புக்கும் மேலான ஒன்று. அது ஒரு பொருளாதார அமைப்புமாகும். அடிமை முறையைக் காட்டிலும் மோசமான ஒரு பொருளாதார அமைப்பாகும். அடிமை முறையில் எப்படிப் பார்த்தாலும் ஆண்மையானவர் அடிமையின் சந்தை மதிப்புக் குறைந்துவிடக்கூடாது என்பதற்காகவாவது அடிமைக்கு உணவளிக்கவும், உடையளிக்கவும், வீடு கொடுக்கவும், அவரை நல்ல நிலையில் வைத்து பராமரிக்கவும் பொறுப்புள்ளவராய் இருந்தார். ஆனால் தீண்டாமை அமைப்பில் தீண்டப்படாத மக்களின் பராமரிப்புக்கு இந்து எவ்வித பொறுப்பும் ஏற்றுக் கொள்வதில்லை. ஒரு பொருளாதார அமைப்பு என்ற முறையில் அது கட்டுப்பாடற்ற சுரண்டலுக்கு வழி செய்கிறது. தீண்டாமை என்பது வரம்பற்ற பொருளாதாரச் சுரண்டலின் அமைப்பு மட்டுமல்ல, கட்டுத்தளையற்ற பொருளாதாரச் சுரண்டலின் அமைப்புமாகும்.**

**- டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்**



# தேசிய இனங்களுக்கு எதிரான தேசியக் கல்விக் கொள்கை

*- முனைவர் இர. நடராசன்*

இந்தியாவின் பன்முகத் தன்மையை அழித்து, ஆர்.எஸ்.எஸ். -இன் "இந்து ராஷ்ட்ரம்" என்னும் பார்ப்பனக் கும்பலின் மேலாதிக்கக் கனவை நனவாக்கும் பல முயற்சிகளுள் ஒன்று தான் தேசியக் கல்விக் கொள்கை **2019** வரைவுத் திட்டமாகும். இரண்டாவது முறையாக மிருக பலத்துடன் ஆட்சிப் பொறுப் பில் அமர்ந்திருக்கும் மோடி அரசு இதில் காட்டும் தீவிரத்தைத் தமிழ்கூறும் நல்லுலகம் புரிந்துகொள்ள வேண்டும்,

பார்ப்பன மேலாதிக்கத்தை உருவாக்க இந்திய தேசிய இனங் களின் மீது தொடர் தாக்குதல்களை இந்த அரசு அன்றாடம் புதிய புதிய திசைகளில், புதிய புதிய வழிகளில் தொடுத்து வருகிறது.

ஒரே தேசம், ஒரே தேர்தல்; ஒரே தேசம், ஒரே குடும்ப அட்டை; ஒரே தேசம், ஒரே மோட்டார் வாகனச் சட்டம், ஒரே தேசம், ஒரே மின்பகிர்வு; ஒரே தேசம், ஒரே மொழி இந்த வரிசையில் ஒரே தேசம், ஒரே கல்வி என்ற ஆபத்தான முழக்கம் தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில் கேட்கத் தொடங்கியிருக்கிறது.

மிகவும் நைச்சியமாக உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் சூழ்ச்சி வலையைக் கஸ்தூரி ரங்கன் குழு பின்னியுள்ளது.

"ஒரு நாட்டை அடிமைப்படுத்த வேண்டுமா? அந்நாட்டின் மொழியை அழித்துவிடு" என்றார் இப்பன்ஸ் என்னும் மேனாட் டறிஞர். ஒரு மொழி அழிக்கப்படுமானால் அதனூடே வளர்ந்த கலாசாரமும், பண்பாடும் அழிந்து போய்விடும். அதனால்தான்,

"நைந்தாய் எனில் நைந்துபோகும் என்வாழ்வும் – மற்று
நன்னிலை உனக்கெனில் எனக்குந்தானே!"

என்று பாடினார் பாவேந்தர்.

ஆனால், தாய்மொழி அழிப்பு, தேசிய இன அடையாள அழிப்பு ஆகிய இரண்டினையும் தேசியக் கல்விக் கொள்கை மிக வெளிப்படையாகவே செய்கிறது.

மெக்காலே கல்வி முறை என்று பேசப்படும் இன்றைய கல்வி முறை வெள்ளையர்களால் இந்தியாவில் **9.2.1835**-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பொழுது மெக்காலே கூறினார்:



“இக்கல்வி முறையில் பயின்று வரும் இந்தியர்கள் இனி நிறத்தாலும் இரத்தத் தாலும் மட்டுமே இந்தியர்களாக இருப் பார்கள். எண்ணம், செயல் ஆகியவற்றில் அவர்கள் இந்தியர்களாக இருக்கமாட் டார்கள். ஆங்கிலேயர்களாக இருப்பார் கள்”. இன்றளவும் இக்கருத்து பெற்றிருக்கும் வெற்றிக்குத் தமிழ்நாட்டில் பல்கிப் பெருகி வரும் புற்றீசல் ஆங்கில வழிக் கல்விப் பள்ளிகளே சாட்சிகளாக உள்ளன.

மெக்கலோவிற்கும் ஒருபடி மேலே சென்று கஸ்தூரி ரெங்கன் குறிப்பிடுகிறார்.

“பன்மொழி பேசும் மக்கள் வாழும் இந்தியாவில் 15 விழுக்காடு இந்தியர்கள் மட்டுமே ஆங்கிலம் பேசுகிறார்கள், ஆனால் 54 விழுக்காடு மக்கள் இந்தி பேசுகிறார் கள், இந்தியை ஏன் கற்றல் மொழியாகத் தேர்வு செய்யக்கூடாது? வட்டார மொழி களை ஏன் பயன்படுத்தக்கூடாது?” (இயல் 4.5.4) நாம் புரிந்துகொள்ள வேண்டிய செய்தி ஒன்று இதில் உள்ளது. இந்தி தேசிய மொழி, தமிழ் உள்ளிட்ட பிறமொழிகள் வட்டார மொழிகள். மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தி கட்டாயம், வட்டார மொழி என்ற நிலையில் தமிழ் விருப்பப் பாடம்!

ஆங்கிலத்தை நீக்க வேண்டும் என்று குரலெழுப்பும், கஸ்தூரி ரங்கன் குழு சமஸ் கிருதம் பற்றிக் கூறுவதைப் பார்ப்போம்.

“கிரேக்க இலத்தீன் மொழிகளின் இலக் கியங்கள் இரண்டையும் சேர்த்தாலும் வடமொழியில் படைக்கப்பட்ட இலக்கியங் களுக்கு இணையாகாது” (4.5.13).

“வடமொழி அறிவுக் களஞ்சியமாகத் திகழ்கிறது. அறிவியல், கணிதம், மருத்துவம், சட்டம், பொருளாதாரம், அரசியல், இசை, மொழியியல், நாடகம், கதை கூறுதல், கட்டடக்கலை போன்ற பல்வேறு துறை களைச் சார்ந்த அறிஞர்கள் தங்கள் அறிவை வடமொழியில் வடித்துள்ளனர். அறிவுத் தேடலில் 64 கலைகளின் வளர்ச்சியில் வடமொழி (பிராக்ருதம்) முக்கிய பங்கு வகித்துள்ளது, இதனைக் கருத்தில் கொண்டு, அறிவு வளர்ச்சிக்கு உதவிய தனித்த பெருமையைக் கணக்கி லெடுத்து, கலாச்சார ஒற்றுமைக்கு உதவி யதையும் கவனித்து, பள்ளிகளிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் வடமொழி கற்கவும் அதன் அறிவியல் பூர்வமான அமைப்பை உணரவும் புராதன, தற்கால எழுத்தாளர்கள் (காளிதாசன் மற்றும் பாசா எழுதிய நாடகங்கள்) படைத்த படைப்பு களின் பகுதிகளைப் பயன்படுத்த வாய்ப் பளிக்க வேண்டும்” (4.5.14).

வடமொழியை இத்தனை புகழ்ந்து எழுதும் தேசியக் கல்விக் கொள்கை திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மையான தமிழ்மொழி பற்றியோ பிறமொழி தேசிய இலக்கியங்கள் குறித்தோ, உலகப் பொது மறையாம் திருக்குறளின் அறநெறி வாழ் விலக்கியம் குறித்தோ எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை.

நன்னெறி வகுப்புகளுக்குப் பஞ்சதந்திரக் கதைகளைப் பரிந்துரைக்கும் குழுவினர் “நிஷ்காம கர்மாவை” (பலனை எதிர்பார்க் காமல் உழைப்பது) கற்றுத்தரக் கூறுகின் றனர். பஞ்ச தந்திரக் கதைகள் ஏமாற்றுவது, பொய் சொல்லுதல், பழிவாங்குதல் என்னும் எதிர்மறைக் கூறுகளைக் கொண்டவை. வர்ண சாதித் திமிரை வலியுறுத்துவது நிஷ்காமகர்மா.

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்” என்ற பொதுமை நோக்கு படைத்த இனம் தமிழினம்.

“ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வருகவென்னாது அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்”.

*சான்றாண்மை மிக்க சமூகம் தமிழ்ச் சமூகம்.*

*சமத்துவத்தை மறுக்கின்ற ஒரு குலத்துக்கு ஒரு நீதி பேசும் மனுவாதிகளைக் கொண் டாடும் ஒரு கல்விக் கொள்கை இந்த மண் ணிற்கு, இந்தச் சமுதாயத்திற்கு எப்படிப் பொருந்தும்?*

*"பாஸ்கராச்சாரியரின் கணித கற்றல் தான்" மகிழ்ச்சியான அனுபவமாக இருக் கும். இதனை மாணவர்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கும் கல்விக் கொள்கை,*

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப**
**இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு"**

*என்ற வள்ளுவப் பெருந்தகையை எந்த இடத்திலும் ஏன் எடுத்தாளவில்லை?*

*ஆர்.எஸ்.எஸ். சிந்தனை, பிறப்பில் உயர்வு-தாழ்வு கருதும் பேதமை, சமத்து வம்-சனநாயகத்தின் நம்பிக்கையின்மை, சோதிடம், தலைவிதித் தத்துவங்களை நம்பும் கையாலாகாத்தனம், தன் தாய் மொழி அழிப்பு, தன் தேசிய இனத்தின் மீதான அடக்குமுறை இவற்றை உணரும் திறனற்ற அடிமைத்தனம் கொண்ட இளைய தலைமுறையை உருவாக்கக் காவிக்கூட்டம் கல்வியின் பெயரால் ஒரு செயல்திட் டத்தை உருவாக்கியுள்ளது என்பதனை நாம் உணர வேண்டும்.*

*கல்விக் கொள்கை வரைவு அறிக்கை இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. எட்டாவது அட்டவணையில் உள்ள பிற மொழி களில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட வில்லை. இதன்மூலம் இந்தியும், ஆங்கி லமும் தெரியாத மக்களுக்குப் தேசியக் கல்விக் கொள்கை பற்றித் தெரியவே வாய்ப்பில்லாமல் செய்துவிட்டது மைய அரசு.*

*தகுதி, திறமை என்ற பெயரில் உழைக் கும் மக்களின் கல்வி உரிமையைத் தட்டிப் பறிக்கிறது இந்தக் கல்விக் கொள்கை.*

*மூன்றாவது வகுப்பில் ஒரு பொதுத் தேர்வு, ஐந்தாம் வகுப்பில் ஒரு பொதுத் தேர்வு, எட்டாம் வகுப்பிலும் மற்றொரு பொதுத் தேர்வு எனத் தேர்வுகளை வைத்து, அப்படி வந்தவர்களையும் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பிற்குள்ளாக எட்டு பொதுத் தேர்வுகளை நடத்தித் துன் புறுத்த நினைக்கிறது இக்கல்விக் கொள்கை. கல்வி என்னுமொரு கணக்கில்லாத் துயர் நீங்கி வெளிவருபவர்களை நீட்தேர்வு களை நடத்தி அவர்களின் வாய்ப்புகளைத் தடுக்கும் தீயநோக்கம் இக்கல்விக் கொள் கையில் காணக்கிடக்கிறது. ஏனெனில் பொது நுழைவுத் தேர்வு என்ற பெயரில் நடத்தப்பெறவிருக்கும் இந்த "நீட் தேர்வு" களை மைய அரசுதான் நடத்தும் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வரைவு அறிக்கை நிலையிலேயே உள்ள இத் தேர்வுக் கோட்பாடுகளை வரிந்து கட்டிக் கொண்டு பா.ச.க.வின் அடிமை அரசாங்க மாகத் திகழும் தமிழக அரசாங்கம் ஆதரிப்பது மிகவும் வெட்கக்கேடானது. இந்தியாவிலேயே 5, 8 வகுப்புகளுக்குப் பொதுத்தேர்வை அறிவித்து இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.*

*உயர்கல்வி நிறுவனங்களை நிறுவுதல் என்ற பெயரில் மிஷன் நாளந்தா, மிஷன் தட்சசீலா போன்ற பண்டைய இந்திய பல்கலைக்கழகங்களைப் போல் ஏற்படுத்த வேண்டும் என்று கூறும் இக்கல்விக் கொள்கை 2000 ஏக்கர் நிலத்தில் 50 சதவீத அரசு நிதியுதவியுடன் இப்பல்கலைக்கழகங்களை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறுகிறது. தற்சமயம் ஆசிரியர்கள் தகுதி அடிப்படை*

யில் இல்லாமல் பணிமூப்பு அடிப்படையில் உயர் பதவி பெறுவதனால் மோசமான விளைவுகள் ஏற்படுவதாக இக்கொள்கை வருத்தப்படுகிறது.

மைய அரசின் ராஷ்ட்ரீயா சிக்ஷா அபியான் மற்றும் மிஷின் இயக்குநரகம் (Mission Directorate) ஆகிய மைய அரசின் நிறுவனங்களின் கீழ் இவற்றைச் செயல் படுத்துவதன் மூலம் தகுதி, திறமை மட்டுமே முதலிடம் பெறுமாம். ஆசிரியர்கள் சாணக் கியர், பாணினி, சந்திரகுப்த மௌரியர், ஆரிய பட்டர் போல இருக்க வேண்டுமாம்.

இப்படி பொய், களவு, சூது ஆகிய வற்றைக் கற்பித்த அரசியல் சூதாடிகளை முதன்மைப்படுத்தும் இக்கல்விக் கொள்கை உயர்கல்வி நிறுவனங்களில் "லிபரல் கலைகள்" (Liberal Arts) என்ற பெயரில் ஆய கலைகள் 64-ஐயும், காமசூத்திரம் உள்ளிட்ட 512 கலைகளையும் கற்பிக்கப் போகிறார்களாம். ஒரு பக்கத்தில் 4-ஆவது தொழிற்புரட்சிக்கு மாணவர்களைத் தயாரிப்பது, மறுபுறத்தில் வேத காலத் திற்கு மாணவர்களை இழுத்துச் செல்வது என ஏமாற்றும் தந்திரத்தை தேசியக் கல்விக் கொள்கை கையாள்கிறது.

130 கோடி மக்கள் வாழும் நாட்டில் மக்கள் மொழியாகவே இல்லாத சமற் கிருதத்திற்குத் தனிச் சலுகைகள், தனி நிதி ஒதுக்கீடு என கோடிக்கணக்கில் மக்கள் வரிப்பணம் வாரியிறைக்கப்படுகிறது. ஏற் கெனவே குறிப்பிட்டது போல இந்தியை தேசிய மொழி என்று அறிவிக்கும் இக் கல்விக் கொள்கை தமிழை வட்டார மொழி என்றும் வீட்டு மொழி என்றும் சுருக்குகிறது.

கல்வியில் மும்மொழிக் கொள்கை கட் டாயம் என்ற அறிவிப்போடு சமற்கிருதத் தின் மேன்மை பற்றிப் பேசுவதும், இந்தி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கென ரூ.50 கோடி ஒதுக்குவதும் நயவஞ்சகமேயன்றி வேறல்ல.

20 குழந்தைகள் மட்டும் கொண்டுள்ள பள்ளியை வைத்துக் கொண்டு கல்வியை எப்படி மேம்படுத்துவது எனக் கேட்கும் கஸ்தூரி ரங்கன் குழு அரசுப் பள்ளிகளை மூடவேண்டுமெனப் பரிந்துரைக்கிறது.

மொத்தத்தில், கல்வி தொடர்பான அனைத்து செயல்பாடுகளையும் நிர்வகிக்க "இராஷ்ட்ரீய ஷிக்ஷா ஆயோக்" என்னும் தேசியக் கல்வி ஆணையம் அதன் தலை வராகப் பிரதமர், பாடப் புத்தகங்களை என்.சி.இ.ஆர்.டி. வெளியிடுதல், உயர் கல்விக்கெனத் தேசிய உயர்கல்வி ஒழுங் காற்று ஆணையம் என அனைத்து நிலை களிலும் மையப்படுத்தப்பட்ட கொள்கை களை இக்கல்விக் கொள்கை வலியுறுத்து கிறது. மாநில உரிமைகளை மறுப்பதன் வாயிலாகத் தேசிய இனங்களை இக்கொள்கை நசுக்குகிறது. அவசர நிலைக் காட்டாட் சியில் பறிக்கப்பட்ட மாநிலக் கல்வி உரிமை, பார்ப்பனப் பாசிச பா.ச.க. அரசால் மேலும் ஒடுக்கப்படுகிறது என்பதுதான் தேசியக் கல்விக் கொள்கையின் சாரமாக உள்ளது.

கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருதல், எல்லா நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழி-அலுவல் மொழி யாக்குதல், அனைத்து வகை பதின்ம மற்றும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளை மூடுதல், தரமான இலவசக் கல்வியை அரசே வழங்குதல் ஆகியன மட்டுமே இன்றைய தேவை. அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து பேராடுவதன் மூலமாகத்தான் இவற்றை வென்றெடுக்க முடியும். ❖



# இடஒதுக்கீட்டின் இன்றியமையாத் தேவை

மு. சுவாமிநாதன், வேலூர்

மனுவின் வருணாசிரமத் தர்மத்தால் பல வகுப்புகள் கல்வியிலும், சமுதாயத்திலும் பிற்படுத்தப்பட்ட தன்மைக்கு ஆளாக்கப்பட்டன.

வேற்றுமை தெரிந்த நாற்பால்களான பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற பகுப்பு மனுதர்மத்தில் கூறப்பட்டுள்ளது. இந் நான்கு வகுப்பிலும் முதன் மூன்று வகுப்பான பிராமணன், சத்திரியன், வைசியன் ஆகிய மூவருக்கு மட்டுமே கல்வி கற்க உரிமை உண்டு. சூத்திரனுக்குக் கல்விக் கற்பிக்கக் கூடாது என்று திட்ட வட்டமாகக் கூறப்பட்டுள்ளது. தொழில் முறையிலும் பிராமணனுக்கு வேதம் ஓதுதலும் மற்ற இருபிரிவினருக்கு ஓதுவித்தலும், சத்திரியனுக்கு அரசாள்வதும், வைசியனுக்கு வியாபாரம், வேளாண்மை முதலிய தொழிலைச் செய்யும்படியும், சூத்திரனுக்குத் தொழில் மற்ற மூவருக்கும் பலனை எதிர்பாராமல் தொண்டூழியம் செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பிராம்மணன் சம்பள கொடுத்தேனும், கொடாமலும் சூத்திரனிடத்தில் வேலை வாங்கலாம்; ஏனெனில் அவன் (சூத்திரன்) பிராமணனுக்கு உழைக்கவே பிரம்மனால் படைக்கப்பட்டிருக்கிறான். இம்மைக்கும்மறுமைக்கும் உபயோகமாக அவனுடன் பிறந்த அந்த வேலையை எவன்தான் நீக்குவான் ஆதலால் அவன் மறுமைக்காகவும் பிராமணனுக்குத் தொண்டூழியம் செய்ய வேண்டும். சூத்திரன் யார் என்றால் தொழிலாளி. அவன் யுத்தத்தினால் ஜெயித்துக் கொண்டு வரப்பட்டவன்; பக்தியினால் வேலை செய்கிறவன்; தன்னுடைய தேவடியாள் மகன், விலைக்கு வாங்கப்பட்டவன்; ஒருவனால் கொடுக்கப்பட்டவன்; குலவழியாகத் தொன்றுதொட்டு வேலை செய்கிறவன், குற்றத்திற்காக வேலை செய்கிறவன்; என ஏழு வகைப்படுவர். "வைசியினையுந் சூத்திரனையும், தன்றன் தொழிலைச் செய்யும்படியாக முயற்சியோடு அரசன் கட்டளையிடுக இல்லாவிடில் அவர்களுலக முழுமையும் அழித்து விடுவார்கள்". தன் மந்திரி புரோகிதர் முதலிய மனிதர்களைக் கொண்டு இம்மைக்கும் மறுமைக்கும் உபயோமாகத் தான் செய்விக்கிற லௌகீக வைதீகக் காரியங்களையும்,

மேற்கொண்ட சகல விவகாரங்களையும் தீர்மானிக்கின்ற அரசன் பாபத்தினின்று நீங்கி சுவர்க்க முதலிய மேலான கதியடைகிறான்.



இவ்வாறு மனுதர்ம சாத்திரம் கூறியிருப்பதனால் தங்களுக்குப் பாபம் நேரிடாமலும், மோட்சத்திற்குச் செல்ல வேண்டுமென்ற ஆசையினாலும் நம் நாட்டின் அரசர்கள் அனைவரும் மனுநீதியைத் தங்களுக்கு உரிய நீதிபரிபாலன முறையாக அரசின் சட்டமாக ஏற்று வெகுமக்களான ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வியைக் கொடுக்காமலும், குற்றேவல் பதவிகளை மட்டும் கொடுத்து பல ஆயிரம் வருடங்களாக அவர்களை ஒடுக்கியே வைத்திருந்தார்கள்.

தற்காலத்தில் இந்திய அரசமைப்புச் சட்டம் 26.1.1950-இல் நடப்புக்கு வந்தது. ஒவ்வொரு இந்தியக் குடிமகனையும் அச்சட்டம் கட்டுப்படுத்தும், ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அந்த விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதிகள் 13(1), (3); 16(5), 17; 25; 26, 372(1), 372(3) ஆகியவை நான்கு வருணங்களையும் சில இடங்களில் தீண்டாமையையும் பழைய காலத்துப் பழக்க வழக்கங்களையும் இன்றும் காப்பாற்றுகின்ற விதிகள்.

மேலும் 1860-இல் வெள்ளையரால் தொகுக்கப்பட்ட இந்துச் சட்டம் என்பதில் 2019-லும் இந்துக்கள் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவை முறையே பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்பவையாகும். மேலும் அவர்கள் (3000) மூவாயிரம் உள்சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெளிவாக உள்ளது. இதற்கு ஆதாரம் மறுஸ்மிருதி, பராசரஸ்மிருதி, யக்ஞவல்கியஸ்மிருதி, முதலானவை.

மேற்கண்ட ஸ்மிருதிகள், ஆகமங்களைத்தான் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் இந்தியப் பெரும்பரப்பில் ஆட்சி செய்த எல்லா அரசர்களும் பின்பற்றினர்.

தமிழ்நாட்டில் பழைய பாண்டியன் காலம் முதல் கி.பி.1320 வரை ஆண்ட பிற்காலப் பாண்டியர் காலம் வரை இதையே பின்பற்றினர். அதற்குப்பின் தமிழகத்தின் வடபகுதியை ஆண்ட இஸ்லாமியரும் தென்பகுதியை ஆண்ட மராட்டியரும், நாயக்கரும் இதையே பின்பற்றினர்.

இவ்வாறாக ஒடுக்கப்பட்ட மக்கள், சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் எழுதிய அரசமைப்புச் சட்டத்தில் பட்டியல் பழங்குடிகள், பட்டியல் வகுப்புகள், இதர பிற்பட்ட வகுப்புகள் என்று மூன்று பிரிவுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பிரிவினைக்கு உள்ளாகாத மற்றனைவரும் உயர் வகுப்பினர். இந்திய மகளாட்சிக்குப் பங்காளிகளான இந்த நால்வருக்கும் நாட்டிலுள்ள அனைத்தையும் அம்பேத்கரும், பெரியாரும், லோகியாவும் வகுத்துக் கொடுத்துள்ள விகிதாசார வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் பாகப்பிரிவினை செய்து கொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் சமூகநீதி காக்கப்பட்டு சமத்துவ சமுதாயம் படைப்பதற்கு வழி ஏற்படும். அனைத்து வகுப்பினரின் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சியும் ஏற்படும்.

ஏனென்றால் பெரியார் கூறுவது போன்று “பொது உடைமை வேறு, பொது உரிமை வேறு; பொதுவுடைமை என்பது சமபங்கு என்பதாகும். பொதுவுரிமை என்பது சம அனுபவம் என்பதாகும். பொதுவுரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொதுவுடைமை மறுபடியும் அதிக உரிமை இருக்கிறவனிடம் தான் போய்ச் சேர்ந்து கொண்டே இருக்கும் என்பது பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் பாலபாடம்” என்பதை உணர்ந்தால் காரணம் புரியும்.

சமுதாய வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் அந்தச் சமுதாயத்தில் அடங்கியுள்ள பல வகுப்புகளும் உரிமை, உடமை, அனுபவிப்பு ஆகிய மூன்றிலும் மக்கள் தொகை

யில் தங்களுடைய வகுப்பின் விகிதாச்சார அளவுக்குரிய பங்கினைப் பெற்று வாழ வேண்டும். ஒரு வகுப்பு கூடுதலாகவோ குறைவாகவோ பெற்று வாழ்வது சமுதாய நோய் ஆகும். கூடுதலாகப் பெறுவது ஆதிக்கம் செய்யும்; குறைவாகப் பெறுவது அடிமை ஆக்கிவிடும்.

**பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் கூற்று :**

“சமமானவர்களுக்கு இடையில் தான் சமத்துவம்இருக்கிறது. சமமற்றவர்களைச் சமமாக நடத்துவது சமமின்மையை நீடிக்க செய்வதற்கேயாகும்”.

எனவே ஒவ்வொரு வகுப்பையும் கவனித்து அவர்களுக்குரிய இடஒதுக்கீட்டினை அளித்து முன்னேற்றுவது தான் நாட்டின் முன்னேற்றமாகும்.

இந்திய சமுதாயத்தில் உள்ள சமூக நிலைமைகளையும் பெரும்பான்மையான பிரிவு மக்களின் பிற்படுத்தப்பட்டத் தன்மைக்கான காரணங்களையும் கவனித்துப் பார்த்த பின்னர் பிற்படுத்தப்பட்ட தன்மையினை வரையறுக்கக் கீழ்க்காணும் வரையறைகள் பொது வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

**காகா கலேல்கர் குழு அறிக்கை**

1. பாரம்பரியமான இந்து சமுதாயத்தின் சாதிப்படிநிலையில் கீழான சமூகப் படிநிலையில் இருத்தல்.
2. ஒரு வகுப்பிற்குள்ளோ, ஒரு சமுதாயத்திற்குள்ளோ பெரும்பான்மையான பிரிவினரிடம் பொதுக்கல்வி முன்னேற்றம் இல்லாதிருத்தல்.
3. அரசின் பணிகளில் போதிய பிரநிதித்துவம் இல்லாதிருத்தல் அல்லது பிரநிதித்துவம் எதுவுமே இல்லாதிருத்தல்.
4. வணிகம் பெருவணிகம் தொழிற்சாலை ஆகிய துறைகளில் போதிய பிரநிதித்துவம் பெறாதிருத்தல்.

இந்திய நாட்டில்மற்ற மாநிலங்களில் குறிப்பாக வடமாநிலங்களில் இட ஒதுக்கீடு முறை முழுமையாக செயல்படுத்தப்படவில்லையென்றாலும் தமிழ்நாட்டில் ஓரளவு நன்றாகவே செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

இதன் விளைவாகவே வாய்ப்புப் பெற்ற ஒடுக்கப்பட்ட மக்கள் உயர் வகுப்பினரைவிட திறமைசாலிகள் என்று அனைத்துதுறைகளிலும் மெய்ப்பித்துஇருக்கிறார்கள்.

குறிப்பாக மருத்துவத்துறையில் மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஒடுக்கப்பட்ட மக்கள் பெருமளவில் மருத்துவர்களாக உள்ள தமிழ்நாடு, மருத்துவச் சிகிச்சையில் இந்தியாவிலேயே மிகச்சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது. இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து மட்டுமல்லாமல் உலகின் பிற பகுதிகளி லிருந்தும் உயர் மருத்துவ சிகிச்சைக்காகத் தமிழ்நாடு வருகிறார்கள். உயர் வகுப்பினரே மருத்துவர்களாக உள்ள வடமாநிலங்களில் இந்த மாதிரி உயர் சிகிச்சைக்காக மக்கள் வருவதில்லை.

தமிழ்நாட்டைப் போல் பிற மாநிலங்களிலும் இட ஒதுக்கீட்டை முறையாக செயல்படுத்தி இருந்தால் அங்கும் தரமான மருத்துவர்கள் உருவாகி இருப்பார்கள். மருத்துவத்துறை மட்டுமல்லாமல் பிற துறைகளிலும் திறமைசாலிகள் உருவாகியிருப்பார்கள். நிர்வாகம் இன்றுபோல் மோசமாக இல்லாமல் சிறப்பாக இருந்திருக்கும்.

ஆகவே முறையாகவும் நேர்மையாகவும் செயல்படுத்தப்படாத இடஒதுக்கீடுக் கொள்கை முழுமையாக செயல்படுத்தப்படும் வரை இடஒதுக்கீட்டினைப் பற்றி பேசியும் செயல்பட்டும் வரவேண்டிய இன்றியமையாத் தேவை இருக்கிறது. இடஒதுக்கீட்டுக் கொள்கை மேலும் விரிவாக்கப்பட்டு மக்கள் தொகை விழுக்காட்டின் அடிப்படையிலான விகிதாசாரப் பங்கீடு முறையாக வளர்த்து எடுக்கப்பட வேண்டிய இன்றியமையாத் தேவை இருக்கிறது.

இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப்பற்றி சரியான புரிதல் இல்லாதவர்க்குப் புரிய வைக்க வேண்டும்.விகிதாச்சாரப் பங்கீட்டுக் கொள்கையைப் பற்றிப் புரிந்து கொண்டவர்களே கூட இது என்ன அனைத்து பிரச்சனைகளையும் தீர்க்கக் கூடிய சர்வரோக நிவாரணியா? என்று கேட்பவர்களுக்கு விளக்கத்தையும் தர வேண்டும்.

எடுத்துக்காட்டாக நாம் முன்னரே கூறியபடி இட ஒதுக்கீட்டுமுறையின் ஒரளவு சிறந்த செயல்பாட்டினால் திறமைசாலிகள் தமிழ்நாட்டில்மருத்துவர்களாக உருவாக முடிந்துள்ளது. ஆனால் வடமாநிலங்களில் உயர் வகுப்பினரை மட்டுமே மருத்துவ படிப்புக்குத் தேர்ந்தெடுத்ததால் அவர்களில் உள்ள திறமைசாலிகள் மட்டுமல்லாமல் திறமைக் குறைவானவர்களும் தேர்ந்தெடுக்கபட்டுள்ளனர். ஆகவே தமிழ்நாட்டின் மருத்துவர்களின் அளவுக்குச் சிறந்து விளங்க முடியவில்லை. இது பொதுப்போட்டிமுறை திறமைசாலிகளைத் தேர்ந்தெடுக்கப்பட பயனற்றது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இந்த அனுபவம் ஏற்பட்ட உடனேயே நாடு முழுவதும் இட ஒதுக்கீடு முறையைக் கண்டிப்புடன் முழுமையாகச் செயல்படுத்தி நாட்டில் மருத்துவத் துறையின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவ்வாறு செயல்படவில்லை. ஏனென்றால் எதிர்காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களின் மருத்துவச் சேவைக்காக உயர் வகுப்பினரை மட்டுமே சார்ந்திருக்க வேண்டும். தங்களிடையே தற்போது உருவாகியிருக்கும் மருத்துவர்களிடையே நிகழும் பரவலான மருத்துவச் சேவையை நசுக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து “நீட்” முறையை உயர்வகுப்பினரையே அதிகம் தன்னகத்தைக் கொண்டுள்ள உச்சநீதிமன்றம் தன்னுடைய இடைக்காலத் தீர்ப்பின் மூலம் வெகுமக்களான ஒடுக்கப்பட்ட மக்கள் மீது திணித்துள்ளது.

உயர் வகுப்பினர் பெறும் கல்வி சிறப்புப் பயிற்சியும் இருந்தால் மட்டுமே வெற்றி பெறும்படியாக இம்முறை (தேர்வு) வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இதற்கு எதிராக நாட்டின் மற்ற மாநிலங்களில் மக்கள் திரண்டு போராடவில்லை. தமிழ்நாட்டு மக்களால் மட்டுமே உயர் வகுப்பு ஆதிக்க அரசின் மக்கள் விரோத நோக்கத்தைப் புரிந்து கொள்ளமுடிந்து போராட்டம் நடத்தப்படுகிறது. இதற்கு பெரியாரியல் கருத்தின் தாக்கமும் ஒரு தொன்மைக் காரணியாகும்.

ஏனெனில் இங்குமட்டும்தான் பொருட்படுத்தத்தக்க அளவிலான எண்ணிக்கையில் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் கல்வி பெற்று உள்ளனர். மற்ற மாநிலங்களில் உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களில் கல்வி பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அவர்களால் எதிர்க்க முடியவில்லை. மீறி எதிர்க்க முயல்பவர்களின்குரல் நசுக்கப்படுவதும் வெளியில் தெரிய வாய்ப்பு இல்லாமலேயே போய்விடுகிறது.

தமிழ்நாட்டில் கூட அதிகார மையங்களின் எல்லா நிலைகளிலும் ஒடுக்கப்பட்ட வகுப்புமக்களின் எண்ணிக்கை பொருட்படுத்தத்தக்க அளவில் இருப்பதால்தான் குரல் எழுப்ப முடிகிறது. முடிவெடுக்கும் / முடிவெடுக்க வைக்கும் அளவிற்கான எண்ணிக்கையில் இருந்திருந்தால் நாம் இந்நேரம் வெற்றி பெற்றிருப்போம்.

ஆகவே நமது உரிமை மீட்புப் போராட்டங்களின் வெற்றிக்கு அதிகார மையங்களின் அனைத்து நிலைகளிலும் பிரதிநிதித்துவம் தேவைப்படுகிறது. அத்தகைய நிலையைப் பெறுவதற்கு இப்போது பின்பற்றும் இடஒதுக்கீடு ஒரு வழியே என்றாலும் அது போதுமான வழி அல்ல.

தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் வலியுறுத்துகின்ற மக்கள் தொகை விழுக் காட்டின் அடிப்படையிலான விகிதாச்சாரப் பங்கீடு இருந்தால்தான் எந்தவொரு போராட் டத்திலும் நம் கோரிக்கைகளை வென்றெ டுக்க முடியும்.

அதுமட்டுமல்ல விகித்தாசார வகுப்பு வாரிப் பங்கீடு ஒடுக்கப்பட்ட மக்களான தாழ்த்தப் பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அதிகார மையங்களில் அவரவர்க் குரிய பங்கைப் பெற்றுத் தருவதால் அவ்விரு வகுப்பினருக்கும் இடையேயான முரண் பாடுகளின் கூர்மை மழுங்கத்தொடங்கும்.

இங்கு இன்னொன்றையும் சிந்திக்க வேண்டும் விகித்தாச்சாரப் பங்கீடு முறை அமுலில் இருந்திருந்தால் உயர் வகுப்பு ஆதிக்க வர்க்கத்தினருக்கு "நீட்" முறையைத் திணிக்கும் யோசனை தோன்றியே இருந்து இருக்காது. என்னமுறையைப் புகுத்தினாலும் உயர்வகுப்பினருக்கு அவர்களுடைய பங்கு மட்டும்தான் கிடைக்கும் என்றும் ஒடுக்கப் பட்ட மக்களுக்கு அவர்களுக்குரியபங்கு கொடுக்கப்பட்டே தீர வேண்டும் என்ற விதி முறை இருந்தால் உயர்வகுப்பு ஆதிக்க வர்க் கத்தின் அயோக்கியத்தனமான சிந்தனைகள் முடக்கப்பட்டு விடும்.

ஆகவே விகித்தாச்சாரப் பங்கீடு என்பது சர்வ நோக நிவாரணி அல்ல. அது நமது திரட்டப்பட்ட உரிமை உணர்வுகள் ஒழுகி ஒழுகி இல்லாமல் ஆகிவிடாமல் போவதைத் தடுத்து அடைக்கும் அடைப்பானே ஆகும்.

மக்கள் தொகை விழுக்காட்டிற்கு ஏற்ப விகித்தாச்சாரப் பங்கீடு முறைக்கான போராட்டத்தை முன்னெடுத்து நடத்தாத காரணத்தால் அதிகார மையங்களில் நமது வலிமை கூடுவதை இழந்துவிடுகிறோம்.

தற்போது தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கலின் விளைவாகப் பொதுத் துறை நிறுவனங்களைவிட தனியார் நிறுவனங் களில்தான் வேலை வாய்ப்பு அதிகமாக உருவாகின்றன. எனவே தனியார் துறையிலும் விகித்தாச்சார இடப் பங்கீடு முறையை போராடிப் பெறவேண்டும்.

"மானம் அறிவு பெற்ற மனிதன் தன் வகுப்பை மற்றொரு வஞ்சக அறிவு பெற்ற வகுப்பு சூறையாட அனுமதித்துக் கொண்டு இருந்து விட்டு மறைவது அறிவுடைமையா என்பதை யோசித்துப் பாருங்கள்" என்று தந்தை பெரியார் கூறியதை எண்ணத்தில் கொண்டு இடஒதுக்கீட்டின் தேவையை மக்களுக்கு உணர்த்தி அவர்களை ஒருங் கிணைத்துக் கொண்டு போராடுவதே சமூக நீதியை நிலைநாட்ட நாம் செய்ய வேண்டிய நீங்காக் கடமையாகும்.

மக்கள் தொகை விகித்தாச்சாரப்படி பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர், பிறபடுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு உயர்கல்வியிலும், வேலையிலும் இட ஒதுக் கீடு அளிக்கப்பட வேண்டும்.

வளர்ந்த பிரிவினர் என்ற வகைப்பாடு எந்தப் பிரிவினைக்கும் பணியில் நுழைவு நிலையிலேயே பதவி உயர்விலோ இருத்தல் கூடாது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கைகளை வென்றெடுக்க அனைத்து ஒடுக்கப்பட்ட வகுப்பினரும் ஒன்றுபட்டு போராட வேண்டும். இந்த நிலையை அடையாவிட்டால் உயர்வகுப்பு ஆதிக்க ஆளும் வர்க்கம் இடஒதுக்கீட்டு கோட்பாட்டையே படிப்படியாகச் சிதைத்து ஒழித்து விடுவார்கள் என்பது உறுதி. ●



# பெண்களின் பொருளாதாரச் சுதந்தரம்

- ஓவியா

பெண்களின் பொருளாதார உரிமை என்பது இன்று இம் மண்ணில் பேசப்படும் பிரச்சனை மட்டுமல்ல; உலகளாவிய அளவில் நாடுகளின் தரவரிசைப் பட்டியலைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாகும். ஒரு நாடு எந்த அளவு முன்னேறிய நாடு என்பதைத் தீர்மானிப்பதில் அந்த நாட்டில் பெண்கள் பெற்றிருக்கும் பொரு ளாதார உரிமை முக்கியத்துவமளித்துப் பார்க்கப்படுகிறது. எனவே இந்தத் தலைப்பை பெண்களுக்கு மட்டுமானது என்று கருதத் தேவையில்லை. சரி, பெண்களின் பொருளாதார உரிமை அல்லது சுதந்திரம் என்றால் என்ன? ஒருவர் தனது வாழ்வில் பொருளாதாரச் சுதந்தரத்துடன் இருக்கிறாரா என்பதை அளக்கும் அளவுகோல்கள் யாவை?

எந்தவொரு மனிதர் தனது வாழ்க்கையில் தான் எங்கு வசிப்பது, எந்த வேலை பார்ப்பது, எங்கெல்லாம் செல்வது, சொந்தமாகத் தொழில் நடத்தலாமா அல்லது வேலைக்குச் செல்லலாமா, யார் யாருடன் ஒப்பந்தங்கள் அல்லது பரிவர்த்தனைகளில் ஈடுபடுவது, தான் ஈட்டிய பொருளை எவ்விதங்களில் சேமிப்பது என்பது பற்றியெல்லாம் சொந்தமாக முடிவெடுக்கக்கூடிய சமுதாய உரி மையுடன் இருக்கிறாரோ அவர் பொருளாதாரச் சுதந்தரத்துடன் இருக்கிறார் என்று கூறலாம். இவற்றிற்கான சமுதாய உரிமை என்பதே முக்கியம். தனக்கிருக்கும் பொருளாதாரச் சிக்கல்களில் ஒரு மனிதர் தன்னை பல்வேறு விதங்களில் கட்டுப்படுத்திக்கொள்ள நேர்வதை இங்கு நாம் விவாதிக்கவில்லை அல்லது கணக்கில் கொள்ளவில்லை. பாலின சமத்துவத்தைப் பற்றிப் பேசும்போது பொருளாதார விடுதலை என்பதே முன்னணித் தேவையாகத் திகழ்கிறது. கல்வி உரிமையும், வேலைக்குப் போகும் உரிமையுமே பெண் உரிமை என்று புரிந்துகொண்டால் அதில் தவறொன்று மில்லை என்று எண்ணத்தக்க அளவுக்குப் பெண்களை அவர்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதில்லை. கல்வி பெறுதலுக்கும் பொருளாதார உரிமைகளைப் பெறுவதற்கும் ஆழமான தொடர் பிருப்பது உண்மைதான்.

பெண்களின் பொருளாதார உரிமைக்கான குரல்களை நமது சமுதாயம் எழுப்பத் தொடங்கி ஒரு நூற்றாண்டு காலம் முடியப் போகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தந்தைபெரியார் அவர்கள் நடத்திய செங்கற்பட்டு மாநாட்டின் தீர்மானங்கள் இந்தத் திசையில் மிகவும் வீரியமிக்க குரலை முன் னெடுத்தன. பெண்களுக் கான சொத்துரிமை என்று ஒற்றைத் தீர்மானத்தில் அவை முடிந்து போகவில்லை. சமுதாய எதார்த்தத்தைக் கணக்கில் கொண்டு பல்வேறு வகையான கோரிக்கைகளை இந்தத் தளத்தில் அவை முன்வைத்தன. ஆசிரியர் பணிகளை முழுமையாகப் பெண்களுக்கு



ஒதுக்கு என்று கோரிய அதேநேரத்தில் காவல்துறையில் பெண்களை அறிமுகப்படுத்து என்ற அதிரடி கோரிக்கையும் பெரியாரிடமிருந்து வந்தது. காவல்துறையில் பெண்களை அறிமுகப் படுத்து என்கின்ற முழக்கம் புரட்சிகரமான தாக இருக்கலாம். ஆனால் அதனை எடுத்த வுடன் செயல்படுத்துவது மிகக்கடினம். அப்படியே செயற்படுத்தினாலும் ஒரு சில பெண்களே முன்வருவர். அதனால் ஒட்டுமொத்த பெண்சமுதாயம் பெறும் பலன் குறைவாகவே இருக்கக்கூடும் என்கின்ற அடிப்படையில் பெருவாரியான பெண்கள் பயன்பட ஆசிரியர் பணிகளுக்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டு மெனப் பெரியார் சிந்தித்தார். இந்தச் சமுதாயத் தின் தாயாக இருந்தவர் அவர். எனவேதான் வேறுவேறு சிந்தனைத் தளங்களிலிருந்து பிறக்கக்கூடிய கோரிக்கைகள் ஒரே முகாமி லிருந்து வருவது சாத்தியமாயிற்று. திராவிட முன்னேற்றக் கழகம் என்னதான் பொதுமக்க ளுக்கான சமரசங்களைச் செய்துகொண்ட போதிலும் தனது வழித்தடம் பெரியார் வகுத்ததுதான் என்பதில் இன்றுவரையிலும் கூட தளர்ச்சியின்றியே இருக்கிறது எனக் கூறலாம். அதனால்தான் இந்தியாவிலிலேயே முதன்மையாகப் பெண்களுக்குச் சொத் துரிமை அறிவித்ததிலிருந்து பெண் காவலர் களைப் பெருவாரியாக முதலில் நியமித்த மாநிலம் மற்றும் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் வேறு எந்த மாநிலத்திலுமில்லாத வகையில் 30 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்த மாநிலம் என்பதான நிலைகளைத் தனது ஆட்சியின் மூலமாகப் பெண்களுக்கு அளித்தது எனக்கூற லாம். சுயமரியாதைத் திருமணச் சட்டமே பெண்களுக்கான சட்டம்தான் என்றும் கூறலாம்.

இவ்வாறாகக் கடந்த காலத்தில் பெண் விடுதலைக்கான ஒரு பயணம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இன்று சமுதாயத்தின் ஒட்டு மொத்த சராசரியைக் கணக்கிலெடுக்கும் போது பெண்கள் இன்னும்கூட ஆண்களுக்குச் சரிவிகித்தில் கல்வியையோ அல்லது வேலை வாய்ப்பையோ பெற்றிருக்கிறார்கள் என்று கூறமுடியாதுதான். ஆனால் நகரப் பகுதிகளில் பெண் குழந்தைகளைப் படிக்கவைக்காத பெற்றோர் இன்று இல்லை. அதேபோல் வேலைக்குப் போகும் பெண்களின் விகிதமும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருப் பதை இல்லையெனக் கூறிவிடமுடியாது. சரிக்குசரியாக இன்னும் வந்துவிடவில்லை என்ற போதிலும் அடைந்திருக்கும் வளர்ச்சியைக் கணக்கில் கொண்டு பல விசயங்களைப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

முதலாவதாக நாம் கவனிக்க வேண்டிய அம்சம், பெண் கல்வி வளர்ந்த அளவிற்கு வேலைக்குப் போகும் பெண்கள் எண்ணிக்கை வளரவில்லை என்பதுதான். காரணம் படித்த பெண்கள் எல்லோரும் வேலைக்கு வரவில்லை. இந்த இடத்தில் பெண் கல்வி குறித்து நடந்த விவாதங்கள் நம் நினைவுக்கு வருகின்றன. பெண் கல்வி வேண்டும் என்கின்ற குரல் பெரியார் முகாமிலிருந்தும் வந்தது. காந்தி முகாமிலிருந்தும் வந்தது. தன்னை விடுதலை செய்துகொள்ள பெண்ணுக்குக் கல்வி வேண்டு மெனக் கேட்டார் பெரியார். தனது மகவுக்கு அறிவு புகட்ட அறிவாளியான கல்வி கற்ற தாயார் ஒரு குடும்பத்துக்கு வேண்டுமென கேட்டார் காந்தியார். காந்தியின் குரல் பெரும் பான்மையான பொதுப் புத்திக்குச் சாதகமான தாக இருந்தது; இன்னும் இருக்கிறது. அத னால்தான் கல்வி பெற்ற பெண் வேலைக்குப் போவதிலிருந்து பல்வேறு காரணிகளால் இன் னும்கூட தடைசெய்யப்படுகிறாள்.

இன்று கல்வி கற்ற பெண் இங்கு குடும்பத்திற்கு ஒரு மதிப்புகூட்டும் பண்டமாகப் பார்க்கப்படு கிறாள். இன்று படிக்காத பெண்ணுக்குக் கல்யாணம் செய்வது கடினம்தான். பெண் என்பவள் கல்யாணச் சந்தைக்கான பண்டம் தான் இன்றுவரையில். அந்தச் சந்தை இன்று படித்த பெண்ணை மட்டுமே கேட்கிறது. எனவே பெண்ணைப் படிக்க வைப்பது இன்று எவரொருவராலும் புறக்கணிக்க முடியாத நிபந்தனையாகிவிட்டது. ஆனால் பொருளாதார வாய்ப்பு ஒரு பெண்ணுக்கு வேலைக்குப் போவதன் மூலம் நேரிடையாகக் கிடைக் கிறது. இது இந்தச் சமுதாயத்திற்கு உவப் பானதில்லை. பணத்தின் மீதுள்ள தேவை மிகுந்துபோகும்போது மட்டுமே பெண் வேலைக்கு அனுப்பப்படுகிறாள். அந்தத் தேவை இன்றி யமையாததாகவும் இருக்கலாம். பணத்தின் மீதான மோகத்திலுமிருக்கலாம். பெண் கல்வியை 100 விழுக்காடு ஏற்றுக்கொண்டிருக்கும்

நகர்ப்புறம் வேலைக்குச் சென்று பொருளீட்டுவது ஒரு பெண்ணின் உரிமை என்பதை அதே விகிதத்தில் இன்னும் ஏற்றுக்கொள்ள வில்லை. பணம் என்பது இங்கு அதிகாரம். பெண்ணை அதிகாரத்தின் வாசலுக்கு விடத்தான் இந்தச் சமுதாயம் பெரும் தயக்கம் காட்டுகிறது. பெண்ணைப் பாதுகாப்பாய் வைத்துக்கொள்வதாய் பாசாங்கு செய்கிறது. வசதி படைத்த பெற்றோர் பெண்ணை அவளுக்குத் திருமணம் ஆகும் வரை மேலும் மேலும் படிக்க வைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவளை வேலைக்கு அனுப்பும் முடிவை அவளது புகுந்தவீடு எடுத்துக்கொள்ளட்டும் என்றே ஒத்திவைக்கிறார்கள். இதற்கு பாசம் என்று பெயராம். அதனால் சம்பந்தப்பட்ட பெண்களுக்கு இது சுகமாக இருக்கிறது. பி.ஈ., எம்.பி.ஏ. என்று பட்டங்களை வாங்கி கல்யாணப் பத்திரிகையில் போட்டதோடு மறந்துவிட்டு உல்லாசமாக ஷாப்பிங் மால்களை வலம்வந்து கொண்டிருக்கும் இத்தகைய பெண்கள் ஏராளம். பெண்களுக்கு இங்கு என்ன உரிமை இல்லை என்று கேட்போர் பெரும்பாலும் இவர்கள்தான்.

மேலும் சமுதாயப்படுத்தப்படாமல் தனி மனித சுமைகளாகவே இன்றும் நீடிக்கும் வீட்டுவேலைகள், மகப்பேறு, குழந்தை வளர்ப்பு இவையெல்லாம் இன்றும்கூட பெண்களின் வேலைவாய்ப்புக்கு மட்டுமே தடைகளாக நீடிக்கின்றன. அமெரிக்காவிலிருக்கும் கம்பெனிக்கு இங்கிருந்து வேலை பார்க்க முடியும் என்கின்ற தொழில்நுட்ப சாதனையைத் தொட்டுவிட்ட நமக்கு எல்லோரும் ஒரு பொது இடத்தில் உணவருந்திக் கொள்ளலாம் என்கின்ற மனநிலை இன்னும் ஏற்படாததைப் பார்க்கும் போது மனிதனை ஒரு முட்டாள் விலங்கு என்றுதான் கருதவேண்டியிருக்கிறது. எங்கம்மா கையால, எம் பொண்டாட்டிகையால சமைச்சு... என்கின்ற பிதற்றல் பெண்ணின் பொருளாதாரச் சுதந்தரத்துக்கிருக்கும் பெரும் கேடுகளில் ஒன்றாகும்.

அடுத்து பெண்கள் வீட்டுவேலைக் குரியவர்கள் என்கின்ற நடைமுறையின் நீட்சியாக வேலைகளையும் பெண்கள் பார்க்கக் கூடிய வேலைகள், பெண்களுக்கு உரியதல்லாத வேலைகள் என்று பிரித்துப்பார்க்கும் மனநிலையும் இன்றும் தொடர்கிறது. அண்மையில், அவசரம், மிக அவசரம் என்றொரு திரைப் படம் வந்தது. நல்ல திரைப்படம். பேச வேண்டிய ஒரு பிரச்சனையைப் பேசிய திரைப்படம். காவல் துறையில் கீழ்நிலையில் பணிபுரியும் பெண்காவலர் ஒருவர் தனது பணியில் சாலையில் நீண்டநேரம் நிற்க வைக்கப்படும்போது எவ்வாறு சிறுநீர் கழிக்க இயலாமல் துன்பத்துக்குள்ளாகிறார் என்பதே கதை. ஆனால் இதில் அந்தப் பெண் எவ்வாறு தனது பணிசார்ந்தும்சரி, சமுதாயம் சார்ந்தும் சரி அதிகாரமற்றவராக இருக்கிறார்; உரிமை யற்றவராக இருக்கிறார். கேள்வி கேட்கும் வாய்ப்பில்லாதவராக நிற்கவைக்கப்படுகிறார் என்கின்ற கேள்விகள் எழுவதற்குப் பதிலாக இதற்குதான் பெண்கள் இந்தப் பணிக்கெல்லாம் வரக்கூடாது என்கின்ற சிந்தனையைத் தூண்டுவதாகவே நடப்பில் முடிந்து போகிறது. இதே சமுதாயத்தில்தான் காய்கறிகளை, பழங்களைத் தனது தலையில் சுமந்து விற்றுக்கொண்டு செல்லும் பெண்கள் தெருவோரம் ஒதுங்கி தலைச்சுமையைக்கூட அகற்றாமல் கால்களை அகட்டி நின்றுகொண்டு சாதாரணமாகச் சிறுநீர் கழித்துவிட்டு கடந்துபோகிறார்கள். இந்த முரணுக்குப்பின் நிற்கும் சமுதாயக் காரணிகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு இவர்கள் பெண்களுக்காகப் பரிதாப்படுகிறார்கள்.

ஒரு மொபைல் டாய்லெட் ஏற்பாடு செய்யவேண்டும் என்று அந்த நிர்வாகம் நினைக்காததற்கு அதன் ஆண் மனம்தான் காரணம். எங்குவேண்டுமானாலும் சிறுநீர் கழிக்கும் உரிமையுடன் ஒரு பாலினமும் அந்த உரிமையில்லாத பாலினமும் ஒன்றின்கீழ் ஒன்று வைக்கப்படுவதால் வரும் பிரச்சனை. சரி, இனி வேலைக்குப் போகும் பெண்களிடம் வருவோம். ஊதியமற்ற உழைப்பை தனது பிறவிக்கடன் என்று ஏற்றுக்கொள்ள வைக்கப் பட்டிருப்பவள் பெண். இதில் வீட்டுவேலைகள் மட்டுமல்ல ஒரு காலத்தில் தோட்டம் வயல் போன்ற வெளியிடங்களில் செலுத்தப்படும் அவளது உழைப்புக்கான ஊதியத்தையும் அவள் வீட்டு ஆண்கள்தான் அந்த எஜமானர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள உரிமை பெற்றிருந்தனர். தொழிலாளி மதிப்பு பெண்ணுக்கு மறுக்கப்பட்ட வரலாறு இருக்கிறது. வீடுகளில் நடத்தப்பட்ட பல குடிசைத் தொழில்கள் பட்டறைகளாக, தொழிற்கூடங்

களாக உருவெடுத்த போதெல்லாம் அதில் ஆண் மட்டுமே எஜமானன் என்கின்ற இடத்தை மட்டுமல்ல, தொழிலாளி என்கின்ற இடத்தையும் பெறமுடிந்திருக்கிறது. கல்வி கற்று பெண் பெற்ற வேலைதான் எந்தவகையிலும் அவள் வீட்டு ஆண்களின் தொடர்பற்ற ஒரு வெளியை அவளுக்கு முதன்முறையாகத் தந்தது. ஆனால் இவ்வாறு அவள் பெற்ற பொருளாதார வாய்ப்புகள் அனைத்தும் உடனடியாக அவளுக்குப் பொருளாதார உரிமைகளையும் பொருளாதார அதிகாரத்தையும் தந்துவிட்டனவா என்கின்ற கேள்வி ஆழமான ஆய்வுக்குரியது.

பெண்கள் ஒரு குறிப்பிட்ட அளவில் இன்று வேலைக்குப் போகிறார்கள். கிட்டத்தட்ட அனைத்துத் துறைகளிலும் கால்பதிக்கத் தொடங்கிவிட்டார்கள். பணிமூப்பு அடிப்படையிலேயேகூட பெண் அதிகாரிகள் இன்று வந்துவிட்டதை நாம் பார்க்கத் தொடங்கிவிட்டோம். ஆனாலும் என்ன? இவ்வாறு அவள் ஈட்டும் பொருளின்மீது அவளது உண்மையான உரிமை எந்த அளவிலிருக்கிறது? அவளது வருமானத்தின்மீது அவளுக்கு முழுமையான அதிகாரம் இருக்கிறதா? பெரும்பான்மையான பெண்களுக்கு அது கணவன் வீட்டார் கையில் கொடுக்கப்பட வேண்டிய தொகையாகவே இன்னும் இருக்கிறது. அதைத் தாண்டி வசதி இருக்கிற பல குடும்பங்களில் பெண்கள் அந்த வருமானத்தை தானே வைத்து செலவு செய்தால்கூட அவள் விருப்பப்பட்ட சேலையை வாங்கும்போது, விருப்பப்பட்ட கோவிலுக்கோ, சினிமாவுக்கோ போகும்போது அனுமதிக்கும் குடும்பம் அவள் தன்பெயரில் தனியாக நிலம் வாங்கினாலோ, வீடு வாங்கினாலோ அனுமதிக்குமா, அமைதி காக்குமா? அப்படியில்லையெனில் ஏன் பெண்கள் தங்களுக்கென சொத்து வாங்குவதில்லை? அசையாச் சொத்துக்களில் 2 விழுக்காடுகூட பெண்களின் பெயரில் இல்லையென்கிறார்கள். உண்மையில் பெண்கள் பெயரில் இருக்கும் சொத்துகள்கூட ஆண்களால் வாங்கப்படுவதுதானே தவிர, அது அவர்களின் உண்மையான சொத்துகள் அல்ல. அந்தச் சொத்துகளின்மீது எந்தப் பரிவர்த்தனை உரிமையும் கொண்டாட அவளை இச்சமுதாயம் அனுமதிப்பதில்லை.

இதனைத்தாண்டி தொழிலுரிமை என்று எடுத்துக்கொண்டால் பெண் தொழில் முனைவோராவது அவ்வளவு எளிதானதல்ல. உண்மையில் பெருந்தனக்காரர்கள் வீட்டிலிருந்து வளர்கின்ற ஒரு பெண்கூட பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களில் அதிகாரிகளாகப் போவதைத்தான்தேர்ந்தெடுக்கிறார்கள். அதாவது ஆண்களால் கட்டமைக்கப்பட்ட ஆண்களால் நிர்வகிக்கப்படுகிற ஓர் உலகத்தில் தங்களைப் பொருத்திக் கொள்கிறார்கள். அதனால்தான் அவர்கள் கையில் தரப்படும் அதிகாரம் மீண்டும் ஆண்களின் அதிகாரத்தையே அதிகம் தரவல்லதாகிறது. பெண்களுக்கான புதிய உலகம் அவர்களால் கட்டப்படவில்லை என்று சொல்ல முடியாவிட்டாலும் அதன் விழுக்காடு மிக மிகக் குறைவு என்பதே உண்மை.

ஆண்களுடன் போராடி ஒரு சின்னதொழிலைத் தொடங்கும் ஒரு பெண் சமுதாயத்தில் பெண்களின் அதிகாரத்தை அழுத்தமாக எழுதுகிறாள். அண்மையில் கம்பெனிகள் சட்டம் 2013 அதற்கு முந்தைய கம்பெனிகள் சட்டம் 1956-ஐ மாற்றிவிட்டு கொண்டுவரப்பட்டது. இதன்படி பங்கு பரிவர்த்தனையில் ஈடுபடக்கூடிய கம்பெனிகள் மேலும் 100 கோடி முதலீடு செய்துள்ள பப்ளிக் லிமிடெட் கம்பெனிகள் கண்டிப்பாகத் தங்களது இயக்குனர்களில் ஒருவராக ஒரு பெண் இயக்குனரை நியமிக்க வேண்டுமென்கின்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் ஆண்மயமாகவே இருப்பதை இது சுட்டிக்காட்டியது. உண்மையில் இந்தியாவில் பெரும்பாலான கம்பெனிகள் குடும்ப நிறுவனங்களேயாகும். அதிலும் சிறு குறு நிறுவனங்கள், குடும்ப நிறுவனங்கள் மட்டுமேயெனக் கூறலாம். அதில் இயக்குனர் குழுமத்தில் பெண்களும் இடம்பெற்றிருப்பார்கள். ஆனால் அது அந்தப் பெண்களுக்குத் தெரியுமா என்பது தான் கேட்கப்பட வேண்டிய கேள்வியாகும். பலநேரங்களில் பலபெண் இயக்குனர்களின் பெயர்களை இணைக்கும்போது அவர்களுக்கான ஆவணங்கள் கேட்கப்படும் போது அவர்களுக்குப் பான்கார்டு இருக்கும். ஆதார் கார்டு இருக்கும். ஏன் வங்கிக்கணக்குகூட இருக்கும். ஆனால் அவர்கள் பெயரில் ஒரு யுட்டிலிட்டி பில் இருக்காது. யுட்டிலிட்டி

பில் என்றால் நீங்கள் உங்களுக்கென கொடுக்கும் முகவரியில் உங்கள் பெயரில் மின்இணைப்போ, வரிகட்டின இரசீதோ, தொலைபேசிக் கட்டண இரசீதோ ஏன் பெண்கள் மட்டுமே பயன் படுத்தும் காஸ் இரசீதோகூட எடுத்துக் கொள் ளப்படும். ஆனால் இது எதுவுமே 90 விழுக்காடு பெண்கள் பெயரில் இல்லை.

பொருளாதார உலகில் ஒரு ஆணுக்கு முழுவதும் நம்பிக்கையுள்ள இன்னொரு ஆண் இல்லாத இடத்தில்தான் அந்த ஆணின் உடமையான பெண் நிரப்பப்படுகிறாள். தனது வங்கிக்கணக் கில் போடமுடியாத பணவருவாய் வரும் போதுதான் பெண்களுக்கான வங்கிக்கணக்கு கள் ஆண்களால் திறக்கப்படுகின்றன. ஆனால் இவற்றையெல்லாம் தனக்காகத் தானாகவே தீர்மானிக்கும் இடம் பெண்ணுக்கு இன்னும் வெகுதூரத்திலிருக்கிறது. இந்த தூரத்தை புரிந்துகொள்ள வெறும் பொருளாதார அளவு கோல்கள் போதாது. பெரியார் கூறினார் சமஉரிமை இல்லாதவிடத்து நீங்கள் சமஉடைமை யை உருவாக்கினால் அந்த உடைமை, சமுதாய உரிமை யாரிடமிருக்கிறதோ, அவர்களிடம் தானாக சென்று சேர்ந்துவிடும். அதுதான் பெண்கள் விசயத்திலும் நடக்கிறது. சமுதாய உரிமையும் தலைமையும் ஆண்களிடமே இருக்கும் நிலையில் பெண்களுக்குக் கிட்டும் பொருளாதார வாய்ப்புகள் ஆணின் கட்டுப் பாட்டுக்குள்தான் சென்று சேர்கின்றன.

சமுதாய அறிவும், உரிமை உணர்வும் பெறாத நிலையில் பெண்கள் தங்களுக்கு வசப்படும் பொருளாதார வாய்ப்புகளைத் தாங்க ளாகவே முன்வந்து ஆண்கள்வசம் அளித்து விடுகின்றனர். இன்னொருபுறம் அவ்வாறு அளிக்காமல் தங்கள் இச்சைப்படி அதனைக் கையாளத் துணிகின்ற பெண்கள் இந்த ஆணாதிக்க சமுதாயத்தின் திட்டப்படி தங்களை மேலும் மேலும் காட்சிப்பொருளாக்கிக் கொள்கின்ற விதத்திலேயே செயல்படுகின் றனர். தன்னை மேலும் மேலும் கவர்ச்சிகர மான பண்டமாக்கிக் கொள்ளவே பெண் தனது சொற்ப பொருளாதாரத்தைப் பயன் படுத்து கிறாள் என்பது நடைமுறை உண்மையாக இருக்கிறது.

பெண்ணின் வருமானம் மட்டுமல்ல பெண் செலவு செய்யும் முறைகளும் மிகவும் முக்கியம். இதற்கு என்ன காரணம்? பெண்களை இவ்வித மான பண்டங்களாகவே மீண்டும் மீண்டும் மறுஉருவாக்கம் செய்து கொண்டிருக்கும் கோவில் கள், கடவுள் கதைகள், பண்டிகைகள். இவற்றி லிருந்தும் இவற்றை எதிர்த்தும் பெண் அடை கின்ற விடுதலைதான் அவளுக்குப் பொருளா தாரச் சுதந்தரத்தைஉறுதிசெய்துகொள்ளும்ஆற்றலைக் கொடுக்கும். ஆனால் இன்னும்கூட நமது நாட்டில் பெண் விடுதலை இயக்கங்கள் இந்தத் திசையில் பயணிக்கவில்லை என்று தான் கூறவேண்டும். இதனைத்தாண்டி பெண் களின் பொருளாதார வாய்ப்புகள் வளரவளர அவர்களின் அரசியல் பங்கெடுப்பு அதிகரிக்க வேண்டும். ஆனால் இந்த விகிதம் இன்னும் மோசமான படுபாதாளத்திலிருக்கிறது. பெண்கள் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கிறார்கள் என்பது உண்மையாக இருக்கலாம் பெண் களுக்கான கோரிக்கைகள் தேர்தலைத் தீர் மானிக்கும் சக்தியாக இருக்கின்றனவா என்பது எண்ணத்தக்கது. இன்று உள்ளாட்சித் தேர்தலில் நிறுத்துவதற்கு வேட்பாளர்கள் இல்லை எந்தக் கட்சியிலும். பொதுவுடைமை இயக்கங்கள் திராவிட இயக்கங்கள் உட்பட என்பது வேத னைக்குரிய செய்தி.

பெண் உரிமை, பெண்ணின் பொருளா தாரச் சுதந்தரம் என்பது இன்று வெறும் உள்நாட்டு நிகழ்வல்ல. சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவும் பல்வேறு முற்போக்கான சட் டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. அரசை நிர்வகிக்கும் கட்சிகளின் கொள்கைகள் எதுவாக இருந்தபோதிலும் இந்த சர்வதேச அழுத்தங் களுக்குக் கட்டுப்பட வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்குமிருக்கிறது. ஆனால் இவையெல் லாம் பாராட்டத்தக்கவையாக இருந்தபோதி லும் உள்நாட்டில் நடக்கும் அரசியல் பெண்ணிய அரசியலை உள்வாங்கி நடத்தப்படும்போது மட்டுமே பெண்களின் சுதந்திரம் முழுமை யாக மலரும். முக்கியமாகப் பெண்கள் தங்களுக்கான பொருளாதார வாய்ப்புகளைப் பெருக்கிக்கொண்டு புதிய கலாச்சாரத்தைப் படைக்க வேண்டும். இன்று அவர்களே இந்த நாட்டின் கலாச்சாரச் சின்னமாக வைக்கப் பட்டிருக்கிறார்கள். அதிலிருந்து விடுபட்டுத் தங்களுக்கான மானுடத்தை அவர்கள் படைக்க முன்வருவதே உண்மையான பொருளாதார விடுதலையாகும்.

●



# கொள்கைக் குன்றம், நாத்திகம் பேசும் நாராயணசாமி பல்லாண்டு வாழ்க!

*புலவர் இரா.கலியமூர்த்தி*

மானமிகு தோழர் மா. நாராயணசாமி அவர்களுக்கு 30.11.2019 அன்று 91-ஆம் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வரகூரில் 1929-இல் மாரிமுத்து-செல்லம்மாள் இணையருக்கு மா. நாராயணசாமி மூத்த மகனாகப் பிறந்தார்.

தனது 19ஆவது வயதில் 1948-இல் அரியலூரில் பெருமாள் கோவில் முன் நடந்த தி.க. கூட்டத்தில் பெரியாரை முதன் முதலாகப் பார்த்தார். பெரியார் பேச்சைக் கேட்டு அதிசயித்துப் போனார்.

அன்றுமுதல் சிவபக்தராய் இருந்த ஆத்திகர், நாத்திகர் ஆனார்.

1949-இல் தஞ்சையில் நடந்த தி.க. மாநாட்டுக்கும் போய் வந்தார். தன் கொள்கைக்கு உரம் ஏற்றிக் கொண்டார்.

1950-இல் பெரிய திருக்கோணம் மாமன் மகள் அலமேலுவை திருமணம் செய்தார். இவர்களுக்கு சித்தார்த்தன், மேகநாதன், காமராசு, அருமைக்கண்ணு (பெரியார் வைத்த பெயர்) ஆகியோர் மக்கள் செல்வங்களாவர்.

1952-இல் பெரம்பலூர் வட்ட தி.க. 2-நாள் கூட்டம் குன்னத்தில் நடந்தது. மாநாடு போல் நடந்த அக்கூட்டத்தில் வீரானந்தபுரம் ந. கணபதி ஆசிரியர், முருக்கன்குடி வே. ஆனைமுத்து, அந்தூர் கி. இராமசாமி, இலந்தங்குழி ஆ.செ. தங்கவேலு, அல்லிநகரம் மூ.ரெ. சீனிவாசன், கூடலூர் சுப்பையா முதலானவர்களோடு நட்பு ஏற்பட்டது.

26.11.1957-இல் சாதி ஒழிப்பு போராட்டத்தில் கைதாகி விடுதலையானார்.

1961-இல் வரகூரில் இருந்த 110 வீடுகள் தீயினால் எரிந்து போயிற்று. அப்போதைய முதல்வர் அறிஞர் அண்ணாவை நேரில் சென்னைக் கோட்டையில் சந்தித்து உருவா 1,10,000/- தொகை பெற்று அத்தனை வீடுகளையும் கட்டித் தந்தார்.

வரகூரில் ஆதிதிராவிடர் தெருவில் கந்தன் என்பவருக்கு சுயமரியாதை திருமணம் செய்வித்து அங்கேயே சாப்பிட்டுவிட்டு வந்தார். அதனால் சாதிக் கட்டுப்பாடு செய்யப்பட்டார். எதற்கும்



அஞ்சாத சிங்கம் நாராயணசாமி, நாணயமும் நேர்மையும் தியாகத் தழும்புகளும் பெற்ற இவரை ஊரார் ஏற்றுக் கொண்டனர்.

*6.6.1966*-இல் பெரியாரை வரகூருக்கு அழைத்துக் கூட்டம் நடத்தினார்.

எஸ்.டி. விவேகி, அணைக்கரை டேப் இசை தங்கராசு இவர்களைக் கொண்டு கொள்கைப் பரப்புரைக் கூட்டம் நடத்தினார்.

பெரியாரின் மறைவுக்குப் பிறகு அறிஞர் வே. ஆனைமுத்துவுடன் இணைந்து மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக் கொள்கைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டு தொண்டாற்றி வருகிறார்.

*200*-க்கும் மேற்பட்ட சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வைத்துள்ளார்.

மா.பெ.பொ.க. நடத்திய பகுத்தறிவுப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு தன்னை ஊக்கப்படுத்திக் கொண்டார்.

சிந்தனையாளன் இதழுக்கும் பெரியார் நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளைக்கும் இலக்கக்கணக்கில் நிதி திரட்டி பெரும் பணி யாற்றியிருக்கிறார்.

இலங்கைத் தமிழர்களுக்காகக் கூட்டம் நடத்தியிருக்கிறார். ஒரு கட்டத்தில் சென்னையில் பொதுச் செயலாளருடன் கைதாகி விடுதலையானார்.

இப்படிக் களம் பல கண்ட தோழர் இந்நாள் வரையிலும் கொள்கையில் நடுக்கமில்லாமலும், துவண்டு போகாமலும் ஒரு இளைஞரைப் போல செயலாற்றி வருகிறார். தனிமனித இராணுவம் (One man Army) என்பது இவருக்குப் பொருந்தும்.

மூன்று முறை வரகூர் ஊ.ம. தலைவர் பதவி வகித்திருக்கிறார்.

*30.11.2019*-இல் *91*-ஆம் பிறந்த நாள் கண்ட வீரம் செறிந்த நாராயணசாமி வாழ்க! கொள்கை குன்றம் நாராயணசாமி வாழ்க! நாத்தழும்பேற நாத்திகம் பேசும் நாராயணசாமி வாழ்க! மேலும் பல்லாண்டு நலமுடன் வாழ நெஞ்சார வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்

- மாவட்ட மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, அரியலூர்

●

## சமதர்மம் என்றால் என்ன?



“புதியதும் சிறப்பானதுமான ஒரு சமுதாயத்தை அமைக்க நாம் விரும்புகிறோம்; புதியதும் சிறப்பானதுமான அந்தச் சமுதாயத்தில் ஏழைகளும் இருக்கக்கூடாது; பணக்காரர்களும் இருக்கக் கூடாது. எல்லோரும் உழைக்க வேண்டும். விரல்விட்டு எண்ணத்தக்க பணக்காரர்கள் மட்டுமல்லாது உழைக்கும் மக்கள் அனைவரும் தங்களுடைய பொது உழைப்பின் பலனைக் கட்டாயம் அனுபவிக்க வேண்டும்; எல்லோருடைய உழைப்பையும் எளிதாகும் படிச் செய்யவே இயந்திரங்களும் பிற வளர்ச்சிகளும் பயன்பட வேண்டும்; கோடிக்கணக்கான மக்களின் உழைப்பில் சிலர் மட்டுமே பணக்காரர்களாவதற்கு அவை பயன்படக் கூடாது. புதியதும் சிறப்பானதுமான இந்தச் சமுதாயமே சமதர்மச் சமுதாயம் எனப்படும். இப்படிப்பட்ட சமுதாயத்தைப் பற்றிச் சொல்லித் தரும் பாடமே சமதர்மம் ஆகும்”.

**- லெனின்**



# வாழ்க, அம்மா சுசீலா ஆனைமுத்து வாழ்வியல் புகழ்!

*- தாம்பரம் மா. சுப்ரமணி*

"என் ஜென்னி ஆ. சுசீலா அவர்களை இழந்தேன்" என, அய்யா ஆனைமுத்து தன் அருமை வாழ்விணையர் சுசீலா அம்மையார் மறைவுற்ற போது, காவிய வரிகளாய் "சிந்தனையாளன்" 2019 மே இதழில் எழுதினார்.

பொது வாழ்வில் சுசீலா அம்மையார் பங்களிப்பும், அவருக்கு இருந்த அரசியல் தெளிவும் அவர் அருகே இருந்து பழகியவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

பெரியார் அச்சிடுவோர், வெளியிடுவோர் குழுமம் சென்னையில் 1982-ஆம் ஆண்டு திருவல்லிக்கேணியில் லால்பேகம் தெருவில் தொடங்கப்பட்டது. திருச்சியில் இருந்து அய்யாவின் குடும்பம், சென்னை, திருவல்லிக்கேணி, இராஜாபகதூர் தெருவில் குடியேறினர். திராவிடக் கழகத்தில் தாம்பரம் நகரில் பொறுப்பில் இருந்த நான், அய்யாவை 18.12.1982-இல் நேரில் சந்தித்தேன்.

கட்சியில் நான் மற்றும் கி. மாஜினி, தாம்பரம் பழனி, முடிச்சூர் ராஜா உள்ளிட்ட எண்ணற்ற தோழர்கள் சேருவதற்கு தாம்பரம் காந்தி சாலை கலியபெருமாளும், சி. பெரியசாமியும், கலச. இராமலிங்கமும் உதவியாக இருந்தனர்.

பின்னாளில், நான் கட்சியின் தலைமையகம் மற்றும் அச்சகத்திற்குச் செல்ல வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், அய்யாவின் மூத்த மகன் ஆனை. பன்னீர் செல்வம், இளைய மகன் வெற்றி ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் தொடர்ச்சியாக அய்யாவின் வீட்டுக்குச் சென்று பழகவும் முடிந்தது.

அலுவலகம் - வீடு என இரண்டும் திருவல்லிக்கேணி பகுதியில் இருந்தாலும், அய்யா ஆனைமுத்து பெரும்பாலும் கட்சி அலுவலகத்தில் தங்கிவிடுவார். வீட்டில் இருந்து உணவு வரும். அப்படி வரும் உணவை, சிலநேரம் எடுத்துவரும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இந்தச் சந்தர்ப்பங்களில் சுசீலா அம்மையாருடன் பேசவும், பழகவும் எனக்கு வாய்ப்பு அமைந்தது.

அம்மாவின் பேச்சில் அரசியல் நையாண்டி இருக்கும். அய்யாவைப் பற்றிய அரிய தகவல்கள் சொல்லுவார். அப்படித்தான் பெரியார் அறிவித்த அரசமைப்புச் சட்ட எரிப்புப் போராட்டத்தில் 26.11.1957-இல் அய்யா ஆனைமுத்து கைதாகிப் பதினெட்டு மாதங்கள் சிறைத்தண்டனை அடைந்தார். அப்போது, அம்மா



வுக்கு ஏற்பட்ட நெருக்கடி களைச் சொல்லக் கேட்டு நெகிழ்ந்து போனேன்.

சுசீலா அம்மாவின் தந் தையின் பேர் சுப்ரமணி என்பதால், என்மீதான பாசத் திற்கு ஒரு காரணமாக இருந்தது.




அய்யா ஆனைமுத்து தில்லி மற்றும் வட மாநிலங் களில் பயணம் தொடர்ந்து சென்ற காலம் அது. கட்சி அலுவலகத்தில் எப்போ தும் ஏராளமான தோழர்கள் புடைசூழ அரசியல் விவாதங்களுக்குப் பஞ்சம் இருக் காது.

முற்போக்கு இயக்கம், பெரியார் இயக்கம், தி.மு.க., அ.தி.மு.க., திராவிடர் கழகம், தமிழ் இயக்கங்கள் மற்றும் காங்கிரசு என்று பலதரப்பட்ட இயக்கங்களின் முன்னணித் தோழர்கள், தலைவர்கள் வருகை எப்போதும் இருக்கும்.

கட்சி அலுவலகத்தில் அய்யா ஆனைமுத்து இல்லாத போதும் வீராணந்தபுரம் ஆசிரியர் கணபதி, காட்டுமன்னார்கோயில் து. தில்லைவனம், மதுரை எஸ்.டி. விவேகி, தாதம்பட்டி எம்.ராஜு, சீர்காழி மா. முத்துசாமி, அரியலூர் ஆ.செ. தங்கவேல், சோளிங்கபுரம் க. முகிலன், அரக்கோணம் தமிழேந்தி, வேலூர் து. மூர்த்தி, தாம்பரம் சங்கமித்ரா, சென்னை இரா. பச்சமலை, வழக்கறிஞர் தென்னன், வாலாஜா கிருஷ்ண மூர்த்தி, வாலாஜா வல்லவன், சென்னை சி. பெரியசாமி, கலச. இராமலிங்கம், நாஞ்சில் நடராசன், பெரியார்தாசன், செஞ்சட்டை பஞ்சாட்சரம், புலவர் து. தயாளசாமி, கவிஞர் சுரதா, பேராசிரியர் இளவரசு, திருக்கோயிலூர் தி.ரா. விசயன், கவிஞர் காவிரிநாடன், வேலூர் செந்தமிழ்க்கோ, வழக்கறிஞர் கோவிராமலிங்கம், வடிவேல், சுகுணா, ஆவடி நாகராஜன் என எண்ணற்ற தோழர்கள் வந்த வண்ணம் இருப்பார்கள்,

அங்கே எளியவர்களுக்குப் புரியும் வகை யில் எண்ணற்ற அரசியல் விவாதங்கள் தொடர்ந்து நடக்கும்.

*1983*-இல் இலங்கையில் ஈழப்போராட் டம் நடைபெற்ற காலத்தில், இலங்கை ஈழப்போராளிகள் அச்சகத்திற்கு வந்து செல்வது வழக்கம்.

என்னைப் போன்றோர்க்கு அது பயிற்சிக் களம். அய்யா ஆனைமுத்துவின் மூத்த மகன் ஆனை பன்னீர்செல்வத்தின் உலக அரசியல் பார்வை, பேச்சு என்னை எப்போதும் கவரும்.

பின்னாளில் ஆனை பன்னீர்செல்வம் வெளிநாட்டிற்கு வேலை செய்யச் சென்றார்.

சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை யில் தாம்பரம் இரும்புலியூர் பகுதியில் பழைய வீடு விற்பனைக்கு வந்தது.

தாம்பரம் மா.பெ.பொ.க. நகரச் செய லாளர் கு. கிருஷ்ணமூர்த்தி இந்தத் தகவலை என்னிடம் சொல்ல அய்யா ஆனைமுத்து விடம் இதைச் சொன்னேன்.

எந்தப் பற்றும் அற்றத்தன்மையில் அணுகும் அய்யா-இதையும் அப்படித்தான் அணுகினார்.

அதன்பின் அம்மா சுசீலாவிடம் எங்கள் விருப்பத்தையும், இடத்தின் சிறப்பையும் பற்றிச் சொல்ல - அம்மாவே, 'உங்க அய்யா விடமே சொல்' என எங்களைத் திரும்பப் பேசச் சொன்னர் - பலமுறை அய்யாவிடம் பேச, ஒருமுறை தாம்பரம் வந்து விலைக்கு வரும் வீட்டைப் பார்க்க அய்யா ஒப்புக் கொண்டார்.

அய்யா தாம்பரம் வரும்போது, கலச. இராமலிங்கத்தின் சகோதரர் பொறியாளர் சோதி வெங்கடாச்சலத்தை உடன் அழைத்து வந்தார். இருவருக்கும் அந்தப் பழைய வீடு பிடித்தது.

தாம்பரம் வீட்டையும் இடத்தையும் வாங்க, அய்யா திருச்சியில் இருந்த நிலத்தை விற்றார். கூடுதலாக மூத்த மகன் ஆனை பன்னீர் செல்வம் வெளிநாட்டிலிருந்து சம் பாதித்து அனுப்பிய பணமும் உதவியது.

இதனால் அய்யா ஆனைமுத்துவின் குடும் பத்தினர் ஒரு வழியாக தாம்பரத்திற்குக் குடிவந்தனர்.

அம்மாவுக்குப் பல வகைகளில், சென் னையை விட, தாம்பரம் மிகவும் பிடித்து இருந்தது. எங்களுக்கு அதில் மகிழ்ச்சி.

அய்யா ஆனைமுத்து எப்போதும் போல் பெரும்பாலான நாள்கள் வடநாடு மற்றும் தமிழகத்தில் சுற்றுப்பயணம் என்று சுழன்று கொண்டு இருந்தார்.

தாம்பரத்தில், அய்யாவின் மூத்த மகன் ஆனை பன்னீர்செல்வம், மல்லூர் போதம்மாள், இளைய மகள் அருள்மொழி, க. இராமச் சந்திரன் ஆகியோருக்கு அய்யா வீட்டை ஒட்டியிருந்த சிவசக்தி திருமண மண்ட பத்தில் **26.2.1995**-ஆம் நாள் திருமணம் நடைபெற்றது.

**26.6.1999**-ல் அய்யா ஆனைமுத்துவின் மூத்த மகன் ஆனை பன்னீர்செல்வம், போதம் மாள் இணையர்க்கு ஒரு மகள் பிறந்தது. அக்குழந்தைக்கு ஆசுபள் என்று பெயர் சூட்டினர்.

'ஆ' என்பது ஆனைமுத்து. 'சு' என்பது சுசீலா ஆனைமுத்து, 'ப' என்பது ஆனை பன்னீர்செல்வம். 'ள்' என்பது போதம்மாள் ஆகியவர்களின் தலைப்பெயர் எழுத்தைக் கொண்டு அக்குழந்தைக்குப் பெயராகச் சூட்டப்பட்டது.

திருமண நிகழ்ச்சிக்கு அப்போதைய தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் வாழப்பாடி கூ. இராமமூர்த்தி, புதுவை ந. அரங்கசாமி, புதுவை விஸ்வநாதன், வீரப் பாண்டி ஆறுமுகம் என்று ஏராளமான தலை வர்கள் வருகை தந்து திருமணம் நடை பெற்றது.

**10.7.1994**-ல் என் அண்ணன் இராமசாமி - வசந்தா இராமசாமியின் மூத்த மகள் மோகனாவுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தோம். அப்போது அய்யா ஆனைமுத்து வடநாட்டுச் சுற்றுப்பயணத்தில் இருந்தார்.

அய்யாவுக்கு பதில், திருமணத்திற்கு, அம்மா சுசீலாவைத் தலைமை தாங்கி நடத்தித் தர விரும்பினேன்.

அய்யாவைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, "அதை நீ அம்மாவிடமே கேட்டுத் திருமண பத்திரிகை அச்சிடு" என்று கூறினார்.

அம்மாவிடம், "என் அண்ணன் மகள் திருமணத்தையும் நீங்கள்தான் நடத்தித்தர வேண்டும். அய்யா, அந்தத் தேதியில் வட நாட்டுச் சுற்றுப்பயணம் சென்று விடுகிறார்" என்று கூறி அனுமதி கேட்டேன்.

எங்கள் குடும்பத்தின் மீது பாசம் கொண்ட அம்மா, மறுப்பு ஏதும் கூறாமல் ஒப்புக் கொண்டார்.

அம்மா, தில்லியில் நடந்த பெரியார் நூற்றாண்டு விழா **23.03.1979**-ஆம் ஆண்டு கொண்டாட்டத்தின் போது தில்லியின் வீதிகளில் பதாகைகளைத் தூக்கிச் சென்று ஊர்வலத்தில் பங்கேற்றார். அதே இயக்க உணர்வோடுதான், அம்மா எங்கள் வீட்டுத்




திருமண விழாவில் கலந்து கொண்டார்.

திருமணத்தில், சுசீலாம்மா தலைமையில், தோழர்கள் செஞ்சட்டை பஞ்சாட்சரம், நாத்திக நந்தனார், க. முகிலன், வழக்கறிஞர் கோவிராமலிங்கம், தாம்பரம் பழனி, கி. சேதுராசன், புதுவை நடராஜன், பேராசிரியர் சல்மான் பாரிசு என எண்ணற்ற தோழர்கள் வாழ்த்துரை வழங்கிப் பேசினார்கள்.

அம்மா சுசீலா மணமக்களுக்கு மாலை எடுத்துக்கொடுக்கும் போது "பெரியார் வாழ்க-பெரியார் வாழ்க" என முழக்கமிட்டார்.

இந்தத் திருமணத்திற்குப்பின், தொடர்ச்சியாக எங்கள் வீட்டில் நடந்த மேலும் மூன்று விழாக்களுக்கும் அம்மா சுசீலாவே தலைமையேற்று நடத்திக் கொடுத்தார்.

20.01.1997-ல் தாம்பரம் சுப்ரமணி, த. கஸ்தூரி இருவருக்கும் திருமணம் அய்யா ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது.

17.09.1998-ல் எங்களுக்கு மகள் பிறந்தாள். எங்கள் குழந்தைக்கு அய்யா ஆனைமுத்து, "முல்லை" என்று பெயர் சூட்டினார்.

என்னுடைய நீண்ட நாள் உழைப்பால் உருவான எங்களின் "முல்லை இல்லம்" தாம்பரத்தில் 28.4.2000 அன்று புதுமனை புகுவிழாவுக்கும் அய்யா ஆனைமுத்து தலைமை தாங்க, அம்மா சுசீலா இல்லத் தைத் திறந்து வைத்தார்.

ஏறத்தாழ என் அண்ணன் மகள் திருமணத்திற்கும் எங்கள் இல்லத்திறப்பு விழாவுக்கும் 8 ஆண்டுகள் இடைவெளி.

இல்லத்தின் திறப்பு விழாவின் போது அம்மா சுசீலா "ரிப்பன்" வெட்டும் போது "பெரியார் வாழ்க - பெரியார் வாழ்க" என உற்சாகம் பொங்கக் குரல் கொடுத்தார். புதுமனை புகுவிழாவுக்கு வந்திருந்த பலரும் அம்மாவின் குரலைத் தொடர்ந்து "பெரியார் வாழ்க" என, முழக்கமிட்டு அம்மா சுசீலாவை உற்சாகப்படுத்தினர்.

அதன் பின் மேலும் எட்டு ஆண்டு இடைவெளியில், 21.09.2008-ஆம் ஆண்டு காஞ்சிபுரம் படப்பையில் எங்களின் புதிய இல்லத்தை அய்யா ஆனைமுத்து தலைமையில், அம்மா சுசீலாவே திறந்து வைத்தார்.

மகள் முல்லையின் நாட்டிய அரங்கேற்றம் 2012 பிப்ரவரி 12-ந் தேதி சென்னை தியாகராய நகர், கிருஷ்ண கான சபையில் நடந்தது. நாட்டிய அரங்கேற்ற நிகழ்வுக்கு அம்மா சுசீலா தலைமை தாங்கினார். விழாவில் அய்யா ஆனைமுத்து, திரைப்பட இயக்குநர் ஆர்.கே. செல்வமணி, நடிகை ரோஜா செல்வமணி உட்பட பலர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

கவிஞர் தமிழேந்தி நாட்டிய அரங்கேற்றத்திற்குக் கவிதை நடையில் தொகுப்புரை

வழங்கியது கூடுதல் சிறப்பாகும். அரங்கேற்ற மேடை நிர்வாகப் பொறுப்பைத் 'தாம்பரம் எழில்' ஆசிரியர் பூவைமணி, தாம்பரம் ONGC ரவி, தி.ரா.வி. நல்லதம்பி ஆகியோரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட, மகள் முல்லையின் நாட்டிய அரங்கேற்ற நிகழ்வில், விழா மேடையிலே, என் மகள் முல்லையையும் மனைவி கஸ்தூரி யையும் சுசீலா அம்மா கட்டிப்பிடித்து வாழ்த்தியதை எங்கள் வாழ்வின் அரிய நிகழ்வு என்றே சொல்ல வேண்டும்.

மகள் முல்லை - மருத்துவப் படிப்புக்காக "மொரிசியஸ்" செல்லும் தருணத்தில், அம்மாவின் வாழ்த்தைப் பெற்றே வெளி நாட்டுக்கு அனுப்பி வைத்தோம். மகள் முல்லையைப் பார்க்கும் ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும், "நீ இந்திராகாந்தி மாதிரி ஆளு மையோடு வளர வேண்டும்" என்று கட்டிப் பிடித்து வாழ்த்தி, சுசீலா அம்மா பாராட்டு வார்.

அம்மாவுக்கு எப்போதும் கலைஞர் கருணாநிதி மீது பாசம் உண்டு. அம்மாவின் சொந்த சித்தப்பா ஆ.கோவிந்தசாமி, 1968-இல் தி.மு.க.வில் கலைஞர் அமைச்சர வையில் அமைச்சராக இருந்தார்.

அய்யா குடும்பத்தின் பிள்ளைகள் வெற்றி, வீரமணி இருவரின் திருமணம் 13,09,1998-இல் ஒரே மேடையில் தாம்பரம், டீ.ஜி.பி. மண்டபத்தில் நடத்தத் திட்டமிட்டுத் திரு மணத்துக்குப் பல்வேறு இயக்க முன்னணி யினர் கலந்துகொள்ள திருமண அழைப்பிதழ் அச்சடிக்க வேண்டிய நேரத்தில், அம்மா சுசீலா 'திருமணம், கலைஞர் தலைமையில் நடைபெற வேண்டும்' என்று விரும்பினார். ஆனை பன்னீர்செல்வமும் நானும் அய்யாவிடம் அம்மாவின் விருப்பத்தை எடுத்துச் சொன் னோம். சரி 'கலைஞரை நேரில் போய்ப் பாருங்கள்' என மூத்த மகன் ஆனை பன்னீர் செல்வத்திடம் சொன்னார்.

சென்னை அறிவாலயத்தில் கலைஞரை நேரில் சென்று திருமணத்துக்கு அழைத்தோம்.

தமிழ்நாடு திட்டக்குழு முன்னாள் தலைவர் மு.நாகநாதனும் இதை வலியுறுத்த, கலைஞர் கருணாநிதி மகிழ்ச்சியோடு திருமணத்திற்கு வர ஒத்துக்கொண்டுத் திருமணத்திற்கு அமைச் சர்கள் புடைசூழ வருகைதந்து தலைமை யேற்று நடத்திக் கொடுத்தார்.

இந்த திருமணத்தில், கலைஞர் இரண்டு செய்திகளைப் பதிவு செய்தார். "ஆனைமுத்து அழைக்காமலே இந்தத் திருமணத்துக்கு வந்து இருக்கிறேன்". "தாடி வைத்து இருப்ப தால், ஆனைமுத்து என்னைவிட மூத்தவர் என்று எண்ணிவிடாதீர்கள். அவர் இளைய வர்; என் தம்பி" என்று, பெருத்த கைத்தட் டலுக்கு இடையே கூறினார்.

கலைஞரின் வருகையால் ஏற்பட்ட சிறப்பு, அம்மா சுசீலாவை அளவற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்திற்று.

அந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடுதான் அய்யா ஆனைமுத்து தொகுத்த "பெரியார் சிந்தனைகள் இரண்டாம் பாகம்" சென்னை அறிவாலயத்தில் கலைஞர் 21.3.2010-இல் வெளியிட, அம்மா சுசீலா பெற்றுக் கொண் டார்.

முன்னதாக, அய்யா ஆனைமுத்து பெரியார் சிந்தனைகள், முதல் பதிப்பு வெளியீட்டு விழா 01.07.1974-இல் திருச்சியில் தேவர் மண்டபத்தில் கலைஞர் வெளியிட, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் மணியம்மை பெற்றுக் கொண்டார். இந்தப் புகைப்பட ஆல்பத்தைப் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை.

இந்த நேரத்தில், ஒரு நாள், நான் தாம் பரத்தில் அய்யா வீட்டிற்குச் சென்ற போது,

*1974-ஆம் ஆண்டு பெரியார் சிந்தனைகள் வெளியிட்ட விழா புகைப்பட ஆல்பத்தை சுசீலா அம்மா என்னிடம் கொடுத்து, அதை அய்யாவிடம் கொடுக்கச் சொன்னார்.*

*அய்யாவுக்கும், தேடிக் கொண்டு இருந்த புகைப்பட ஆல்பம் புதையல் கிடைத்த மகிழ்ச்சி.*

*21.3.2010-இல் "பெரியார் சிந்தனைகள், இரண்டாம் பதிப்பு" வெளியீட்டு விழாவுக்கு, கலைஞரை அய்யா ஆனைமுத்து அழைக்கச் சென்ற புகைப்படம் தான் 2010-ஆம் ஆண்டு சனவரி சிந்தனையாளன் அட்டைப் படமாக அலங்கரித்தது.*

*தமிழ்நாட்டின் வரலாற்றில் அய்யாவின் "பெரியார் சிந்தனைகள்" முதல் பதிப்பு மற்றும் இரண்டாம் பதிப்பு மற்றும் "ஆனைமுத்து கருத்துக் கருவூலம்" (இருபது தொகுதி) பெரும் சொத்து என்றால், அய்யாவின் புகழுக்கும், உழைப்பிற்கும் அவருடைய புத்தகச் சேமிப்பின் பாதுகாப்பிற்கும் அய்யாவின் பொது வாழ்க்கைக்கும் அம்மா சுசீலாவே சொத்தாக இருந்தார் என்றால், அது மிகையில்லை.*

*அம்மா சுசீலா, எப்போதும் சிலரிடம் பேசுவதை அதிகம் விரும்புவார். அந்தக் குறிப்பிட்ட சிலரில், நானும் என் மனைவி கஸ்தூரியும் அடக்கம்.*

*அம்மா பேசும் போது, எப்போதும், "நான் இறந்தால், கண்ணையும் உடலையும் தானம் செய்ய வேண்டும்" என்று வற்புறுத்திக் கொண்டே இருந்தார். அவருடைய விருப்பம் போலவே, அம்மாவின் இறப்புக்குப் பிறகு அம்மாவின் உடல் சென்னை போரூர் இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவ ஆராய்ச்சி மாணவர்களுக்குத் தானமாக வழங்கப்பட்டது.*

*அம்மாவின் பெரும் பொழுது, அவர் வளர்த்த நாய்கள் மற்றும் பூனைகளுடன் மகிழ்ச்சியோடு இருந்தார்.*

*அம்மாவின் கடைசி நாள்கள், மிக விரைவாகக் கடந்து போயின என்றே சொல்ல வேண்டும். யாரும் எதிர்பாரா வண்ணம் இரண்டு நாள்களிலே நலிவுற்று 30.4.2019 அன்று சாவைத் தழுவினார்.*

*1.5.2019 மே, தொழிலாளர் தினத்தன்று அம்மாவின் உடல் தானமாக வழங்கப் பட்டது.*

*கடைசி நாள்களிலும் மூத்த மகன் ஆனை பன்னீர்செல்வம், மருமகள் போதம்மாள், பேத்தி ஆசுபள், விஜயலட்சுமி, மலர்க் கொடி ஆகியோரும் அவரைக் காப்பாற்ற போராடியதை மறக்க இயலாது.*

*அம்மாவின் இளைய மகன் கோவேந்தன் அம்மாவின் பாசத்துக்கு மிக நெருக்கமானவர். மருமகன் புதுவை அரிமா, மூத்த மகள் தமிழ்ச்செல்வி அரிமா, இளைய மகள் அருள்மொழி, மருமகன் க. இராமச்சந்திரன் மற்றும் மகன் வெற்றி, மருமகள் விஜயா வெற்றி, மகன் வீரமணி, மருமகள் மலர்க் கொடி, வீரமணி, பேரன் பேத்தி ஆகியோரிடமும் அளவுகடந்த பாசம் வைத்திருந்தார்.*

*அம்மா சுசீலாவின் வாழ்வியல் வரலாற்றைப் பதிவு செய்ய வேண்டியது தேவை. இதைக் கட்சியினர், அய்யா குடும்பத்தினர் செய்ய வேண்டும் என்பது பலரின் விருப்பம்.*

*ஆசா பாசங்கள் அற்று, எதிர்பார்ப்பில்லாத தூய பொது வாழ்வில் தொண்டு புரிய வருபவர்களின் துணைவியர் எப்படிப் பங்களிப்பு செய்தும் துணையாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு, அம்மா சுசீலாவின் பெருவாழ்வு ஒரு படிப்பினை என்றே தோன்றுகிறது.*

"வாழ்க அம்மா, சுசீலா ஆனைமுத்து
வாழ்வியல் புகழ்!" ●



# திராவிட இயக்கப் பணியில் என் தந்தையும் நானும்

*- மு. ஜெயப்பிரகாஷ்*
*காஞ்சி நகரச் செயலாளர்*

**கா**ஞ்சி மாநகரம் உலகில் பட்டுநெசவுக்குப் பேர்பெற்ற நகரம். பகுத்தறிவு இயக்கத்திற்குப் பலம் சேர்க்கும் நகரம்,

தமிழகத்தில் 1967-இல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற போது அறிஞர் அண்ணா முதல்வராகப் பதவி ஏற்றார். தமிழகத்திற்குப் பெருமை என்றால், காஞ்சிபுரத்தில் பிறந்து வளர்ந்த அறிஞர் அண்ணா பதவி ஏற்றது காஞ்சி மண்ணிற்கும் எங்களுக்கும் பெருமை.

அந்த ஆண்டுதான் 1967-இல் எங்கள் குடும்பம் காஞ்சிபுரம் அடுத்த சிறுவாக்கம்புதூர் மோட்டூர் கிராமம் காஞ்சிபுரம் மாவட்டம், கிராமத்திலிருந்து காஞ்சிபுரம் நகரத்திற்குக் குடிபெயர்ந்தோம்.

என் தந்தை வி.கே. முருகப்பநாயகர் தி.மு.க. கழகத்தில் தீவிரமான பற்று உடையவர். பெரியார் பெயரிலும் நல்ல இணக்கம் கொண்டவர். பெரியார் கொள்கைகள் வெற்றி பெற வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர்.

காஞ்சிபுரத்தில் செந்தமிழ்ச்செல்வர் என்று அழைக்கப்பட்ட சி.வி.எம். அண்ணாமலை பெரியார் இயக்கம் வளர உறுதுணை யாகச் செயல்பட்டவர். அறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் சமூகநலத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுத் திறம்படச் செயல் ஆற்றியவர்.

அமைச்சர் சி.வி.எம். அண்ணாமலையோடு என் தந்தைக்கு நெருக்கமான நட்பு இருந்ததால் அண்ணாமலை அவர்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு என் தந்தைக்குக் கிடைத்தது. சிறுவனாக இருந்த நானும் தந்தையோடு பலமுறை சென்று அறிஞர் அண்ணாவைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

28.01.1980-இல் எனக்கும் சென்னை சூளைமேடு ரெங்கசாமி நாயகர் - சாரதா அம்மாள் தம்பதியரின் மகள் காந்திமதிக்கும் காஞ்சிபுரத்தில் சி.வி.எம். அண்ணாமலை தலைமையில் சுயமரி யாதைத் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு வாழ்த்துரை சி.பி. ராசமாணிக்கம், டி.ஏ. கோபால், வை. சண்முகம், எஸ். ராசமாணிக்கம், உத்திரமேரூர் தொகுதி எம்.எல்.ஏ. கம்மராஜபுரம் கே.எம். ராஜகோபால், அரங்க சானகிராமன், ஏ. சுப்பிரமணி, தி.மு.க., வெள்ளைகேட் முனுசாமி நாயகர் வாழ்த்துரை வழங்கினர்.



காஞ்சியில் சுயமரியாதை இயக்கத் தோழர்களோடு எனக்கு நெருங்கிய நட்பு ஏற்பட்டது. இந்த நிலையில்தான் கம்மராஜ புரம் கே.எம். ராசகோபால், எம்.எல்.ஏ. மரணமடைய 1980-இல் அவருடைய நினைவேந்தல் நிகழ்ச்சி காஞ்சிபுரத்தில் கெங்கைகொண்டான் மண்டபம் அருகில் கே.எம். பெருமாள் தலைமையில் நடை பெற்றது. அந்த நிகழ்ச்சியில் பெரியார் சம உரிமைக் கழகத்தின் அப்போதைய மாவட்டச் செயலாளர் பல்லவர் மேடு கே.எம். பெருமாள் எனக்கு அறிமுகம் ஆனார்.

அந்தப் பொதுக்கூட்டத்தின் மூலம் வே. ஆனைமுத்து எனக்கு அறிமுகம் ஆனார். கவிஞர் தமிழேந்தி, சோ.சு. யுவராசன் என்ற பெயரில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினார். அன்று 1980 முதல் 2019 வரை தொடர்ந்து 40 ஆண்டுகளாக நான் மா.பெ.பொ.க.வில் சேர்ந்து களப்பணி ஆற்றி வருகிறேன்.

காஞ்சிபுரம் அரங்கசாமி நாயகர், தங்கவேல் முதலியார், அரங்க சானகிராமன், சி.வி.எம். அண்ணாமலை, கம்மராஜபுரம் கே.எம். ராஜகோபால், சி.பி. ராசமாணிக்கம், எஸ். ராசமாணிக்கம், வை. சண்முகம், நாத்திகம் பொன்னுசாமி, டி.கே. கோபால், மூர்த்தி, டி.எ. அசோகன், டி.ஏ. ரங்கன், வி.என். மார்க்கு, கே.டி.எஸ். மணி, டி.கே. குப்புசாமி, எ.ஆர். வெங்கட்ராமன், கு. ராஜா, ரங்கசாமி குளம் பச்சையப்பன், பல்லத்தெரு கலாட்டா நாராயணசமி, சி. நடராசன், விசயபாரதி, வேதாசலம், தியாகராஜன், கே. டில்லி, தீ. கோபாலகிருஷ்ணன், சா. கிருட்டிணன், இரா. நாராயணமூர்த்தி, ஆ. சோதி, மா. கோதண்டபாணி, பூ.கா. பொன்னப்பன், மணிமாறன், சம்பந்த சிவக்குமார், இரா. ராஜசேகர், இரா. ஆதிகேசவன், கீழம்பி முத்து, கீழம்பி சந்திரமோகன், கீழம்பி வ. வேதகிரி, கீழம்பி சி. பழனி, ஆரியபெரும் பாக்கம், கிருஷ்ணன், க. வெங்கடேசன், ஜார்ஜ் நீலாவதி, நீலவதி ஜார்ஜ், கதிரவன், வேலாயுதம் (பட்டுக்கடை), இளயவேல், முகிலன், டோல்கேட் எல்லப்பனார், டாக்டர் விழுனாமூர்த்தி, க.கோதண்டன், சக்திகம லாம்மாள், புளியம்பாக்கம் ந.பாரி, நாத்திகம் நாகராசன், ச. யோகநாதன், தாவூத் பாய் ஆகியோர் காஞ்சிபுரத்தில் ஒன்றுசேர்ந்து களப்பணியாற்றி இருக்கிறோம். இதன்மூலம் பல்வேறு இயக்கத் தோழர்கள் நட்பு கிடைத்தது.

காஞ்சிபுரத்தில் கடந்த 20 ஆண்டுகளாக மா.பெ.பொ.க.வின் நகரச் செயலாளராகப் பணியாற்றி வருகிறேன். எனது மூத்த மகள் எஸ். ரேவதிக்கும் கிழக்குத் தாம்பரம் அருகே உள்ள மாடம்பாக்கம் (திடீர் நகர்), நாகப்பன்-கிருஷ்ணவேணி தம்பதியர்களின் இளைய மகன் என். சங்கருக்கும் 23.01.2013 அன்று சாதி மறுப்புத் திருமணம் நடைபெற்றது.

நான் பெரியார் இயக்கத்தில் இருந்த தால் இந்த சாதி மறுப்புத் திருமணத்தை என் மகள் ரேவதி என் மீதும் இயக்கத்தின் மீதும் இருந்த பற்றின் காரணமாக மிக இயல்பாகச் செய்துகொண்டாள். இது காதல் திருமணம் என்பது கூடுதல் மகிழ்ச்சி. என். சங்கர் - ரேவதிக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந் துள்ளது. மூத்தமகள் என். லோகமகிழினி. இளைய மகள் பெயர் என். எழிலினி.

எனது இளைய மகன் எஸ். சிவக்குமார் (எ) பாஸ்கருக்கும் காஞ்சிபுரம் வி. தணிகை வேல் - காந்தாரி ஆகியோருடைய மகள் நிர்மலாவுக்கும் கடந்த 28.10.2018 தேதியில் காஞ்சிபுரத்தில் தமிழ்முறைப்படி திருமணம் நடைபெற்றது. தம்பதியருக்கு 31.12.2019-இல் அமிழ்தினி பெண் குழந்தை பிறந்துள்ளது.

1983-இல் காஞ்சிபுரத்தில் ஒருவாரம் பெரியார் சமஉரிமைக் கழகமாக இயங்கிய பொழுது ஒருவாரம் பயிற்சி வகுப்பு பலிஜ குலத் திருமணச் சத்திரத்தில் (பேருந்து

நிலையம் அருகில்) நடைபெற்றது. அந்தப் பயிற்சி வகுப்பில்தான் வாலாசா வல்லவன், சேகர் என்ற பெயரில் பங்கேற்றார் என்பது என் நினைவு.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பிற் படுத்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசில் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இடஒதுக் கீடு வாய்ப்பு இருந்தும் அதை மய்யப்படுத்தி எந்த ஒரு அரசியல் கட்சியும் இயக்கங்களும் முன்னெடுத்துச் செல்ல இயலாத நிலையில் அய்யா வே.ஆனைமுத்து எடுத்த முன்முயற்சி யால், மத்திய அரசு வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடுக்கு மொரார்ஜி தேசாய் ஆட்சிக் காலத்தில் போராடியதன் விளைவாக வி.பி. சிங் பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் மத்திய அரசுப் பணிகளில் பிற் படுத்தப்பட்ட மக்களுக்கு இந்திய அளவில் 27 விழுக்காடு ஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது. இதை அடுத்து வி.பி. சிங் தனது பதவியை இழந்தார்.

பெரியாரின் வழியில் இடஒதுக்கீடுக் காகத் தொடர்ந்து களப்பணியாற்றி ஒடுக் கப்பட்ட மக்களுக்காக, உரிமைக்காக அயராது உழைத்து,

**இந்தியாவில் பொதுவுடைமை மலர**
**மார்க்சிய – பெரியாரிய நெறியில்**
**தேசிய இன வழிபட்ட சமஉரிமை உடைய**
**சமதர்ம குடிஅரசுகள் ஒருங்கிணைந்த**
**உண்மையான கூட்டாட்சி அமைய**

மா.பெ.பொ.க. நடத்திய/தமிழகம் அளவில் அழைத்து நிகழ்ச்சிகள், மாநாடு களில் காஞ்சிபுரத்தின் பங்கு மிகப்பெரியது.

காஞ்சிபுரம் மா.பெ.பொ.க. தோழர்கள் ஒவ்வொருவரும் இதற்கென முன் எடுத்து ஆற்றிய தொண்டு என்பது அளப்பரியது.

அய்யா வே. ஆனைமுத்து ‘வெட்டி வா’ என்றால் கட்டிவரும் ஆற்றல்மிக்க மறவர் களை, களப்பணியாளர்களைக் கொண்ட நகரமாக தோழர்களாகக் காஞ்சிபுரம் தொடர்ந்து முதன்மையான மாவட்டமாக இருக்கிறது என்றால், அது மிகை இல்லை.

இதில் காஞ்சி மாவட்டச் செயலாளர் சி. நடராசனின் பங்கும் பாராட்டுக்குரியது.

காஞ்சிபுரத்தில் அய்யா வே. ஆனைமுத்து நிகழ்ச்சி என்றால் அனைத்துக் கட்சியிலும் இருக்கும் தோழர்கள், வணிகப் பெருமக்கள் என்று பலதரப்பட்டவர்கள் கலந்து கொள் கிறார்கள் என்றால் தந்தை பெரியாருக்குப் பிறகு அய்யா வே. ஆனைமுத்து பெரியார் விட்டுச் சென்ற பெரும் பணியை - பெரும் சுமையை தூக்கக் கூடியவர் என்பதை மனதார கூறிப் பாராட்டுவார்கள்.

எல்லா இயக்கத்திலும் இருக்கும் முரண் பாடு போல் காஞ்சி மா.பெ.பொ.க.விலும் சில முரண்பாடுகள் அவ்வப்போது தலைக் காட்டும் என்றால் அது மா.பெ.பொ. கட்சியை மேலும் செழுமைபடுத்தி முன்னெ டுத்துச் செல்வதற்கும் வேகமான செயல் பாட்டிற்கும் உந்துசக்தி என்பது தோழர்கள் நன்கு உணர்ந்து இருப்பதால் முரண்பாடுகள் கதிரவன் கண்ட பனி போல் கரைந்து போவதை நாங்கள் உணர்ந்து இருக்கிறோம்.

மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்ற மகத் தான கோட்பாட்டில் மா.பெ.பொ.க. பெரியார் வழியில் மார்க்சியத்தை இந்திய மண்ணில் விதைத்து இருக்கிறது. இது தொடரும்; செழிக்கும்; அடுத்தடுத்த தலை முறைகள் காக்கப் பயன்படும் என்பதை நாங்கள் உணர்ந்து இருக்கிறோம்.

இதற்காகத் தொடர்ந்து உழைப்போம். மார்க்சியம் மலரட்டும்; பொதுவுடைமைச் சமுதாயம் வெற்றி பெற நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் போராடுவோம்.

❖



# தமிழ்த் தேசிய எழுச்சிக்கான தடைகளைத் தகர்ப்போம்!

தி. துரைசித்தார்த்தன்

தேசியம் தேசிய இனம் என்பதன் கருதுபொருள் ஒரு குறிப்பிட்ட சமுதாய (தேசிய இன) மக்களிடையே மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, மரபுகள், நிலஎல்லைப் பகுதி போன்றவை உளப்பூர்வமான பிணைப்பை ஏற்படுத்திவிடும். அதனைத் தேசியம் அல்லது நாட்டுப்பற்று என்கிறோம்.

தேசிய இனம் என்பது ஒரு பொது மொழியையும், வாழ்க்கை முறையும், வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பையும் பொதுப் பொருளியல் அமைவையும், தனிப் பண்பாட்டின் சிறப்பியல்புகளையும், அவற்றால் உருவான உளவியல் உருவாக்கத்தையும் பெற்ற வரலாற்று அடிப்படையில் அமைந்த ஒரு நிலையான சமுதாய மக்களே தேசிய இனம் என வரையறைப்படுத்தப்படுகிறது. தோழர் ஜே.வி.ஸ்டாலின் கருத்துப்படி, ஒரு தேசிய இனத்திற்கு நான்கு சிறப்புக்கூறுகள் தேவை. அவை, *1.*பொதுமொழி, *2.*தொடர்ச்சியான ஆட்சி எல்லை, *3.*பொதுவான பொருளியல் வாழ்வு, *4.*பொதுப் பண்பாட்டில் வெளிப்படும் உளவியல் உருவாக்கம்.

தேசியத்தின் இரண்டு முற்போக்கான உட்கூறுகளின் வளர்ச்சியை ஒட்டியே அதன் தேசியப் பண்பை அறிந்து கொள்ள முடியும்.

*1.* அதன் அனைத்துப் புலன்களிலும் சமுதாய மாற்றத்தை நோக்கி செலுத்துகிற புரட்சிக்கர மாற்றங்கள்.

*2.* ஆட்சியியல், பொருளியல் துறைகளில் வழங்கத்தக்க மக்கள் நாயக உரிமைகளையும், சமனியத்தையும் ஒட்டு மொத்தமாக மேம்பாடுகளையும் வழங்கத்தக்க மாற்றங்கள் ஆகும்.

தேசிய இன வளர்ச்சியை ஓராண்டிலோ அல்லது சில ஆண்டுகளுக்குள்ளோ பெற முடியாது. தோழர் வி.அய்.லெனின் அவர்கள் தேசிய இன வளர்ச்சியை ஒரு "திறன்மிக்க தொடர் செயல்முறை" *(Process)* என்கிறார். அச்செயல்முறை தேசிய வாழ்க்கை விழிப்புணர்ச்சி, தேசிய இயக்கங்கள், தேசிய இனத்தின் மேல் ஏவப்படும் அடக்குமுறைகளை எதிர்த்து நடத்தும் போராட்டங்கள், தேசிய அரசை நிறுவுதல் ஆகிய நான்கு படிக்கட்டுகளைக் கொண்டது என்றும் விளக்குகிறார்.

அந்த ஆக்க வழியினதான செயல்முறையானது ஒரு குறிப்பிட்ட தேசிய இன மக்களிடையே நிலவும் வேறுபாடுகளைப் (சாதி, சமய, சமுதாய, பொருளியல், மொழி போன்ற பலவகை வேறுபாடுகளை) போக்கி, ஒற்றுமையைச் செயற்படுத்துவதற்கும், தம் வாழ்க்கையைத் தாமே முடிவு செய்வதற்கும், தேசியத்தை வளர்ப்பதற்கும், நவீன அறி வியல் தொழிலியல், பொருளியல்



உயர்வைப் பெறுவதற்கும், சமுதாயப் புரட்சி களுக்கு முன்னுரிமை தந்து ஏற்றத் தாழ்வை அகற்று வதற்கும், இவற்றிற்கெதிராகவுள்ள சக்திகளை அடையாளம் காட்டி அவற்றை வெல்வதற்கும், ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதற்கும், தன்னாட்சி அமைப்பதற்கும் தேவையான அனைத்தையும், வல்லமை யுடன் நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் இறுதிநிலை, பொதுவுடைமை அரசையும், அதன் நீட்சியாய் பொதுவுடைமைச் சமூக மாற்றத்தையும் பெறுவது. இத்திறன் மிகு செயல்முறை, தேசிய அரசை நிறுவிய பின் னரும் பல்லாண்டுகள் தொடர்ந்து உயிரோட் டத்துடன் இயங்கி வர வேண்டும்.

தேசிய இனத்தின் இயக்கங்களும் போராட் டங்களும், சமுதாய மாற்றத்தை நோக்கிச் செலுத் தும் அடிப்படைக் கூறுகளை செய்து கொண்டே, முழு இறையாண்மையைப் பெறுவதற்குரிய வகையில் நடைபெற வேண்டும்.

தேசிய இனங்களைப் பற்றி ஆராய்ந்த மார்க்சிய அறிஞர் மைக்கல் லோயி (Michael Lowy) அவர்கள்,

"பண்டைய நாடுகளான இந்தியா, சீனா போன்றவற்றில் மொழி, வரலாறு, பொதுப் பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் பல தேசிய இனங்கள் இருந்தன. அம் மொழித் தேசிய இனங்களிடம் நாட்டின் அமைவும் (Nationhood) இருந்தது. ஆனால் (தனித்தன்மை கொண்ட சில விந்தையான வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாக அவை முழுத்தன்னுணர்வுடன் (Full Consciousness) வளரவில்லை" என விளக்குகிறார்.

தமிழ்ச் சமுதாயம் ஒரு தேசிய இனமாக முழுத் தன்னுணர்வுடன் வளருவதற்கு தடை யாக உள்ள வரலாற்றுச் சூழல்:-

வருணாசிரம தர்மம் சாதியம் தீண்டாமை, இந்து மதம் என்றழைக்கப்படும் பல்சமயக் கதம்பக்கூளம் பார்ப்பனிய வேதமதம், மனித முயற்சியை ஒடுக்கும் பக்தி மார்க்கம், அதன் உள்ளீடான சமய, சாத்திர, சம்பிரதாய மூடப்பழக்க வழக்கங்கள், இவற்றின் அடிப் படையிலான பண்பாட்டுத் தளத்தில் ஏற் பட்ட ஏற்ற தாழ்வான பிளவுகள், அரசோடும், நாட்டோடும் தொடர்பற்ற பொது மக்கள், அவர்களுடைய அறியாமையைப் பயன் படுத்தி ஆட்டிப் படைக்கும் ஆளும் வகுப்பு களுக்கு இடையே நிலவிய ஆழ்ந்த கன்ற இடைவெளி இவையனைத்தும் தமிழரின் விழிப்புணர்ச்சியையும் தேசிய இன வளர்ச்சி யையும் தவிடுபொடியாக்கி விட்டன.

**வருணாசிரமதர்மம் சாதியம் தீண்டாமை**

தமிழ் சமூகத்தில் வழிவழியாக குறிப் பிட்ட தொழில்களைச் செய்து வந்த தொழில் குலங்களும் வேறு பல பண்டைய வரலாற்று குழுக்களும் பின்னர் ஊடுருவிய வருணாசிரம தர்மத்தில் புதையுண்டு போய், பார்ப்பனியம் வடிவமைத்த ஏற்றத்தாழ்வான புதியதோர் சமுதாய அமைப்பான சாதியம் தோன்றியது.

சாதிய முறை என்பது மக்களை மேல் சாதியினர், கீழ் சாதியினர் என்று நிலையாக பிளவுபடுத்தும் ஓர் அடக்குமுறை அமைப்பு. பார்ப்பனர், சத்திரியர், வைசியர் ஆகி யோருக்கு கீழாக அடிமைகளைப் போல நடத்துவதற்குரிய சூத்திரன், தீண்டப்படா தவன் என்னும் இரு பெரும் பிரிவு, சாதியத் தால் வளர்க்கப்பட்டது.

ஒவ்வொரு சாதிக்காரனும் தான் சார்ந்த சாதிக்கு மட்டும் தான் விசுவாசமுள்ளவனாக, தன்னை இழந்தாவது தன் சாதியைக் காப் பாற்றும் தீவிரம் கொண்டவனாக இருக்கி றான். தான் ஒரு மொழி, இன சமுதாயத்தைச் சார்ந்தவன் என்ற எண்ணமே அவன் கருத்து நிலையில் கூட எழாத வண்ணம், சாதிக் காரனைப் பொருத்தமட்டில் சமுதாயம் என்பது அவன் சார்ந்த சாதிச் சமுதாயமே! மற்ற சாதியர் வேற்று சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், தன் சாதிக்குக் கீழே கீழ்ச் சாதிகள் பல உள்ளன என்பதை எண்ணி பூரிப்படைகின்ற வகையில் உருவாக்கப் பட்டனர். தன் சாதிக்கு மேலான மேல் சாதிகளும் உள்ளன என்று அறிந்தாலும் தன் அடிமை நிலையை, மனமாற ஏற்று வாழும் சுய மரியாதை இன்மை, இப்பிறவி அடி மைத்தனம் அவன் குருதியோடு கலந்து விட்டது. ஒவ்வொரு இந்துவும் குறிப்பிட்ட

தொரு சாதிகாரனாகவே பிறக்கிறான். இவன் பிறந்ததிலிருந்து புதை குழிக்குப் போகும் வரை அவனுடைய குடும்பம், சமுதாய, பொருளாதார, மத வாழ்க்கையை அவன் சார்ந்த சாதியே நிர்ணயம் செய்கிறது.

சாதியைச் சார்ந்தோர் தத்தம் சாதிக்குள் ளேயே திருமணம் செய்து கொள்ள வேண்டும். பெயர் சூட்டுதல், காதணி விழா, முடி யெடுத்தல், இறுதிக் கடனாற்றுதல், திதி நடத்துதல், விரதங்களை மேற்கொள்ளுதல் முதலான பல சடங்குகளையும் சாதிக் கட்டமைக்குள் நின்று அந்தந்தச் சாதி முறைகளுக்கு ஏற்பவே நடத்த வேண்டும். சாதிக் கட்டுப்பாட்டை மீறினால் சாதி நீக்கம் செய்யபடுவார்கள். தீண்டாமை மெத்த வலிவுடன் நடைமுறையில் இருந்தது. தீண் டாதவர் என்பவர், பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நால்வர் குலத்திற் கும் அப்பாற்பட்டவர்கள் அதனால் ஐந்தாம வர் அல்லது பஞ்சமர் ஆயினர்.

மனுநீதி விதிகளை மீறிய மற்ற உயர் குலத்தில் பிறந்தவரும் சண்டாளன் அல்லது பஞ்சமன் ஆகிவிடுவான். கீழ்ச் சாதி மக்கள் எவ்வகையான சமூக உரிமையும், உடைமை களையும் பெற்றுக் கொள்ள கூடாது. அவனுடைய ஒரே உடைமை உடல் மட்டுமே அவன் உழைப்போ மற்ற மேல் வர்ணத்துக் குரியது.

தீண்டாமை என்பது மூவகை கொடு மைகளை உள்ளடக்கியது. அவை தீண்டாமை, அண்டாமை, காணாமை என்ற சமூக அவலத்தைக் கொண்டது. பெண்களுக்குச் சொத்துரிமை கூடாது. பெண்களுக்கு மோட்சம் கிடையாது. ஆண்களுக்கு உள்ள எந்த உரிமையும் பெண்களுக்குக் கிடையாது என்றும் கீழ்சாதி மக்கள் என்பவர்கள் உடைமை இல்லாதவர்கள் என மனுநீதியின் மூலமே ஆக்கப்பட்டனர்.

இவைகள் தமிழர்களின் அன்றாட வாழ்க்கைச் சட்டமாக அரசர்களால் எல்லா நிலைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டு வலுக் கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. இந்த நடைமுறை தமிழகத்தில் குறைந்தது ஒரு 1200 ஆண்டுகளாக இங்கு நிலவி வருகிறது. கிராம அமைப்பு: வீடுகள், தெருக்கள், கோயில்கள் போன்ற அமைப்புகள் புரோகிதம் செய்தல், ஊர்த் தொண்டு செய்தல் இப்படி எந்த நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டாலும் ஒரு தமிழனுடைய அன்றாட வாழ்க்கை என்பது இந்த ஆரியர்களின் சாஸ்திரப்படி தான் நடைபெறுகிறது. அது போலவே, அர்த்த சாஸ்திரம் அரசன் அல்லது ஆட்சிக் காரன் மக்கள் கூட்டத்தை எப்படியெல்லாம் அடிமைப்படுத்த முடியும், சுரண்ட முடியும், வன்மையாக ஒடுக்கி ஆட்சி செய்ய முடியும் என்பதையும், பெண் என்பவள் பிள்ளை பெறும் ஒரு தோல் பை என்றும் கௌடில் யன் எழுதி இருக்கிறான். இவ்வகையில் தமிழ்ப் பண்பாடு என்ற ஒன்று எழுச்சி பெறாமல் சாதிய இந்துப் பண்பாடு என்ற தன்மையிலேயே இங்கு கட்டமைக்கப்பட் டுள்ளது. இந்துப் பண்பாடு என்றால்,

1. பார்ப்பானைக் குருவாக ஏற்றுக் கொள்வது.

2. சிலையைக் கும்பிடுவது.

3. சாஸ்திரங்கள் சொல்லிய படி மனிதன் அன்றாடம் வாழ வேண்டும் என்பதும் ஆகும். இந்த இந்து மதப் பண்பாட்டுத் தளத்தை உடைக்க இந்தியாவில் இந்து மதப் பண்பாட்டுக்கு ஆட்பட்டோரிடையே ஒரு பண்பாட்டுப் புரட்சியை உண்டாக் குவது எவ்வளவு பெரிய தேவை என்பதை அது எவ்வளவு கடினமான பணி என்பதை யும் பற்றி மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

".....இப்படிப்பட்ட சிறிய சமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும் அடிமைத்தனத் தினாலும் பீடிக்கப்பட்டிருந்தன என்பத னையும், அதனால் சூழல்களின் பேரில் ஆதிக்கம் செலுத்துகின்ற அளவுக்கு மனிதனை உயர்த்துவதை விட்டுவிட்டு, புறச் சூழல் களுக்கு மனிதன் அடிமையாவதை ஏற்றிருந் தனர் என்பதனையும், தாம் பெற்றிருந்த வளர்ச்சிக்குரிய சமூக அமைப்பை எப்போ தும் மாறாத பாதைக்குத் திருப்பி விட்டு விட்ட தன்மையினராக மக்கள் இருந்ததை யும் நாம் மறந்து விடக் கூடாது. இப்படிச்

செய்து, இயற்கையை வழிபடும் தன்மையை வளர்த்தெடுப்பது, இயற்கையை வென்றெடுத்திருக்க வேண்டிய மனிதனின் நிலையைத் தாழ்த்திக் கொண்டு, மண்டியிட்டு அனுமான் என்கிற குரங்கையும், பசுவையும் கடவுளாக மதித்து வணங்குகிற நிலைக்கு மக்கள் ஆளாகிவிட்டதையும் நாம் மறந்து விடக் கூடாது".

".... ஆசியச் சமூக அமைப்பில் அடிப்படையானதொரு புரட்சியைக் கொண்டு வராமல், மனித குலம் விடுதலை அடைய முடியுமா என்பதே நம்முன் உள்ள வினாவாகும். அது முடியாது என்னும் பட்சத்தில், எவ்வளவு கொடுமைகளை இங்கிலாந்து இழைத்திருந்தாலும், தன்னை அறியாமலேயே, அத்தகைய சமுதாயப் புரட்சிக்கு ஒரு கருவியாக இங்கிலாந்து அமைந்து விட்டது".

*(Marx-Engels: "The First Indian War of Independence 1854-1857, Pg 16, 17, 18; 1978 Edition)*

இந்தியப் பண்பாடு என்பது, மனிதனை ஒரு பொருட்டாக எண்ணுவதனை விட, ஒரு பசு மாட்டை வணங்குவதை, பார்ப்பானை மதிப்பதை உயிராகக் கருதுவது என்பதை, மார்க்சு மேலும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

".... மேலே சொல்லப்பட்டுள்ள செய்தியுடன் மானவதர்ம சாஸ்திரத்தின் பகுதி 10, சுலோகம் 62 அய் ஒப்பிட்டுப் பார்க்கலாம். எந்தப் பலனையும் எதிர் பார்க்காமல் ஒரு புரோகிதனுடைய அல்லது ஒரு பசுவினுடைய நன்மையைக் கருதி உயிரை விட்டு விடுவது தான் கீழ்ச்சாதி மக்கள் மோட்சத்தில் இன்பம் பெறுவதற்கு வழியாகும்" *Das Capital, Volume II, Pg. 241, 1971 Edition)*

மேற்கண்ட செய்திகளின் வழியாக, தமிழ்தேசிய இன ஓர்மைக்குத் தடையாக விளங்கும் காரணிகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, வருணசிரம சாதிய வர்க்கங்களாகத் தமிழ்ச் சமூகம் பிளவுபட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. இத்தகைய பிளவுகள் பல நேர்வுகளில் பகைமை தன்மையோடு உள்ளது இத்தகைய சமூகச் சூழ்நிலையில் எல்லாச் சாதிகளின் எல்லா வர்க்கங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்த் தேசிய இன ஓர்மை என்பது வரலாற்றுக்கு முரணாகும். அத்தகைய ஓர்மையைக் கருத்தளவில் முன் வைத்த அனுபவங்கள் அனைத்தும் மேல் சாதிய வர்க்கங்களின் மேலாதிக்கத்தை ஒத்துக் கொள்வதில் போய் முடிந்தன.

**எந்த தமிழருக்கான விடுதலை?**

தேசிய இன சிக்கலுக்கான தீர்வை ஒட்டு மொத்த தேசிய இன பார்வையிலிருந்து அணுக இயலாது. தமிழ்ச் சமூகம் தமக்குள் பகைமை கொண்டுள்ள சாதிகளாகவும், வர்க்கங்களாகவும் பிளவு கொண்டுள்ள இன்றையச் சூழலில் இது வரலாற்று முரண் ஆகும். அது மட்டுமல்ல, இத்தகையப் பார்வை மேல் சாதியினருக்கும், மேல் வர்க்கத்தினருக்கும் தமக்கான அரசியலை தமிழ்த் தேசிய அரசியலாக்கி ஒடுக்கப்பட்ட வர்ண சாதியினரையும் வர்க்கங்களையும் தம் அரசியல் வலை பின்னலுக்குள் இறுக்கிக் கொள்ள முடியும். எனவே, ஒடுக்கப்பட்ட சாதிகள் வர்க்கங்களின் ஓர்மை சாதிய ஆதிக்கத்தையும் வர்க்கச் சுரண்டலையும் எதிர்த்த போராட்டங்களின் மூலமே கட்டப்பட வேண்டும்.

தமிழகத்தில் கிட்டத்தட்ட 400 உட் சாதிகள் உள்ளன. இவர்களில் உண்பது, தின்பது என்பது அண்மைக் காலமாகத் தான் புழக்கத்தில் வந்துள்ளது. ஆனால் இவர்களிடம் பெண் கொள்வினை கொடுப்பினை 100க்கு 5, 6 என்கிற அளவில் தான் இப்போது படிப்படியாக வந்துள்ளது. சாதிப் பழக்கம், வழக்கம் என்பது அவ்வளவு இறுக்கமாக இவர்களைப் பழமையில் கட்டிப் போட்டுள்ளது. தேசிய இன ஒற்றுமை ஓரளவு உருவாகிவிடும் காலத்தில் உயர் சாதியினரும் வர்க்கத்தினரும் இவற்றைக் கலைத்து விடவும் இவர்களுக்குள் பகைமையை உருவாக்கவும்,

"எத்துணையளவு நியாயமான பெரும் போராட்டமும் தனி நிலையில் மேற்கொள்ளப் பட்டால் முதலில் நடைபெற அனுமதிக்கப் பட்டு, அயர்வு உண்டாக்கப்பட்டு, போராளி களிடையே ஒழுக்கம், நாணயச் சிதைவுகளை விளைவித்து, இறுதியில் இராணுவம் மூலம் அடக்க" ஆன எல்லா முயற்சிகளையும் மிகக் கடுமையாகச் செய்வர். இத்தகைய முயற்சி களை எதிர்த்த போராட்டங்களின் மூலம் ஒடுக்கப்பட்ட சாதிகள், வர்க்கங்கள் ஆகியவை கொண்ட தேசிய இன ஓர்மை உறுதிப்பட வேண்டும். தமிழ்த் தேசிய எழுச்சி என்பது ஒடுக்கப்பட்ட தமிழர்களின் விடுதலையை முதன்மையாகக் கொள்ள வேண்டியுள்ளது.

ஏகாதிபத்தியம், தரகு பார்ப்பனியம், நிலப்பிரபுத்துவம் ஆகியன தமிழகத்தில் ஆதிக்க வர்க்கங்களின் மூலமாகவும், மேல் சாதிய மனோபாவத்தின் மூலமாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, நாம் தமிழர்கள் என்பது மொழி வழியிலான நியாயமாக மட்டுமே இருக்கலாமே தவிர, சமூக விடுதலைக்கான நியாயமாக இருக்காது. எனவே தமிழ்த் தேசிய இனத்தவரிலும், மேல் சாதி கீழ்ச் சாதி என்ற பாகுபாட்டை வர்ண-வர்க்க பிளவுகளை தகர்க்க கடவு ளோடும், பண்பாட்டோடும் மனித உளவிய லோடும் பின்னிப் பிணைந்த சாதிய ஆதிக் கத்தையும் வர்க்கச் சுரண்டலையும் எதிர்த்த போராட்டத்தைக் கட்டமைப்பது அவசியம். இதுவே பரிணாம வளர்ச்சிப் பெற்றத் தமிழ்த் தேசிய இனம் என்றும் "நாம் தமிழர்" என்னும் மொழி இன உணர்வு இங்குள்ள வர்களுக்கு வருவதற்கு மிகமிகத் தேவை. தமிழ்த் தேசிய எழுச்சி வருவதற்கான சில வேலைத் திட்டங்கள்

*1.* தமிழ் வழியில் கல்வி தரப்பட வேண் டும். கல்வி மாநில அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப் பட வேண்டும்.

*2.* உலக மயம், தாராளமயம், தனியார் மயம் அதன் விளைவாக ஆங்கில மொழித் திணிப்பு எல்லாம் சேர்ந்து தமிழ் மொழியின் நிலைப்புக்கே ஓர் அறைகூவல் இன்று வந்து விட்டது. இவைகளிலிருந்து தமிழ் மொழி யைக் காப்பது அவசியம்.

*3.* அரசமைப்புச் சட்டத்தில் உள்ள விதிகள் *343, 344, 348* முதலானவற்றில், எட்டாவது அட்டவணையில் கண்ட எல்லா *(22)* மொழிகளும் இந்திய அரசின் ஆட்சி மொழிகள், நீதிமன்ற மொழிகள் எனத் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

*4.* அந்தந்த மொழி வழித் தேசிய எல் லைக்குள் இருக்கிற மய்ய அரசு அலுவலகங் களின் அந்தந்த மொழி வழித் தேசிய மொழியே தமிழ்நாட்டில் தமிழ் மொழியிலேயே நீதி, நிர்வாகம் நடைபெற வேண்டியது அவசியம். இவற்றை முன் வைத்தும் இந்திய அரசை எதிர்த்துப் போராடுவது அவசியம்.

*5.* நிலமற்றோர்க்கு நிலத்தை பிரித்து தரும் பணியை விரைவுபடுத்தப் போராட வேண்டும். உழைப்பாளி மக்களை ஒன்று திரட்டிட இவை உதவும்.

*6.* பார்ப்பன இந்து மதத்திற்கு எதிராகப் பகிரங்கமான போர் தொடுத்து, சாதிய, வர்ண ஒடுக்குமுறையை நியாயப் படுத்தும் வேத இதிகாச புராணங்களையும், மனு நீதியையும் பகிரங்கமாகத் தீயிட்டு கொளுத்த வேண்டும்; இது வர்க்கப் போராட்டத்திற்கு இணையாகவும், துணையாகவும் நடத்தப் பட வேண்டும்.

*7.* அக மணமுறையை ஒழித்து சாதி மறுப்புத் திருமணங்கள் செய்வது, தனிக் குடியிருப்பை ஒழிப்பது, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் பள்ளிகள், விடுதிகளைப் பொதுப்பள்ளி, பொது விடுதி களுடன் இணைக்கக் கோருவது, தீண்டா மையை ஒழிப்பது, பரம்பரைத் தொழில்களை ஒழிப்பது, அனைத்துச் சாதியினரையும் அர்ச்சராக்குவது, விகிதாசாரப் பங்கீடு கோருவது போன்ற போராட்டங்களைத் திட்டமிட்டு நடத்துவோம்.

பொருளியல் மட்டுமல்லாமல் சமூக நிலையிலும் மேலாதிக்கம் நிலவுகிறது. மத மேலாதிக்கம், மொழி மேலாதிக்கம், சமூக மேலாதிக்கம் தமிழ்நாட்டில் உள்ளது. இந்த மேலாதிக்கங்களை வென்றெடுப்பது நமது வரலாற்று கடமை.

●



# மாணவர்களிடையே திருக்குறள் பரப்புதல் என் அனுபவங்கள்

*- குறள் அமிழ்தன்*
*நிறுவனர் - பயிற்றுநர், திருக்குறள் பேரவை*

*1989-ஆம் ஆண்டு, எங்கள் பகுதியில் உள்ள மளிகைக் கடையில் பொட்டலம் கட்டுவதற்காக இருந்த பழைய நூல் ஒன்றை பிரித்துப் பார்த்தேன். அப்போது என் கண்ணில் பட்ட சொற்றொடர்கள் என்னை ஒரு உலுக்கு உலுக்கியது.*

*அந்நூல் தந்தை பெரியாரின் நூல். நூலின் தலைப்பு நினைவில் இல்லை. அந்த வாசகம் என்னவெனில்,*

*"மாணவர்கள் டெஸ்ட் புத்தகங்களைப் படித்து மடையர் களாவதை விட திருக்குறள் ஒன்றை வாங்கிப் படித்து அறிவாளி யாவது மேல் என்றுதான் நான் கூறுகிறேன்."*

"திருக்குறள் ஒன்றே போதும் உனக்கு
அறிவு உண்டாக்க
ஒழுக்கத்தைக் கொடுக்க;
உலக ஞானம் ஏற்பட;"

*பகுத்தறிவு மணிகளால் கோர்க்கப்பட்ட நூல்தான் திருக்குறள். குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரி யாதை உணர்ச்சி பெறுவார்கள்.*

"அரசியல் ஞானம்
சமூக ஞானம்
பொருளாதார ஞானம்"

*ஆகிய எல்லாமும் திருக்குறளில் அடங்கியிருக்கிறது என்று பெரியார் மொழிந்த பொன் எழுத்துக்களைப் படித்தேன்.*

*தந்தை பெரியாரின் இந்த எழுத்துக்களே என்னிடத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.*

*"அன்றைய நாளே என் அம்மாவிடம் பத்து ரூபாய் பெற்றுக் கொண்டு திருக்குறள் மு.வ. தெளிவுரை ஒன்று வாங்கி வந்தேன்."*

*நான் படித்த முதல் குறள்,*

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்" (குறள் 611)



இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்க வேண்டும். அதைச் செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும்.

இக்குறளைப் படித்த பின்னர்தான் "நம்மால் முடியும்" என்கிற நம்பிக்கை என்னுள் எழுந்தது. அதிகாரம் 62 ஆள்வினை உடைமை என்கிற அதிகாரத்தைப் பலமுறை படித்தேன். பொருளை நன்குணர்ந்து படித்தேன்.

திருக்குறளை முழுமையாகக் கற்க வேண்டும் என்கிற எண்ணம் அரும்பியது. முதலில் என் குழந்தைகளுக்கு, திருக்குறளைச் சொல்லிக் கொடுத்தேன்.

எங்கள் குடும்பம் கூட்டுக் குடும்பமாய் இருந்த போது எங்கள் வீட்டுப் பிள்ளைகள் மற்றும் தெருப் பிள்ளைகள் மொத்தம் 15 பிள்ளைகளுக்கு எங்கள் இல்லத்திலேயே 1997ஆம் ஆண்டுவாக்கில் திருக்குறளைச் சொல்லிக் கொடுத்தேன்.

திருக்குறளை முன்கூட்டியே படித்து குறிப்பெடுத்துக் கொண்டு 'குட்டிக்கதைகளோடு' திருக்குறளைச் சொல்லிக் கொடுத்தேன். அதன்பின்னர், நெல் அவியல் தொழிலாளர்கள் வசிக்கும் எங்கள் பகுதியில் உள்ள குடிசைப் பகுதிக்குச் சென்று சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் சுமார் 30 மாணவர்களுக்குத் திருக்குறள் பயிற்சி வகுப்பு நடத்தினேன். நூறு குறட்பாக்கள் முடிந்த 12 மாணவர்களுக்கு எங்கள் பகுதியிலேயே விழா எடுத்து பரிசுப் பொருள் வழங்கினேன். பிறகு அவர்கள் படிக்கும் பள்ளியில் பாராட்டுகளைப் பெற்றனர். படிப்படியாக மற்ற பகுதிகளுக்குத் திருக்குறள் குறித்த விழிப்புணர்வு பெறத் தொடங்கியது.

1995-இல் "உலகப் பொதுமறை திருக்குறள் பேரவை" தொடங்கப்பட்டது. அதன் பின்னர், தொடர்ந்து ஒவ்வொரு சனி, ஞாயிறு 3 இடங்களில் திருக்குறள் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

சிற்றூர்ப்புற ஊராட்சிப் பள்ளிகளில் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என 4 திசைகளில் 10 நடுநிலைப் பள்ளி, 6, 7, 8-ஆம் வகுப்பு மற்றும் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குப் பாடத் திட்டத்தில் குறிப்பிட்ட அதிகாரங்களோடு, மேலும் சில அதிகாரங்களைச் சேர்த்துக் கொண்டு திருக்குறள் ஒப்பித்தல் போட்டி நடத்தினேன். இப்போட்டிக்கு முன்னதாக ஊரகப் பகுதிகளுக்கு, 2, 3 முறை சென்று பயிற்சி அளிக்கப்பட்டு, அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மற்றும் கிராம நாட்டாண்மைக் காரர்களை வைத்தும், ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் பரிசுப் பொருள்கள் வழங்கிச் சிறப்பாக நடத்தினோம்.

சிற்றூர்ப் புறங்களில் குறைந்தது 60 பள்ளிகளிலிருந்து சுமார் 1000 மாணவர்கள் (நாங்கள் நடத்தும் திருக்குறள் போட்டியில்) கலந்துகொண்டு பரிசுகளைப் பெற்றுச் சிறப்பித்து உள்ளார்கள்.

2003-ஆம் ஆண்டு ஆறு மாணவர்கள் 1330 குறளையும் 'கசடற' பயின்று, 133 கோணங்களில் திறன் பெற்றார்கள். அவர்களுக்குத் திருக்குறள் இளந்தூதர் பட்டம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு மாணவர்க்கும் வெள்ளிப் பட்டயம், சிறப்புச் சான்றிதழ், கேடயம், திருவள்ளுவர் சிலை, 1330 ரூபாய் பொற்கிழி போன்றவை வழங்கிச் சிறப்பிக்கப் பட்டன. இந்த நிகழ்ச்சி உள்ளூர்த் தொலைக் காட்சியில் நேரடி ஒளிப்பரப்பாக ஒளிபரப் பப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு காஞ்சியில் பரவலாகத் திருக்குறள் பேரவை என்கிற ஒரு அமைப்பு திருக்குறள் பயிற்சி வகுப்பை நடத்துகிறது என்கிற செய்தி பொதுமக்களிடையேயும், பள்ளி அளவிலும், மாணவர்களிடையேயும் பரவலானது.

தொடர்ந்து, காஞ்சியில் ஒவ்வொரு சனி, ஞாயிறுகளில், மூன்று இடங்களில் கோயில் மற்றும் பள்ளிகளில் திருக்குறள் பயிற்சி வகுப்பு நடத்திக் கொண்டு வருகின்றோம்.

“குறிப்பாக ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் கோடைக்கால திருக்குறள் சிறப்புப் பயிற்சி வகுப்பு” இருபது நாள்கள் காஞ்சியிலும் அதைச் சுற்றியுள்ள, சிற்றூர்ப் புறங்களிலும் நடக்கும்.

“ஐந்து மையங்களில் குறைந்தது 180 மாணவர்கள் திருக்குறள் பயிற்சியில் கலந்து கொள்வர்”.

தேர்ந்தெடுக்கப்பட்ட 25 அதிகாரங்கள் மொத்தம் 250 குறட்பாக்கள் நடத்தப்படும். 100 மாணவர்களுக்குமேல் 200, 250 குறட்பாக்கள் மனப்பாடம் செய்வர். இக்கோடைத் திருக்குறள் பயிற்சி வகுப்பில், பேரவைத் தலைவர் புலவர் கு. பரமானந்தம், முற்போக்குச் சமூகநீதிப் பேரவை நிறுவனர் டாக்டர். விமானமூர்த்தி, குறள் அமிழ்தன், திருக்குறள் கவனகர் இரா. எல்லப்பன், திருக்குறள் அன்புரவி, திருக்குறள் பா. காயத்ரி, திருக்குறள் ப. கௌசல்யா, திருக்குறள் கு. சாரதி, திருக்குறள் மீ.சோ. இளவேனில், திருக்குறள் ப. எழிலரசன், திருக்குறள் மீ.சோ. கணிமொழி, மூலிகைச் சாறு, ஏ.தணிகாசலம் போன்றோர் திருக்குறள் பயிற்சியினை அளிப்பர்.

நிறைவாகக் “கோடைக்காலச் சிறப்புத் திருக்குறள் சிறப்புப் பயிற்சி வகுப்பு நிறைவு விழா” மிகச் சிறப்பாக நடத்தப்படும்.

பயிற்சி வகுப்பில் சேர்ந்து இடையில் வராமல் போன, அல்லது கோடை விடுமுறைக்காக ஊருக்குப் போன அத்தனை மாணவர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டு, சிறப்புச் சான்றிதழோடு, எனக்குப் பிடித்த குறள், பேச்சுப் போட்டி, குறள் கவன நிகழ்வு, திருக்குறள் திறப்பாடு, குறள் பட்டிமன்றம், குறள் தொடர்பான நாடகம், பாராட்டுப் பரிசளிப்பு விழா என சிறப்பான விருந்தோம்பலுடன் நிறைவு விழாவினை நடத்துவோம்.

கோடைக்காலத் திருக்குறள் பயிற்சி வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, வைகாசி 1-ஆம் தேதி திருக்குறள் பயிற்சி மாணவர்களுக்கு தம் குடும்பத்தினருடன் கன்னியாகுமரி, திருவள்ளுவர் அறக்கட்டளை நடத்துகின்ற “திருக்குறள் விழாவிற்கு”ச் சென்று, கன்னியாகுமரியைச் சுற்றியுள்ள சுற்றுலா மையங்களுக்கு அழைத்துச் சென்று, திறப்பரப்பு அருவியில் நன்றாகக் குளியல் போட்டு, பத்மனாபுரம் அரண்மனை தொடங்கி வட்டக்கோட்டை மற்றும் சுசீந்திரம் கோயில், மாத்தூர் தொட்டிப் பாளையம், சூரிய உதயம், சூரியன் மறைவு கண்காட்சியாகக் கண்டு களித்து அழைத்து வருவேன். மாணவர்கள் அளவில்லா மகிழ்ச்சியில் திளைப்பர்.

குறிப்பாகச் சொல்ல வேண்டியது என்னவெனில், திருக்குறள் பயிற்சி பெற்ற மாணவர்கள், பல்வேறு துறைகளில் சாதனை புரிந்து திருக்குறள் பேரவைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். குறிப்பாக அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் (டி.என்.பி.எஸ்.சி.) மூலம் அரசுப் பணிக்கு சுமார் முப்பது மாணவர்கள், அரசுக் கருவூலம், கல்வித்துறை, வருவாய்த் துறை, தலைமைச் செயலகம், தட்டச்சுப் பணியாளர் மற்றும் வேளாண்மைத் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மின்சாரத் துறை, மத்திய அரசுப் பணி, பொறியாளர் பட்டம் பெற்று நம்பகமான தனியார் நிறுவனங்களிடம் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்குத் திருக்குறள், ஒளிவிளக்கு கல்வியில் ஆர்வத்தை உண்டாக்கி, ஊக்கத்தை அளித்து, தன்னம்பிக்கையை அளித்து விடாமுயற்சியுடன் வெற்றிவாகை

சூட வைக்கின்றது என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

மேலும் 2015 திசம்பரில் தமிழகத்தி லிருந்து 133 திருக்குறள் மாணவர்களை தில்லிக்கு அழைத்துச் சென்றார். தில்லி தொடர்வண்டி நிலையத்தில், தில்லி மேயர், ஒவ்வொரு மாணவர் கையிலும் ஒரு ரோசா மலர் கொடுத்து வரவேற்றது பெருமகிழ்வாக இருந்தது.

அதன்பிறகு நாடாளுமன்ற உறுப்பினர் கள் தங்குமிடத்தில் அறைகள் ஒதுக்கி, குடியரசுத் தலைவர் மாளிகைகளைச் சுற்றிப் பார்த்து, அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டது. பகல் விருந்து உண்டது. மறுநாள் தில்லி நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில், உத்தரகாண்ட் நாடாளுமன்ற உறுப்பினர் தருண் விஜய் 133 மாணவர்களுக் கும் "திருக்குறள் செல்வர்" என்னும் விருது வழங்கி, அனைத்து நாடாளுமன்ற உறுப்பி னர்களும் திருவள்ளுவர் பற்றியும், திருக்குற ளைப் பற்றியும் சிறப்பித்து வாழ்த்தியது இன்னும் சிறந்த நிகழ்வாக திருக்குறள் அன்பர்களால் போற்றப்படுகிறது.

திருக்குறள் பயிற்சி, திருக்குறள் போட்டி, பரிசளிப்பு, பாராட்டு என்கிற தன்மையில் மாணவர்களிடையே திருக்குறள் சென்றடை வதால், அவர்களிடையே,

1. அறநெறிப் பண்பு வளர்கிறது.
2. அன்பு, அடக்கம், அறிவு, மேம்படுகிறது.
3. நினைவாற்றல், ஆளுமைத்திறன் சிறக்கிறது.
4. நல்லொழுக்கம் மேன்மைக்கு வழி கோலுகிறது.
5. விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் கிடைக் கிறது.
6. பள்ளிப் பாடத்தில் 90 மதிப்பெண்ணுக்கு மேல் பெறத் துணைபுரிகிறது.
7. நன்றி உணர்வும் - ஒப்புரவும், சால்பு நிறைந்த நிறை மாந்தனாக உருவாக்கு கிறது. மொத்தத்தில் திருக்குறளால் தலைசிறந்த மாந்தனை உருவாக்குகிறது என்கிற எண்ணம் ஆசிரியப் பெரு மக்கள், பெற்றோர் மற்றும் மாணவச் செல்வங்களிடையே பெருகி வருவதை காண்கிறோம்.

திருவள்ளுவரின் குறிக்கோள் "ஈதல் இசைபட வாழ்தல்" என்பதாம்.

இந்த குறிக்கோளையே உலகப் பொது மறை திருக்குறள் பேரவையின் நோக்கமாகக் கொண்டு, அனைத்து மாணவர்களிடை யேயும் திருக்குறள் "கசடற" பயிற்றுவிப்ப தும், திருக்குறளை உலகம் முழுக்கக் கொண்டு சென்று, திருவள்ளுவர் காண விரும்பிய சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதே ஆகும். இப்படிப்பட்ட பாதையை நோக்கி திருக்குறள் பரப்புதலை உயர்ந்த இலக்காகக் கொண்டு 'உலக நூலாக'த் திருக்குறளை உயர்த்திப் பிடிப்போம். ❖

ஆளும் வர்க்கத்தின் கருத்துகளே ஒவ்வொரு சகாப்தத்திலும் ஆளும் கருத்துகளாகவும் இருக்கின்றன. அதாவது, சமுதாயத்தில் பொருள் வகையில் எந்த ஆளும் சக்தியாக உள்ளதோ, அதே வர்க்கம்தான் அதே சமயம் அறிவாற்றல் துறையில் ஆளும் சக்தியாக விளங்குகிறது. பொருள் வகை உற்பத்திச் சாதனங்களைத் தன்கைவசம் வைத்திருக்கும் வர்க்கமே, அக்காரணத்தாலேயே, பொதுவாகச் சொல்லப் போனால் சிந்தனைப் படைப்புச் சாதனங் களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக் கிறது. இதனால் சிந்தனைப் படைப்புச் சாதனங் கள் இல்லாதவர்களின் கருத்துகள் ஆளும் வர்க் கத்துக்குக் கட்டுப்பட்டவையாகின்றன. ஆளும் கருத் துகள் என்பவை ஆதிக்கம் செலுத்தும் பொருள் வகை உறவுகளின் கருத்து வெளிப்பாடேயன்றி வேறு அல்ல.

**- காரர் மார்க்சு**



# முதுமையில் உடலோம்பலின் முதன்மை

- தசரதன்

## நலமே பலம்

**ந**லம் என்பது நோயற்ற வாழ்வு, நல்ல மனத்துடன் வாழ்வதே ஆகும். நமது உடலினுடைய மனத்தினுடைய முழுமையான நலம் தான், அதன் பலமாக அமைகிறது.

உடல்நலம் என்பது உருவ அடிப்படையிலானது அல்ல என்பதை நாம் அறிய முற்படுவதே உடலின் மொழியாகும். நம் உடலின் மொழி இயற்கையோடு தொடர்புடையது. இயற்கை தற்செயலானது அல்ல. ஒழுங்கமைவோடு இயங்கும் இயக்கம். இயற்கையின் ஒத்திசைவான இயக்கத்தை நம் முன்னோர்களில் பலர் அறிந்திருந்தனர். அவற்றை நம் நல வாழ்விற்குப் பயன் படுத்தினர். எனவே அவர்கள் இயற்கையின் அற்புதங்களை உணர்ந்த அறிவியலாளர்களாக இருந்தனர்.

## வளர்சிதை மாற்றம்

அசுத்தமான குருதி, நாளங்கள் வழிச்சென்று தந்துகிகளை நிரப்புகின்றன. அசுத்தக் குருதியில் உள்ள கரியமில வாயு மூச்சுச் சிற்றறைக்குள்ளிருக்கும் காற்றுள்ளும், அங்குள்ள காற்றில் நிறைந்திருக்கும் உயிரியம் (பிராண வாயு) தந்துகிகளிலுள்ள குருதிக்குள்ளும் பரவி பரிமாற்றம் அடைகின்றன. இது நம் உடலில் நடக்கும் அறிய செயல்களில் ஒன்று.

இப்பரிமாற்றத்தால் கெட்ட குருதி தூய்மையடைந்து செங் குருதியாக மாறி மறுபடியும் தந்துகிகளிலிருந்து நாடிகள் மூலம் இதயத்தை அடைகிறது. குருதி ஒரு தடவை உடம்பைச் சுற்று வதற்கு மூன்று நிமிடங்கள் ஆகின்றது. இலட்சக்கணக்கான உயிரணுக்கள் ஒவ்வொன்றிற்கும் உயிரியத்தை எடுத்துச் செல்லும் வேலை குருதி ஓட்டத்தின் மூலம் நடைபெறுகிறது.

## குருதி அணுக்கள்

உயிரியத்தை உடலெங்கும் எடுத்துச் செல்லும் பணியைச் செய்வது சிவப்பு குருதி உயிரணுக்களே. ஒரு துளி குருதியில் 25 கோடி சிவப்புக் குருதி உயிர் அணுக்கள் இருப்பதாக அறிஞர்கள் ஆய்ந்தறிந்துள்ளனர். இவற்றின் வாழ்நாள் முப்பது நாள்கள்தான். இவற்றைப் புதுப்பிப்பதற்காக ஒவ்வொரு நொடியும் 1,20,000 குருதி உயிர் அணுக்கள் உண்டாக்கப்படுகின்றன.



இளம் வயதில் அழிகின்ற, உற்பத்தியாகின்ற குருதி உயிரணுக்களின் எண்ணிக்கை சமமாக இருக்கும். வயது முதிர்வின் போது, அழிகின்ற உயிரணுக்களின் எண்ணிக்கை கூடுதலாகவும் வளர்கின்ற உயிரணுக்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கும்.

உற்பத்தியாகின்ற உயிரணுக்களின் எண்ணிக்கையைச் சமன்செய்கின்ற தன்மையிலே நாம் தமது வாழ்வியல் முறையை அமைத்துக் கொள்வது அவசியமாகிறது. மலம், சிறுநீர், கரியமில வாயு, வியர்வை, சளி போன்ற கழிவுகள் உடலில், குடலில் தேக்கமடையாத வகையில், நமது உணவுப் பழக்கத்தையும், உடலியக்கத்தையும், மனதையும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் நமது உடல் நோயினின்று விடுபட்டு நலமுடன் இருக்கும்.

“கழிவின் தேக்கமே, நோயின் ஆக்கம்” என்பது இயற்கை மருத்துவ தத்துவம். குருதி ஓட்டத்தைச் செம்மைப்படுத்திடத் தொடர்ந்து மூச்சுப் பயிற்சி செய்வது சிறந்தது.

**உணவில் வகைகள்**

உணவை இருபெரும் பிரிவாக வகுத்து உள்ளனர். 1) கார உணவு. மற்றது 2) அமில உணவு. அறுசுவைகளில் உப்பு, கசப்பு, காரம் ஆகியவை கார வகை உணவுகள். இவை நம் உணவில் 80 விழுக்காடு இருத்தல் வேண்டும். துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு ஆகியவை அமில உணவு. இது நாம் உட்கொள்ளும் உணவில் 20 விழுக்காடு இருத்தல் வேண்டும். இவ்வாறு உணவை அமைத்துக் கொண்டால் கழிவுகள் சேரா வகையில் நம் உடல் இயங்கும்.

நாகரிக வளர்ச்சி, பழக்கவழக்கங்கள், வெளிநாட்டு உணவின் மோகம் காரணமாக நம் உணவின் அமைப்பு கார உணவு 20 விழுக்காடாகவும், அமில உணவு 80 விழுக்காடாகவும் மாற்றம் பெற்றுள்ளது. வயது முதிர்ந்தவர்கள் இதனை மனதில் இருத்தி நமது வாழ்வையும் பழக்க வழக்கத்தையும் உணவு முறையையும் நெறிப்படுத்தினால், நோயின்றி நீண்ட நாள்கள் நலமுடன் வாழலாம்.

**நோய் என்றால் என்ன?**

நாம் உண்ணும் உணவு குருதியாக மாற்றமடைந்து நமக்கு வேண்டிய ஊட்டச்சத்தைக் கொடுக்கிறது. உண்ணும் அனைத்து உணவுப் பொருள்களுமே குருதியாக மாறுவதில்லை. உடம்பில் ஊறும் செரிமான நீர்களும், புளிமங்களும், அன்னக் குழம்புடன் சேர்ந்து அன்னரசமாகவும், அதிலிருந்து உறிஞ்சப்பட்ட சாரம் குருதியாகவும் மாறுகிறது. வேண்டாத பொருள்கள், கரியமில வாயு, வியர்வை, கபம், சிறுநீர், மலம் ஆகியவை வெவ்வேறு உடல் உறுப்புகள் மூலம் வெளியேற்றப்படுகிறது. இவ்வேலை அவ்வப்போது தடையின்றி நடைபெற்றால் சிக்கல் இல்லை. நாகரிக வாழ்க்கையில் சிக்குண்ட மனிதன் மேற்கண்ட கழிவுகள் வெளியேற்றும் பணியை அவ்வப்போது செய்வதில்லை. தடைப்பட்ட மேற்கண்ட ஐவகை மலங்கள் உள்ளே தங்கி, பல சிக்கல்களை உண்டாக்குகின்றன.

> **“உடலுள் உறையும் பிராண சக்தி காலம் கடந்து உடம்பில் நிற்கும் கழிவுப் பொருள்களை வெளித் தள்ளும் இயக்கமே நோய்”**

என்று இயற்கை மருத்துவ தத்துவம் நமக்கு விளங்குகிறது.

**கழிவுகள் தேங்கா வாழ்க்கை அமைய**

சமைத்த உணவு உண்ணும் அன்பர்கள் காய்கறி வாங்கக் கடைக்குச் செல்லும் போது நம் கவனம் மற்றும் பார்வை கொடிக் காய்களில் தான் செல்ல வேண்டும். அவற்றில்

நார்ச்சத்தும், நீர்ச் சத்தும் மிகுந்திருப்பதால் அவை கழிவுகள் வெளியேற்றத்திற்குத் துணைபுரிகிறது. தொழிற்சாலை உணவு களையும், வறுத்தல், பொறித்தல் முதலான உணவுகளையும் சமைத்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்த உணவுகளையும் தவிர்த்தல் நல்லது.

### முதியவர்கள் நெறிமுறை

அறுபது, எழுபது வயதைக் கடந்தவர்கள், உணவுப் பழக்கத்தை மனதின் துணையோடு நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனதை நெறிப்படுத்தினால் நாம் நினைத்ததைச் செயல்படுத்துவதில் சிக்கல் இருக்காது. தங்கள் உணவு முறையை நாளுக்கு மூன்று வேளை என்பதற்கு பதிலாக நாளுக்கு இரண்டு வேளை என மாற்றி உண்டு வந்தால் நலம் நம்மோடு குடி இருக்கும்.

ஒருவேளை உணவுக்கும் அடுத்த வேளை உணவுக்கும் இடையில் எந்த திடப் பொருளையும் உண்ணாமல் இருப்பது நலம். நம் உடம்பில் உள்ள செரிமான உறுப்புகளுக்கு ஓய்வளிக்க அது துணைபுரியும்.

சமைப்பதற்கு அடுப்பிலே உலை வைத்து பின் அதிலே அரிசி போடுகிறோம். அரிசி போட்டு பத்து மணித்துளிகள் கடந்த பின் மீண்டும் அதிலே அரிசி போட்டால் என்ன நடக்கும்? வெந்தும் வேகாத நிலைதான் இருக்கும். இதே தன்மையிலேதான் நம் செரிமானப் பாதையிலும் நடக்கும். எனவே உண்டது செரித்த பிறகே அடுத்ததை உண்ண வேண்டும். இதைத்தான் நம் திருவள்ளுவரும்,

> "அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
> துய்க்க துவரப் பசித்து" (குறள் 944)

என்று குறிப்பிடுகின்றார். தான் முன்பு உண்ட உணவு நன்றாக செரித்ததை அறிந்து, உடம்பிற்கு ஒத்துவரக் கூடிய உணவை நன்றாகப் பசித்த பிறகு உண்ண வேண்டும் என்கின்றார்.

தேவை இருப்பின் இடையிடையே தண்ணீர், அல்லது பழரசம், நீர் மோர், இள நீர் முதலானவற்றை அருந்தலாம். பழரசத் தில் சர்க்கரை, ஐசு சேர்க்காமல் அருந்த வேண்டும்.

### மனச்சிக்கலும் மலச்சிக்கலும்

இரவில் உறங்கச் செல்லும் போது மனச்சிக்கலின்றி படுத்து உறங்க வேண்டும். அதிகாலை எழுந்திருக்கும் போது மலச்சிக்கலின்றி எழுந்திருக்க வேண்டும். இவ்வாறு நம் மனதையும், உடலையும், உணவையும், இதரப் பழக்கவழக்கங்களை யும் நெறிப்படுத்தினால் நம் வாழ்க்கை முதுமையிலும் தொய்வில்லாமல் நம் பணிகளைத் தொடர துணைபுரியும்.

### நலமுடன் வாழ இயற்கை மருத்துவ பயன் மொழிகள் :

உணவே மருந்து
மருந்தே உணவு
கனிகளை உண்போம்
பிணிகளை வெல்வோம்
காய்களைத் தின்றால்
நோய்கள் போகும்.
இயற்கை வாழ்வு
இன்ப வாழ்வு
உண்ணா நோன்பே
உயரிய மருந்து
வாழ்வதற்காக உண்
உண்பதற்காக வாழாதே
பசித்தே புசிப்போம்
பலகாரம் தவிர்ப்போம்
முடிந்தவரை பின்பற்றுவோம்
முதுமையை நலமுடன் கழிப்போம்.

●



# என் பள்ளிப் பருவமும் பகுத்தறிவுச் சிந்தனையும்

- ப. வடிவேலு

**தி**ருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், சிறுநாத்தூர், மேட்டூர் கிராமத்தில் வசித்த வரதக்கவுண்டர் மகன் மறைந்த பரசுராமன் - அம்மாகண்ணு அம்மா இணையருக்கு 16.04.1957-இல் பிறந்த வடிவேலு ஆகிய நான் மட்டுமே எங்கள் பரம்பரையில் பட்டப் படிப்பு படித்தவன். என் குடும்பத்தில் எனக்கு முன் பிறந்த அனைவரும் எழுத, படிக்க மட்டுமே தெரிந்தவர்கள். 1982 வரை கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தனர்.

1962 முதல் 1978 வரை கல்வியுடன் பகுத்தறிவையும் ஊட்டிய, சிறுநாத்தூர் ஊ.ஒ.ந.நி. பள்ளி நல்லாசிரியர்கள் திருவாளர்கள் இராசகோபால் (த.ஆ.), கு. மன்னார், ஜானகிராமன், நாகமையன், ஜெனேந்திரன், கீழ்பென்னாத்தூர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் கள், திருவாளர்கள் டி.கே. இராசேந்திரன், என். சானகிராமன், துரைசாமி (த.ஆ.), மு. சுப்பிரமணியன், கே. மன்னார், வாணியம் பாடி இசுலாமிய கல்லூரி ஆசிரியர்கள் திருவாளர்கள் மீர்சா அப்துல் மஜீத், முதல்வர், கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் காதர் ஆகியோர் ஆவர். பட்டயக் கணக்கர் பயிற்சிக்குத் தோழர் கலச.இராமலிங்கம், தோழர் கலையரசு, மறைந்த தோழர் ச. தட்சணாமூர்த்தி இவர்களின் பெரும் முயற்சியால் 1980 முதல் 1983 வரை நீதிபதி மகாராசன் அவர்களின் மகன் ம. சிதம்பரம் (அய்யாவு & கோ.) அவர்களிடம் சேர்ந்தேன். உடனிருந்த தோழர் கள் என்றும் என் நினைவில் நிலைத்து நிற்கின்றனர்.

நான் பள்ளிப் படிப்பை படிக்கும் பொழுது கடவுள் நம்பிக்கை, சோசியம், சாதகம், பேய், சைத்தான் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டதில்லை. என் குடும்பத்தினருடன் கோவிலுக்குச் சென்றால் வேடிக்கை மட்டுமே பார்ப்பேன். இன்று வரை என் உழைப்பைத் தவிர வேறு எதுவும் என் வளர்ச்சிக்கு உதவும் என்று நம்பிக்கை இல்லை. கோவிலுக்குச் செல்வதைவிட நான் படித்த கல்விக் கூடங்களுக்குச் சென்று பார்த்து மகிழ்ந்துள்ளேன்.

1990-இல் சிறுநாத்தூர் நடுநிலைப்பள்ளி ஆசிரியர் கோ.கோதண்டராமன் வகுப்பிற்குச் சென்றேன். அவர் அவரு டைய வகுப்பு மாணவர்களின் கல்வி ஆற்றலை அளவிட என்னை கேள்வி கேட்கச் சொன்னார். என் கேள்விக்கு அனைவரும் மிகச் சிறப்பாகப் பதில் அளித்தனர். பதில் கூறிய மாணவர்களுக்கு





அன்றே பரிசு கொடுக்குமாறு கோதண்ட ராமன் ஆசிரியர் கேட்டுக் கொண்டார். அன்றே பரிசும் கொடுத்தேன். இதைத் தொடர்ந்து ஆசிரியர்கள் த.தானப்பன், வி. நடராசன், குப்புசாமி ஆகியோரும் என்னை ஊக்கப்படுத்தி பள்ளி மாணவர் களுக்குக் கல்வியை ஊக்குவிக்கப் பரிசு வழங்கவும் செய்தனர். இதன் தொடர்ச்சியாக கடந்த 28 ஆண்டுகளாக நான் படித்த நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பரிசு கொடுத்தும் ஆசிரியர்களைப் பாராட்டியும் வருகின்றேன். என்னைப் பின்பற்றி பள்ளியின் முன்னாள் மாணவர் சு. தமிழரசன் கடந்த ஏழு ஆண்டுகளாக மாணவர்களுக்குப் பரிசளித்து வருகின்றார்.

1978-இல் அய்யா வே. ஆனைமுத்து அவர்களைக் கீழ்பென்னாத்தூரில் ஆசிரியர் கோதண்டராமன் இல்லத்தில் முதன்முதலில் சந்தித்தேன். அப்போது ஆசிரியர் கோதண்டராமன் தோழர் கலசு. இராமலிங்கம் உடன் இருந்தனர். படித்துக் கொண்டு இருந்ததால், அய்யாவைத் தொடர்ந்து சந்திக்க முடியவில்லை.

1984 முதல் சென்னையில் பல நிறுவனங்களில் தொடர்ந்து பகுதி நேரக் கணக்கராக வேலை செய்து கொண்டு வருகின்றேன். அய்யா ஆனைமுத்துவுக்கு 1984 தொடக்கம் முதல் சிந்தனையாளன், மா.பெ.பொ. கட்சி, பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம் மற்றும் அறக்கட்டளைக் கணக்குகளை அய்யா கொடுத்த வரவு செலவுக் குறிப்புகளைக் கொண்டு எழுதிக்கொடுத்துக் கொண்டு அலுவலகப் பணிகளிலும் சிந்தனையாளன் மாத இதழ் அனுப்புவது, முகவரி எழுதுவது உள்ளிட்ட அனைத்து உதவியும் புரிந்து வருகின்றேன்.

3.5.1987-இல் அய்யா வே. ஆனைமுத்து தலைமையில் கீழ்பென்னாத்தூர் வாசன் திரையரங்கில் சென்னையைச் சேர்ந்த சீனிவாசன் - யசோதா இணையரின் மகள் சுகுணாவை என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்து வருகின்றேன். 12ஆம் வகுப்பு படித்த என் துணைவியாரை B.A., M.A., PGDCA, BAL., BLIS ஆகிய பட்டங்கள் பெறத் துணையாக இருந்தேன். 5.5.1989-இல் மகள் அருவியும் 18.1.1991-இல் மகன் அரிராசும் பிறந்தனர். என்னுடன் என் பிள்ளைகளும் துணைவியாரும் கட்சி, சிந்தனையாளன் பணிகளையும் செய்தனர்.

1982-இல் நிறுவப்பட்ட பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமத்தைத் தொடங்கிய பொழுது முதலில் கி. இராமநாதன், பின்னர் இரா. முருகேசன், க. நாகராஜன், மு. சுகுமார், வ. சுகுணா, வாலாசா வல்லவன், தங்கவயல் வெற்றி, துரைசிங் ஆகியோர் அலுவலகப் பொறுப்புகளைக் கவனித்துக் கொண்டனர். பின் இவர்களில் மு. சுகுமாரும் நானும் நிருவாகத்தைக் கவனித்துக் கொண்ட காலம் எனக்குப் பொற்காலமாகத் தோன்றுகின்றது. மற்றவர்களின் உதவியுடன் நிருவாகம்

செய்ய முடிந்தது. நிருவாகத்தின் வரவு-செலவுக் கணக்குகளை அய்யா வே. ஆனைமுத்து அவர்கள் கொடுக்கும் குறிப்புகள் மற்றும் கட்சிப் பணிகள் செய்தவர்களின் வரவு-செலவுக் குறிப்புகளின் அடிப்படையில் கணக்குகளை எழுதிக் கொடுப்பேன். அந்த கணக்கைப் பொதுக் குழுவில் ஆய்வுக்கு வைத்து கணக்கை உறுதி செய்து பட்டையக் கணக்கர் திரு. சி.பி. செங்கல்வராயன் அவர்கள் தணிக்கை செய்து சான்றளித்த பின் கணக்கைச் சம்பந்தப்பட்ட அலுவலகங் களுக்கு அனுப்பி வைப்பேன்.

*2000* முதல் *2006*-ஆம் ஆண்டு வரை சிந்தனையாளன் கட்சி மற்றும் அறக்கட்டளை நிருவாகத்தை கோ. அருண்மொழி பார்த்துக் கொண்டிருந்தார். அலுவலகத்தில் தங்கி பணியாற்றியதால் அருண்மொழி அனை வருக்கும் சிறந்த சுவையான உணவளித்து அனைத்து தோழர்கள் மனத்திலும் இடம் பெற்றார். பின்னர் வி. தேவராசு, வி. சதானந்தம், இரா. மதியழகனும் அலுவலகப் பணிகளைப் பார்த்து கொண்டனர். இவர்களுடன் நான் வரவு-செலவுக் கணக்குகளைப் பார்த்துக் கொண்டு நானே அய்யாவின் நேரடிப் பார்வையில் பொறுப்புகளையும் கவனிக்க நேரிட்டது. என்னுடன் *2010* முதல் *2017* வரை தோழர் நாத்திகன்சாமியும் மகிழ்ச்சி யுடன் கட்சி, சிந்தனையாளன் வேலைகளைச் செய்து வந்தார். அவர் இப்பொழுது வயது முதிர்வு காரணமாகக் கட்சி அலுவலகத்திற்கு வர இயலவில்லை. பொது வேலைகள், சிந்தனையாளன் இதழ் வேலைகளை இன்று வரை மிக மகிழ்ச்சியுடன் செய்துவருகிறேன்.

கட்சிக்கும் சிந்தனையாளனுக்கும் அறக் கட்டளைக்கும் அளித்த என் உழைப்பை மறைந்த தோழர்கள் ஆ.செ. தங்கவேலு, மா. முத்துசாமி, புலவர் து. தயாளசாமி, விழுப்புரம் க. திருப்பாண்டியன், து. தில்லை வனம், அம்பத்தூர் தே. முத்து, சங்கமித்ரா, மரு.பூ. பழனியப்பன், புலவர் கி.த. பச்சையப்பன், கண்ணியம் குலோத்துங்கன், வீ. இராசா பிள்ளை, கவிஞர் தமிழேந்தி ஆகியோரும் மற்றும் தோழர்கள் க. முகிலன், புலவர் ந. கவுதமன், சூலூர் தேவராசு, சேலம் ஆனையப்பன், இரா. பச்சமலை, துரை கலையரசு, கு. வனரோசா, கோ.மு. கருப்பையா, புலவர் கலியமூர்த்தி, திருச்சி இராதா கிருட்டிணன், வரகூர் மா. நாராயணசாமி, திருச்சி கலியபெருமாள், ந. கருணாகரன், பா.வே. பரமசிவம், மு. சுவாமிநாதன், நாத்திகன்சாமி, சோ.சு. பாவேந்தன் ஆகியோர் என்னைப் பாராட்டினர். அதேபோன்று என் மனைவி சுகுணா, மகள் அருவி, மகன் அரிராசு ஆகியோரின் கட்சிப் பணிகளைக் கண்ணுற்று மகிழ்ந்து பாராட்டியுள்ளனர்.

*1993* முதல் *2019* வரை பெரியார் - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை வரவு-செலவுக் கணக்குகளை எழுதிக்கொடுத்து வருகின்றேன். என் பணியை மா.பெ.பொ. கட்சிக்கும் சிந்தனையாளனுக்கும் அறக்கட்டளை மற்றும் ஒடுக்கப்பட்டோர் பேரவைக்கும் என்றும் தொடருவேன். திட்டமிட்டால் திடமான செயல்கள் வெற்றி பெறும்; நம்பினால் நாணயம் வளரும்; தொடர்வோம் தோழமையுடன்! நாம் நல்ல பணிகளை நட்பாகச் செய்வோம், நலமுடன் பழகுவோம், நலமுடன் வாழ்வோம். தொடரட்டும் தோழமை!

●

**மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கு மதம் ஏற்பட்டது என்பதாக இல்லாமல்-அதுவும் காலத்திற்கும் அறிவுக்கும் ஏற்ற மாறுதலுக்குக் கட்டுப்பட்டது என்பதாக இல்லாமல்-மதத்திற்காக மனிதன் ஏற்பட்டால் என்றும், அது எப்படிப்பட்ட தானாலும் அதைப்பற்றிச் குற்றம் சொல்லவோ, திருத்தவோ யாருக்கும் உரிமை இல்லை என்னும் செல்லும்படியான மதம் எதுவாயிருந் தாலும் அதை அழித்துத் தீர வேண்டியது மனித சமூக சீர்திருத்தைக் கோறுகிற ஒவ்வொரு வருடைய கடமையாகும். ஆகவே அக்கடமைக் குட்பட்டவைகள் தாம் சமயக் கொள்கைகளாகும்.**

**- பெரியார் (குடிஅரசு 25-1-1931)**